பக்கங்கள்: இருபத்தியெட்டு + IV

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2041 கார்த்திகை 17 வெள்ளிக்கிழமை (03.12.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 007

# போர்க் குற்றங்களுக்கு மஹிந்தவும் பொறுப்பு: கசிந்தன அமெரிக்காவின் இரகசிய ஆவணங்கள்

## தூதர் புட்டினிஸ் அறிக்கையை நேற்று வெளியிட்டது விக்கி லீக்ஸ் இணையம்



லண்டன், டிசெம்பர் 3

வன்னியில் நடைபெற்ற இறுதிப் போரில் மனிதகுலத்துக்கு எதிராக நிகழ்த்தப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்படும் படுகொலைகளுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் பெருமளவில் பொறுப்பு என்று அமெரிக்க ராஜதந்திரிகள் கருதினர் என்ற தகவல், 'விக்கி லீக்ஸ்' என்கிற இணையத் தளத்தில் தற்போது கசியவிடப்பட்டுள்ள அமெரிக்க ஆவணங்களில் இருந்து வெளியாகி உள்ளது. ஜனாதிபதி லண்டனில் உள்ள நிலையில் இந்த ஆவணங்கள் நேற்று வெளியிடப்பட்டன. போர்க்குற்ற ஆதாரம் எனத் தெரிவித்து சனல்-4 தொலைக்காட்சி நிலையம் வீடியோ ஆதாரத்தை வெளியிட்டதன் ஒருநாள் பின்னதாக 'விக்கி லீக்ஸ்' ஆவணங்கள் வெளியாகி உள்ளன. இதனால் பெரும் பரபரப்புக் கிளம்பி உள்ளது. (04ஆம் பக்கம் பார்க்க)

## குற்ற விசாரணையை வலியுறுத்த தமிழ்த் தலைவர்களுக்குப் பயம்

வாஷிங்டன், டிசெ.3

''போர்க் குற்ற விசாரணைகள் பற்றிப் பேசினால், - புலம்பெயர் தமிழர்கள் போலன்றி - இலங்கையில் வசிக்கும் தமிழர்கள் பதற்றமடைகிறார்கள். அப்படிப் பேசினால் தாங்களும் இலக்கு வைக்கப்படுவோம் என்று அவர்கள் கருதுகிறார்கள்.''

- இவ்வாறு வாஷிங்டனுக்கு அனுப்பி வைத்த தனது அறிக்கையில் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதர் பற்றிசியா புட்டினிஸ் தெரிவித்துள்ளார்.

''ஆனால், வருங்காலத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்காக இந்தப் பிரச்சினையை உயிர்ப்புடன் வைத்திருக்க விரும்பினாலும்கூட, கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் நாம் பேசிய தமிழ்த் தலைவர்கள் நடவடிக்கை எடுப்பதற்கு இது தருணம் அல்ல என்று எண்ணுகிறார்கள். அத்துடன் இந்த விவகாரத்தை பலவந்தமாக முன்னோக்கித் தள்ளினால் அது தம்மை மேலும் மோசமாகப் பாதிக்கும் என்று அவர்கள் கவலைப்படுகிறார்கள். இருப்பினும் இலங்கையின் அரசியல் மற்றும் சமூக நல்வாழ்வுக்கு பொறுப்புக்கூறுதல் (போர்க் குற்றங்கள் தொடர்பில்) மிக முக்கியமானது என்பது தெளிவு'' - என்று புட்டினிஸ் தெரிவித்துள்ளார். ஆனால் அத்தகைய பொறுப்புக்கூறல்கள் விரைவில் நடைபெறும் என அவர் எண்ணவில்லை என்று பிரிட்டனில் இருந்து வெளியாகும் 'கார்டியன்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

(உ)

உள்ளே...

உள்நாடு 5
49 சிசி மோட்டார் சைக்கிள்களைப் பதிவு செய்யவும்

குடாநாடு 7
யாழ்ப்பாணத்தில் எய்ட்ஸ் பரவும் சாதக நிலை அதிகரிப்பு

உலகம் 23
பாக். ஜனாதிபதியைக் கொல்ல இராணுவத் தளபதி சதி

## துரோகி என கூவியவாறு ஜயலத்தை நோக்கி அரச எம்.பிக்கள் பாய்ச்சல்
## ஜனாதிபதியின் ஒக்ஸ்போர்ட் உரை ரத்து நாடாளுமன்றில் கிளப்பியது புயல்

கொழும்பு, டிசெ.3

லண்டன் ஒக்ஸ்போட் யூனியனில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நிகழ்த்தப்படவிருந்த உரை ரத்துச் செய்யப்பட்டதன் எதிரொலியாக நாடாளுமன்றத்தில் நேற்று பெரும் அமளிதுமளி ஏற்பட்டது.

அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தலைமையிலான ஆளும் கட்சி உறுப்பினர்கள், எதிர்க்கட்சி உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனவை சுற்றிவளைத்துத் தாக்க முற்பட்டனர். இதனால் ஏற்பட்ட கலவரத்தால் சபை அமர்வுகள் இடையில் ஒத்திவைக்கப்பட்டன. பார்வையாளர் கலரியில் இருந்த பாடசாலை மாணவர்கள் அவசர அவசரமாக வெளியேற்றப்பட்டனர்.

காலையில் வழமைபோல் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் சபை கூடியது. வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் பின் ஆளும் கட்சி கொறடாவும், அமைச்சருமான தினேஷ் குணவர்தன சபையில் விசேட கவனயீர்ப்பு அறிக்கை ஒன்றை வெளியிட இருக்கின்றார் என சபாநாயகர் அறிவித்தார்.

இதனைத் தொடர்ந்து அமைச்சர் தினேஷ் குணவர்தன, - ''லண்டனில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நிகழ்த்தப்படவிருந்த உரை பாதுகாப்புக் காரணங்களுக்காக ரத்துச் செய்யப்பட்டுள்ளது. இது ஜனாதிபதிக்கும் நாட்டுக்கும் ஏற்பட்ட மிகப் பெரிய அகௌரவமாகும்.

நாட்டில் 30 வருடங்களாக இடம்பெற்ற பயங்கரவாதத்தை முற்றாக ஒழித்துவிட்டு ஜனநாயக (28ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் தொடர்பிருந்தால் எம்.பி. ஆயினும் நடவடிக்கை

### ஊடக மத்திய நிலைய பணிப்பாளர் தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.3

விடுதலைப் புலிகள் மற்றும் அவர்களது ஆதரவாளர்களுடன் தொடர்புடையவர்கள் குறித்து விசாரணைகள் நடத்தப்படும் என தேசிய பாதுகாப்பு ஊடக மையத்தின் இயக்குநர் லக்ஷ்மன் ஹுலுகல்ல தெரிவித்தார். ஆதரவளிப்பவர்கள் எதிர்க்கட்சி நாடாளுமன்ற (28ஆம் பக்கம் பார்க்க)

## எம்முடன் இணைந்து செயற்பட விரும்பும் தமிழ்க் கட்சிகளுடன் பேச்சு நடத்துகிறோம்

### லியாம் பொக்ஸுடனான சந்திப்பின்போது ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.3

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு எதிர்காலத்தில் எம்முடன் இணைந்து செயற்பட விரும்பும் தமிழ் அரசியல் கட்சிகளுடன் பேச்சுகளை ஆரம்பித்துள்ளோம். பலாத்காரமாக திணிக்கும் தீர்வை விட மக்களின் கருத்துகளைப் பெற்றுக் கொண்டு நடைமுறைப்படுத்தும் தீர்வுத் திட்டமே பயனுள்ளதாக அமையும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சர் லியாம் பொக்ஸை சந்தித்தபோது தெரிவித்தார்.

பிரிட்டனுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சர் லியாம் பொக்ஸைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். அந்தப் பேச்சின் போதே ஜனாதிபதி அவரிடம் இக்கருத்தை வெளியிட்டார்.

பிரிட்டிஷ் அரசால் இலங்கைக்குக் கிடைக்கும் உதவிகள் தொடர்பாகவும் இலங்கையில் அதிகாரத்தைப் பரவலாக்கிக் கொள்வதற்கான நடைமுறை குறித்தும் இச்சந்திப்பின்போது நீண்டநேரம் பேச்சு நடத்தப்பட்டது.

அதிகாரத்தைப் பரவலாக்கும் நடவடிக்கையில் உள்ளூராட்சி சபைகளைப் பலப்படுத்தும் தேவையைத் தமது அரசு இனங்கண்டுள்ளதாக ஜனாதிபதி இங்கு சுட்டிக்காட்டினார்.

அடிமட்டத்திலுள்ள சாதாரண மக்களுக்கு மிக நெருக்கமாகவும், நேரடியாகவும் அரசியல் (28ஆம் பக்கம் பார்க்க)

## ஜயலத்தின் எம்.பி. பதவியை பறிக்க பிரேரணை வரும் என்கிறார் தினேஷ்

கொழும்பு, டிசெ.3

ஐக்கிய தேசியக் கட்சியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைப் பறிக்க பிரேரணை ஒன்று கொண்டுவரப்படும் என்று ஆளுந்தரப்பு பிரதம கொறடா தினேஷ் குணவர்த்தன நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

லண்டன்ஒக்ஸ்போர்ட் யூனியனில் உரையாற்றச் சென்ற ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு எதிராக லண்டனில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் (28ஆம் பக்கம் பார்க்க)

நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு புத்தம் புதிய தெரிவுகள் மாபெரும் மலிவு விலையில் விற்பனையாகிறது

சரவணா ரெக்ஸ் நல்லூர்

526,529, பருத்தித்துறை வீதி, நல்லூர் (பின் வீதி), சிவன் கோயில் அருகில், யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிட்டனின் இயலாத்தன்மை அமைச்சர் விமல் சாடுகிறார்

கொழும்பு, டிச.03

ஒக்ஸ்போர்ட் யூனியனில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உரையாற்றும் நிகழ்ச்சி இரத்துச் செய்யப்பட்டது பிரிட்டிஷ் அரசின் இயலாமையைக் காட்டுகின்றது என அமைச்சர் விமல் வீரவன்ஸ குற்றம்சாட்டினார்.

அமைச்சர் விமல் வீரவன்ஸ நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டில் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

வெளிநாட்டு இராஜதந்திரி ஒருவர் ஒக்ஸ்போர்ட் யூனியனில் ஆற்ற இருந்த உரை இரத்துச் செய்யப்பட்டதற்கான முழுப் பொறுப்பையும் பிரிட்டிஷ் அரசே ஏற்கவேண்டும். ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பு, விடுதலைப் புலிகள், ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றின் கூட்டுச் சதியின் பிலதிபலனே இதுவாகும்.

பிரிட்டனில் புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்டுள்ளது. ஆனால் புலிக் கொடியுடன் அங்கு ஆர்ப்பாட்டம் நடத்த அனுமதித்தது எப்படி?

இலங்கையில் வேலுப்பிள்ளை பிரபாகரனின் தலைமையில் தனி நாடு ஒன்றை ஏற்படுத்த சில நாடுகள் முயற்சி செய்தன. புலிகள் ஒழிக்கப்பட்டாலும் அதன் மிஞ்சியுள்ள எச்சங்கள் வெளி நாடுகளில் இயங்கி வருகின்றன.

சனல் -4 தொலைக்காட்சி யுத்தக் குற்றம் எனத் தெரிவித்து சில காட்சிகளைத் தொடர்ந்து ஒளிபரப்பி வருகிறது. இதற்கு அரச சார்பற்ற நிறுவனங்களை நடத்திவரும் பாக்கியசோதி சரவணமுத்து, ஜெஹான் பெரேரா பேன்றோரே காரணமாகும்.

பிரிட்டனிலுள்ள இலங்கைத் தூதரகமும் இதற்கு பொறுப்புக் கூறவேண்டும். அங்குள்ள நிலைமைகளை அவர்கள் தெளிவாக விளக்கியிருக்க வேண்டும். - இவ்வாறு அவர் தெரிவித்தார். (த-சி)

# புனர்வாழ்வளிக்கப்பட்ட போராளிகளின் கல்வி நடவடிக்கைக்கு உதவுங்கள்

## பிரிட்டிஷ் கவுன்ஸிலிடம் கோரிக்கை

புனர்வாழ்வு அளிக்கப்பட்ட போராளிகளின் கல்வி நடவடிக்கைகளுக்கு உதவுமாறு அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், யாழ்.மாவட்டத்துக்கு விஜயம் செய்த பிரிட்டிஷ் கவுன்ஸில் இயக்குநரான ரொனி றெய்லியிடம் வேண்டுகோள் விடுத்தார்.

யாழ்.மாவட்ட செயலகத்துக்கு நேற்று மதியம் சென்ற றெய்லியிடம், புனர்வாழ்வு அளிக்கப்பட்ட போராளிகளின் கல்வி மற்றும் தொழில் விருத்திக்குப் பிரிட்டன் உதவ வேண்டும் என அரச அதிபர் வேண்டுகோள்விடுத்தார். யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தி வேலைகள் மற்றும் மீள்குடியேற்றம் தொடர்பாகவும் அரச அதிபரினால் அவருக்கு எடுத்துக் கூறப்பட்டது. மேலும் யாழ்.மாவட்டத்தின் கலை, கலாசார விடயங்கள் தொடர்பாகவும் அரச அதிபரினால் விளக்கப்பட்டது.

கல்வி நடவடிக்கைகள் மூலம் சமூக ஒருங்கிணைவை ஏற்படுத்தி அதன் மூலமாக சமாதானத்தை அடைய முடியுமென பிரிட்டன் தூதரக அதிகாரி ரொனி றெய்லி தெரிவித்தார். (த-15)

# அரசியல் கைதிகளை விடுவிக்கக்கோரி யாழ்.மாநகர சபையில் தீர்மானம்

யாழ்ப்பாணம், டிசெ.3

1971 ஆம் ஆண்டு கைதான ஜே.வி.பி. உறுப்பினர்களை நிபந்தனை இன்றி விடுதலை செய்தது போன்று, சிறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைக் கோரும் தீர்மானம் ஒன்றை யாழ். மாநகர சபை நிறைவேற்றியுள்ளது.

மாநகர சபை உறுப்பினர் எம்.மங்களநேசன் சமர்பித்த இது தொடர்பான பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. யாழ். மாநகர மேயர் யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்ட தீர்மானம் வருமாறு:

பயங்கரவாத இயக்கத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் ஏராளமான தமிழ் இளைஞர்கள் நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் பிணையில் செல்ல அனுமதிக்கவும் இல்லை. விடுதலை செய்யப்படவும் இல்லை.

பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தம் முடிவடைந்து நாட்டில் நிரந்தர சமாதான சூழல் ஏற்பட்டுள்ளதால், சிறையில் அடைக்கப்பட்டுள்ளவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அதிஉத்தம ஜனாதிபதியை சபை கோருகின்றது - என்றுள்ளது. (ஐ-7)

# அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு யாழ்.செயலகம் ஊடாக மணல்

யாழ்ப்பாணம், டிசெ.3

மணல் தேவைப்படுகின்ற அரச சார்பற்ற நிறுணங்கள் யாழ். மாவட்ட செயலக மணல் விநியோகப் பிரிவின் ஊடாகவிண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

அரச சார்பற்ற நிறுவனங்களினால் மணலை பெற்றுக் கொள்வதில் ஏற்படும் சிரமம் தொடர்பாக அரச அதிபருக்கு அனுப்பப்பட்ட கடிதம் தொடர்பாக நடவடிக்கை எடுக் கப்பட்டிருப்பதாக அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கு மணல் தேவைப்படும் அரச சார்பற்ற நிறுவனங்கள் யாழ். மாவட்ட செயலகத்தில் உள்ள மணல் விநியோகப் பிரிவிலும் விண்ணப்பித்தால் முன்னுரிமை அடிப்படையில் மகேஸ் வரி நிதியம் மூலம் மணலை விரைவாகப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. (த-15)

# நூர்தீன் மசூர் எம்.பி. காலமானார்

கொழும்பு, டிச.03



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சிரேஷ்ட உறுப்பினரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான நூர்தீன் மசூர் நேற்றுக் காலை கொழும்பில் காலமானார்.

48 வயதான அவர் 2000ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் வன்னி மாவட்டத்தில் போட்டியிட்டு, முதன் முறையாக நாடாளுமன்றத்துக்குத் தெரிவானார்.

எருக்கலம்பிட்டியில் ஆரம்பக் கல்வி கற்ற அவர் யாழ். பல்கலைக்கழகத்தில் வர்த்தகத்துறை பட்டதாரியானார்.

பிரபல தொழிலதிபருமான இவர் சமூகசேவையில் மிகுந்த ஈடுபாடு கொண்டவராவார்.

இவரது ஜனாஸா இவரின் பிறப்பிடமான நாகவில்லுக்கு கொண்டு வரப்பட்டது. இன்று காலை 7மணிக்கு நாகவில்லுவில் இவரின் இறுதிக்கிரியைகளை நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

நூர்தீன் மசூரின் திடீர் மரணத்துக்கு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ நேற்று நாடாளுமன்றத்தில் அனுதாபம் தெரிவித்தார்.

''காலஞ்சென்ற கௌரவ உறுப்பினர் நூர்தீன் மசூரின் மறைவு அவரது குடும்பத்தவர்களுக்கு மட்டுமல்ல, இந்த நாட்டுக்கே ஏற்பட்ட பேரிழப்பு. அவரின் மறைவினால் கவலையுற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்துக்கு எமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். தொடர்ந்து வரும் சபை அமர்வின் பிறிதொரு தினத்தில் இரங்கலுரையை இடம் பெறும்'' என்றும் சபாநாயகர் தெரிவித்தார். (சி)

## கோரிக்கை...



எதிர்பார்ப்பு: யாழ். போதனா வைத்தியசாலையின் அரச தாதிமார் சங்கத்தினர் தமது கோரிக்கைகளை மீண்டும் வலியுறுத்தி நேற்று வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணி முதல் 12.30 மணிவரை பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். (த-311-313)

## பிரிட்டிஷ் கவுன்ஸில் அலுவலகம் விரைவில் யாழ்ப்பாணத்தில்

# வாழ்வியலில் உயரவேண்டும் என்ற ஊக்க உணர்வு யாழ்ப்பாண மக்களிடம் நிறையவே உண்டு

## இயக்குநர் ரொனி றெய்லி சொல்கிறார்

உதயன்



யாழ்ப்பாணம், டிசெ.3

இன முரண்பாடுகள் மற்றும் மொழி முரண்பாடுகளை கலைகள் ஊடாகவும் பொதுமையான மொழி அறிவூட்டல் மூலமும் நீக்கலாம். அந்தப் பணிக்கான பல உத்திகளை ஈராக்கிலும் அயர்லாந்திலும் கையாண்டு பிரிட்டிஷ் கவுன்ஸில் பெருமளவில் வெற்றி கண்டது.

இவ்வாறு தெரிவித்தார் இலங்கையில் இயங்கும் பிரிட்டிஷ் கவுன்ஸிலின் இயக்குநர் ரொனி றெய்லி.

பல்லினத் தன்மை வாய்ந்த கலைகள், விளையாட்டுகள், பொது மொழிக் கல்வி ஆகியவற்றின் மூலம் வட அயலர்லாந்திலும் ஈராக்கிலும் நிலவிய இன, மத, மொழி முரண்பாடுகளை குறிப்பிடக்கூடிய அளவில் நீக்க முடிந்தது.

இலங்கைக்கு வருவதற்கு முன்னர் மேற்குறிப்பிட்ட நாடுகளில் பிரிட்டிஷ் கவுன்ஸில் ஆற்றிய பணிகளை விவரிக்கையில் றெய்லி இதனை விவரித்தார்.

பிரிட்டிஷ் கவுன்ஸில் மூலம் ஈராக்கில் நடத்தப்பட்ட கிரிக்கெட் போன்ற விளையாட்டுக்களால் பகைமை கொண்ட குர்டிஷ், ஈராக்கிய இன இளைஞர்கள் சேர்ந்து உழைக்கும் பண்பை தமதாக்கிக் கொண்டது தமது நினைவுக்கு வருவதாக றெய்லி கூறினார்.

யாழ்ப்பாணத்தில் பிரிட்டிஷ் கவுன்ஸில் அலுவலகம் ஒன்றைத் திறப்பதற்கான சாத்தியக் கூறுகளைக்கண்டறியும்பொருட்டு இங்கு விஜயம் செய்துள்ள ரொனி றெய்லி உதயன் அலுவலகத்துக்கு நேற்று மரியாதையின் நிமித்தம் வந்திருந்தார்.

அயர்லாந்தில் தாம் பணி புரிந்த காலை ஐரிஸ், பிரிட்டிஷ் மாணவிகள் சேர்ந்து நடத்திய பல நாட்டிய நாடக நிகழ்வுகள் அவர்களுக்கு இடையே நிலவிய பகைமையை மறந்து ஓரணியில் செய்யப்பட முன் நிறுத்தியதையும் அவர் நினைவு கூர்ந்தார்.

ரோனி றெய்லி தமது அனுபவங்களைக் கூறிக்கொண்டிருந்தவேளை இலங்கையிலும் அத்தகைய திட்டங்களை பிரிட்டிஷ் கவுன்ஸில் செயற்படுத்த ஆரம்பித்துள்ளதாகக் கூறினார்.

அவர் உதயனிடம் விவரித்த சில முக்கிய அம்சங்களும் திட்டங்களும் வருமாறு:-

மட்டக்களப்பில் தமிழ், சிங்கள இளைஞர், யுவதிகளை ஒரே அணியில் சேர்த்து 'சக்தி' நாடக அமைப்பு ஒன்றை உருவாக்கி உள்ளோம். அந்த அணி மேடையேற்றிய நிகழ்வுகள் தமிழ் சிங்கள மக்கள் [illegible] வேறுபாடுகளை மறந்து ஒற்றுமையாக இயங்கும் பண்பை வளர்த்து வருகிறது.

வவுனியாவிலும் விடுதலைப் புலிப் போராளிகள் 24 பேரைக் கொண்ட புதிய அரங்கக் குழு ஒன்றை அண்மையில் ஆரம்பித்தோம்.

யாழ்ப்பாணத்தில் சென். ஜோன்ஸ்கல்லூரியுடன்இணைந்து ஆங்கில மொழிப் பயிற்சி நிலையம் ஒன்றை உருவாக்கத் திட்டமிட்டுள்ளோம். அதேபோன்று திருமறைக்கலாமன்றத்துடன் இணைந்து தமிழ் - சிங்களக் கலைஞர்களைக் கொண்டு அரங்க அவை ஒன்றை அமைக்க உத்தேசித்துள்ளோம். மேற்படி கலாமன்றம் தென்னிலங்கையில் சிங்கள - தமிழ் இளைஞர்கள் மூலம் இன உறவைப் பல முறச் செய்வதில் வெற்றிகண்டு வருகிறது. பிரிட்டனில் நடத்தப்படும் பல சர்வதேசப் பரீட்சைகளை கொழும்பில் நடத்துவது போன்று யாழ்ப்பாணத்திலும் நடத்த உதவுவோம்.

இங்கு தங்கியிருந்த சில நாள் களில் தமிழ் இளைஞர்கள் கல்வியில் அதிக நாட்டம் உள்ளவர்கள் என்பதனை அறிந்து கொண்டேன். அது மட்டுமன்றி இங்குள்ள மக்கள், கல்வி கலாசாரங்களில் சிறப்புடையவர்கள் என்பதனையும் உலக நாடுகளின் வளர்ச்சிக்கு நிகராக எழுந்து உயர்வதற்கான பின்புலங்களைக் கொண்டவர்கள் என்பனையும் அறிந்து கொள்ளமுடிந்தது.

வாழ்வியல் அபிவிருத்தியை தம்மால் ஈட்டமுடியும் என்ற ஊக்க உணர்வை அவர்களிடம் கண்டுகொண்டேன்.

அவர்களுக்கு உதவுவது குறித்து ஆராய்ந்து பல புதிய திட்டங்களை வகுத்து செயலாக்குவோம் அதன் முதற்கட்டமாக பிரிட்டிஷ் கவுன்ஸில் நிலை யத்தை விரைவில் இங்கு அமைப்போம் என்றார் - றெய்லி (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் அதிகாரிக்கு மரண அச்சுறுத்தல்; எதிரிக்கு கடூழியச்சிறையும் அபராதமும்

அம்பாறை, டிசெ.3

முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கு, துப்பாக்கியால் சுட்டு மரண அச்சுறுத்தல் விடுத்ததன் மூலம் தண்டிக்கப்படவேண்டிய குற்றம் புரிந்ததாக இரு எதிரிகள் மீது கல்முனை மேல் நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருந்த வழக்கில் முதலாம் எதிரியைக் குற்றவாளியாகக் கண்ட நீதிமன்றம் எதிரிக்கு இருவருட கடூழியச் சிறைத் தண்டனையும் பத்தாயிரம் ரூபா தண்டமும் விதித்தது.

கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம் கடந்த செவ்வாய்க்கிழமை இந்தத் தீர்ப்பினை வழங்கியதுடன் இரண்டாம் எதிரியைக் குற்றச்சாட்டிலிருந்தும் விடுவித்தார்.

அட்டாளைச்சேனை முகைதீன் வீதியில் வைத்து முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தரான சீனிமுகம்மது முகம்மது என்பவர் என்பவரை 22.06.2010 ஆம் திகதியன்று ரி-56 ரக துப்பாக்கியால் சுட்டு மரண அச்சுறுத்தல் விடுத்ததாகவும், இதன் மூலம் தண்டிக்கப்படவேண்டிய குற்றம் புரிந்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்டு சட்டமா அதிபரால் கல்முனை மேல் நீதிமன்றத்தில் இந்த வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

அட்டாளைச்சேனையைச் சேர்ந்த றசீட் முகம்மது ஹாசீம் அல்லது நௌபீல் (முதலாம் எதிரி), சுலைமா லெப்பை முகம்மது யூசுப் றியாஸ் (இரண்டாம் எதிரி) ஆகிய இருவர் மீதும் குற்றஞ்சாட்டப்பட்டு தொடரப்பட்ட இந்த வழக்கு விசாரணை கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம் முன்னிலையில் நடைபெற்று வந்தது.

தண்டனைக் கோவைச் சட்ட சுடு படைக்கலன் சட்டத்தின் கீழ் சட்டமா அதிபரால் தொடுக்கப்பட்டிருந்த இந்த வழக்கு விசாரணைகளில் 3 கண் கண்ட சாட்சிகளும், 4 பொலிஸாரும், அரச பகுப்பாய்வாளரும் சாட்சியமளித்ததுடன் எதிரிகள் இருவரும் சாட்சியமளித்தனர்.

இதன் பிரகாரம் வழக்குத் தொடுநர் தரப்பு சாட்சியங்களைப் பரிசீலித்த நீதிமன்றம் முதலாம் எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு இருவருட கடூழியச் சிறைத்தண்டனையும் 10 ஆயிரம் ரூபா தண்டமும் விதித்துத் தீர்ப்பு வழங்கியது.(ஐ-30)

## யாழ். போதனா வைத்தியசாலையில்

# நோயாளர்களைப் பார்வையிட திங்கள் முதல் புதிய நடைமுறை

### பின்பக்க வாசல் ஊடாகவே இனி அனுமதி

யாழ்ப்பாணம்,டிசெ.3

யாழ்.போதனா வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளர்களைப் பார்வையிடப் புதியநடைமுறைஎதிர்வரும் திங்கட்கிழமை அமுலுக்கு வரவிருக்கின்றது.

இந்த நடைமுறையின் பிரகாரம், வைத்தியசாலையின் பின்புற பாதை ஊடாகவே பார்வையாளர்கள் உட்செல்ல அனுமதிக்கப்படுவர்.

வைத்தியசாலைப் பணிப்பாளர் மேற்கண்ட தகவலை அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாகப் பணிப்பாளர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளனவை வருமாறு:-

யாழ்.போதனா வைத்தியசாலையில் புதிய கட்டட நிர்மாண வேலைகளும் புனரமைப்பு வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதனால் வாகனத் தரிப்பிடங்களும் சில விடுதிகளும் அகற்றப்பட்டு மாற்றிடங்களில் இயங்க வைக்கப்பட்டுள்ளன. எனவே ஏற்பட்டுள்ள இட நெருக்கடியையும் போக்குவரத்து நெரிசலையும் குறைக்கும் முகமாக எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் வைத்தியசாலை நிர்வாகத்தால் பின்வரும் நடைமுறைகள் கையாளப்படவுள்ளன.

✱ பார்வையாளர்கள் வைத்தியசாலை வளாகத்துக்குள் உட்செல்லும் வெளிச்செல்லும் வாசலாக வைத்தியசாலையின் பின்புறமாகவுள்ள மணிக்கூட்டுக் கோபுர வீதியும் மின்சார நிலைய வீதியும் சந்திக்கும் இடத்திலுள்ள வாசல் பாவனைக்காகப் பார்வையிடும் நேரம் மட்டும் திறந்து விடப்படும்.

✱ ஒரு நோயாளிக்கு 2 பார்வையாளர் அனுமதிப்பத்திரம் மட்டும் வழங்கப்படும். 5 நாள்களுக்கு மேலாக விடுதியில் தங்க நேரிடும் போது பொறுப்புத் தாதிய உத்தியோகத்தரிடம் காட்டி அனுமதிப்பத்திரத்தைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும். இக்கால எல்லைக்குள் வீடு செல்ல நேரும் போது அனுமதிப்பத்திரத்தை கையளித்தே செல்ல வேண்டும்.

✱ வைத்தியசாலை வைத்தியர்களால் நோயாளி ஒருவருக்கு உதவியாளர் தேவையெனச் சிபாரிசு செய்யப்படும் போது உதவியாளர் அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். இவர்கள் வீடு செல்லும்போது அனுமதிப்பத்திரத்தை விடுதியில் பொறுப்புத் தாதிய உத்தியோகத்தரிடம் ஒப்படைத்துச் செல்லவேண்டும்.

✱ பொதுமக்கள் அனைவரும் வைத்தியசாலை பாதுகாப்பு உத்தியோகத்தரின் வழிப்படுத்தல்களுக்கு அமைய நடந்து ஒத்துழைக்கும்படியும் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

எனவே எதிர்காலத்தில் வைத்தியசாலையில் முறையான வசதிகள் கிடைக்கும் வரை பொது மக்கள் அனைவரும் இந்நடைமுறையைக் கைக்கொண்டு நிர்வாகத்தினருக்கு ஒத்துழைப்பு வழங்கி உதவவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் - என்றுள்ளது. (ஐ)

# குடாநாட்டின் எதிர்கால அபிவிருத்திக்கு காத்திரமான பங்களிப்பை வழங்குவோம்

### இங்கு வந்த ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.3

யாழ். மாவட்டத்தின் அபிவிருத்திக்குக் காத்திரமான பங்களிப்பை எம்மால் வழங்க முடியும். அத்துடன் எமக்குத் தேவையான அனைத்துத் தகவல்களையும் திருப்திகரமாகப் பெற்றுள்ளோம் என்று ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.



ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் யாழ். அரச அதிபருடன் கலந்துரையாடுகின்றார்.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரை மாவட்டச் செயலகத்தில் நேற்று மதியம் சந்தித்துக் கலந்துரையாடிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்பின்போது அரச அதிபரினால் புனர்வாழ்வு அளிக்கப்பட்ட பேராளிகளுக்கும், யுத்தத்தின் போது கணவன்மாரை இழந்த விதவைகளுக்கும் வேலை வாய்ப்புக்கள் பெற்றுக் கொடுப்பதுடன் அவர்களை சமுகத்தில் இணைத்து வாழ்வதற்குரிய நடவடிக்கைகள் எடுக்குமாறு வலியுறுத்திக் கூறப்பட்டது.

மேலும் நீண்ட காலத்திற்குப் பின்னர் மீளக்குடியேறிய வலி. வடக்கு, வடமராட்சி கிழக்கு மக்களின் தேவைகளை நிறைவு செய்வதற்கும், இங்கு வந்து வெளிநாட்டவரின் முதலீடுகளை அதிகப்படுத்துவதற்கு, ஏற்றதாக இங்குள்ள வீதி வலையமைப்பை திருத்தித் தருமாறும் அரச அதிபரினால் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளிடம் கோரிக்கை முன் வைக்கப்பட்டது.

அதற்குப் பதிலளித்த ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் யாழ். மாவட்டத்தில் அபிவிருத்திக்கு காத்திரமான பங்களிப்பை தாம் வழங்குவதாகவும் தெரிவித்தனர். இங்கு மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் தாம் நேரடியாக அறிந்து கொண்டனர் என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை, நேற்று முன்தினம் புதன்கிழமை மாவட்ட செயலகத்துக்கு விஜயம் 'ஜெய்க்கா' நிறுவனப் பிரதிநிதிகள் 2011 ஆம் ஆண்டில் தமது நிறுவனம் மூலமாக மேற்கொள்ளப்பட இருக்கும் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தொடர்பாக அரச அதிபருடன் கலந்துரையாடியிருந்தனர். (ஐ-15)

# பல்கலைக்கழகங்களில் இவ்வருடம் மேலும் 1000 மாணவருக்கு அனுமதி

யாழ்ப்பாணம்,டிசெ.3

கடந்த வருடத்தை விட மேலும் ஆயிரம் மாணவர்கள் இவ் வருடம் பல்கலைக் கழகங்களுக்கு அனுமதிக்கப்பட விருக்கின்றனர் என்று பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த வருடம் மொத்தம் 22, 500 மாணவர்களுக்கு பல்கலைக் கழகங்களுக்கு அனுமதி வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இவ்வருடம் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள விசேட பாட நெறிகளுக்காகவே மாணவர்களின் அனுமதி அதிகரிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாத்துறை மற்றும் நிர்வாகப் பாடநெறிகளுக்கு நூறு மாணவர்கள் சேர்க்கப்படுவர். உயர்தரப் பரீட்சையில் எத்துறையில் சித்தி பெற்றிருந்தாலும் இப்பாட நெறிகளுக்கு அனுமதி கோரலாம் என்பது விசேட அம்சமாகும். இத்தகைய மேலதிக பாடநெறிகளை எதிர்காலத்தில் அறிமுகப்படுத்தவும் மானியங்கள் ஆணைக் குழு நடவடிக்கை எடுக்கும்.

வடக்கு கிழக்கு பல்கலைக் கழகங்களிலும் சிங்கள, முஸ்லிம் மாணவர்களின் அனுமதிகள் மேற்கொள்ளப்படும்.

கடந்த வருடம் 21,500 மாணவர்கள் மட்டும் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்டதாகவும் இம்முறை அத்தொகை 22500 ஆக அதிகரித்துள்ளதாகவும் ஆணைக்குழு அதிகாரி மேலும் தெரிவித்தார். (ஐ-5)

# மாநகர சபை வருமானத்தை அதிகரிக்க தனியார் நிறுவனத்துடன் ஆலோசனை

யாழ்ப்பாணம், டிசெ.3

யாழ். மாநகர சபையின் வருமானத்தை அதிகரிக்கும் திட்டம் தொடர்பாக ஆசிய பவுண்டேசன் நிறுவனத்திடம் ஆலோசனை பெறப்படவுள்ளது.



யாழ்.மாநகரசபையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் என்.ஜோன்சன் உரையாற்றுகிறார்.

இதுதொடர்பான கலந்துரையாடல் நேற்று யாழ். மாநகர சபையில் இடம்பெற்றது.

யாழ். நகர முதல்வர் திருமதி யோ.பற்குணராஜா தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எஸ். ஜோன்சன் மற்றும் மாநகரசபை அதிகாரிகள். மாநகர சபை உறுப்பினர்கள், வர்த்தகர்கள் கலந்துகொண்டனர்.

மாநகரக சபையின் வருமா னத்தைத் திரட்டுவது தொடர்பான யாப்புக்களைத் திருத்தவேண்டும் என்றும் வேறு மாநகர சபைகளின் யாப்புக்களைப் பெற்று அதனடிப்படையில் புதிய யாப்புக்கள் தயாரிக்க வேண்டும் என்றும் ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன.

வருமானத்தை அதிகரித் தல், மக்களை ஊக்குவித்தல் போன்ற விடயங்களில் ஆசிய பவுண்டேசன் நிறுவனம் ஆராய்ந்து வழங்கும் ஆலோசனைகளின் அடிப்படையில் நடவடிக்கை எடுப்பது என முடிவு செய்யப்பட்டது. (ஐ-7)

# சைக்கிள், மோ.சைக்கிளில் சமாந்தரமாக பயணிப்போர் மீது இனி சட்ட நடவடிக்கை

யாழ்ப்பபாணம்,டிசெ.3

குடாநாட்டில் சைக்கிள்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் சமாந்தரமாக வீதிகளில் பயணிப்போர் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்படுவர்.

யாழ்.பொலீஸ் நிலைய மோட்டார் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் கீர்த்தி குணவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

அண்மைக் காலமாக யாழ் நகரிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் வீதிகளில் சைக்கிள்கள் மற்றும் மோட்டார் சைக்கிளில் சமாந்தரமாகச் செல்கின்றமையாலும், குடிபோதையில் வாகனங்களைச் செலுத்துவதா லும் அடிக்கடி வீதி விபத்துக்கள் நடைபெறுகின்றன.

இது சம்பந்தமான வீதி ஒழுங்குகளை மீறும் நபர்கள் சைக்கிள்கள் மற்றும் மோட் டார் சைக்கிள்களில் சமாந்தரமாகச் செல்பவர்கள் இனிவரும் காலங்களில் கைது செய்து நீதிமன்றில் முன்நிறுத்தப்படுவர் என்றுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேனி மாவட்டத்தில் பயங்கர விபத்து

# பஸ்கள் நேருக்கு நேர் மோதியதால் 17 பேர் மரணம்; 90 பேர் படுகாயம்



ஆண்டிப்பட்டி, டிச. 03

ஆண்டிப்பட்டி அருகே நேற்றுமுன்தினம் இரவு தனியார் பஸ்கள் நேருக்கு நேர் மோதிக்கொண்ட பயங்கர விபத்தில் 17 பேர் உடல் நசுங்கிப் பலியானார்கள். மேலும் 90 பேர் படுகாயம் அடைந்தனர்.

தேனி மாவட்டம் சின்னமனூரில் இருந்து நேற்றுமுன்தினம் இரவு மதுரை நோக்கி தனியார் பஸ்ஸும், மதுரை மாவட்டம் திருமங்கலத்தில் இருந்து போடி நோக்கி தனியார் பஸ்ஸும் ஆண்டிப்பட்டி அருகே நேருக்கு நேர் பயங்கரமாக மோதிக்கொண்டன. மோதிய வேகத்தில் திருமங்கலம் பஸ், சின்னமனூர் பஸ்ஸுக்குள் பாதிவரை புகுந்தது. பின்னர் 100 அடி தூரம்வரை சென்று அந்த பஸ் தலைகுப்புறக் கவிழ்ந்து விட்டது.

இரவு நேரம் என்பதால் பயணிகள் பலர் தூக்கத்தில் இருந்தனர். இடிபாடுகளில் சிக்கியவர்கள் அபயக்குரல் எழுப்பினார்கள். விபத்து நடந்த பகுதி ஆள்கள் நடமாட்டம் அதிகம் இல்லாத இருள் சூழ்ந்த பகுதி.

விபத்து பற்றிய தகவல் அறிந்ததும் தேனி, ஆண்டிப்பட்டி பகுதியில் இருந்து தீயணைப்புப் படையினர் மற்றும் பொலிஸார் விரைந்து வந்தனர். மேலும் பொதுமக்களும் மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

விபத்தில் சிக்கி கவிழ்ந்த பஸ்ஸின் இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்த 14 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டன. அவர்களில் 5 ஆண்கள், 7 பெண்கள், 2 சிறுவர், சிறுமிகள் அடங்குவர்.

விபத்தில் சிக்கி காயத்துடன் மீட்கப்பட்ட 90 பேர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். விபத்தில் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தவர்களில் 3 பேர் பின்னர் உயிரிழந்தனர். இதனால் சாவு எண்ணிக்கை 17 ஆக உயர்ந்தது.

## இலங்கை வியாபாரிகள் மோதல்

### சென்னையில் ஐந்து பேர் கைது

சென்னை, டிச. 03

தொழில் போட்டி காரணமாக சென்னையில் அடிதடியில் ஈடுபட்ட ஐந்து இலங்கை வியாபாரிகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சென்னை மண்ணடிப் பகுதியில் ஏராளமான இலங்கை வியாபாரிகள் தங்கியிருந்து வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சென்னையில் இருந்து முறையான அனுமதியுடன் பொருள்களை வாங்கி, இலங்கைக்கு அனுப்பி இவர்கள் தொழில் செய்து வருகிறார்கள். வாசனைப் பொருள்கள், துணிமணிகளை வாங்கி இவர்கள் பெரும்பாலும் அனுப்பி வருகிறார்கள்.

இவர்களுக்கிடையேயும் தொழில் போட்டி ஏற்பட்டு மோதலில் ஈடுபட்டுள்ளனர். இதையொட்டி சுரேந்திரன் என்ற இலங்கை வியாபாரி சட்டக்கல்லூரி பொலிஸில் கொடுத்த முறைப்பாட்டில், தனது சக வியாபாரிகள் தன்னை பிளேடால் முதுகில் வெட்டிக் காயப்படுத்தினர் என்று குறிப்பிட்டிருந்தார்.

இதையொட்டி உதவி கமிஷனர் முருகேசன் மேற்பார்வையில் இன்ஸ்பெக்டர் அருள் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

பின்னர் பிளேடால் வெட்டியதாக இம்தியாஸ், பஜ்ஜி, முகமது, பஸ்மி, முகமது நிஜாம் ஆகிய 5 இலங்கை வியாபாரிகள் கைதுசெய்யப்பட்டனர்.

## நிருபமாவின் பதவிக்காலம் நீடிப்பு

மத்திய வெளியுறவுத்துறைச் செயலர் நிருபமா ராவின் பதவிக் காலம் 7 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

நிருபமா ராவின் பதவிக்காலம் வரும் 6 ஆம் திகதியுடன் முடிவடைகிறது. இந்த நிலையில் அவருடைய பதவிக்காலத்தை நீடிப்பது தொடர்பாக மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. சில விதிகளில் திருத்தம் செய்து நிருபமா ராவின் பதவிக்காலத்தை நீட்டிக்கலாம் என்ற பரிந்துரை அமைச்சரவையின் முன்வைக்கப்பட்டது. இதற்கு பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலான அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. மேலும் வெளியுறவுத்துறைச் செயலராக அவரது பதவிக்காலம் அதிகபட்சம் 2 ஆண்டுகளுக்கு மட்டுமே இருக்கவேண்டும் என்றும் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது. கடந்த ஆண்டு ஓகஸ்ட் முதலாம் திகதி வெளியுறவுத்துறைச் செயலராக நிருபமா பதவியேற்றார். இதையடுத்து அடுத்த ஆண்டு ஜூலை 31 ஆம் திகதிவரை அவர் அந்தப் பதவியில் இருப்பார் - என்று பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.


## மரண அறிவித்தல்

### ஏனோக்கு கத்தரீனம்மா



நவாலி தெற்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஏனோக்கு கத்தரீனம்மா நேற்று (02.12.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஏனோக்கு-றோசலின் தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற மரியதாஸ் மற்றும் தேவதாஸ், றூபி ஆகியோரின் சகோதரியும் சர்மிளா (Additional Managing Director, Techme Technologies (Pvt)Ltd.), Dr.தர்சன் (வைத்தியர், நுவரெலியா வைத்தியசாலை) ஆகியோரின் பெரியம்மாவும் திருமதி A.ஜசிந்தா (Managing Director, British Business School, உபதலைவர்.Gods Own Children Foundation), நிர்மலதாஸ், றோகிததாஸ், விமலதாஸ், ஜெனிங்தாஸ்(Staff Officer, Open University, Nawala), கருணைதாஸ்(ஆசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி), பாலதாஸ் (ஆசிரியர், இறம்பைக்குளம் மகாவித்தியாலயம்), காலஞ்சென்ற ஜெகதீபன், மற்றும் ஜீவதாஸ் ஆகியோரின் பெரியமாமியும் குணாளன் (Managing Director, Techme Technologies (Pvt)Ltd.) Dr.தீபா (வைத்தியர், அரசினர் வைத்தியசாலை, நுவரெலியா) ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனைகள் நாளை (04.12.2010) சனிக்கிழமை இடம்பெற்று நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயத்தில் காலை 9.00 மணியளவில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவாலி தெற்கு,
மானிப்பாய்.

(சி/373337)

தகவல்:
குடும்பத்தினர்.


# பிரிட்டிஷ் தூதரகத்துக்கு முன் விமல் இன்று ஆர்ப்பாட்டம்

லண்டன் ஒக்ஸ்போர்ட் யூனியனில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உரையாற்றும் நிகழ்வு ரத்துச்செய்யப்பட்டதை எதிர்த்தும், அதற்கு பிரிட்டிஷ் அரசு பொறுப்புக்கூற வேண்டும் என வலியுறுத்தியும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், பொறியியல் வீடமைப்பு பொது வசதிகள் அமைச்சருமான விமல் வீரவன்ஸ தலைமையில் கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் தூதரகத்துக்கு முன்பாக இன்று ஆர்ப்பாட்டம் நடைபெற இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டம் இன்று முற்பகல் 11 மணிக்கு நடைபெறும். (சி)

## போர்க் குற்றங்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உலகின் பல்வேறு பகுதிகளில் உள்ள அமெரிக்க தூதரக அதிகாரிகள் - அமெரிக்க அரசுத் துறைக்கு அளித்த இரகசியத் தகவல்களை 'விக்கி லீக்ஸ்' வெளியிட்டு வருகிறது. இரகசியமாகப் பரிமாறப்பட்ட இரண்டரைலட்சம் ஆவணங்கள் 'விக்கி லீக்ஸி'டம் உள்ளது. அதில் 220 ஆவணங்களை அது முதல் கட்டமாக வெளியிட்டிருந்தது. தன்வசம் இருந்த இரகசிய ஆவணங்கள் அனைத்தையும் 'விக்கி லீக்ஸ்' இணையத்தளம் லண்டன் பத்திரிகையான 'கார்டியன்' மற்றும் அமெரிக்கப் பத்திரிகையான 'நியூயோர்க் டைம்ஸ்' ஆகிய வற்றிடம் கையளித்துள்ளது.

இதில் இலங்கை குறித்த ஆவணங்கள் நேற்று வெளியாகின. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ லண்டன் சென்றுள்ள நிலையில் இந்த ஆவணங்களும் வெளியிடப்பட்டுள்ளன.

''இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையேயான இருதரப்பு உறவுகளில் இலங்கை இராணுவத்தாலும், அதிகாரிகளாலும் இழைக்கப்பட்ட போர் குற்றங்களுக்கு பொறுப்பேற்றல் குறித்த விடயம் தொடர்ந்து நெருடலாக இருப்பதாக'' 'விக்கிலீக்' வெளியிட்ட ஆவணங்களில் கூறப்பட்டுள்ளது.

[illegible]

சுத்துறை நாடாளுமன்ற காங்கிரஸ் அவைக்கு அளித்த அறிக்கையும் மனித உரிமைகளுக்கான யாழ். பல்கலைக்கழக பேராசிரியர்கள் அமைப்பின் அறிக்கையும் - விடுதலைப் புலிகள் மீதும் மனித உரிமை மீறல்கள் குறித்த பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருக்கின்றன. எனினும் விடுதலைப் புலி இயக்கத்தின் முக்கிய தலைவர்கள் பலர் போரின் இறுதியில் கொல்லப்பட்டு விட்டதால் இதற்கான பொறுப்பை ஏற்க வெகு சிலரே உள்ளனர் என்கிறது அமெரிக்க ஆவணம்.

தனது இராணுவத்தினர் மீதும், மூத்த அதிகாரிகள் மீதும் போர் குற்றம் தொடர்பான விசாரணையை எந்தவொரு அரசும் தான் பதவியில் இருக்கும் வரையில் நடத்தியதாக சரித்திரம் இல்லை என்கிற நிலையில், படுகொலைகளுக்குப் பொறுப்புக்கூறும் நிலை அல்லது அது தொடர்பான விசாரணைகள் இலங்கையில் ஏற்படுவதற்கான சாத்தியங்கள் மிக மிகக் குறைவே என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் பற்றீசியா புட்டினிஸ் கடந்த ஜனவரி மாதம் 15ஆம் திகதி வாஷிங்டனுக்கு அனுப்பி வைத்த தகவலில் தெரிவித்துள்ளார்.

''கூறப்படும் பெரும்பாலான போர்க் குற்றங்களுடன் இலங்கை ஜனாதிபதி, அவரது சகோதரர் மற்றும் எதிரணி ஜனாதிபதி வேட்பாளர் ஆகியோர் உள்ளிட்ட நாட்டின் முக்கிய நபர்களுக்கும் இராணுவத்தின் தலைமைக்கும் பெருமளவு தொடர்புகள் இருப்பதால் இந்த விடயம் (படுகொலைகள் பற்றிய நீதி விசாரணை) இலங்கையில் மேலும் சிக்கலானது'' - என்று அந்த ஆவணத்தில் புட்டினிஸ் எழுதியுள்ளார்.

கடந்த மாதம் சுயாதீன போர் விசாரணைகளுக்கு தான் ஆதரவு அளிக்கிறார் என்று பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் நாடாளுமன்றத்தில் கூறியிருந்தார். இறுதிப் போரின் போது நிகழ்ந்தவை தொடர்பில் தனக்கு ஆலோசனை வழங்கவென ஐ.நா. செயலாளர் நாயகம் ஆலோசனைக் குழு ஒன்றையும் நியமித்துள்ளார். இதுபோன்ற செயல்கள், பகிரங்க வெளிநாட்டு அழுத்தங்கள் எதிர்மாறான பலனைத் தரும் என்று அமெரிக்கத் தெரிவித்த கருத்தும் அந்த ஆவணங்களில் அடங்கி உள்ளது.

''இலங்கை அரசுக்கு போரில் வெற்றியை ஈட்டித் தந்த படையினருக்கு எதிரான ஒரு சர்வதேச சதியே போர் குற்ற விசாரணை வேண்டும் என எழும் கோரிக்கை'' என்று அதிபர் ராஜபக்ஷவும் அவரது கூட்டாளிகளும் பரப்புரை செய்ய இவ்வாறான நடவடிக்கைகள் வாய்ப்பு ஏற்படுத்தித் தரும் என அமெரிக்க தூதர் குறிப்பிட்டுள்ளார். (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# நீதி வழங்கத் தயக்கம் ஏன்?

வன்னிப் பகுதியில் இறுதிப்போர் நடைபெற்ற வேளை, சரண் அடைந்த தமது பிள்ளைகளை விடுதலை செய்யுமாறு அவர்களின் பெற்றோர்கள், ஆற்றாக் குறைக்கு ஜனாதிபதிக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர். சம்பந்தப்பட்ட எல்லாத் தரப்பிரனர்களுக்கும் தமது பிள்ளைகள் மற்றும் சகோதரர்களின் நிலையை விவரமாக விளக்கி மனுக்கள் அனுப்பியும் எவ்வித பயனும் கிடையாத கட்டத்தில், ஜனாதிபதியின் தயவை நாடியுள்ளார்கள், சரணடைந்த ஒன்பதாயிரத்துக்கும் அதிகமான இளைஞர்கள், யுவதிகளின் பெற்றோரும் உறவினர்களும்.

சரண் அடையும் போராளிகளும் பொறுப்பாளர்களும் பொது மன்னிப்பு வழங்கப்பட்டு சமூகத்துடன் மீண்டும் இணைக் கப்படுவார்கள் என்று ஜனாதிபதியின் பெயரில் வெளியிடப் பட்ட அறிவித்தலுக்கு மதிப்புக் கொடுத்தே, அதனை நம்பியே 9,000 இளைஞர், யுவதிகளும் சரண் அடைந்திருந்தார்கள்.

-அன்பார்ந்த போராளிகளே! பொறுப்பாளர்களே! உங்கள் அனைவருக்கும் பொது மன்னிப்புக் கொடுத்து சமூகத்துடன் மீண்டும் இணைக்கப்படுவீர்கள் என்று இந்த ஜனாதிபதி கூறினார். எனவே அறிவித்தலின் பிரகாரம் பாதுகாப்புப் படையினரிடம் சரண் அடையுங்கள் - என்று போர் உக்கிரம் அடைந்து கடைசிக்கட்டத்தை அண்மித்துக்கொண்டிருந்த வேளையில் ஒலிபெருக்கி மூலம் படையினர் அறிவித்தனர்.

அந்த அறிவித்தலை முழுக்க முழுக்க நம்பி, தமது உயிர் களையும் வாழ்க்கையும் காப்பாற்றும் பொருட்டு போரா ளிகளாக இருந்த இளைஞர்களும் யுவதிகளும் சரணடைந்தனர்.

பெற்றோர்களும் உறவினர்களும் தமது பிள்ளைகளையும் சொந்தங்களையும் சாவில் இருந்து காப்பாற்றுவதற்காக அவர்களைப் படையினரிடம் சரண் அடைய ஊக்குவித்தனர்; உந்தித் தள்ளினர்.

ஆனால் எதிர்காலப் பிரசைகளான இளைஞர்களையும் யுவதிகளையும் விடுவித்து, அவர்கள் சமூகத்தில் இணைந்து வாழ்வதற்கு அனுமதிக்காமல், கைதுசெய்யப்பட்டவர்கள் என்று நாமம் சூட்டி சிறைகளில் அடைத்து வைத்திருப்பது ஜனாதி பதியின் பதவியை அவமதிப்பதாகும்.

அவ்வாறில்லை எனின், ஜனாதிபதி போராளிகளைச் சரண் அடையுமாறு வேண்டுகோள் விடுக்கப் பணிக்காமலே, படை யினர் அவ்வாறு ஓர் அறிவித்தலை தாமாக வெளியிட்டு மிகவும் இக்கட்டான - ஒவ்வொருவரும் உயிரைக் காப்பாற்றக் கணங்களை எண்ணிக்கொண்டிருந்த ஆபத்தான - வேளையில் குறிப்பிட்ட ஒலிபரப்பு அறிவித்தலை விடுத்தார்களா என்ற சந்தேகம் தோன்றுகிறது.

அப்படி எதுவும் நடைபெறவில்லை; ஜனாதிபதியின் பணிப்பின் பேரிலேயே, அவரது அனுமதியின் பேரிலேயே, போராளி களைச் சரணடையுமாறு படையினரால் ஒலிபெருக்கி அறிவிப்பு விடுக்கப்பட்டதென்றால்-

அந்த வாக்குறுதியை நம்பிச் சரண் அடைந்த (முன்னாள்) போராளிகளான இளைஞர் யுவதிகளைப் போர் முடிவுற்ற ஆகக் குறைந்தது ஓரிரு மாதங்களிலேயே விடுவித்திருக்க வேண்டும்.

அவ்வாறின்றி, சரணடைந்த இளைஞர், யுவதிகள் கடந்த ஒன்றரை வருடங்களாக விளக்கமறியல் கைதிகளாக நாட்டில் உள்ள, வெவ்வேறு இடங்களில் உள்ள சிறைச்சாலைகளில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

அவர்கள் இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை நீதிமன்றங்களில் நிறுத்தப்பட்டு விளக்க மறியல் நீடிக்கப் பட்டு வருகிறது.

ஆனால் போர் முடிந்த பின்னர் சரண் அடைந்தவர்கள் சாதாரண விசாரணைகளின் பின்னர் புனர்வாழ்வு முகாம்களுக்கு அனுப்பப்பட்டு, கட்டம் கட்டமாக விடுவிக்கப்படுகிறார்கள். இந்தப் பாரபட்சம் தவிர்க்கப்பட்டு தமது பிள்ளைகளையும் விடுவிக்க வேண்டும் என்பதே படையினரின் அறிவித்தலுக்கு இணங்கத் தாமாக சரணடைந்த இளைஞர், யுவதிகளின் பெற் றோரின் கோரிக்கையாகும்.

சிங்கள மொழியே தெரியாத, விளங்காத தமது பிள்ளைகளிடம் அந்த மொழியில் விசாரணை நடத்திவிட்டு, அதே மொழியில் எழுதிய அறிக்கைகளில் கையெழுத்திடுமாறு விசாரணை அதிகாரிகள் வற்புறுத்தி அதனை பெற்றுள்ளார்கள். அவற்றின் அடிப் படையில் அந்த இளைஞர், யுவதிகளைப் படையினர் கைது செய்ததாகக் கூறி, நீதிமன்றங்களில் நிறுத்தப்படுகிறார்கள் .நீதிமன்ற விசாரணைகளும் சிங்களத்திலேயே நடைபெறுகின்றன - என்று தெரிவிக்கப்படுகிறது.

இறுதிப்போரின் போது 11,696 பேர் சரணடைந்தார்கள் என்று புனர்வாழ்வு, சிறைச்சாலைகள் முன்னாள் அமைச்சர் டியு.குணசேகரா புள்ளி விவரம் வெளியிட்டிருந்தார். இவர்கள் வெவ்வேறு அணிகளில் படையினரால் பதிவு செய்யப்பட்டது. பகிரங்கமாக நடைபெற்ற ஒன்று.

அவ்வாறிருக்க தமது பிள்ளைகள் படையினர் கைது செய்ததாகக் கூறி நீதிமன்றங்களுக்கு அழைத்துச் செல்லப்படு வதையும் சரணடைந்த இளைஞர், யுவதிகளின் பெற்றோரும், உறவினரும் ஜனாதிபதிக்கு அனுப்பிய மகஜரில் சுட்டிக்காட்டி உள்ளனர்.

சொல்வது ஒன்று செய்வது இன்னொன்று என்பது அரசாங்கத் தரப்பில் காலாதிகாலமாக வழக்கத்தில் உள்ள பழக்கமே. சொன்னதைச் செய்வேன். செய்வதைச் சொல்வேன், என்ற நல்லாட்சிக்கான குணாம்சத்தை அதிகார வர்க்கத்தினரிடம் எதிர்பார்க்கக் கூடாது என்பதனை நிலைநிறுத்துவதாக சரணடைந்த இளைஞர்களின் விவகாரம் மாறியுள்ளது.

சரணடைந்த இளைஞர், யுவதிகளின் பெற்றோரும் உறவினரும் விடுக்கும் நியாயமான கோரிக்கையை, ஜனாதிபதி தனிப்பட்ட முறையில் ஆராய்ந்து நீதி வழங்க வேனும் சம்பந் தப்பட்ட அதிகாரிகள் இடம் வைப்பார்களா என்பதனைச் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்!

# புதிய மாணவர் அனுமதியில் நிதி வசூல்; நிரூபிக்கப்பட்டால் உரிய நடவடிக்கை

## வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.3

பாடசாலைகளில் மாணவர்களின் அனுமதிக்கு நிதி வசூலிக்கப்படுவது தகுந்த ஆதாரத்துடன் நிரூபிக்கப்பட்டால் குறித்த பாடசாலை அதிபருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு உடனடியாகப் பணி இடைநிறுத்தம் செய்யப்படுவார் என்று வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இது விடயம் தொடர்பாக மேலும் தெரிவித்தவை வருமாறு:

தற்போது 2010ஆம் ஆண்டு நிறைவு பெற்றுப் புதிய கல்வியாண்டுக்குப் பாடசாலைகளில் மாணவர்கள் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் பாடசாலைகளில் மாணவர் அனுமதி என்ற பெயரில் பணம் வசூலிக்கப்படும் பட்சத்தில் அதனைப் பெற்றோர்கள் எம்மிடம் முறைப்பாடு செய்து தகுந்த ஆதாரத்துடன் நிரூபிக்க வேண்டும். இவ்வாறு நிரூபிக்கப்படும் பட்சத்தில் பாடசாலை அதிபர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர்கள் பணியில் இருந்து இடைநிறுத்தப்படுவர்.

மாணவர்கள் பாடசாலைகளில் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு எந்தவிதமான பணத்தையும் செலுத்தத் தேவையில்லை என்பதில் பெற்றோர்கள் அவதானமாகச் செயற்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-9)

# டெங்கு நோயாளர் குடாநாட்டில் அதிகரிப்பு; இந்த வருட டெங்கு மரணம் 25 ஆக உயர்வு

## தொற்றுநோய்த் தடுப்புப் பொறுப்பதிகாரி தகவல்

யாழ்ப்பாணம், டிசெ.3

குடாநாட்டில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரிக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. குருநகரில் நேற்று முன்தினம் டெங்கு நோய்த் தாக்கத்திற்குள்ளாகி 12 வயதுச் சிறுவன் உயிரிழந்துள்ளான்.

இந்த மரணத்துடன் இந்த வருடம் டெங்கினால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 25 ஆக அதிகரித்துள்ளது என்று யாழ்.மாவட்ட தொற்று நோய் தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி திருமதி சிவசங்கர் திருமகள் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு:

மழை காலம் தொடங்கியுள்ளதால் டெங்கு நோயின் தாக்கம் அதிகரிக்கும் வாய்ப்புள்ளது. எனவே பொது மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

தற்போது நாளொன்றுக்கு மூன்றுக்கு மேற்பட்ட டெங்கு நோய்த் தாக்கத்திற்குள்ளாகுவோர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

கடந்த மூன்று தினங்களுக்கு முன்னர் குருநகரைச் சேர்ந்த காணிக்கைராஜா கிரிஸ்ரிபன் என்ற 12 வயதுச் சிறுவன் டெங்கு நோயால் மரணமாகியுள்ளார். இதேவேளை-

யாழ். குருநகர், நாவாந்துறை ஆகிய பகுதிகளில் டெங்கு நோய்த் தாக்கத்துக்குள்ளாவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

இப்பகுதிகளில் டெங்கு தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகளை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மேற்கொண்டு வருகின்றனர். எனவே பொதுமக்கள் டெங்கு நோய் குறித்து விழிப்புடனும், அவதானத் துடனும் செயற்பட வேண்டும் எனவும் அவர்

## முன்பள்ளிக் கலைவிழா

உரும்பிராய் வடக்கு கணேசா சனசமூக நிலைய முன்பள்ளிக் கலைவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை பி.ப.1.30 மணிக்கு நிலைய நமணன் அரங்கில் நடைபெறும்.

சமாதான நீதிவான் ச.ஏகாம்பரநாதன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவுக்கு பிரதம விருந்தினராக லயன் வைத்திய கலாநிதி வை. தியாகராஜாவும், சிறப்பு விருந்தினராக வலி. கிழக்கு மத்தியஸ்தர் சபைத் தவிசாளர் இ.மயில்வாகனமும் கலந்துகொள்வர்.

# 49 சிசி வகைக்குட்பட்ட மோ.சைக்கிள்களைப் பதிவு செய்க

## மோட்டார் திணைக்களம் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், டிசெ.3

மோட்டார் சைக்கிள் வகை, 49 சிசி இக்கு உட்பட்ட அனைத்து வகை மோட்டார் சைக்கிள்களையும் இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னதாக பதிவு செய்யுமாறு மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள ஆணையாளர் அறிவித்துள்ளார்.

மேற்படி வகையுடைய மோட்டார் சைக்கிள்களை வைத்திருக்கும் உரிமையாளர்கள் உரிய ஆவணங்களை, மோட்டார் சைக்கிளைக் கொள்வனவு செய்த விற்பனை முகவரிடம் இருந்து பெற்று பின்வரும் ஆவணங்களுடன் நேரில் சமுகமளித்து பதிவு செய்து கொள்ளுமாறு யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அறிவித்துள்ளார்.

பதிவு செய்யத்தேவையான ஆவணங்களாக - வாகனம் கொள்வனவு செய்யப்படும் போது வழங்கப்படும் வாகனப் பதிவுக்குரிய விண்ணப்பப் படிவம், தேசிய அடையாள அட்டை போட்டோப்பிரதி (கிராம அலுவலரால்/ வாகனம் கொள்வனவு செய்யும் கம்பனி) உறுதிப்படுத்தியது, 6.25 cm X 5.00 cm அளவிலான வாகன உரிமையாளரின் இரு போட்டோ (கிராம அலுவலரால்/ வாகனம் கொள்வனவு செய்யும் கம்பனி) உறுதிப்படுத்தியது, மோட்டார் சைக்கிள் கொள்வனவு செய்யப்பட்ட பற்றுச்சீட்டின் மூலப்பிரதி அத்துடன் ஒரு போட்டோ பிரதி, மோட்டார் சைக்கிள் கொள்வனவு செய்யப்பட்டு 6 மாத காலத்திற்கு மேற்படின் சத்தியக் கூற்றுக் கடிதம் (இதில் தள இலக்கம், இயந்திர இலக்கம்), நிறம், கொள்வனவு செய்த முகவரின் முகவரி, வாகனம் கொள்வனவு செய்த முகவரின் பற்றுச்சீட்டு, இதுவரை பதிவு செய்யாதமைக்கான காரணம் ஆகியன குறிப்பிடப்பட்டு சமாதான நீதிவான் முன்னிலையில் 25 ரூபா பெறுமதியான முத்திரையில் ஒப்பமிடப்பட வேண்டும்.

ஒரு வருட காலத்துக்கு மேற்பட்ட தாயின் மோட்டார் சைக்கிள் தனது பிரிவிற்குட்பட்ட முகவரியில் வசிக்கும் உரிமையாளரின் பெயரில், அவரது பாவனையில் உள்ளது என்பதை கிராம அலுவலரால் உறுதிப்படுத்தப்பட்டு பிரதேச செயலரின் மேலொப்பத்துடனான கடிதம் ஆகிய ஆவணங்களுடன் நேரில் சமுகமளித்து பதிவுகளை மேற்கொள்ளுமாறு அரச அதிபர் தெரிவித்துள்ளார். (ம - 201)

## நாளை

| | | |
|---|---|---|
| கார்த்திகை 18 | : | 04.12.2010 சனிக்கிழமை |
| திதி: | : | சதுர்த்தசி பி.இ. 12.49 வரை |
| நட்சத்திரம் | : | விசாகம் மு.இ. 07.37 வரை |
| சுபநேரம் | : | 03.15-04.45 வரை |
| ராகுகாலம் | : | 09.15-10.45 வரை |

## அறஞ்செய்ய விரும்பு

''அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது'' என்கின்றார் ஔவையார். இப்பூவுலகில் மனிதராய்ப் பிறக்க நாம் புண்ணியஞ் செய்திருக்க வேண்டும். இந்தப் புண்ணியத்தை நாம் எப்படிச் செய்வது? இதை யாராவது சிந்தித்திருக்கின்றீர்களா?. 'அறஞ் செய விரும்பு' இதுவும் ஔவையார் கூறியதுதான். இதில் வெளிப்படையாகவே 'அறஞ் செய விரும்பு' என்று கூறப்பட்டுள்ளது.

எங்களால் முடிந்த அளவு தர்மஞ் செய்யவேண்டும். எமது இவ்வுலக வாழ்வில் நாம் நன்மை செய்யாவிட்டாலும் தீமையைச் செய்யக்கூடாது. இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால், ஔவையார் ' அறஞ் செய விரும்பு' என்று தான் கூறினாரே தவிர, அதைக் கட்டாயம் செய்யத்தான் வேண்டும் என்று கூறவில்லை. ஏன்? என்ன காரணம் ? அங்கேதான் விஷயமே இருக்கிறது. அதாவது தர்மம் செய்யும் போது உள்ளத்தால் முழு மனதோடு சந்தோஷமாகக் கொடுக்க வேண்டும். ''இதென்னடா காலங்காத்தாலை வந்திட்டான்'' என்று சினந்து கொண்டு கொடுத்தால், அது அறமல்ல. அதிலே எந்தவிதமான பிரயோசனமும் இல்லை.

ஞானக்கதிர்

அதனாற்றான் ஔவையார் 'அறஞ் செய விரும்பு' என்று அழகாகக் கூறியுள்ளார். 'தர்மம் தலைகாக்கும். தக்க சமயத்தில் அது உயிர் காக்கும்' என்று ஆன்றோர் கூறியது எவ்வளவு உண்மை பாருங்கள். அது போலவே 'அறஞ் செய விரும்பு' என்பதிலும் ஆழ்ந்த கருத்து மறைமுகமாக அங்கே பொதிந்திருக்கின்றது. வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்தது எதற்காக? எம்மால் தர்மஞ்செய்ய முடியாவிட்டால் வாயினாலே வாழ்த்தி அனுப்பலாம். வலது கை கொடுப்பதை இடதுகை அறியக்கூடாது என்று சும்மாவா சொல்லியிருக்கின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘லங்கா சோல்ற்’ நிறுவன பணியாளர் 71 பேரை சமுகமளிக்குமாறு அழைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.3

‘லங்கா சோல்ற்’ நிறுவனத்தில் பணிபுரிந்த பணியாளர்கள் 96 பேரில் 25 பணியாளர்களது பணிக்கொடை, நஷ்டஈடு, நிலுவைச் சம்பளத்தைக் கடந்த ஒக்ரோபர் மாதம் 25ஆம் திகதி தொழில் உறவுகள் உற்பத்தித்திறன் அமைச்சர் காமினி லொக்குகே வழங்கியுள்ளார்.

மிகுதி 71 பணியாளர்களது பணிக்கொடை, நஷ்டஈடு, நிலுவைச் சம்பளம் என்பவற்றை வழங்குவதற்கான நடவடிக்கையினை மேற்கொள்வதற்காக கீழ்க் குறிப்பிடப்படும் ஊழியர்களை எதிர்வரும் திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் தொழில் அலுவலகத்திற்கு நேரடியாக வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

தத்தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தேசிய அடையாள அட்டையின் நிழற்படப் பிரதி, ரூபா 50 பெறுமதியான முத்திரை ஆகியவற்றையும் கொண்டு வருமாறு யாழ்.உதவித் தொழில் ஆணையாளர் க.கனகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

அழைக்கப்பட்டோர் விவரம்:-

வரதலட்சுமி வோல்ரஸ், புண்ணியமூர்த்தி சிறீகாந்தன், சின்னமுத்து சண்முகவதன், கணபதிப்பிள்ளை பொன்னுத்துரை, முருகுப்பிள்ளை குலசிங்கம், யோசப் திரவியஹககம், முருகன் கந்தசாமி, சித்தன் கந்தசாமி, கார்த்திகேசு விக்னேஸ்வரன், பரமசாமி பத்மகாந்தன், வீரசிங்கம் ராஜேந்திரம், கனகசபை குணசிங்கம், கதிர்காமம் மதிபாலசிங்கம், சண்முகம் துரைராஜா, மூத்ததம்பி நவரட்ணம், அந்தோனிப்பிள்ளை தேவசகாயம், சின்னர் தணிகாசலம், செல்லத்தம்பி செல்வகுமார், கருதன் தவநாதசெல்வம், வேலுப்பிள்ளை தங்கராஜா, சின்னவன் லக்குணம், எல்.எவ்.கீல், சுந்தரம் வல்லிபுரம், முருகன் வைரமுத்து, பொன்னுச்சாமி தங்கவடிவேல், கணபதிப்பிள்ளை ஞானலிங்கம், சிவக்கொழுந்து சிவராஜா, சந்தனம் ராமன், கொலின் கனகராஜா, சுந்தரம் புலேந்திரன், நடராஜா மகேந்திரம், நடராஜா தெய்வேந்திரம், சரவணாநந்தம் கஜேந்திரராஜா, மயில்வாகனம் சந்திரசேகரம், கணபதிப்பிள்ளை மகாதேவா, கந்தையா விநாயகமூர்த்தி, ஆறுபிள்ளை கனகசிங்கம், கனகசபை தங்கேஸ்வரன், இராசையா நவரட்ணம், மயிலுகானம் கணபதிப்பிள்ளை, ஆறுமுகம் கந்தசாமி, சின்னையா கந்தசாமி, குழந்தையன் சிவப்பிரகாசம், தம்பிராஜா துரைசாமி, சின்னவன் சின்னத்தம்பி, கருதன் செல்வராஜா, தர்மலிங்கம் பத்மநாதன், முத்தையா சிவம், சிவசம்பு சிவகுமார், செல்லத்தம்பி சந்திரகுமார், கிட்டிணன் சந்திரசேகரம், இராசையா நடராஜா, கார்த்திகேசு தியாகராஜா, பொன்னையா இர்ாசரத்தினம், வேலுப்பிள்ளை குமாரசாமி, கோவிந்தபிள்ளை முத்துலிங்கம், அருணாசலம் இராமுப்பிள்ளை, சின்னையா தியாகராஜா, கந்தையா குணபாலசிங்கம், கந்தையா மனோகரன், வைரமுத்து சின்னையா, வல்லிபுரம் பத்மநாதன், கஸ்பர் சந்திரன், சுப்பையா சிறிகந்தராஜா, பீ.செல்வநாயகம், செல்லத்துரை வீரபத்திரன், சீனிராஜா சுந்தரராஜா, இராசையா பரராஜசிங்கம், இளையதம்பி செல்வராஜா, கனகசபை மயில்வாகனம், கே.செல்வராஜா. (ம)

# இலவச வழிகாட்டல் கருத்தரங்கு

2010 க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான இலவச வழிகாட்டல் கருத்தரங்கு சேர். பொன்.இராமநாதன் வீதியில், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு முன்பாகவுள்ள பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவை நிலையத்தில் நாளை சனிக்கிழமை முதல் எதிர்வரும் 8ஆம் திகதி புதன்கிழமை வரை காலை 8.30 மணி முதல் நடைபெறவுள்ளது. இக் கருத்தரங்கில் சனிக்கிழமை கணித பாடம் தொடர்பாக யாழ்.இந்து மகளிர் கல்லூரி ஆசிரியர் ரி.ஆர்.கயூரனும் ஞாயிற்றுக் கிழமை தகவல் தொழில்நுட்பம் தொடர்பாக ஆசிரியர் இ.குமரனும் திங்கட் கிழமை விஞ்ஞானப் பாடம் தொடர்பாக ஆசிரியர் தாஸும் செவ்வாய்க் கிழமை வர்த்தகபாடம் தொடர்பாக யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர் எஸ்.சிவாவும் புதன் கிழமை ஆங்கில பாடம் தொடர்பாக கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய ஆசிரியர் பி.என். சுதர்சனும் கருத்துரை வழங்குவர்.

இக்கருத்தரங்கில் பங்குபற்றுபவர்களுக்கு இலவசமாகவழிகாட்டல் கையேடுகளும் வழங்கப்படவுள்ளன. பரீட்சைஎடுக்கவுள்ள மாணவர்கள் கலந்துகொண்டு பயனடையுமாறு சாயி நிலையத்தினர் கேட்டுள்ளனர். (ஒ)

# சாதாரணதர பரீட்சை அனுமதி அட்டை வழங்கல்

முள்ளியவளை,டிசெ.3

முல்லைத்தீவு மகா வித்தியாலயம் ஊடாக சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான அனுமதி அட்டை கள் எதிர்வரும் 6 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் விநியோகிக் கப்படவுள்ளன என்று பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார். (555)


**Lap Top கணினிவிற்பனைக்கு**

I 3 Hp Lap Top, latest கணினிகள் விற்பனைக்குண்டு.

தொடர்பு: Sky Computer System, 162,பிரதான வீதி (டேவிற் பீரிஸ் முன்பாக), யாழ்ப்பாணம். தொ.பே:-0212221417

**தரம் 04 முதல் O/L வரை**

புதியபாடஅலகுகள் ஆரம்பமாகின்றன

1973 - 2013

உங்கள் பிள்ளைகளின் உயர்ந்த எதிர்காலத்தை உறுதிப்படுத்த ஓர் அரிய சந்தர்ப்பம்

2ம் கட்ட அனுமதிகள் வழங்கப்படுகின்றன

உங்கள் குழந்தைகளின் ஆரம்பக்கல்வி மகிழ்ச்சிகரமனதாக அமைவதற்கு புதிதாக ஆரம்பிக்கப்படும் தரம் 03 இற்கான புதிய வகுப்பில் இணைத்துக் கொள்ளுங்கள்

- அதிபர்

The Express Institute Irupalai, Kopay.

**MyWay English ஆங்கில பயிற்சிநெறி**

Grammar இலக்கண கற்றல் மூலமோ Computer கணினி வழி கல்வி மூலமோ ஆங்கிலத்தினை பேச முடியாது

பேசுதல் என்பது வசனங்களை உருவாக்குவதோ அல்லது மொழி மாற்றுவதோ இல்லை

தமிழ் தொடர்பில்லாத Channel இனை உருவாக்குவதன் மூலம்

ஆங்கிலத்தில் ஒரு சொல்கூட தெரியாதவர்களும்

3 மாதத்தில் சரளமாக ஆங்கிலம் பேச முடியும்

ஆசிரியர்கள், அரச அலுவலர்கள், பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்

ஆரம்பம் : 04.12.2010 காலம் : 3 மாதங்கள்

பிரிவுகள் : 8 — 9, 10 — 11, 1 — 2, 2 - 3

(ஏதாவது ஒரு பிரிவில் பயிற்சியில் சேரலாம்)

(50% கட்டணச்சலுகையுடன் பயிற்சியில் சேர கடைசி சந்தர்ப்பம்)

தனியார் அலுவலர், இளைஞர் யுவதிகளுக்கு அனுமதி இல்லை

பல்கலைக்கழகம் பூர்த்திசெய்தோரும் பயிற்சியில் சேரலாம்

MyWay 182, Stanley Rd Jaffna 077 33 63 456


**துயர் பகிர்கின்றோம்**

எமது பாடசாலை பிரதி அதிபர் அ.ஆனந்தராஜா அவர்களின் பாசமிகு மாமியார்

**சந்திரசேகரம் இராஜேஸ்வரி**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் பங்குகொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

பா/பெரியபுலம் மகாவித்தியாலயம்

அதிபர், ஆசிரியர், கல்விசாரா ஊழியர்கள்.

# தசாக கிருஹயக்ஞ அழைப்பு

நிகழும் விகிர்தி வருஷம் கார்த்திகைத் திங்கள் 9 ஆம் நாள் (25.11.2010) வியாழக் கிழமை இரவு அபரபக்ஷ பஞ்சமித் திதியில் சிவபதம் அடைந்த எமது அன்புத் தயார்



காசிப கோத்திரம் அமரர் ஸ்ரீமதி

**சிவஸ்ரீ தியாகராஜக் குருக்கள் ருக்மணி அம்மா** அவர்களின்

தசாக சபிண்டீகரண ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்

04.12.2010 சனிக்கிழமை மு.ப. 10 மணி தசாகம்

05.12.2010 ஞாயிற்றுக்கிழமை ஏகோதிஷ்டம், மாசியம்

06.12.2010 திங்கட் கிழமை சபிண்டீகரணம்

07.12.2010 செவ்வாய்க்கிழமை மதியம் கிருஹயக்ஞம் (சமாராதனை)

மேற்படி கிரியைகளில் பங்குபற்றி அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து அதனைத் தொடர்ந்து நடைபெறும் சமாராதனையிலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

சிவஸ்ரீ தியாக கிருஷ்ணமூர்த்திக் குருக்கள் (மகன்), மருமகள், பேரப்பிள்ளைகள்.

ஸ்ரீ கற்பகப் பிள்ளையார் கோயில், உரும்பிராய்

தொ.பே: 021 222 5440


**விற்பனைக்கு**

நல்ல நிலையில் உள்ள Canon Digital (iR2320L/ iR2318L) போட்டோப் பிரதி இயந்திரம் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 0777040767

**இறைச்சிக்கோழி விற்பனைக்கு**

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. சுத்தம் செய்யப்பட்டது. 480/=. சுத்தம் செய்யப்படாதது 300/=.

தொடர்பு: கி.செல்ரன், நீர்வேலி வடக்கு (மாதா கோயில் முன்பாக).

**வீடு வாடகைக்குத் தேவை**

யாழ்.நகரச் சுற்றாடலில் குடும்பம் ஒன்று வசிப்பதற்கான வீடு வாடகைக்குத் தேவை. தகுந்த முற்பணம் மற்றும் வாடகை தரப்படும்.

தொடர்புகளுக்கு:- தொ.பே:-0777730567

**German Swiss மொழி வகுப்புகள்**

German Swiss மொழி வகுப்புகள் தமிழ் மொழி பெயர்ப்புடன் நடைபெறுகின்றன. அத்தோடு CD, புத்தகங்கள் கொடுக்கப்படும். Germany இல் படித்து வந்த ஆசிரியரால் கற்பிக்கப்படுகின்றது. NO.10,Palaly road, Jaffna. T.P.0771604823

**தவறிவிட்டது**

ஓட்டுமடம் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த ... என்பவரது தே.அ.அட்டை (615844098V), டிரைவிங் லைசென்ஸ் அடங்கிய பேர்ஸ் யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியாவுக்குச் சென்ற தனியார் பஸ்ஸில் தாண்டிக்குளத்துக்கும் வவுனியாவுக்கும் இடைப்பட்ட பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியுடன் தொடர்பு கொள்ளவும், சன்மானம் வழங்கப்படும். T.P: 0779193392

**தவறிவிட்டது**

உடுவில் கிழக்கு, சுன்னாகத்தைச் சேர்ந்த சோதிநாதன் தேவாகரன் என்பவரது Pass Port (M1133639) கடந்த 25.10. 2010 அன்று இணுவில் கோயில் வாசலுக்கும் இணுவில் ஆஸ்பத்திரிக்கும் இடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொ.பே: 0770869918

**கோழிக்குஞ்சு விநியோகம்**

35 நாள்களில் 2Kg வளரக்கூடிய தரமான மீட் லைன் (கிறிஸ்போ) புறொயிலர் குஞ்சுகள் 130/- இற்கு விற்பனைக்குண்டு.

தொடர்புக்கு: 021 2223353

**சனிக்கிழமை அதிர்ஷ்டம்**

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2178 திகதி 01-12-2010

ஆங்கில எழுத்திற்கும் S

வெற்றி எண்கள் 09 13 37 43

போனஸ் இல: 06

ஜக்பொட் பரிசு ரூ. 24,603,525/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 188313 | 20/- | 3,766,260/- |
| 2 இல | 13435 | 100/- | 1,343,500/- |
| 3 இல | 283 | 1,000/- | 283,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7480 | 40/- | 299,200/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 510 | 1,000/- | 510,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 12 | 10,000/- | 120,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 24,603,525/- | - |
| 1 இல + போனஸ் இல | 8937 | 100/- | 893,700/- |
| 2 இல + போனஸ் இல | 422 | 500/- | 211,000/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 366 | 200/- | 73,200/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 15 | 1,500/- | 22,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 8,922,360/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 10 | 60,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 219788 | | 9,522,360/- |

ரூ. 60,000/- வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 10 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| இரத்தினபுரி | 202564036-8-28 |
| கண்டி | 202566600-9-48 |
| மட்டக்களப்பு | 202576465-8-10 |
| கொழும்பு | 202574929-4-40 |
| திருகோணமலை | 202567319-7-11 |
| கொழும்பு | 202558159-5-17 |
| மாத்தறை | 202554624-3-21 |
| அம்பாந்தோட்டை | 202554424-2-13 |
| கேகாலை | 202559237-7-11 |
| பதுளை | 202560359-6-40 |

வரும் சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு

ரூ. 25,117,125/-

பச்சை நிற டிக்கட்டுகள் 2010 டிசம்பர் 04 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

**SHAMROCK**

ஈச்சமோட்டை, யாழ்.

ECON A/L 2012

V.ஞானவேல் B.B.A (F.M.Spl.)

நெகிழ்ச்சிக் கோட்பாடு Mon, Fri 5.30pm

* B.St:- B.S.பசில் B.B.A Acc:- ... (Hons) (Acc.Spl.)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் எய்ட்ஸ் மேலும் பரவ சாதகச் சூழல் இப்போது ஏற்பட்டுள்ளது

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.3

உலகம் முழுவதிலும் 34 மில்லியன் மக்கள் எய்ட்ஸ் நோய் தொற்றுக்குள்ளாகியுள்ளதுடன் ஒவ்வொரு நாளும் 6 ஆயிரம் பேர் உலகத்தில் எய்ட்ஸ் நோய்த் தொற்றுக்குள்ளாகின்றனர். ஏ - 9 வீதி திறக்கப்பட்டு போக்கு வரத்து நடைமுறைகள் இலகுபடுத்தப்பட்டதைத் தொடர்ந்து குடாநாட்டில் எய்ட்ஸ் நோய் இலகுவில் பரவுவதற்குச் சாதகமான சூழல் ஏற்பட்டுள்ளது. அதைவிட தகவல் தொழில் நுட்பத்தின் அதீத வளர்ச்சி எய்ட்ஸ் நோய்க் கான சாதகமான காரணியாக மாறியுள்ளது. - இவ்வாறு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆர். கேதீஸ்வரன் தெரிவித்தார்.

சர்வதேச எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டுதியாகி அறக்கொடை நிறுவனத்தில் நடைபெற்ற நிகழ்வுக்குத் தலைமை தாங்கி உரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் உரையாற்றுகையில்:-

எய்ட்ஸ் நோயில் இது வரையில் 25 மில்லியன் மக்கள் உலகில் இறந்துள்ளனர. இவ்வாறு இறந்தவர்களின் நினைவாகவும் சாதாரண பொது மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவற்காகவுமே இவ்வாறான ஒருதினம் கடைப்பிடிக்கப்பட்டு நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன.

யாழ்.மாவட்டத்தில் இது வரையில் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட 42 பேர் இனங் காணப்பட்டுள்ளனர். இவர்களில் 23பேர் இறந்துள்ளனர். 19 பேர் இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். ஆனால் உண்மையான எய்ட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கை இதைவிட அதிகமாகவே இருக்கும். இதுவரையில் இனங்காணப்படாமல் எத்தனையோபேர் வாழ்ந்து வருகின்றனர். அவர்களின் எண்ணிக்கை பலமடங்காகவே இருக்கும்.

ஏ-9 வீதி திறக்கப்பட்ட பின்னர் ஏனைய மாவட்டங்களிலிருந் தும் வேறு நாடுகளிலிருந்தும் யாழ்ப்பாணத்துக்குப் பலர் வந்து போகின்றனர். அதைவிட தகவல் தொழில்நுட்பத்தின் அதீதவளர்ச்சி எய்ட்ஸ் நோய்க்கான சாதகமான காரணியாக மாறி யுள்ளது.

தகவல் தொழில் நுட்பத்தால் பல மாற்றங்கள் ஏற்பட்டன. இதனால் பல நன்மைகள் ஏற்பட்டதைப் போலவே இதனால் ஏற்படும் ஒரு தீமையாக எய்ட்ஸ் நோயைக் குறிப்பிடலாம். இதனைத் தடுப்பதற்குப் பாதுகாப்பான நடத்தை ஒன்றே அவசியமாகின்றது. 30 வருட யுத்தத்தால் எமது சமூக கட்டுமானம் சிதைந்துள்ளது. இந்தச் சிதைவானது எய்ட்ஸ் நோய் இங்கு வேகமாகப் பரவுவதற்கான சாதகமான சூழலை ஏற்படுத்தியிருக்கின்றது- என்றார். (201)

# வடமராட்சி வலய நிர்வாகத்தில் இராமாவில் பாடசாலை இணைவு

பருத்தித்துறை, டிசெ.3

கொடிகாமம், இராமாவில் பாடசாலை நேற்றுமுன்தினம் புதன் கிழமை தொடக்கம் வடமராட்சி வலயக்கல்வித் திணைக்களத்தின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவனின் பணிப்பின் பேரில் இந்த நிர்வாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் இந்தப் பாடசாலை தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தின் நிர்வாகத்தின் கீழ் இருந்து வந்தது.

இந்தப் பாடசாலையில் இராமாவில் நலன்புரி நிலையத்தில் தங்கியிருக்கும் 273 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றார்கள். இவர்களில் 254 மாணவர்கள் வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, கேவில், போக்கறுப்பு ஆகிய இடங்களை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவர்கள்.

அந்தப் பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர்த்தப்படாததினால் அந்த மாணவர்களின் குடும்பங்கள் இராமாவில் நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ளார்கள். இவர்களைவிட 19 வேறு மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்களும் இங்கு கல்வி கற்று வருகின்றனர்.

நேற்றுமுன்தினம்புதன்கிழமை தொடக்கம் இந்தப் பாடசாலையின் அதிபராக வடமராட்சி வலயத்தைச் சேர்ந்த ரி.செல்வகுமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தப் பாடசாலையின் வெளி மாவட்டத்திலிருந்து இணைப்புப் பெற்ற 20 ஆசிரியர்கள் கடமையாற்றி வருகின்றார்கள்.

இந்தப் பாடசாலையில் கல்வி கற்கும் 27 மாணவர்கள் எதிர் வரும் 13 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(204-190)

## கௌரவிப்பு ...



மாணவர் திறமை- பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் இந்து மாணவமன்ற கலை விழாவும் பரிசளிப்பு விழாவும் அண்மையில் நடைபெற்றன. நிகழ்வில் இந்து மாணவ மன்றத் தலைவி செல்வி கீர்த்தனா மணிவண்ணன் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைக்கிறார். அருகில் பாடசாலை அதிபர் திருமதி எஸ்.சுந்தரேசன், இந்து மாணவ மன்றப் பொறுப்பாசிரியை திருமதி யமுனா நந்தகுமார் மற்றும் மாணவிகள் நிற்கின்றனர்.

(201)

# ஆலயத்தில் திருட்டு

வலி.வடக்கு டிசெ.3

சுமார்ஐம்பது ஆண்டுகளுக்கு மேற்பட்ட ஐம்பொன்னிலான குத்துவிளக்குகள், வேல் என்பன மல்லாகம்கோணப்புலம் வைரவர் ஆலயத்தில்கடந்த புதன்கிழமை திருட்டுப் போயுள்ளதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆலயத்தின் வெளி மண்டபத்தில் இருந்த மேற்குறிப்பிட்ட வேல் மற்றும் குத்துவிளக்குகளை ஆலய மதில் வழியாக உள் நுழைந்து திருடிச் சென்றுள்ளனர்.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(201-86)

# வீடு வளவில் சுத்தம் பேணாதோர் மீது மல்லாகம் நீதிமன்றில் வழக்கு

சண்டிலிப்பாய் டிசெ.3

தற்போது பெய்துவரும் அடைமழையைத் தொடர்ந்து வலி. தென்மேற்குப் பிரதேசத்தில் டெங்கு நோயை ஏற்படுத்தும் நுளம்புகளின் உற்பத்தியைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் சண்டிலிப்பாய் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்கள் பொலிஸாருடன் இணைந்து வீடு வீடாக மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது இருபதுக்கும் அதிகமான வீடுகளில் நுளம்புக் குடம்பிகள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து மேற்படி நபர்கள் மீது டெங்கு நோய்க்கட்டுப்பாட்டுச் சட்டத்தின கீழ் மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குடாநாட்டில் தீவிரமாகப் பரவி வந்த டெங்கு நோய் சம் பந்தப்பட்ட அதிகாரிகள் எடுத்துக் கொண்ட முயற்சியால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ள போதிலும் பருவ மழையைத் தொடர்ந்து மீண்டும் பரவ ஆரம்பித்துள்ளது.

எனவே இதனைக்கட்டுப் படுத்தும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ள மேற்படி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்கள் பொலிஸாருடன் இணைந்து சுதுமலை, ஆனைக்கோட்டை ஆகிய இடங்களிலுள்ள வீடுகளுக்குச் சென்று சோதனை நடத்தினர். இருபதிற்கும் அதிகமான வீடுகளில் மழைநீர் தேங்கி நின்றதனால் குடம்பிகள் உற்பத்தியாகிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து இவர்கள் மீது மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(201-115)

# கால்நடை வளர்ப்போர் மழையால் சிரமம்

கொடிகாமம், டிசெ.3

தற்போது பெய்யும் மழை காரணமாக தென்மராட்சி, வரணிப் பிரதேசத்தில் கால்நடை வளர்ப்போர் தமது கால்நடைகளைக் கட்டி வளர்ப்பதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

வீடுகள், தரைகள் என்பவற்றில் வெள்ளம் தேங்கி நிற்பத னால் அவற்றை வீடுகளில் கட்டி வைக்கவோ, அவற்றை தரை களில் கொண்டு சென்று மேய்க் கவோ பெரும்சிரமங்களைஎதிர்நோக்குகின்றனர்எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கால்நடைகளை நிலத்தில் கட்டிவைக்கும் போது குளிர் காரணமாகப் பல கால்நடைகள் இறக்கும் நிலை ஏற்படுவதாகவும் கால்நடை வளர்ப்போர் அச்சம் தெரிவிக்கின்றனர். (204-122)




# திண்மக்கழிவுகளை அகற்ற நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

சண்டிலிப்பாய், டிசெ.3

சுற்றுச்சூழல் பாதுகாப்பை நடைமுறைப்படுத்தும் வகையில் மானிப்பாய் நகரில் மக்கள் நடமாட்டம் அதிகரித்துள்ள வர்த்தக நிலையங்கள், நெருக்கமாகவுள்ள இடங்களில்,வீதிகளில் சேரும் திண்மக் கழிவுகளை அகற்றுவதற்கான நடவடிக்கையைமேற்கொள்ளுமாறு மானிப்பாய் கோவில்பற்று வர்த்தக சங்கத் தலைவர் ரி.தர்பாகரன் வலி.தென்மேற்கு பிரதேச சபை செயலாளரைக் கோரியுள்ளார்.

பல வழிகளிலும் முன்னணியில் திகழ்கின்ற மானிப்பாய் நகரை தூய்மையாகவும், அழகாகவும் வைத்திருக்க வேண்டிய பொறுப்பு வர்த்தகர்களினதும், பொது மக்களினதும் கடமையாகும். இதற்கு முக்கியமாகப் பிரதேச சபை ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

வர்த்தக நிலையங்களுக்கு மக்கள் நடமாட்டமும் அதிகரித்துள்ள இந்தவேளையில், மானிப்பாய் நகரில் பிரதான வீதியில் குப்பை, கூழங்கள் சேருவதைத் தவிர்க்க முடியாது. எனவே, யாழ். மாநகரசபையால் நடைமுறைப்படுத்தப்படுவது போல எமது பிரதேசத்திலும் காலையும் மாலையும் திண்மக் கழிவுகளை அகற்றுவதற்கான ஒழுங்குகளை பிரதேசசபை மேற்கொள்ள வேண்டுமென்று மேற்படி சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார். அத்துடன் கழிவுகளைப் போடுவதற்கு வசதியாகக் குறிப்பிட்ட இடங்களில்பிளாஸ்டிக் பெட்டிகளை வைக்க வேண்டுமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வீடு புனரமைப்புக் கடனுக்கு விண்ணப்பங்கள் கோரல்

சண்டிலிப்பாய், டிசெ.3

வீடு புனரமைப்புக்கு விண்ணப்பித்தவர்களுக்கான கடன் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதியிலிருந்து 10 ஆம் திகதி வரை வழங்கப்படவிருப்பதால் கடனைப் பெற விரும்பும் பயனாளிகள் இந்த மாதம் 30 ஆம் திகதிக்கு முன்பு கடன் பெறுவதற்கான விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை அறிவித்துள்ளது.

வன்னி உட்பட யுத்தத்தினால் சேதமடைந்த வீடுகளைத் திருத்துவதற்கு அரச ஊழியர்களுக்கு 3 லட்சம் ரூபாவும் ஏனையோருக்கு ஒரு லட்சத்திலிருந்து 2 லட்சம் ரூபா வரையும் கடனாக வழங்க தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை முன் வந்துள்ளதுடன், இதற்கான சகல ஒழுங்குகளும் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தது 500 பயனாளிகளுக்கு மேற்படி கடன் வழங்கப்படவிருக்கிறது.

கடனைப்பெற விரும் பும் பயனாளிகள் இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்பு விண்ணப்பங்களைத் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப் பட்டுள்ளது. (201-115)

# நுளம்புகளை அழிக்க சண்டிலிப்பாயில் புகையூட்டல்

சண்டிலிப்பாய், டிசெ.3

சுகாதாரத் திணைக்களத்தின் பூச்சியல் ஆய்வுப் பகுதியினரால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையைத் தொடர்ந்து டெங்கு நோயை ஏற்படுத்தும் நுளம்புகளை அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள சுகாதாரப் பகுதியினர் உடுவில் சண்டிலிப்பாய் பிரதேச வைத்திய அதிகாரி பிரிவுகளில் புகையூட்டும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

குடாநாட்டில் அடைமழை பெய்து வருவதைத் தொடர்ந்து டெங்கு நோயின் பரம்பல் மீண்டும் ஆரம்பித்துள்ளது. இந்த நோயைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ள சுகாதாரப் பகுதியினர் இனம் காணப்பட்ட இடங்களில் வீடு வீடாகச் சென்று மழைநீர் தேங்கி நின்று நுளம்புகளை உற்பத்தியாக்கக் கூடிய தடயப் பொருள்களைக் கண்டுபிடித்து அழித்து வருகின்றனர். அத்துடன் இந்த நோய் குறித்து மக்கள்மத்தியில் விழிப் புணர்வையும் ஏற்படுத்தி வருகின்றனர்.

நுளம்பின் உற்பத்தி குறித்து யாழ்.சுகாதாரத் திணைக்களத்தின் பூச்சியல் ஆய்வுப் பிரிவினர் உடுவில், மருதனார்மடம் ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட ஆய்வின் அறிக்கையைத் தொடர்ந்து மேற்படி பகுதிகளில் புகையூட்டும் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. (201-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப் பெயர்ச்சி உங்களுக்கு எப்படி?

## 21.11.2010 முதல் 07.05.2011 வரை

*வாசகர்களே !*
*நீங்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த குருப் பெயர்ச்சி வந்து விட்டது. இதுவரை கும்ப ராசியில் சஞ்சரித்து சிறிது காலப்பகுதியில் குருவாசம் செய்து, பின் மீனத்துக்கு அதிகாரமாகச் சென்று, பலா பலன்களைக் கொடுத்து மீண்டும் கும்பத்துக்கு வந்து ஒரு சில நாள்கள் மட்டும் இருந்த குரு இப்பொழுது 12 ஆம் இடமான மீனராசியில் கடந்த 21ஆம் திகதி முதல் சஞ்சரித்து உங்களுக்கான பலா பலன்களை வழங்கவுள்ளார்.*

### விருச்சிகம்

நல்ல எண்ணங்கள் ஊற்றெடுக்கும் மனதைக் கொண்ட விருச்சிக ராசி அன்பர்களே!

உங்கள் ராசிக்கு ஐந்தாம் இடத்தில் மீனராசிக்கு குருபகவான் பெயர்ச்சியாகி உள்ளார். குரு தனது 5, 7, 9 ஆகிய பார்வையால் முறையே ராசிக்கு 9, 11 மற்றும் ராசி ஆகிய ஸ்தானங்களைப் பார்க்கிறார். கோசார ரீதியாக குருபகவான் ராசிக்கு ஐந்தாம் இடத்தில் பரவேசிக்கிறபொழுது புத்திரர்களால் குடும்பத்தினர் பெருமை பெறுகிற நிறைவான நல்யோகங்கள் உண்டாகும். திரிகோண ஸ்தானத்தில் அமர்ந்த குரு சந்திரனைப் பார்ப்பதால் சிந்தனையில் தெளிவு, புதிய யுக்தி பிறக்கும். மொத்தத்தில் இந்த குருபெயர்ச்சி உங்களை குஷிப்படுத்துவதாக இருக்கும். உங்கள் நலத்துடன் பிறர் நலத்தையும் காத்திடுவீர்கள். பணவரவு திருப்திகரமாகக் கிடைக்கும். சகோதர, சகோதரிகள் வாழ்வில் முன்னேறவும், புகழ்பெறவும் உதவுவீர்கள். புதிய வீடு, வாகனம் வாங்குகிற திட்டம் சிறப்பான வகையில் நிறைவேறும். தாய்வழி உறவினர்கள் உங்களை பெருமைப்படுத்துவர். பூர்வீக சொத்துக்களில் வளர்ச்சி, வருமானம் உயரும். இஷ்ட, குலதெய்வ அருள் பரிபூரணமாகத் துணைநிற்கும். பிள்ளைகள் நல்லவிதமாக நடந்து கல்வியில் சிறந்த ஞானம் பெறுவார்கள். பெரியவர்களிடம் மரியாதையும் கொள்வர். வேலை வாய்ப்பில் முன்னுரிமை, உயர் பதவி பெறுவார்கள். எதிரிகளால் தொந்தரவு எதுவும் அணுகாத சமூகவாழ்க்கை அமையப்பெறுவீர்கள். உடல்நலம் பலமுடன் இருக்கும். கடன்மிகுதிகளைப் பெருமளவு அடைப்பீர்கள். கணவன், மனைவி ஒற்றுமையுடன் நடந்து நிம்மதியான வாழ்வு பெறுவார்கள். திருமண வயதினருக்கு தகுதியான வரன் கிடைத்து சுபநிகழ்ச்சி இனிதாக நிறைவேறும். நண்பர்கள் உங்களுக்கு உதவிகரமாகச் செயற்படுவர். பெற்றோரின் அன்பு, அரவணைப்பு மிகுதியாகக் கிடைக்கும். குடும்பத் தேவை பெருமளவு பூர்த்தியாகி சௌகர்ய வாழ்க்கை நடத்துவீர்கள். செலவைவிட ஆதாயம் அதிகரிக்கும். வெளிநாடு வேலை வாய்ப்பில் இருந்த தடை விலகி நன்மை ஏற்படும்.

**தொழிலதிபர்கள்:** வாகனம், காகிதம், தண்ணீர் சார்ந்த பொருட்கள், பிளாஸ்டிக், தோல், ரப்பர், இரும்பு, பட்டாசு, கட்டுமானப்பொருள் உற்பத்தி செய்பவர்கள் நல்ல லாபம் பெறுவர். மருத்துவமனை, விடுதி நடத்துவோர் தொழிலில் சிறப்பான வளர்ச்சியும் அபரிமிதமான புகழ் மற்றும் பணவரவும் பெறுவர். பிற தொழில் செய்வோருக்கும் சிறப்பான லாபம் கிடைக்கும். நிறுவனத்துக்குத் தேவையான நவீனவசதிகளை உருவாக்குவீர்கள். புதிய நிறுவனங்கள் தொடங்கவும், சொத்து சேர்க்கவும் வாய்ப்புண்டு.

**வியாபாரிகள்:** நகை, புடைவை, மின் சாதனங்கள், பட்டாசு, மருந்து, கட்டு மானப் பொருள்கள், எண்ணெய், உணவுப் பண்டங்கள், அழகு சாதனப் பொருள்கள், பாத்திரம் விற்பனை செய்பவர்கள் சந்தையில் தமக்கென சிறப்பிடம் பெறுவர். விற்பனை உயர்ந்து உபரி வருமானத்தை பெற்றுத்தரும். மற்ற வியாபாரம் செய்பவர்கள் இவர்களையும் விட அதிக லாபம் பெறுவர். கூடுதல் மூலதனம் செய்து வியாபாரத்தை அபிவிருத்தி செய்வீர்கள். வாகனம் வாங்கும் யோகம் உண்டு. புத்திரர்களின் உதவி வியாபாரத்தில் வளர்ச்சியை ஏற்படுத்தும்.

**தருபவர் வித்யா**

**பணியாளர்கள்:** அரசு மற்றும் தனியார் துறையில் பணிபுரிபவர்கள் உற்சாக மனதுடன் செயல்புரிந்து நிர்வாகத்திடம் நற்பெயர், பதவி உயர்வு, ஊக்கத் தொகை பெறுவார்கள். சக பணியாளர்களுடன் சுமூக நட்பு வளரும். ஆதாய பணவரவை உரிய சேமிப்பாக மாற்றுவீர்கள். வாகனம் வாங்கும் முயற்சி கைகூடும்.

**பெண்கள்:** பணிபுரியும் பெண்கள் உற்சாக மனதுடன் செயல்பட்டு உயர் அதிகாரிகளின் பாராட்டையும், சலுகைகளையும் பெறுவர். பதவி உயர்வு, விரும்பிய இடமாற்றம், சம்பள உயர்வு கிடைக்கும். குடும்பப் பெண்கள் கூடுதல் பொறுப்புடன் நடந்து கணவரின் பாசத்தை பெறுவர். குடும்பத்தேவைகள் பெருமளவில் நிறைவேறும். புத்திரப்பேறு வகையில் அனுகூலம் உண்டு. ஆபரண சேர்க்கை தகுதிக்கேற்ப கிடைக்கும். சுயதொழில் புரியும் பெண்கள் உற்பத்தி, விற்பனை சிறந்து அபரிமிதமான பணவரவைப் பெறுவர். உபதொழில் தொடங்க யோகம் உண்டு.

**மாணவர்கள்:** மருத்துவம், விவசாயம், பொறியியல்,கணினி, நிர்வாக மேலாண்மை, இதழியல்துறை, உயிரியல், பௌதிகம், இரசாயனம், முகாமைத்துவக் கற்கை நெறிகள் படிக்கும் மாணவர்கள் கவனமாகப் படித்து சிறந்த தேர்ச்சி பெறுவர். பெற்றோரிடம் பந்தபாசம் அதிகரிக்கும். விரும்பிய பொருள்களை கேட்டு பெறுவீர்கள். சக மாணவர்களுடன் நட்பு வளரும். ஆசிரியரின் பாராட்டு கிடைக்கும். வேலை வாய்ப்பல் எதிர்பார்ப்பை விட உயர்வான தன்மை ஏற்படும். ஆரம்ப,மேல்நிலை மாணவர்களுக்கு உழைப்புக்கேற்ப மிக அதிக புள்ளிகள் கிடைக்க வாய்ப்புள்ளது.

**விவசாயிகள்:** விவசாயப்பணி சிறக்க தேவையான அனைத்து வசதிகளும் எளிதாக கிடைக்கும். கூடுதல்நிலபுலன்கள்வாங்கும் திட்டம் நிறை வேறும். கால்நடை வளர்ப்பிலும் தாராள லாபம் கிடைக்கும்.

# வடக்கின் அபிவிருத்தி விடயங்கள் பொருளாதார அமைச்சுக்கு உரியவை

## பஸில் ராஜபக்ஷ உரை

கொழும்பு, டிசெ.3

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ்ப்பாணத்தின் அரசன். அவர் வடக்கு மக்களின் பிரதிநிதி.ஆனாலும் வடக்கின் அபிவிருத்தி விடயம் அவருக்குரியதல்ல. அது எனது அமைச்சுக்குரிய பணி என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மீதான விவாதத்தில் உரையாற்றிய ஜனநாயக தேசியக் கூட்டணி எம்.பி.சுனில் ஹந்துன் நெத்தி இக் குற்றச்சாட்டினை முன்வைத்தார்.

இதற்குப் பதிலளித்து உரையாற்றும் போது பஸில் ராஜபக்ஷ மேற் கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:-

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அமைச்சுக்கு குறைந்தளவான நிதியே ஒதுக்கப்பட்டுள்ளது. இந்நிதியை வைத்துக் கொண்டு யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடமாகாணத்தை எவ்வாறு அவரால் அபிவிருத்தி செய்ய முடியும்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ்ப்பாணத்தின் அரசன். அவர் வடக்கு மக்களின் பிரதிநிதி. ஆனால், வடக்கின் அபிவிருத்தி அவருக்குரிய விடயமல்ல. அது எனது பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்குரிய விடயம்.

நான் தான் சகல பிரதேசங்களின் அபிவிருத்திக்கும் பொறுப்பானவன். சகல மாவட்டங்களில் உள்ள பிரதேச அபிவிருத்திக் குழுக்கள், மக்கள் சபைகள் ஊடாக அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இளம் எம்.பிக்களை உள்ளடக்கிய குழுக்கள் இதற்காக அமைக்கப்பட்டுள்ளன.பிரதேசங்களின் அபிவிருத்திக் கான பொறுப்புகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன - என்றார்.

இந்த விவாதத்தை அமைச்சர் டக்ளஸ் சிரித்தவாறு அவதானித்துக் கொண்டிருந்தார். (ம-201)

## மாற்றுவலுவுள்ளோர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், டிசெ.3

யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் ஏற்பாட்டில் சர்வதேச மாற்று வலுவுள்ளோர் தின நிகழ்வு இன்று பிற்பகல் 2 மணிக்கு மேற்படி நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

ஜெய்ப்பூர் நிறுவன நிர்வாகச் செயலாளர் நா.சிவநாதன் தலைமையில் மேற்படி நிகழ்வு இடம்பெறும். இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கலந்து கொள்வார்.

(201)

## ஆன்மீகச் சொற்பொழிவு

அல்வாய், டிசெ.3

வல்லிபுர ஆழ்வார் ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெறும் ஆன்மீக நிகழ்வு வரிசையில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல்10மணிக்கு 'மகா பாரதம்' என்னும் தலைப்பில் பொன். சுகந்தன் சொற்பொழிவுநிகழ்த்தவுள்ளார். (204-36)

## பயிற்சிநெறி

சமூக மட்ட புனருத்தாரண நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்துவதற்காக தொண்டர்களுக்கான பயிற்சி நெறி எதிர்வரும் 6ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற வுள்ளது. (204-36)



சேவைநலன் பாராட்டும் பிறந்ததின வாழ்த்தும்

**பேதுருப்பிள்ளை பிரான்சிஸ்**
(கிளை முகாமையாளர்)

இலங்கை வங்கியில் 34 வருடங்கள் சீரிய சேவையாற்றி கிளை முகாமையாளராக ஸ்ரான்லி வீதிக் கிளையில் இருந்து இன்றுடன் ஓய்வுபெற்றுச்செல்லும்

பேதுருப்பிள்ளை பிரான்சிஸ்

அவர்களை பிறந்தநாளாகிய இன்று பல்லாண்டுகாலம் பலதும் பெற்று ஓய்வுக் காலத்தில் சிறப்புற வாழவேண்டுமென்று வேண்டி வாழ்த்துகின்றோம்.

முகாமையாளரும் சக ஊழியர்களும்
இலங்கை வங்கி, 2 ஆம் மேற்தரக் கிளை.
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## முக்கிய அறிவித்தல்

### யாழ்.போதனா வைத்தியசாலையாரின் பொதுமக்கள் கவனத்துக்கு

யாழ்.போதனா வைத்தியசாலையில் புதிய கட்டட நிர்மாண வேலைகளும் புனரமைப்பு வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனால் வாகனத்தரிப்பிடங்களும் சில விடுதிகளும் அகற்றப்பட்டு மாற்றிடங்களில் இயங்க வைக்கப்பட்டுள்ளன. எனவே ஏற்பட்டுள்ள இட நெருக்கடியையும் போக்குவரத்து நெரிசலையும் குறைக்கும் முகமாக எதிர்வரும் 05.12.2010 தொடக்கம் வைத்திய சாலை நிர்வாகத்தால் பின்வரும் நடைமுறைகள் கையாளப்படவுள்ளன.

01) பார்வையாளர்கள் வைத்தியசாலை வளாகத்துக்குள் உட்செல் லும் வெளிச்செல்லும் வாசலாக வைத்தியசாலையின் பின்புறமாகவுள்ள மணிக்கூட்டுக் கோபுர வீதியும் மின்சாரநிலைய வீதியும் சந்திக்கும் இடத்திலுள்ள வாசல் பாவனைக்காகப் பார்வையிடும்நேரம் மட்டும் திறந்து விடப்படும்.

02) ஒரு நோயாளிக்கு 2 பார்வையாளர் அனுமதிப்பத்திரம் மட்டும் வழங்கப்படும். 5 நாள்களுக்கு மேலாக விடுதியில் தங்க நேரிடும் போது பொறுப்புத் தாதிய உத்தியோகத்தரிடம் காட்டி அனுமதிப் பத்திரத்தைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும். இக்கால எல்லைக்குள் வீடு செல்ல நேரும்போது அனுமதிப் பத்திரத்தைக் கையளித்தே செல்ல வேண்டும்.

03) வைத்தியசாலை வைத்தியர்களால் நோயாளி ஒருவருக்கு உதவியாளர் தேவையென சிபாரிசு செய்யப்படும்போது உதவியாளர் அனுமதிப் பத்திரம் வழங்கப்படும். இவர்கள் வீடு செல்லும்போது அனுமதிப் பத்திரத்தை விடுதியில் பொறுப்புத் தாதிய உத்தியோகத்தரிடம் ஒப்படைத்துச் செல்ல வேண்டும்.

04) பொதுமக்கள் அனைவரும் வைத்தியசாலைப் பாதுகாப்பு உத்தியோகத் தரின் வழிப்படுத்தல்களுக்கு அமைய நடந்து ஒத்துழைக்கும் படியும் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

எனவே எதிர்காலத்தில் வைத்தியசாலையில் முறையான வசதிகள் கிடைக்கும்வரை பொதுமக்கள் அனைவரும் இந்த நடைமுறையைக் கைக்கொண்டு நிர்வாகத்தினருக்கு ஒத்துழைப்பு வழங்கி உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பணிப்பாளர்,
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

(சி/573325)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முறிகண்டியில் மீள்குடியமர்வு; தொடர் மழையால் தாமதம்

முல்லைத்தீவு,டிசெ.3

முல்லைத்தீவு மாவட்டத்தில் முறிகண்டிப் பகுதியில் 150 குடும்பங்களை இன்று மீளக் குடியமர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

எனினும், தொடர்ந்து மழை பெய்தால் இந்த மீள்குடியேற்றம் தாமதமாகும்.

முல்லைத்தீவு அரச அதிபர் நா.வேதநாயகன் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

வவுனியா மெனிக் முகாமில் தங்கியுள்ள முறிகண்டிப் பகுதியைச் சேர்ந்த 150 குடும்பங்களை இன்று அழைத்து வந்து அவர்களது இடங்களில் குடியமர்த்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனினும் மழை தொடர்ந்து பெய்தால் இந்த மீள்குடியேற்றம் தாமதம் அடையும். அத்துடன் அந்தப் பகுதியில் வெள்ளம் தேங்கியுள்ளதால் வெள்ளம் வடிந்தோடிய பின்பே மீள்குடியேற்ற முடியும் என்றும் அரச அதிபர் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இதுவரை 21 ஆயிரத்து 587 குடும்பங்களைச் சேர்ந்த 63 ஆயிரத்து 335 பேர் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இந்த மாவட்டத்தின் மொத்தச் சனத்தொகை ஒரு லட்சத்து 20 ஆயிரம் பேர் என முன்னர் மதிப்பிடப்பட்டிருந்தது.

மீளக் குடியேற வேண்டிய நிலையில் 18 ஆயிரம் பேர் வவுனியா 'மெனிக்' முகாமில் தங்கியுள்ளனர்.

எஞ்சியோர் முகாம்களுக்கு வெளியில் தங்கியிருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் துணுக்காய், மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான், கரைதுறைப்பற்று மற்றும் புதுக்குடியிருப்பு ஆகிய ஐந்து உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலுள்ள ஆறாயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 19 ஆயிரம் பேர் மாத்திரமே மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆலோசனைக்கமைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோரின் வழிகாட்டலில் மக்களைக் மீளக்குடியமர்த்துவதற்கான சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று கூறிய முல்லைத்தீவு அரச அதிபர் கடந்த வெள்ளிக்கிழமை புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் உள்ள தேராவில் கிராமசேவகர் பிரிவில் 224 குடும்பங்களைச் சேர்ந்த 722 பேர் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (ஐ-க)

# கல்விச் செயற்பாட்டுக்கு உதவுமாறு எம்.பியிடம் மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி,டிசெ.3

கிளிநொச்சி, பரந்தன் பகுதியில் அமைந்துள்ள காஞ்சிபுரம், கமறிக்குடா கிராம மக்கள் தமது கல்விச் செயற்பாட்டுக்கு உதவுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிறீதரனிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இப்பகுதி மக்களின் தேவைகள் குறித்து ஆராய்வதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடலிலேயே மக்கள் இந்தக் கோரிக்கைகளை விடுத்தனர். கமறிக்குடாவில் 50 மாணவர்கள் உள்ள போதிலும் ஒரு முன்பள்ளி கூட இல்லை. அதேபோல நூற்றுக்கு மேற்பட்ட பிள்ளைகள் காஞ்சிபுரம் கிராமத்தில் இருந்து பலமைல் தொலைவிலுள்ள பரந்தன் மகா வித்தியாலயத்திற்கு நடந்து சென்று கல்வி கற்கின்றனர். ஆகவே தமது பகுதிக்குப் பேருந்து சேவை நடைபெற ஏற்பாடு செய்து தருமாறும் இவர்கள் கோரிக்கை விடுத்தனர். ஏற்கனவே பேருந்து சேவையை நடத்துவதாகக் கூறி மாணவர்களிடம் பருவகால சீட்டுக்களை விநியோகித்துப் பணத்தைப் பெற்றுக் கொண்டபோதிலும் ஒருநாள் மட்டுமே தமது கிராமத்திற்குப் பேருந்தை அனுப்பியதாகவும் இதனால் தாம் ஏமாற்றப்பட்டுள்ளதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர். அத்துடன் 35 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் நிதரந்தரக் காணிகள் இல்லாது தமது கிராமங்களில் வாழ்வதனால் பல இடையூறுகளைச் சந்திப்பதாகவும் இவர்களுக்குக் காணிகளை வழங்க ஆவன செய்யுமாறும் இவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இவை யாவற்றையும் கவனமாகக் கேட்டறிந்த நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரன் எம்.பி முன்பள்ளியை அமைக்க உறுதியளித்ததுடன் காணிப் பிரச்சினை தொடர்பாக உரிய அதிகாரிகளுடன் பேசி நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்தார். (க-301)

# டெங்கு அபாயம் உள்ளதால் சுகாதாரம் பேண வலியுறுத்தல்

முல்லைத்தீவு,டிசெ.3

தற்போது பெய்துவரும் பருவ மழை காரணமாக டெங்கு அபாயம் உள்ளதால் வீடுகளையும், சுற்றாடல்களையும் சுத்தமாக வைத்திருக்குமாறு முல்லைத்தீவு சுகாதாரப் பகுதியினர் வலியுறுத்தி வருகின்றனர்.

மழை காரணமாக டெங்கு நோய் அபாயம் தோன்றும் வாய்ப்பு உள்ளதால் வீட்டுச் சுற்றாடலில் உள்ள புல், பூண்டுகளை அழிப்பதுடன், நீர் தேங்கியுள்ள இடங்களை மூடியும், நுளம்புகள் உற்பத்தியாகும் சிரட்டை, இளநீர்க் கோம்பை, பாதுகாப்பற்ற முறையில் வெளியிடங்களிலுள்ள பாத்திரங்கள் போன்றவற்றை அகற்றியும் டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகளின் தாக்கத்திலிருந்து விடுபடப் பொது மக்கள் ஒத்துழைக்க வேண்டுமெனச் சுகாதாரப் பகுதியினர், தொடர்ந்து அறிவுறுத்தி வருகின்றனர்.

அத்துடன் கால் நடைகளை அடைக்கும் பட்டிகள் சேறும், சகதியுமாக நீர் நிறைந்து இருப்பதால் வாழ்விடங்களுக்கு அண்மையில் இவற்றை அமைக்காது வீடுகளுக்குத் தொலைவிலுள்ள இடங்களில் அமைக்குமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (க-500)

## ஒளி பிறக்கட்டும்.....



ஒளியேற்றும் கரங்கள்:-கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இடம்பெற்ற ஒளிவிழா நிகழ்வின்போது ஆசிரியர்கள் ஒளிச் சுடர்களை ஏற்றி வைக்க பிரதி அதிபர்களும் விருந்தினர்களும் அமர்ந்திருக்கின்றனர். (405)

# விதை தானியம் தேடி அலையும் வட்டக்கச்சி, இராமநாதபுரம் மக்கள்

வட்டக்கச்சி,டிசெ.3

கிளிநொச்சி மாவட்டத்தில் மேட்டுப்பயிர் விவசாயம் மேற்கொள்ளும் வட்டக்கச்சி, இராமநாதபுரம் மக்கள் விதை தானியங்களைப் பெறுவதற்குக் கிளிநொச்சி நகருக்கு அலைந்து திரிவதாகக் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்த மாவட்டத்தில் இராமநாதபுரம் கமநல சேவை நிலையம் இரண்டாவது இடத்தில் உள்ளது. ஆனால் இதன் எல்லைக்குள் வாழும் மக்கள் ஒவ்வொரு விதை தானியத்தைப் பெறுவதற்கும் தினமும் கிளிநொச்சி நகருக்குச் செல்ல வேண்டியுள்ளது. இதனால் சீரற்ற பேருந்து சேவை காரணமாகக் காலை 7 மணிக்குப் புறப்பட்டு மாலை 4.30 மணிக்குப் பின்னரே வீடுதிரும்புகின்றனர். ஆனால் இவர்களுக்குத் தேவையான தானியம் முழுவதும் கிடைப்பதில்லை. இதனால் ஒவ்வொரு நாளும் அலைந்து திரிய வேண்டிய அவல நிலையில் இவர்கள் உள்ளனர்.

ஆகவே இந்த மக்களின் மேட்டுப் பயிர்ச் செய்கைக்கேற்ற விதை தானியங்களை இராமநாதபுரத்தில் வைத்து விநியோகம் செய்ய வேண்டுமென இவர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (க-450)

# வெள்ளத்தால் 1000 குடும்பங்கள் கிளிநொச்சியில் இடம் பெயர்வு

கிளிநொச்சி,டிசெ.3

கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியமர்த்தப்பட்ட குடும்பங்களில் சுமார் ஆயிரம் குடும்பங்கள் வெள்ளம் காரணமாக இடம் பெயர்ந்துள்ளன என கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

கரைச்சி, கண்டாவளைப் பிரதேசம் முற்றாக வெள்ளத்தில் மூழ்கியுள்ளது என்றும், அப்பிரதேசங்களைச் சேர்ந்த சுமார் ஆயிரம் குடும்பங்கள் தற்காலிகமாக பாடசாலைகளிலும், பொதுக் கட்டடங்களிலும் தங்கவைக்கப்பட்டுள்ளன எனவும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவிக்கின்றது.

வெள்ளத்தால் இடம் பெயர்ந்தவர்களுக்குச் சமைத்த உணவு வழங்கப்படுகிறது.

மேலும் இவர்களுக்கு உலர் உணவுப் பொருள்களும் வழங்கப்படுகின்றன என கிளிநொச்சி அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார். (ஒ-சி)




# ஆசிரியர் விடுதிகள் அமைக்கக் கோரிக்கை

முல்லைத்தீவு,டிசெ.3

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் கற்பிக்கும் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு விடுதி வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

யுத்தத்திற்கு முன்னர் தனியார் வீடுகளிலும், பாடசாலைகளில் அமைக்கப்பட்டிருந்த ஆசிரியர் விடுதிகளிலும் இந்த ஆசிரியர்கள் தங்கி நின்று தமது கல்விச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்தனர். ஆனால் யுத்தத்தின் காரணமாக வீடுகளும், விடுதிகளும் சேதமடைந்ததால் தங்குவதற்கு இடம் கிடைக்காது சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க-500)

# படித்த இளைஞர், யுவதிகளுக்கு வாழ்வளித்த முத்தையன்கட்டுக் குடியேற்றத் திட்டங்கள்

''முல்லை மாவட்டத்திலே ஒட்டுசுட்டான் பிரதேசத்திலே வாழ்கின்ற மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது முத்து ஐயன்கட்டு குளம். இக்குளத்தின் மூலம் உபஉணவுச் செய்கையில் தன்னிறைவு காணவேண்டும் என்ற நோக்கிலேயே இக்குளம் அமைக்கப்பட்டது. அத்துடன் எத்தனையோ இளம் வயதினையுடைய ஆண்கள், பெண்கள் படித்து விட்டும் படிப்பினை இடையில் நிறுத்திவிட்டும் வீட்டிலே வெறுமனே காலம் கடத்தி வருகின்றனர். அவர்களுக்காகத்தான் பெண்கள் குடியேற்றத் திட்டத்தினை புளியங்குளத்திலும் படித்தவாலிபர் திட்டத்தினை வித்தியாபுரம் பகுதியிலும் தொடங்கியுள்ளனர். இது உங்கள் வாழ்வை வளம்படுத்தும் திட்டமாகும். வன்னிவள நாட்டில் நீர்வளம் உண்டு, நில வளம் உண்டு, எமது வன்னிமண் பொன் விளையும் பூமி. எமது மூதாதையர் ''உழுதுண்டு வாழ்வா[illegible] வார். மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்'' என்பதிற்கிணங்க நெற்றி வியர்வை நிலத்திலே சிந்தி உழைத்தவர்கள். ஏராளமான கால்நடைகளை வளர்த்து அவற்றிலிருந்து பால், தயிர்,நெய் என்பனவற்றைப் பெற்று வந்துள்ளனர். அதுமட்டுமன்றி தேன், இறைச்சி என்பனவற்றையும் குறையாது பார்த்துக் கொண்டனர். நெல், வரகு, சோளம், எள், குரக்கன், [illegible] பெற்றுக் கொண்டனர். இப்படியான பெற்றோர்களின் பிள்ளைகள் தான் நீங்கள்.

## சிலையூர் தனம்

உங்களது கரங்களிலே தான் இத்திட்டத்தின் வெற்றி, தோல்வி தங்கியுள்ளது. உங்கள் கரங்களுக்குப் பலம் சேர்க்க நாம் பக்கபலமாக உள்ளோம்.

உத்தியோக உழைப்பை விட உங்கள் உடல் உழைப்பு மிகவும் சிறந்தது. ஆகவே இத்திட்டம் உங்களின் எதிர்காலத்தினை வளம் பெறவைக்கும். நம்பிக்கை வையுங்கள். நாட்டில் நற்பிரசையாக மிளிருங்கள்.

நாடளாவிய ரீதியில் நற்பெயரை இத்திட்டத்தின் மூலம் சூட்டுங்கள்'' என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசிதம்பரம் கூறியிருந்தார்.

ஆனால் இத்திட்டம் இப்போது காடு வளர்ப்புத்திட்டமாக மாறியுள்ளது.

இதனை அரசு கவனத்தில் கொள்ளுமா?.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நுணாவில் மேற்கு அ.த.க.பாடசாலை

(சென்றவாரத் தொடர்ச்சி)

தொகுப்பு: ஜயந்தன்

ஆங்கிலேயர் காலத்தில் மதப்பிரசாரங்களும் தேவாலயங்கள் அமைக்கும் பணிகளும் மும்முரமாக இடம்பெற்ற காலத்தில் தேவாலயத்துக்கு அருகே அமைக்கப்பட்டதே நுணாவில் மேற்கு அ.த.க.பாடசாலை.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியில் பாடசாலைக்குத் தளபாடங்களும் வெள்ளைப் பலகைகளும் கொள்வனவு செய்ய நிதிஒதுக்கீடு செய்தார்.

இடைநிலைப் பிரிவு வளாகத்தில் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளதால் ஆரம்பப்பிரிவு செயற்பட்ட இடம் வெற்றுக்காணியாக காணப்படுகிறது.பாடசாலையில் இல்லாதுள்ள நூலகம் இந்தக் காணியில் அமைக்கப்பட்டால் மாணவர்களுக்குப் பெரும் பயனுள்ளதாக அமைவதுடன் இக் கட்டடத்திலேயே கணினி அறையின்னயும் செயற்படுத்த முடியும். இப்பாடசாலைக்கு இதுவரை கணினி வழங்கப்படவில்லை எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இப்பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்கள் அப் பகுதியில் வதியும் ஏழைக்குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் என அறிய முடிகிறது. மாணவர்கள் செருப்பு கூட அணியாத நிலையில் காணப்படுகின்றனர். இப்பாடசாலையில் ஆங்கிலம், சங்கீதம் ஆகிய பாடங்களைப் போதிப்பதற்கு ஆசிரியர் இல்லாதது மாணவர்களின் கல்வி நிலையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. தற்போது தரம் 9 வரை வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றதால் இவ்வகுப்புகளில் கற்கும் மாணவர்கள் தரம் 10 இற்கு வேறு பாடசாலைகளுக்குச் செல்வதால் அவர்களுக்கு உரிய தகுதியினைப் பெற்றுக் கொடுப்பதும் அவர்களை சமூகப் பொருத்தப்பாடுடையவர்களாக்குவதுமே இப் பாடசாலையினதும் சமூகத்தினதும் எதிர்பார்ப்பாகும். அதனை நிறைவேற்ற அதிபரும் ஆசிரியரும் முழு மனதுடன் செயற்பட்டு வருகின்றனர்.


பாடசாலைக்கென நிரந்தர விளையாட்டு மைதானம் இல்லாத போதிலும் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகளை அப்பகுதியில் உள்ள மணங்குளாய் பிள்ளையார் ஆலய முன்றலில் நடத்தி வருகிறது.

மாகாண மட்டப் பரீட்சைகளில் இப்பாடசாலை மாணவர்கள் தமது திறமைகளை வெளிக்கொணர்ந்து கணிசமான முன்னேற்றத்தினைக் கண்டுள்ளனர்.

ஐந்தாம் தரப்புலமைப் பரிசில் பரீட்சையில் வருடாந்தம் பாடசாலை மாணவர்கள் வெட்டுப்புள்ளியை அண்மிக்கும் அளவில் புள்ளிகளைப் பெற்று சான்றிதழ்கள் பெற்று வருகின்றனர்.

சமூகப் பொருத்தப்பாடுடைய மாணவர்களை உருவாக்குவதும், சிரேஷ்ட, இடைநிலைக்கல்வியைப் பெறும் வாய்ப்பினை பெற்றுக் கொடுப்பது என்னும் நோக்குடன் கற்றல், கற்பித்தல் செயற்பாட்டின் ஊடாக உயர்கல்வியைப் பெறுவதற்கு வழி வகுத்தல், இணைப்பாட விதான செயற்பாடுகளின் மூலம் உயர் கல்வியைப் பெறுவதற்கு வழிவகுத்தல், மனித விழுமியங்களையும், ஒழுக்க நெறிகளையும் மாணவர்களிடையே வளர்த்தல் என்னும் குறிக்கோள்களையும் இப்பாடசாலை மகுட வாசகங்களாகக் கொண்டுள்ளது.

(முற்றும்)



# சாவகச்சேரி கோயில் குடியிருப்பு ஸ்ரீ முருகன் சனசமூக நிலையமும் விளையாட்டுக்கழகமும்

(சென்றவாரத் தொடர்ச்சி)

சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு ஸ்ரீ முருகன் சனசமூக நிலையம் ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் செயற்பட்டுவரும் ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகம் இன்று.தென்மராட்சியில் மட்டுமன்றி குடாநாட்டின் பல பாகத்தவர் களாலும் நன்கு அறியப்பட்ட விளையாட்டுக்கழகமாக விளங்கிவருகிறது.

ஒற்றுமை, ஒருங்கிணைந்த செயற்பாடு, விடாமுயற்சி, ஊர்வாழ் பெரியோரின் பேராதரவு, ஊருக்கு உதவும் பாங்கு என்பவற்றால் உயர்ந்து நிற்கும் இவ்விளையாட்டுக்கழகம் தான் அமைந்துள்ள கோயிற்குடியிருப்பு பிரிவுக்கு மட்டுமின்றி இன்று தென்மராட்சி பிரதேசத்திற்கே பெருமை சேர்ப்பதாக அமைந்துள்ளது.

கிரிக்கெட் மைதானம் அமைப்பதற்கு இடமின்றி தவித்த வேளையில் ஊர்ப்பிரமுகரான கந்தையா அமிர்தலிங்கம் என்பவர் தனது காணியினைப் பயிற்சி மைதானமாகக் கொடுத்து கழக வீரர்களின் எழுச்சிக்குப் படிக்கல்லினை அமைத்துக் கொடுத்தார்.

நாடாளாவிய போர் நிலையின் மத்தியிலும் வேகமாக ஆனால் நிதானமாக இக் கழகம் தொடர் வெற்றிகளை சுவீகரிக்க ஆரம்பித்தது. பிரதேச செயலத்தினாலும் ஏனைய நிறுவனங்களாலும் காலத்துக்கு காலம் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளிலும், மென்பந்து கிரிக்கெட் போட்டிகளிலும் கழக வீரர்கள் பல தொடர் வெற்றிகளைத் தமதாக்கிப் பதக்கங்களையும், விருதுகளையும், வெற்றிக் கேடயங்களையும் சுவீகரித்துக் கொண்டனர். இவ்வருடம் ஜனவரி மாதம் கழகத்தினால் நடத்தப்பட்ட S.M.S CUP-2010 மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியினை சாவகச்சேரி நகரசபை பொது விளையாட்டு மைதானத்தில் பிரதேச விளையாட்டுக் கழகங்களின் கிரிக்கெட் அணிகளிடையே நடத்தி கழகத்தின் பெயரை பரந்த அளவில் நாட்டி வைத்து பாராட்டுக்களைப் பெற்றுக் கொண்டது.






பிரதேசத்தின் மூத்த விளையாட்டு வீரரும் கழகத்தின் கௌரவ வழிகாட்டியும், ஆலோசகருமான பொ. நவரத்தினம் அவர்களின் அனுசரணையுடன், கழக அங்கத்தவர்கள், சனசமூக நிலைய உறுப்பினர்கள் என அனைத்துத் தரப்பினரும் இணைந்து நடத்திய கிரிக்கெட் சுற்றுப்போட்டி விழா மிகப்பெரிய கௌரவத்தினை கழகத்திற்குப் பெற்றுக்கொடுத்தது.

S.M.S CUP-2010 மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் கலந்துகொண்ட அணிகளுக்குப் பெறுமதி வாய்ந்த வெற்றிக் கேடயங்களையும், பரிசில்களையும், இரண்டு 'ரேசிங்' சைக்கிள்களையும் பரிசாக வழங்கி போட்டியாளர்களைக் கௌரவித்தது.

இப்போட்டியினை மூன்று தரமாகக் கொண்டு ஏனைய கழகங்களும் சுற்றுப் போட்டிகளை நடத்தின. இவ் ஆண்டில் நடத்தப்பட்ட பல கிரிக்கெட் சுற்றுப் போட்டிகளில் கலந்து கொண்டு இறுதிப் போட்டிவரை செல்லும் கழகமாக இக்கழகம் திகழ்கின்றது.

முற்றும்.

தென்மராட்சி வலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பௌத்த பிக்குகளைப் போல் இந்து குருமார்களுக்கும் உரிமையும் கௌரவமும் வழங்கப்பட வேண்டும்

## யோகேஸ்வரன் எம்.பி வேண்டுகோள்

கொழும்பு, டிசெ. 3

பௌத்த குருமாருக்கு சமூகத்தில் வழங்கப்படும் கௌரவமும் சலுகைகளும் இந்து மதகுருமாருக்கும் வழங்கப்படவேண்டும். அழிக்கப்பட்டுள்ள அனைத்து இந்துமத ஆலயங்களும் மீண்டும் புனரமைக்கப்படவேண்டும். அதற்குத் தேவையான நிதியை அரசு ஒதுக்கவேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் எஸ்.யோகேஸ்வரன் கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றில் கோரிக்கை விடுத்தார்.

நிதி ஒதுக்கீடுகள் தொடர்பாக குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் 5035 கோயில்கள் இருக்கின்றன. அவற்றில் 1471 கோயில்கள் முற்றாகச் சிதைக்கப்பட்டுள்ளன. மட்டக்களப்பு மாவட்டத்தில் 300 கோயில்கள் சுனாமியால் அழிக்கப்பட்டன. இந்த ஆலயங்கள் கூட புனரமைக்க முடியாத நிலையில் இருக்கின்றன.

இப்படியான நிலையில் பாரம்பரிய இந்து கலாசார அடையாளச் சின்னங்கள் அழிக்கப்படுகின்றன. திருகோணமலை மாவட்டத்தில் குரங்கு மலை, கிண்ணியா வெந்நீர் ஊற்று என்பன இந்துக்களின் பாரம்பரிய அடையாளச் சின்னங்கள். ஆனால் இன்று அவை தேசிய தொல்பொருள் ஆராய்ச்சித்துறைக்குச் சொந்தமென அபகரிக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் சிவன் கோயிலும், நாச்சிமார் கோயிலும் வீதி அபிவிருத்திக்கென உடைக்கப்படவுள்ளன. இவற்றைத் தடுக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மேலும் பல இந்துக் கோயில்கள் அழிக்கப்பட்டு அங்கே பௌத்த விகாரைகள் அமைக்கப்படுகின்றன. இது இந்துக்களை நிந்திக்கும் ஒரு செயலாகும். திருகோணமலையில் பாலமுருகன் ஆலயத்தின் இறங்கு துறையில் தீவியம்மன் கோயில் என்பன சுட்டிக்காட்டப்படவேண்டியவை. அண்மையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட 85 கோயில்களுக்குத் தலா ஒரு லட்சம் ரூபா வழங்கப்பட்டது. ஆனால் இந்தப் பணத்தைப் பெறுவதில் மாவட்டச் செயலகம் பல்வேறு கெடுபிடிகளால் ஒய்ந்து வருகின்றது. கோயில்களுக்கு அந்த நிதி கிடைக்கவில்லை எனவே இப்பணத்தை நேரடியாக கோயில் நிர்வாகங்களுக்கே வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

8130 அறநெறி பாடசாலைகள் இருக்கின்றன. அவற்றில் 1516 ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றனர். இவர்கள் அனைவரும் அரச சேவைக்குள் உள்வாங்கப்பட்டு நியமனங்கள் வழங்கப்படவேண்டும்.

சமூகத்தில் பௌத்த குருமாருக்கு வழங்கப்படும் கௌரவமும் சலுகைகளும் இந்து மத குருமாருக்குக் கிடைப்பதில்லை.

போக்குவரத்து, வைத்தியசாலை, நீதிமன்றம் மற்றும் பொது இடங்களில் வழங்கப்படும் சலுகைகள் இந்து மத குருமார்களுக்கும் கிடைக்க வழியேற்படுத்த வேண்டும் எனவும் கே.யோகேஸ்வரன் எம்.பி. வேண்டுகோள் விடுத்தார். (உ)

## நூல் வெளியீட்டு விழா

அல்வாய், டிசெ.3

இ.ஞானசுந்தரம் எழுதிய பிள்ளையார் புராண எளிய உரைநடை நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பொலிகண்டி இருபாலை மூலை சித்தி விநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

சைவப்புலவர் பொன்.சுகந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி பொன்.சின்னத்தம்பி கலந்துகொள்வார்.

இவ்விழாவில் முதற் பிரதியை ஆலய பரிபாலன சபைத் தலைவர் என்.குழந்தை வடிவேல் பெற்றுக்கொள்வார். (ற-36)

## முஸ்லிம் மீடியாபோரம் அனுதாபச் செய்தி

மூத்த ஊடகவியலாளரான சுப்பிரமணியம் சிவநாயகத்தின் மறைவு குறித்து ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரம் அதன் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துள்ளது.

அமைப்பின் தலைவர் என்.எம். அமீன் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில், யாழ்ப்பாணத்திலிருந்து வெளியான பிரபல்யமான ஆங்கில வாராந்தப் பத்திரிகையான 'சட்டடே ரிவிவ்' ஸ்தாபக ஆசிரியரான சிவநாயகம், நாட்டின் பிரதான ஆங்கில தினசரிகளான 'டெய்லி நியூஸ்' மற்றும் 'டெய்லி மிரர்' பத்திரிகைகளிலும் பணிபுரிந்தவர். இவர் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக நீண்டகாலமாகக் குரல் கொடுத்து வந்தவர்.

தனது எழுத்துக்கள் காரணமாகச் சிறைவாசம் அனுபவித்த இந்த மூத்த பத்திரிகையாளர் வரலாற்றுத் தகவல்களை ஆவணப்படுத்துவதற்கு அளப்பரிய பங்களிப்புச் செய்தவராவார் என்று அந்த அனுதாபச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ)

# 82 அரச நிறுவனங்கள் ஜனாதிபதியின் கீழ்

கொழும்பு, டிசெ.3

82 அரச நிறுவனங்கள் ஜனாதிபதியின் கீழ் நிர்வாகம் செய்யப்பட உள்ளதாக ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பு சுட்டிக் காட்டியுள்ளது.

அமைச்சரவை விடயங்கள் தொடர்பில் அண்மையில் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் இந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஒரு தனிப்பட்ட நபரின் கீழ் பாரியளவு நிறுவனங்கள் நிர்வாகம் செய்யப்படுவதனை ஏற்றுக்கொள்ள முடியாதென ஜனநாயகத் தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

குறித்த நிறுவனங்களை நிர்வாகம் செய்வதில் சிக்கல் நிலைமை ஏற்படக் கூடுமெனக் குறிப்பட்டுள்ளார்.

நிதி அமைச்சின் கீழ் 46 நிறுவனங்கள் இயங்க உள்ளதாகவும் இதனை ஓர் ஆரோக்கியமான நிலைமையாகக் க்ருதப்பட முடியாது எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஜனாதிபதிக்கு காணப்படும் வேலை பளுவினால் இவற்றை நிர்வாகம் செய்வதில் சிக்கல்கள் ஏற்படலாம் என அவர் குறிப்பிட்டுள்ளார். (த)

## வாழ்வழித்தல்....



கொடை: பரிசுத்த புதுமை மாதா இளைஞர் படைப்பாக்கல் இயக்கத்தின் ஏற்பாட்டில் பரிசுத்த புதுமைமாதா ஆலயத்தில் அண்மையில் இரத்ததான நிகழ்வு நடைபெற்றது.
இந்த நிகழ்வில் குருதிக் கொடையாளர்கள் இரத்ததானம் வழங்குவதைக் காணலாம். (204)

# தென்கொரியாவில் இலங்கையர் மாடியிலிருந்து வீழ்ந்து மரணம்

கொழும்பு, டிசெ.3

தென்கொரியாவில் பணியாற்றிய இலங்கையர் ஒருவர் 7 மாடிக் கட்டடத்திலிருந்து வீழ்ந்து மரணமடைந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

கொரிய அதிகாரிகள் இது தொடர்பாகத் தமக்கு உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளதாக தென்கொரியாவிலுள்ள இலங்கைத் தூதுவர் லக்ஷித ஹெட்டி ஆராச்சி தெரிவித்தார்.

2005 ஆம் ஆண்டு தொழில் வாய்ப்புப் பெற்றுத் தென்கொரியா சென்ற அரநாயக்கப் பகுதி அலகல்ல என்ற இடத்தைச் சேர்ந்த நிஷாந்த குமார எட்டம் பாவெல என்ற 33 வயதான ஒருவரே இவ்வாறு மரணமானார்.

எனினும் இவரது மரணத்தில் சந்தேகம் நிலவுவதையடுத்து அந்த நாட்டு அதிகாரிகள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

விசாரணை முடிவடைந்த பின்னரே இறந்தவரின் சடலம் நாட்டுக்குக் கொண்டுவரப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது. (த)

# அரச காணிகளை அபகரிப்பதற்கு ஆளும் கட்சி அமைச்சர்கள் முயற்சி

## மைத்திரிபால சிறிசேன குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ.3

அரச காணிகளை அபகரிப்பதற்கு ஆளும் கட்சி அமைச்சர்களே முயற்சி மேற்கொண்டு வருவதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

முல்லேரியா ஐ.டி.எச் வைத்தியசாலைக்குச் சொந்தமான பெறுமதிமிக்க காணிகளைச் சில ஆளும் கட்சி உறுப்பினர்கள் அபகரிப்பதற்கு முயற்சிப்பதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஐ.டி.எச். வைத்தியசாலையில் புதிதாக இரத்த வங்கியொன்றை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஆளும் கட்சியின் சில அரசியல்வாதிகள் சுயநல நோக்கத்துடன் செயற்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார். முல்லேரியா வைத்தியசாலைக்குச் சொந்தமாக நூறு ஏக்கர் பெறுமதி வாய்ந்த காணிகள் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த பிரதேசத்தில் வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பிக்க அனுமதி வழங்குமாறு ஆளும் கட்சி அமைச்சர்கள் சிலர் தம்மிடம் கோரிக்கை விடுப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அரசாங்க காணிகளை அபகரிப்பதற்கு முனைப்பு காட்டும் ஆளும் கட்சி அமைச்சர்களின் பெயர் விவரங்களை அவர் அம்பலப்படுத்தவில்லை. (சி)

# பிரிட்டனில் குடியேறுவோருக்கு ஆங்கில மொழிப் பரீட்சை

கொழும்பு, டிசெ.3

பிரிட்டனுக்குள் பிரவேசிக்கும் ஐரோப்பியர் அல்லாதவர்கள் ஆங்கில மொழிப் பரீட்சை யொன்றுக்குத் தோற்ற வேண்டும் என்ற புதிய நடைமுறை கடந்த செவ்வாய்க்கிழமை முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் பிரஜைகளுக்கு அல்லது பிரிட்டனில் குடியேறி இருப்பவர்களுக்கு பங்காளிகளாக அல்லது வாழ்க்கைத் துணையாக வர விரும்பி பிரிட்டன் செல்வதற்கு விசா கோரி விண்ணப்பிப்பவர்கள் இந்த ஆங்கிலப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

தற்காலிக விசாவுக்கு விண்ணப்பிப்பவர்களுக்கு இது தேவையில்லை. புள்ளி அடிப்படையில் விசா பெறும் மாணவர்கள் மற்றும் ஊழியர்களுக்கும் இது தேவையில்லை.

மேற்படி விசாவுக்கு விண்ணப்பிப்போர் அடிப்படையில் தங்களுக்கு ஆங்கிலம் பேசவும், புரிந்து கொள்ளவும் முடியும் என்பதை நிரூபிக்க வேண்டும்.

பிரிட்டிஷ் எல்லை முகவராண்மையின் அங்கீகாரம் பெற்ற வினாத்தாள் ஒன்றுக்கே இவர்கள் முகம்கொடுக்க வேண்டும்.

விசாவுக்கு விண்ணப்பிப்பதற்கு முன் இந்தப் பரீட்சைக்குத் தோற்றி அதில் சித்தியடைந்த சான்றிதழுடனேயே விசா விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளது.

பிரிட்டனின் பட்டப் படிப்பு கற்கைநெறிச் சான்றிதழ் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் மூலமும் இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதைத் தவிர்க்கலாம். அப்படியாயின் கற்கை நெறியின் அசல் சான்றிதழைச் சமர்ப்பிக்க வேண்டும். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நொண்டிக் குதிரையும் பரமார்த்தக் குருவும்

பரமார்த்த குருவுக்கு ஒரு பணக்காரன் இலவசமாக ஒரு குதிரையைக் கொடுத்தான். அந்தக் குதிரையோ கிழடு தட்டிப் போயிருந்தது. ஒரு கண் குருடு! ஒரு காது மூளி! முன் கால்களில் ஒன்று நொண்டி! பின் கால்கள் வீங்கிப் போய் இருந்தன.

உடம்பு பூராவும் சொறிபிடித்து, பார்ப்பதற்கு அசிங்கமாக இருந்தது. இருந்தாலும், பரமார்த்த குருவுக்கும் சீடர்களுக்கும் பரம சந்தோஷம். பணம் செலவு செய்யாமல் இலவசமாகக் கிடைத்ததே! என்று நினைத்தனர்.

''குருவே! கடிவாளம் கட்டுவதற்கு வார் இல்லை. அதனால் வைக்கோல்ப் பிரியைச் சுற்றி விடலாம்!'' என்று அப்படியே செய்தான் மட்டி.


குரு உட்காருவதற்காகக் கிழிந்து போன பழைய கந்தல் கோணி ஒன்றைக் குதிரைமேல் போட்டான் மண்டு. எருக்கம் பூவைப் பறித்து மாலையாக்கி குதிரையின் கழுத்தில் அணிவித்தான் முட்டாள்.

இவர்கள் செய்வதைப் பார்ப்பதற்கு ஊரே கூடி விட்டது. குதிரைக்கு எல்லா அலங்காரமும் முடிந்தது. தொந்தியும், தொப்பையுமாய் இருக்கும் பரமார்த்தர், குதிரையின் மேல் பெருமையோடு ஏறி உட்கார்ந்தார். அவ்வளவுதான்! கனம் தாங்காமல் வலியால் குதிரை அலற ஆரம்பித்தது. கொஞ்சம் கொஞ்சமாய் அப்படியே படுத்து விட்டது.

''சே, சே! இதென்ன சண்டித்தனம் பண்ணுகிறது?'' என்று சலித்துக் கொண்டே கீழே இறங்கினார் குரு.

முட்டாளுக்கு ஒரு யோசனை தோன்றியது. கையில் வைத்திருந்த கொள்ளிக் கட்டையைக் கொண்டு போய் குதிரையின் காலில் வைத்தான். உடனே அது விலுக்கென்று உதைத்துக் கொண்டு எழுந்தது. இப்படியும் அப்படியுமாக கொஞ்சத் தூரம் ஓடி நின்றது.

(தொடரும்....)



# உலகில் புகழ்பெற்ற பாலைவனங்கள்

சகாரா
தேசம்: வடஆபிரிக்கா
பரப்பளவு : 84,000,00

ஆஸ்திரேலியா
தேசம்: ஆஸ்திரேலியா
பரப்பளவு : 15,500,000

அரேபியன்
தேசம்: தென்மேற்கு ஆசியா
பரப்பளவு : 13,000,000

கோபி
தேசம்: மத்திய ஆசியா
பரப்பளவு : 10,40,000

கலஹாரி
தேசம்: தென்ஆபிரிக்கா
பரப்பளவு : 520,000

6 B,

# பொன் மொழிகள்...

- தூக்கத்தில் இருந்து உடல் விழித்தால் போதாது. மனமும் விழிக்க வேண்டும்.
- கஷ்டங்கள் தான் நம்மை வலுப்படுத்துகின்றன.
- இன்னும் கொஞ்சம்.. இன்னும் கொஞ்சம் இதுதான் முன்னேற்றத்தின் மூல மந்திரம்
- சுதந்திரமாகச் சிந்தியுங்கள்! எண்ணப் பாய்ச்சலில் அண்டவெளியில் பாய்ந்து பழகுங்கள்!

# சுற்றுப் புறச்சூழலை சுத்தமாக வைத்திருக்க வேண்டும் ஏனெனில்.....

அசுத்தமான சூழலால் பல நோய்கள் பெருகிட அதிக வாய்ப்புள்ளது.

ஏதாவது நோய்க்கிருமிகள், நுளம்புகள் போன்றன பெருகி நோயை ஏற்படுத்தும்.

சூழல் அழகாக இருந்தால்த் தான் மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றும்.

நாம் தூயகாற்றைச் சுவாசித்து வாழ்வதற்கு சூழல் சுத்தமாக இருத்தல் வேண்டும்.

நாம் உண்ணும் உணவு, குடிக்கும் நீர் என்பன மாசடையாமல் இருக்க சுத்தம் பேணல் அவசியமாகும்.

எனவே அனைவரும் கழிவுப் பொருள்களை அகற்றிச் சூழலைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

அ.தாட்சாயணி 6 F
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.



# நாய்க்குட்டி

சின்னச்சின்ன நாய்க்குட்டி
சிங்கார நாய்க்குட்டி
வண்ண வண்ண நாய்க்குட்டி
வாலை ஆட்டும் நாய்க்குட்டி

பொன்னைப் போன்ற வண்ணமும்
பொலிவுமிக்க வதனமும்
மின்னல்போலத் துள்ளிடும்
மேனி கொண்ட நாய்க்குட்டி

காலைக்காலைச் சுற்றிவந்து
பாலைப்பாலைக் கேட்டிடும்
பாலைத் தட்டில் ஊற்றிவைக்க
வாலையாட்டிக் குடித்திடும்

காலைமாலை வேளையில்
காற்று வாங்கச்சென்றிடும்
காற்றுவாங்கி வந்தபின்னர்
சோற்றைக் கேட்டு நின்றிடும்

நல்லநல்ல நாய்க்குட்டி
நயமுடைய நாய்க்குட்டி
நாக்கை நாக்கை நீட்டிடும்
மூக்கைமூக்கை நக்கிடும்

கன்னத்தோடு கன்னம் வைத்துக்
கொஞ்சுமெந்தன் நாய்க்குட்டி
என்னுடைய சித்தப்பா
எனக்குத் தந்த நாய்க்குட்டி

பிருந்தா

# உலகிற்குத் தேவையான 10 மனிதர்கள்

வாணி.

- ★ பேச்சை விட செயலில் பிள்ளைகளுக்கு முன்மாதிரியானவர்
- ★ உதவி பெறுவதை விட உதவி செய்வதற்கு விரும்புபவர்
- ★ தவறு என்னுடையது, நான் வருந்துகிறேன் என கூறுவதற்குத் தயங்காதவர்
- ★ தவறு செய்ய வேண்டி ஏற்படக் கூடிய நேரத்தில் அதைவிட்டு நீங்கிக்கொள்பவர்
- ★ ஒரு செயலை வெற்றிகரமாகச் செய்து முடித்த பின் அதன் வெற்றியை அச்செயலில் தமக்கு உதவியவர்களுடன் பகிர்ந்து கொள்ளத் தயங்காதவர்
- ★ மற்றவர்களை எப்போதும் புன்முறுவலோடு நோக்கி அவர்களை நண்பர்களாக ஏற்றுக்கொண்டு அவர்களோடு அன்பாகப் பழகி தட்டிக்கொடுப்பவர்
- ★ தனது பிள்ளைகளை புனித தலங்களுக்கு அனுப்பி வைப்பதற்குப் பதிலாக கூட்டிக்கொண்டு செல்பவர்
- ★ பிறரது தவறுகளைக் காண்பதற்கு முன்னர் தனது தவறுகளைக் காணக்கூடியவர்
- ★ தனது அறிவு, நேரம், பணம் என்பவற்றை மீண்டும் பெறக்கூடிய நோக்கமின்றிப் பிறருக்காகச் செலவு செய்பவர்
- ★ தாம் பின்பற்றும் மதத்தைச் சார்ந்து அதன் போதனைகளை முற்றாகப் பின்பற்றுபவர்.

# ஒரு சிகெரட் மனிதனின் ஆயுளைக் குடிக்கிறது

வானொலிகள் தொலைக்காட்சிகள் மூலம் எவ்வளவுதான் சிகரெட் பற்றி விழிப்புணர்வுகள் ஏற்படுத்தினாலும் அப்பழக்கத்தில் இருந்து விடுபட யாரும் நினைப்பதில்லை.

சிகரெட்டில் அடங்கி இருக்கும் நிக்கொட்டின் இரசாயனப் பகுதியானது புகைக்கும் சிகரெட்டின் அடிப்பாகத்தில் இருக்கும்.


4700 இரசாயனக் கலவைகளில் 43 வகை புற்று நோயை ஏற்படுத்த காரணமாகின்றன. அதே போன்று 85 சதவீதத்திற்கும் மேலான நுரையீரல் புற்றுநோய்க்கு புகைப்பிடித்தல் காரணமாகிறது.

எவ்வாறாயினும் பல ஆண்டுகளாக புகைத்தலுக்கு அடிமையான ஒருவன் மரணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான் என்பது மிகையில்லை.

இங்கு புகைப்பிடிப்பவர்களுக்கு அருகில் இருக்கும் புகைக்காதவர்கள் பற்றியும் ஒன்றைக் குறிப்பிட வேண்டும். இத்தகைய நபர்களுக்கு இருதயம் சம்பந்தமான பாதிப்புக்கள் அல்லது இரத்தக்குழாய்த் தொகுதி தொடர்புடைய பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடிய சந்தர்ப்பம் சாதாரண ஒரு வரை விட 30 சதவீதம் அதிகமாகும்.

பாலியல் குறைபாடு, கருச்சிதைவு, குழந்தைகள் இறந்து பிறப்பது, கர்ப்பப்பை இரத்தப்பெருக்கு மற்றும் நிறை குறைந்த குழந்தை பிறப்பு என்பனவற்றுக்கு காரணமாக புகைத்தல் விளங்குகிறது.

எவ்வாறாயினும் புகைத்தல் பழக்கமான நபரொருவர் அப் பழக்கத்தைக் கைவிட்டு 10 ஆண்டுகள் கடந்த பின்னரும் சம்பந் [illegible]ன் உடல் சாதாரண நபரைக் காட்டிலும் சிறந்ததாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# …ரபுரிச் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கு மாநகரசபை நடவடிக்கை எடுக்க வேண்டும்

## உறுப்பினர் விந்தன் கோரிக்கை



யாழ்ப்பாணம், டிசெ. 3

வீதி அகலிப்பு எனும் பெயரால் தமிழர்களின் இருப்பையும் அடையாளத்தையும் குறித்து நிற்கும் மரபுரிமைச் சொத்துக்களையும், சின்னங்களையும் அழிக்க இடமளிக்கக் கூடாது. இவற்றினை காப்பாற்றுவதற்கு யாழ்.மாநகரசபை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு கடந்த மாதம் 29 ஆம் திகதி நடைபெற்ற யாழ். மாநகர சபையின் மாதாந்தக் கூட்டத்தில் மாநகரசபை உறுப்பினர் கே.என்.விந்தன் கனகரத்தினம் பிரேரணையை முன்வைத்தார்.

இந்தப் பிரேரணையின் போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

யாழ்.மாவட்டத்தில் உள்ள சில முக்கிய வீதிகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் அகலிப்புச் செய்யப்படவுள்ள வீதிகளின் விஸ்தீரண எல்லையைக் குறிக்கும் அடையாளக் கற்கள் முழுவீச்சில் நடப்பட்டுள்ளதை நாம் அறிவோம். வீதி அகலிப்புக்கும், புனரமைப்புக்கும் அபிவிருத்திக்கும் நாம் எதிரானவர்கள் அல்ல, ஆனால் வீதி அகலிப்பு என்னும் பெயரால் தமிழரின் வரலாறு, பண்பாடு, கல்வி, கலாசார, சமய விழுமியங்களோடு பின்னிப்பிணைந்து அவர்களின் இருப்பையும் அடையாளங்களையும் குறிக்கும் பல நூறு வருடங்கள் பழைமை வாய்ந்த பண்டைய எமது வரலாற்றுப் பெருமைக்குரிய சிறப்புக்குரிய பொக்கிஷங்களான மரபுரிமைச் சொத்துக்களை, சின்னங்களை அழிப்பதற்கு நாம் இடமளிக்க முடியாது.

குறிப்பாக யாழ். மாநகரப் பகுதிக்குள் மந்திரிமனை, சங்கிலியன் சிலை, பாரதியார் சிலை, மாட்டீன் செமினறி முன்வாயிலும் மதில்களும், வண்ணார் பண்ணை சிவன் கோயில், சாந்தையர் மடம் பிள்ளையார் ஆலயம், பன்றிக்கோட்டுப் பிள்ளையார் ஆலயம், யாழ். இந்துக் கல்லூரியின் முதல் கட்டடங்கள், ஈழத்துச் சித்தர் பாரம்பரியச் சொத்தான யோகர் சுவாமியின் சிவத்தொண்டர் நிலையம், முன்னோடிப் பத்திரிகையான இந்து சாதனத்தின் பழைய அச்சகமும் அலுவலகமும், யாழ். கல்வி எழுச்சியின் இன்னொரு மூளையான மிஷனரிக் கல்வி இயக்கத்தின் முன்னோடியான கில்னர் மண்டபம், வண்ணார் பண்ணை சிவன் கோயில் முன்பாகவுள்ள மண்டபம், ஈழத்துக் காந்தி என உலகம் போற்றும் தந்தை செல்வாவின் சிலை அதன் முன்பக்க மதில், சுப்பிரமணியப் பூங்காவின் நுழைவாயிலும் முன் மதில்களும், இரண்டாவது உலக மகா யுத்தம் நடந்த வேளை குண்டுவீச்சு விமானங்களின் வருகையை முன்கூட்டியே ஒலி எழுப்பி மக்களை காப்பாற்றும் 'சைரன்' மேடை இவையெல்லாம் யாழ்.மாநகரத்தின் தனித்துவத்தையும், மகத்துவத்தையும், சிறப்பம்சத்தையும் சித்திரித்து எடுத்தியம்பி நிற்கின்றன. இவற்றை அழிப்பதற்கு நாமும் துணைபோய் வரலாற்றுத் தவறிழைக்கக் கூடாது. நூறு வருடங்கள் பழைமை வாய்ந்த எந்தவொரு கட்டடங்களும் பாதுகாக்கப்பட வேண்டுமென அரசாங்கச் சட்டம் கூறுகின்றது. அவற்றுக்கமைவாக யாழ்.மாநகர சபையும் இவற்றைக் காப்பாற்றிப் பாதுகாக்க வேண்டும்.

வீதி அகலிப்பு என்னும் பெயரால் பொதுமக்களின் வீடுகளும் மதில்களும் வியாபார ஸ்தலங்களும் உடைக்கப்படவிருக்கின்றன. கடந்த 30 வருட கொடிய போரின் விளைவாக எமது மக்கள் உயிர் இழப்புக்கள், உடைமை அழிப்புக்களைச் சந்தித்ததுமல்லாமல் அபிவிருத்தி, வாழ்க்கைத்தர முன்னேற்றம் போன்றவற்றிலும் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளனர். வீதி அகலிப்பினால் மக்களுக்கு ஏற்படும் சொத்தழிவுகளுக்கு அரசாங்கம் நியாயமான நஷ்டஈட்டுத் தொகையையும் வழங்க முன்வரவேண்டும்.

இத் தீர்மானங்களின் பிரதிகள் ஜனாதிபதி, பெருந்தெருக்கள் அமைச்சர், வடக்கு மாகாண ஆளுநர் ஆகியோருக்கும் விரைந்து அனுப்பப்பட வேண்டும் - என்றார்.

இவரின் கோரிக்கையை ஒரு சில உறுப்பினர்கள் ஆரம்பத்தில் எதிர்த்த போதும், பின்னர் விந்தனின் விளக்கத்தைத் தொடர்ந்து அவரது பிரேரணை ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. (எ-7)

# நான்கு நாள் சிசுவை விற்ற சந்தேகத்தில் 6 பேர் கைது

கொழும்பு, டிசெ. 3

பாணாந்துறை பிரதேசத்திலுள்ள திருமணமான தம்பதியினருக்கு 12 ஆயிரம் ரூபாவுக்கு விற்கப்பட்டிருந்த நான்கு நாள் சிசுவொன்று கடந்த திங்கட்கிழமை இரவு மருதானை பொலிஸாரால் மீட்கப்பட்டது.

இக் குழந்தையின் விற்பனையில் சம்பந்தப்பட்டவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் தந்தை, பாட்டி உட்பட ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு பீ.சொய்சா வைத்தியசாலையில் கடந்த 25 ஆம் திகதி பிறந்த இக் குழந்தையை வைத்தியசாலையின் வளவிலேயே தனது கணவனும் மாமியும் குறிப்பிட்ட தம்பதியினருக்கு ஒப்படைத்ததாக சிசுவின் தாய் மருதானை பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

கைது செய்யப்பட்ட தந்தையிடமும் பாட்டியிடமும் மேற்கொண்ட விசாரணையின் பின்னர் இந்த விற்பனைக்கு இடைத்தரகர்களாக இருந்த இரு பெண்கள் புறக்கோட்டை கெசெல்வத்தையில் கைதாகினர்.

அவர்கள் மேற்கொண்ட விசாரணைகளின் பின் குழந்தை பாணாந்துறை சரிக்க முல்ல பிரதேசத்தில் உள்ள முஸ்லிம் தம்பதியினரிடம் இருந்து மீட்கப்பட்டது.

சிசுவின் தாயும் தந்தையும் நுவரெலியா சந்தபொல வாசிகளெனவும் அவர்கள் புறக்கோட்டை கெசெல்வத்தையில் வாடகை வீடொன்றில் வசிப்பதாகவும் தெரியவருகிறது. (ம-5)

# இறுதி யுத்தத்தில் சரணடைந்தவர்களை விடுதலைசெய்ய ஜனாதிபதிக்கு கடிதம்

கொழும்பு, டிச. 03

இறுதி யுத்தத்தின்போது சரணடைந்து சிறைவைக்கப்பட்டுள்ள தமது பிள்ளைகளையும் உறவினர்களையும் விடுதலை செய்யுமாறு பெற்றோரும், உறவினரும் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

மூன்று மொழிகளிலும் தயாரிக்கப்பட்டுள்ள இக்கடிதத்தின் பிரதிகள் நீதி அமைச்சருக்கும், நல்லிணக்க ஆணைக்குழுவுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

எமது பிள்ளைகள் இறுதி யுத்தத்தின்போது அரசால் அறிவிக்கப்பட்ட பொது அறிவித்தலின் அடிப்படையில்தான் சரணடைந்தார்கள். அச்சந்தர்ப்பத்தில் அவர்கள் அனைவருக்கும் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டு சமூகத்துடன் மீண்டும் இணைக்கப்படுவார்கள் எனவும் இந்த அறிவித்தலின் பிரகாரம் படையினரிடம் சரணடையுமாறும் அறிவிக்கப்பட்டது.

எமது பிள்ளைகளை விசாரணை செய்த அதிகாரிகள் நீதிவான் முன்னிலையில் இவர்கள் கைதுசெய்யப்பட்டவர்கள் எனவும் இவர்களுக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்படும் எனவும் கூறுகின்றார்கள். மேற்சொன்ன இந்த விசாரணை அதிகாரிகளின் கூற்று உண்மைக்குப் புறம்பானது.

எமது பிள்ளைகள் படையினரிடம் சரணடைந்தார்களே தவிர கைதுசெய்யப்படவில்லை என்பதற்கு வலுவான சான்றாதாரங்கள் உள்ளன.

உங்களின் இரண்டாவது பதவிக் காலத்திலாவது தமிழ் மக்கள் அனைவரும் நிம்மதியாகவும் கௌரவமாகவும் வாழ வேண்டுமென்று விரும்பினால் நாம் அடிப்படையாக முகம் கொடுத்தவரும் பிரச்சினைகளுக்கு தீர்வு தருவதோடு சிறையிலிருக்கும் எமது பிள்ளைகளின் வாழ்வியல் எதிர்காலம் மலர அவர்களை விடுதலை செய்யுங்களெனப் பெற்றோர் உறவினர்களாகிய நாம் அனைவரும் உங்களிடத்தில் மிகப் பணிவாக வேண்டிக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (சி)

# வடக்கில் இயல்புச் சூழல் ஏற்பட்டால் மட்டுமே வெற்றிகரமான அபிவிருத்தி சாத்தியமாகும்

## குழுநிலை விவாதத்தில் சந்திரகுமார் எம்.பி.

கொழும்பு,டிசெ.3

வடக்கில் சில இடங்களில் மக்கள் தமது அலுவலகங்களுக்குச் சென்று வழிபடவும் பண்பாட்டுச் சடங்குகளை நிறைவேற்றுவதற்கும் பாதுகாப்புச் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைக் காரணம் காட்டும் போக்குக் காணப்படுகின்றது. இந்த நிலைமைகள் விரைவில் தீர்க்கப்பட்டு நல்லதொரு இயல்புச் சூழல் ஏற்படுத்தப்பட வேண்டும். அதன்மூலம் தான் வெற்றிகரமான அபிவிருத்தி சாத்தியமாகும்.

இவ்வாறு தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித்த தலை வருமான முருகேசு சந்திரகுமார்.

நாடாளுமன்றத்தல் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற குழு நிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயற்பாடானது வினைத்திறன் மிக்க ஊழியப் படையொன்றை பராமரித்துச் சிறப்பானசேவையை மக்களுக்கு அளிப்பதற்கான அடிப்படையைக் கொண்டதாகும்.

இந்த ஆணைக்குழுவின் செயற்பாட்டை வினைத்திறன் உடையதாக வைத்திருப்பதன் மூலம் மக்களுக்கான சேவைகளை முழுமைப்படுத்த முடியும். குறிப்பாக போர் நடந்த பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு வினைத்திறனுடைய பணியாளர்படையொன்றை இயங்க வைப்பதற்கு ஏற்ப இந்த ஆணைக்குழுவின் நிதியும் கவனமும் அமைய வேண்டும்.

அடுத்தது நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் பணிகள் குறித்ததாகும். நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் பணிகளை மக்கள் இன்று அதிகமாக எதிர்பார்க்கிறார்கள். கடந்தவாரம் யாழ்ப்பாண மாவட்டத்தில் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் இந்த ஆணைக்குழு செயற்படுத்திய நடமாடும் சேவை பாராட்டப்பட வேண்டியது.

இந்தப் பணிகள் இன்னும் விரிவுபடுத்தப்பட்டு போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க உதவவேண்டும். போரினால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் மக்களுக்கான தேவைகள் ஏராளமாக உள்ளன. இந்த நிலையைப் பயன்படுத்தி இலஞ்ச ஊழலில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பங்களைச் சில அதிகாரிகளும் உத்தியோகத்தர்களும் உருவாக்குவது அவதானிக்கப்பட்டுள்ளது.

அடுத்தது தேர்தல் திணைக்களம் தொடர்பானது இந்த நாட்டில் ஜனநாயக அடிப்படைகளைப் பேணும் அமைப்புகளில் முக்கியமான ஒன்று தேர்தல் திணைக்களமாகும். இந்தத் தேர்தல் திணைக்களம் முறைப்படியான பதிவுகளை மேற்கொள்வதோடு ஜனநாயக அடிப்படைகளைப் பற்றிய அறிவைப் பொது மக்களிடையே ஏற்படுத்துவதிலும் தேர்தல் நடைமுறைகளில் அனைவரையும் ஈடுபடுத்துவதிலும் அக்கறையோடு செயலாற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.

மேலும் பருத்தித்துறை துறைமுகமும் காங்கேசன்துறை துறைமுகமும், முழுமையாகச் சீரமைக்கப்பட்டு நிர்மாணிக்கப்பட வேண்டிய நிலையில் இருக்கின்றன. இந்தத் துறைமுகங்களை நிர்மாணிப்பதற்குப் பங்களிப்பதற்கு இந்தியா முன்வந்திருப்பது பாராட்டப்பட வேண்டியது.

ஆனால் இந்தத் துறைமுகங்களின் அபிவிருத்திப் பணிகள் துரிதமாக்கப்பட வேண்டும்.

இதேவேளை வடக்கிலுள்ள நெடுஞ்சாலைகளின் நிலைமை இந்த நாட்டின் வேறொரு தன்மையினைத் தெளிவுறக் காட்டுவதை அவதானிக்கலாம்.

குறிப்பாக மன்னார் - பரந்தன், முல்லைத்தீவு - மாங்குளம் முல்லைத்தீவு - பரந்தன் ஆகிய வீதிகளின் நிலைமை மிகமோசமாகவுள்ளது. இந்த வீதிகளின் புனரமைப்பு என்பது மிகமிக அவசியமாகவுள்ளது. இந்தத் துறைக்கான நிதி ஒதுக்கீட்டில் இந்த வீதிகள் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

அடுத்ததாக விமான சேவைகள் குறித்த ஒரு கவனத்தையும் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

யாழ்ப்பாணத்தில் இப்போது இந்தியத் தூதுவராலயத்தின் உப அலுவலகம் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சூழலில் பலாலியிலிருந்து கொழும்புக்கான விமானச் சேவையைப் போன்று பலாலியிலிருந்து தென்னிந்தியாவுக்கான விமானச் சேவையையும் ஆரம்பக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா




**மேஷம்:**
செல்வாக்கு, சொல்வாக்கு அதிகரிக்கும். எந்த வேலையிலும் அக்கறையுடன் செயற்பட்டு பாராட்டு பெறுவீர்கள். பிள்ளைகளால் சுபச் செலவுகளைச் சந்திக்கலாம். உறவினர்கள் தொடர்பான காரியங்களுக்காக அலைய நேரிடலாம். உங்களின் வேலைக்காக நண்பர் ஒருவரையும் உடன் அழைத்துச் செல்வீர்கள். கூட்டு முயற்சிகளில் வெற்றி பெறலாம்.



**ரிஷபம்:**
பிரியமான நண்பர்களின் சந்திப்பு நிகழும். நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த உறவினர் ஒருவர் உங்களின் வீடு தேடிவரலாம். கணவன், மனைவி இடையே அன்னியோன்யம் அதிகரிக்கும். மாமன், மைத்துனர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பது தள்ளிப் போகலாம். குரு வழிபாட்டின் மூலம் குதூகலம் அதிகரிக்கும்.



**மிதுனம்:**
கடும் சிரமப்பட்டு முக்கிய வேலை ஒன்றை முடிக்கலாம். குடும்பத்தில் பிரச்சினைகள் வராமல் இருக்க, வாக்குவாதங்களைத் தவிர்க்கவும். உத்தியோகத்தர்கள் சக ஊழியர்களின் விமர்சனங்களைச் சந்திக்கலாம். உறவினர் அல்லது நண்பர் ஒருவருடன் வெளியிடங்களுக்கு செல்லலாம். உல்லாசமான ஆடம்பரமான செயற்பாடுகளைத் தவிர்க்கவும்.



**கடகம்:**
திட்டமிட்ட வேலை ஒன்றை நாளை செய்யலாம் என மாற்றி அமைப்பீர்கள். பெண்கள் வழியில் சிறு பிரச்சினைகள் தோன்றி பின்னர் சரியாகலாம். அவசர உதவி கேட்டு வரும் சிலருக்கு கடன் கொடுக்கலாம். உங்களுக்கு பழக்கமான ஒருவரை, மற்றொருவருக்கு அறிமுகப்படுத்தி வைப்பீர்கள். மற்றவர்கள் பேச்சை கேட்டு சில காரியங்களில் இறங்குவீர்கள்.



**சிம்மம்:**
தொடங்கிய காரியங்கள் தடையின்றி நடக்கும் நாள். எதிர்பாராத பணவரவுகளையும் பெறலாம். குடும்பப் பிரச்சினை ஒன்று தொடர்பாக முக்கிய முடிவுகளை எடுக்கலாம். வியாபாரிகளுக்கு இருப்பு பொருள்களால் லாபம் கிடைக்கும். விருப்பமான உணவுகளைச் சாப்பிடுவீர்கள். உடல் நலத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.



**கன்னி:**
வீண் பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டிய நாள். போட்டிகளால் மனக்குழப்பங்கள் அதிகரிக்கலாம். நீண்ட நாள்களாக பார்க்காத உறவினர் ஒருவரை சந்திக்க வாய்ப்புக் கிடைக்கும். சேமித்த பணம் ஒன்றை ஒரு காரியத்திற்காக செலவிடலாம். உங்களின் வேலை ஒன்றை முடிக்க மற்றவர்களின் உதவியை நாடுவீர்கள். கனவுத் தொல்லையுண்டு



**துலாம்:**
அலைச்சல் இருந்தாலும் ஆதாயம் பெறும் நாள். பால்ய நண்பர் ஒருவரை எதிர்பாராமல் சந்திக்கலாம். சிக்கலான சிலரிடம் கனிவாகப் பேசி காரியங்கள் சாதிப்பீர்கள். கடனாகக் கொடுத்த பணம் திரும்பி வரலாம். நண்பர்கள் சிலருடன் சேர்ந்து தவறு ஒன்றைச் செய்யலாம். சக ஊழியர்கள் சிலர் உங்களைப் பார்த்து பொறாமைப்படலாம்.



**விருச்சிகம்:**
வீண் வம்பு, விவகாரங்களில் தலையிடாமல் ஒதுங்கி இருக்க வேண்டும். ஆடம்பரச் செலவுகளைக் குறைக்க வேண்டும். சிலரை சந்திக்க முற்பட்டு, அது முடியாமல் போகலாம். சில விடயங்கள் குறித்து பெரியளவில் மனக்கோட்டை கட்டுவீர்கள். பண விவகாரங்கள் தொடர்பாக சிலருடன் காரசாரமாக விவாதிக்கலாம். மற்றவர்களுக்காக செலவிடலாம்



**தனுசு:**
மனக்குழப்பங்கள் விலகும் நாள். புதிய வருமானம் ஒன்றால் கடன் மிகுதியைத் தீர்க்க முற்படுவீர்கள். வியாபாரிகளுக்கு பணப்புழக்கம் அதிகரிக்கும். பெண்களால் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். குடும்பத்தினர் கேட்டதை வாங்கிக் கொடுத்து அவர்களை மகிழ்விப்பீர்கள். சேமிப்பை அதிகரிப்பதில் நாட்டம் செல்லும்.



**மகரம்:**
தடை, தாமதங்களை முறியடித்து எதிலும் வெற்றி காணும் நாள். பல நாள்களாக இழுபறியாக இருந்த காரியம் ஒன்று இன்று திடீரென முடிவுக்கு வரலாம். தம்பதியர் இடையே அன்னியோன்யம் அதிகரிக்கும். வெளியுலக தொடர்புகளை விரிவுபடுத்திக் கொள்வீர்கள். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். சுபநிகழ்ச்சிகளில் பங்கேற்கலாம்.



**கும்பம்:**
பல நாள்களாக அடங்கியிருந்த பிரச்சினை ஒன்று, மீண்டும் தலை தூக்கலாம். தொழிலில் புதிய அணுகு முறைகளைப் பின்பற்ற நினைப்பீர்கள். நினைத்ததற்கு மாறாக சில விடயங்கள் நடக்கலாம். மற்றவர்களுக்காக உங்களுக்கு பிடித்தமான ஒன்றை விட்டுக் கொடுப்பீர்கள். தெய்வ வழிபாடுகள் மூலம் திருப்தி காண்பீர்கள். உங்கள் மீது சிலர் சந்தேகப்படலாம்.



**மீனம்:**
சந்திரனை வழிபட்டு சங்கடங்களை குறைக்க வேண்டிய நாள். எதிர்பார்த்த பணவரவுகள் வருவது தாமதமாகலாம். மற்றவர்களை நம்பி முக்கியமான வேலைகளை ஒப்படைக்க வேண்டாம். மனைவி, குழந்தைகள் உடல் நலன் தொடர்பான விடயங்களுக்காக செலவிடலாம். சிலர் களை மரியாதைக் குறைவாக நடத்தலாம். பயணத்தடை தேறும்

# சர்வதேச நெல் ஆராய்ச்சி நிலை… அதிகாரிகள் வடக்குக்கு விஜய…

யாழ்ப்பாணம்,டிசெ.3

பிலிப்பைன்ஸ் சர்வதேச நெல் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த அதிகாரிகள் யாழ்.மாவட்டத்துக்கு கடந்த செவ்வாய்க்கிழமை பயணம் செய்து இங்குள்ள பயிர்ச்செய்கை நிலைமைகள் தொடர்பாக ஆராய்ந்துள்ளனர்.

சர்வதேச நெல் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த அதிகாரிகள் குழுவினர் யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களத்துக்கு பயணம் செய்து யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் பயிர்ச்செய்கை முறைமை தொடர்பாகக் கேட்டறிந்து கொண்டனர்.

அதன் பின்னர் யாழ்.மாவட்டச் செயலகத்துக்குச் சென்று அரச அதிபருடன் மாவட்ட மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் பயிர்ச்செய்கை விளைச்சல்களின் பெறுபேறுகள் தொடர்பாகக் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

மறவன்புலோ மற்றும் தனங்கிளப்பு ஆகிய பகுதிகளுக்கு நேரடியாகச் சென்ற அந்தக்குழுவினர் அந்தப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் நெற் செய்கை தொடர்பான விவரங்களையும் பதிவு செய்து கொண்ட பின்னர் கிளிநொச்சி மாவட்டத்துக்குச் சென்றுள்ளனர்.

இதேவேளை -கண்டி மாவட்டத்தில் இன்றும், நாளையும் இடம்பெறும் பயிற்சி நிகழ்வில் அவர்களால் திரட்டப்பட்ட விவரங்களின் இறுதி விவரங்களும் சர்வதேச நெல் ஆராய்ச்சி நிலையத்தின் உதவிகள் தொடர்பான விவரங்களும் வெளியிடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ம-15)

# நாக்சேன் செய்த ஞான ஆராய்ச்சி



ஒரு நாட்டில் ஒரு ராஜா இருந்தார். அந்த ராஜா பெயர் மாலிண்ட. அந்த நாட்டில் பெரிய துறவி ஒருவரும் இருந்தார். அந்தத் துறவியின் பெயர் நாக்சேன்.

'அந்தத் துறவி நமது அரண்மனைக்கு வந்து ஆசீர்வாதம் செய்தால் நன்றாக இருக்கும்! என்று அந்த ராஜா நினைத்தார். உடனே அவர் தூதுவன் ஒருவனை அழைத்து, துறவியை அழைத்துக் கொண்டு வருமாறு கூறி ஒரு தேரையும் அனுப்பினான்.

தூதுவன் சென்று துறவியைப் பார்த்து ''நாக்சேன் துறவியாரே! எங்களுடைய ராஜா தங்களைத் தரிசிக்கவிரும்புகிறார். நான்தங்களைஅரண்மனைக்கு அழைத்துச் செல்லத்தான் வந்திருக்கிறேன்!'' என்று கூறினான்.

அதற்கு அந்தத் துறவி ''நீ விரும்பினால் நான் வருகிறேன். ஆனால் தயவு செய்து என்னை மன்னித்துவிடு. இங்கே 'நாக்சேன்'என்று ஒருவரும் கிடையாது. அது வெறும் பெயர்தான். அது ஒரு தற்காலிகமான முத்திரை தான்... வேறொன்றுமில்லை'' என்றார்.

''இது என்ன... இவர் வித்தியாசமான ஆளாக இருக்கிறாரே!'' என்று அவரை அழைத்துப் போக வந்த தூதுவன் நினைத்தான். பிறகு அந்தத் துறவி ராஜா அனுப்பிய தேரில் அரண்மனைக்கு வந்தார். அவருக்காகக் காத்திருந்த ராஜா ஓடி வந்து, 'நாக்சேன்' துறவி அவர்களே.. நான் உங்களை அன்புடன் வரவேற்கிறேன்! என்று வணங்கியபடி கூறினான்.

இதைக் கேட்டவுடன் அந்தத் துறவி சிரித்துவிட்டு 'நாக்சேனுக்கு நீங்கள் கொடுக்கும் மரியாதையை ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் நாக்சேன் என்ற பெயருடைய யாரும் இங்கே இல்லை என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்! என்றார்.

அதைக் கேட்ட மன்னனுக்கு ஒன்றும் புரியவில்லை. எனவே அவன் ''துறவியாரே... நீங்கள் புதிர் போட்டுப் பேசுகிறீர்கள் என்று நினைக்கிறேன். நீங்கள்... நாக்சேனாக இல்லையானால் என்னுடைய அழைப்பை இப்போது ஏற்றுக் கொண்டிருப்பது யார்? இந்த வரவேற்புக்கு பதில் சொல்லிக் கொண்டிருப்பது யார்?'' என்று வினவினான். உடனே அந்தத்துறவி பின்னால்திரும்பிப் பார்த்தார். அவர் ஏறி வந்ததேர்'' அங்கே நின்றது. இதுதானே நான் ஏறிவந்த தேர் என்று கேட்டார். ஆமாம் என்றார்கள். 'அதில் பூட்டியிருக்கும் குதிரைகளை அவிழ்த்து விடுங்கள்' என்றார் துறவி.

அவர் சொன்னது போல் குதிரைகளை அவிழ்த்து விட்டார்கள். துறவி அந்தக் குதிரைகளைக் காட்டி 'இது தான் நான் ஏறிவந்த தேரா?' என்றார். இல்லை, இது குதிரை இது எப்படித் தேராக முடியும் என்றார்கள்.

'சரி குதிரையை அங்கிருந்து ஓட்டிக்கொண்டு செல்லுங்கள். அது பூட்டியிருந்த நுகத்தடியை எடுங்கள்' என்றார் துறவி. அவர் சொன்னது போல் நுகத் தடியை எடுத்தவுடன் 'அந்த நுகத்தடிதான் குதிரையா?' என்றார் துறவி.

இல்லை என்றார்கள். பிறகு துறவி அதன் சக்கரங்களைக் கழற்றும்படி கூறினார். இப்படியே துறவி, தேரின் ஒவ்வொரு பகுதியாகப் பிரித்து எடுக்கச்சொல்லி... 'அது தான் தேரா' என்று கேட்க. இல்லை என்று அருகிலிருந்தவர்கள் பதில் கூறினார்கள்.

இறுதியில் தேரின் பகுதிகளை ஒவ்வொன்றாகப் பிரித்து எடுத்த பின் அங்கே ஒன்றுமே இல்லை.

அப்போது அந்தத் துறவி 'இப்போது உங்கள் தேர் எங்கே போயிற்று? அதிலிருந்து எடுத்த ஒவ்வொரு பகுதியும் 'இது தேர் இல்லை' 'இது தேர் இல்லை' என்று சொல்லிவிட்டீர்கள் அப்படியானால் தேர் எங்கே? அது இப்போது எங்கே இருக்கிறது. என்று கேட்டார். ராஜாவுக்கு பதில் தெரியவில்லை. அப்போது அந்தத் துறவி.

'தேர் தனியாக ஒன்றும் கிடையாது. அது போலவே 'நான்' என்று தனியாக நமக்குள்ளே ஒன்றும் கிடையாது. நம் உறுப்புக்கள் ஒவ்வொன்றையும் தனித்தனியாக அகற்றிப் பாருங்கள்.... கடைசியில் ஒன்றுமே இருக்காது. அன்பு என்பது ஒன்றுமில்லாத தன்மையில் தான் பிறக்கிறது. இந்த ஒன்றுமில்லாத தன்மைதான் கடவுள். என்று கூறிமுடித்தார்.

**கோ.சுவாமிநாதன்.**

# ஸ்தூலத்தை விடு, சூட்சுமத்தைப் பிடி



வடமொழியில் சூட்சுமம் என்றொரு சொல் உண்டு. ஸ்தூலம் என்றால் வெளிப்படையாகத் தெரியும் பகுப்பொருள். அதன் இரகசியம் அடங்கிய நுண்பொருளே சூட்சுமம். உடல் ஸ்தூலமானது என்றால் உயிர் சூட்சுமம்.

ஸ்தூலத்தைப் பார்த்து பிரமிப்பது சிறுமைத்தனம். சூட்சுமத்தைக் கண்டுபிடிப்பது அறிவுடைமை ஞானம்.

சீரடியில் ஒரு பாபா வாழ்ந்தார். சீரடி சாயிபாபா அவர். அவர் பாடசாலை போனதில்லை. பாடம் படித்ததும் இல்லை. ஆனால் மகாஞானி. எப்படி? ஸ்தூல விடயங்களை விலக்கி சூட்சுமத்தை விளங்கி நுட்பமாகக் கற்கும் தெளிவு அவருக்கு நிறையவே இருந்தது.

மகா பண்டிதர் ஒருவர் அவரிடம் அடிக்கடி சர்ச்சை செய்வார். தாம் படித்தவர் என்ற மெல்லிய அகம்பாவம் அவருக்கு உண்டு. சீரடி சாயிபாபா பகவத்கீதையின் ஒரு ஸ்லோகத்திற்கு அவரிடம் விளக்கம் கேட்டார்.

பண்டிதர் கூறிய விளக்கத்தை மறுத்து, சாயிபாபா ஆழமான உரை விளக்கம் சொல்லத் தொடங்கினார்.பண்டிதர் வியப்படைந்தார். பாபா இந்த விளக்கங்களை எங்கே படித்தீர்கள் என்று கேட்டார் பண்டிதர். 'சொன்னவனே நானாக இருக்கும் போது நான் எங்கு சென்று படிப்பது' என்றார் சீரடி சாயிபாபா.

இதற்கு என்ன பொருள் . கீதை விளக்கம் சொல்கிறவன் தான் தானாகவே இருந்தால் கீதை விளங்காது. அவன் கிருஷ்ணனாகமாறினால் தான் அதன் சூட்சுமம் விளங்கும். இன்று கீதை போதிக்கிற எவரும் தன்னுடைய ''தான்'' என்கிற எண்ணத்தை விடுவதில்லை. அதனால் கீதை விளங்குவதில்லை.

இதற்கு ஒரு சுவையான உதாரணம் சொல்கிறேன்.

ஒருவர் தம் கழுதையைக் காணாமல் தேடிக் கொண்டிருந்தார். எங்கு தேடியும் கிடைக்கவில்லை. மனம் சோர்ந்து போய் அமர்ந்து விட்டார். அவ்வேளையில் அந்தவழியாக வந்த சாதுவிடம் தனது குறைகளைச் சொல்லி அழுதார். கொஞ்ச நேரம் அது எங்கு போய் இருக்கும் என்று யோசித்த சாது விடை தெரியாமல் தவித்தார். திடீர் என்று கை கால்களை உதைத்துக் கொண்டு கழுதை மாதிரியே கத்திக் கொண்டு மண்ணில் புரண்டார். விழுந்தடித் துக் கொண்டு ஓடிப்போய் ஒரு குப்பை மேட்டருகில் நின்றார். என்ன அதிசயம் குப்பையில் இருந்து காணாமல் போன கழுதை மீண்டும் துள்ளி எழுந்து இவரை நோக்கி ஓடி வந்தது.

கழுதையின் சொந்தக்காரருக்கு ஒன்றும் விளங்கவில்லை. ''எப்படி கண்டுபிடித்தீர்கள்?'' என்று கேட்டார்.

நான் மனிதனாக இருந்து யோசித்துப் பார்த்தேன் விளங்கவேயில்லை. திடீர் என்று மனதால் கழுதையாக மாறி கழுதையாகவே புரண்டேன். அப்பொழுது இந்தக் கழுதை எங்கே போயிருக்கும் என்பது புரிந்து விட்டது.என்றார்.

கழுதையினால் கழுதையைப் புரிந்து கொள்ளலாம். கடவுளினால் கடவுளைப் புரிந்து கொள்ளலாம். இது தான் சூட்சுமம்.

**சுகி சிவம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்று வலுவுள்ளோர் நலன்பேண தனி அமைச்சு உருவாவது அவசியம்

இன்றைய சூழ்நிலையைப் பார்க்கும் போது எமது நாட்டில் வலுவுடையோர் சமூகத்தைப் போன்று மாற்று வலுவுடையோர் சமூகம் ஒன்று நாடளாவிய ரீதியில் உருவாகிவருவது வெள்ளிடைமலை.

சாதாரணமாகவே சமூகத்தில் ஆறில் ஒருவர் ஏதோ ஒரு வகையில் ஊனமுடையவராக இருக்கின்றாரே எனக் கவலைப் பட்டுக் கொண்டு இருக்கும்வேளையில் போர்ச்சூழல் இதன் தொகையை பன்மடங்காக்கியுள்ளது. சரியான புள்ளி விவரங்களைத் தயாரிப்போமாயின் ஆறொணாத் துயரத்தில் மூழ்கியிருக்க வேண்டிய சூழ்நிலை நிச்சயம் உருவாகும். இதற்குக் காரணமானவர்களை மனித இனம் நிச்சயம் வெறுக்கும். ஆனால் காரணகாரர்களைக் கண்டுபிடிப்பது ஒருபுறம் இருக்க, இவர்களின் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்க வேண்டிய அவசியத்தில்இன்று மனித இனம் உள்ளது.



மாற்று வலுவுடையோர் எண்ணிக்கையைப் பார்க்குமிடத்து இவர்களின் நலனைப் பேணுவதற்கு நாடாளுமன்றத்தில் இவர்களில் ஒருவர் நாடளாவிய ரீதியில் அங்கத்துவம் பெறுவது அவசியம். எந்தவித சாதி, மத பேதமுமின்றி இவர்கள் பிரதிநிதித்துவப்படல் வேண்டும். இப்பிரதிநிதித்துவம் உள்ளூராட்சி மன்றத்திலும் வழங்கப்படல் வேண்டும். இவர்கள் நலனைப் பேண வேண்டும். அதற்காக ஒரு தனி அமைச்சை உருவாக்குவது காலத்தின் தேவையாகும். ஊனமுற்றவர்களுக்காக அல்லது ஊனமுற்றவர்களின் நலன்களுக்காகப் பல அரச சார்பற்ற நிறுவனங்களும், தர்மஸ்தாபனங்களும் இயங்கி வருகின்றன. இவற்றில் சில ஊனமுற்றவர்களாலேயே நடத்தப்படுபவையாகவும், ஊனமுற்றவர்களால் ஊனமுற்றவர்களின் நலனுக்காக நடத்தப்படுபவையும் உண்டு. நீண்ட நாள் அனுபவத்தின் அடிப்படையில் இந்த நிலையை நோக்குமிடத்து பின்னையது செயல்திறன் மிக்கதாகத் தென்படவில்லை. இன்னும் ஆழமாக நோக்குவோமாயின் சமூகத்தின் நன்மதிப்பைப் பெறவேண்டும் என்பதற்காகவே சில ஸ்தாபனங்கள் இயங்கி வருகின்றன. இது மிகவும் கவலைக்குரிய ஒரு நிலையாகும். இந்த மனப்பாங்கு மாற எம்மாலானவற்றைச் செய்வோம். எமக்கும் இந்த நிலை தோன்றலாம் என்ற எண்ணத்தோடு இம்மன்றங்கள்செயற்பட வேண்டும். சில மாற்று வலுவுடையோரால் நடத்தப்படுகின்ற சில நிறுவனங்கள் பற்றி இங்கு ஆராய்வது பொருத்தமானதாகும். விசேடமாக யாழ். விழிப்புலனற்றோர் சங்கம், யாழ். செவிப்புலனற்றோர் சங்கம், வடமராட்சி செவிப்புலனற்றோர் நிறுவனம் ஆகியன வெற்றிகரமாக ஆற்றிவரும் சேவையைப் பாராட்டாமல் இருக்க முடியாது. வலுவுடையோரின் உதவிகளையும், வழிகாட்டல்களையும் பெற்று இந்நிலையம் மேலும் சிறப்புற இயங்க இறையாசியை வேண்டப்படுவது.

மாற்று வலுவுடையோருள் கவனிப்பாரற்று சமூகத்தினுள் ஒளித்து மறைத்து, மறைக்கப்பட்டு வாழ்வோரின் தொகை எண்ணிலடங்கா. அரசோ, அரசசார்பற்ற நிறுவனங்களோ தங்கள் தலையாய கடைமையாக முதலில் இவர்களின் சரியான தகவல்களைக் கவனிக்க வேண்டும். சாதாரணமாகக் கணக்கெடுப்பது போன்று எழுந்தவாரியாகத் தலைகளை மட்டும் எண்ணுவதில் பயனில்லை. இத்துறையில் அனுபவம், அறிவுபெற்ற ஒருவரின் வழிகாட்டலில் இவர்களை வகைப்படுத்தி இயலாமை ஏற்பட்ட காரணம், ஏற்பட்ட காலம், பெற்ற சிகிச்சைகள், தற்போது பெறும் சிகிச்சைகள், ஏற்பட்ட முன்னேற்றங்கள், குடும்ப நிலை, பெற்றுக் கொள்ளும் உதவிகள், எதிர்காலம் பற்றிய சிந்தனைகள் ஆகிய சகல விடயங்களும் இக்கணக்கெடுப்பில் உள்ளடக்கப்படல் வேண்டும். இதன் தொகுப்பு காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்யப்படல் வேண்டும். சகல பிரதேச செயலகங்களிலும் மாவட்டச் செயலகங்களிலும் இக்கோவை பேணப்படல் வேண்டும்.

சில நிறுவனங்கள் கணக்கெடுப்பதிலேயே தங்கள் காலத்தைக் கழித்து விடுகின்றன. எடுத்த தரவுகளை அடிப்படையாக வைத்து புனர்வாழ்வுத் திட்டங்களை உடன் மேற்கொள்ள வேண்டும். குறிப்பாகக் கூறுவதானால் அவர்களைக் கணக்கில் எடுக்காது இருப்போமாகில் அவர்களிடையே காணப்படும் மனித வளத்தையே நாம் வீணடிப்பதாகக் கருதலாம். இன்று நமது பிரதேசத்தில் தேவையான வேலையாள் கள் கிடைப்பதில்லை. இதனால் பிற இடங்களிலிருந்து இங்கு வேலையாள் களைக் கொண்டு வரவேண்டிய சூழ் நிலை உருவாகியுள்ளது. இது வேத னைக்குரியது. வலுக்குறைவுகளுள் ஒன்றான செவிப்புலன் இழப்பு உடலுழைப்புக்கு எவ்வகையிலும் இடையூறாக அமையாது. வீதி வேலைகளிலோ வீடமைப்பு வேலைகளிலோ, மர வேலைகளிலோ, இவர்களை நன்கு பயன்படுத்த முடியும். ஆனால் எத்தனையோ பேர் வழிகாட்டலின்றி அற்ப சொற்ப ஊதி யத்தைப் பெற்றுக் கொண்டு அடிமை வாழ்க்கை வாழ்ந்து கொண்டு வருகின்றனர். இந்த நிலை மாறவேண்டும். இதே போன்று செயற்கைக்கால் பொருத்தியவர்களாலும் செய்யக்கூடிய பல வேலைகள் உண்டு. ஆனால் அவர்களுக்கு உரிய வழிகாட்டலில்லை. கல்வியை முடித்த எத்தனையோ பேர் விழிப்புலனிழந்தவர்கள் எம்மிடையே உள்ளனர். அவர்களுக்கான வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுக்க யாரும் முயற்சி எடுப்பதில்லை. நான்கு வீத வேலைவாய்ப்புகள் இவர்களுக்கு ஒதுக்கப்படல் வேண்டும் என்பது அரசின் அறிவுறுத்தல். ஆனால் இவ் அறிவுறுத்தல் எவராலும் செயற்படுத் தப்படுவதில்லை. இதனைச் சரி செய்ய அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

அடுத்த படியாக ஊனமுற்றவர்களுள் கல்வி கற்க்கக்கூடியவர்களை இனங்கண்டு அவர்களைச் சாதாரண பாடசாலைகளுக்கோ, விசேட பாடசாலைகளுக்கோ அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். தொழிற்பயிற்சி நிலையங்கள் பிரதேச வாரியாக அமைக்கப்படல் வேண்டும். பயிற்சியை முடித்து வெளியேறுபவர்களுக்கு வேலை வாய்ப்புகள் அளிக்கப்படல் வேண்டும்.

இவர்களுக்கான ஓய்வுதியத் திட்டங்கள், மருத்துவ வசதிகள், பொழுது போக்கு வசதிகள் என்பன செய்து கொடுக்கப்படல் வேண்டும். இவர்களின் நலன்களைக் கவனிப்பதற்காக கிராம வாரியாக விசேட ஊழியர்கள் நியமிக்கப்படல் வேண்டும். எனவே ஒவ்வொரு மார்கழித் திங்கள் மூன்றாம் நாள் மட்டும் இவர்களைப் பற்றிச் சிந்தித்து விட்டுப் பின் புறக் கடமைகளைக் கவனம் செலுத்துபவர்களின் மனச்சாட்சியைத் தொட்டுக்கேட்க வைக்கவே இக்கட்டுரை எழுதப்படுகின்றது. மேற்கூறப்பட்ட குறிகோள்கள் என்றோ ஒருநாள் நிறைவேறும். அவர்கள் வாழ்வில் வசந்தம் வீசும்.



கே.கோபாலகிருஷ்ணன்
செயலாளர்.
**AROD**

# அவசர காலச் சட்டத்தின் கீழ் 40 ஆண்டுகள் இந்த நாட்டின் மக்கள் உரிமை ஒடுக்கப்பட்டது

அவசரகாலச் சட்டத்தின் கீழ் 40 ஆண்டுகளும் பயங்கரவாதச் தடைச்சட்டத்தின் கீழ் 30 ஆண்டுகளும் மக்களின் உரிமைகள் மிகமோசமாக ஒடுக்கப்பட்டன. சமாதானம் நிலவியபோது மெதுவாகவும், மோதல் காலத்தில் உக்கிரமாகவும் துரிதமாகவும் பொதுமக்கள் சுதந்திரத்தை இழந்தனர் - இவ்வாறு தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார் சட்டத்தரணி எஸ்.ஜீ.புஞ்சிஹேவா

18 ஆவது அரசியலமைப்புக்கான திருத்தமும் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் திருத்த சட்டமும் எனும் தலைப்பிலான கருத்தரங்கு ஒன்று கடந்த மாதம் 28 ஆம் திகதி தியாகி அறங்கொடை நிலைய பொது மண்டபத்தில் இடம்பெற்றது. பேராசிரியர் இரா. சிவசந்திரன் ஏற்பாட்டில் சிந்தனைக் கூடம்-யாழ்ப்பாணம் என்ற அமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்தக் கருத்தரங்கில் வளவாளராகக் கலந்து கொண்டு விளக்கமளிக்கும் போதே சட்டத்தரணி மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

கடந்த காலங்களில் பல்வேறு ஆட்சியாளர்களின் கீழ் அப்போது நிகழ்ந்த காணாமல் போகச் செய்தல், தாக்குதல் நடத்துதல், படுகொலைகள் என்பன ஒடுக்கு முறைச் சட்டங்களின் கீழ் பலவந்தமாக மூடி மறைக்கப்பட்டன.

இந்த அடக்கு முறைச் சட்டங்கள் நாட்டின் சட்டத்துக்கும் சர்வதேச மனித உரிமைகள் கொள்கைக்கும், சமவாயங்களுக்கும் முரணானவை. ஐக்கிய நாடுகள் சபையின் பல்வேறு முகவர் நிலையங்கள் இந்த சமவாயங்களை அனுசரிக்குமாறு அரசுக்கு விடுத்த விண்ணப்பங்கள் பொருட்படுத்தப்படவில்லை.



தொடர்ந்தும் இந்த நிலைமையின் கீழ் அடுத்து ஆட்சிப்பீடம் ஏறும் ஆட்சியாளர் முன்னைய ஆட்சியாளரைவிட உரிமைகளை மீறும் கதையே தொடர்ந்தது.

காணாமற்போதல், படுகொலைகள் பற்றிய விசாரணை ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டாலும் அவற்றின் அறிக்கைகள் பகிரங்கப்படுத்தப் படவில்லை.

இத்தகைய ஆட்சியாளர்களின் ஆட்சியின் கீழ் இடையிடையே தேர்தல்கள் இடம் பெற்றாலும், அவற்றில் வெற்றியீட்டுவதற்கு அரச அதிகாரமும், அரச வளங்களும், அரச ஊடகங்களும் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டு அதிகாரம் கொள்ளையடிக்கப்பட்டது. இந்த ஆட்சியாளர்களின் ஆட்சியின் கீழ் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல்கள் இடம்பெறவில்லை.

ஆட்சியாளர்கள் அல்லது அவர்களோடு தொடர்புடையவர்கள் அரச வளங்களை கையகப்படுத்தி ஊழல் மோசடிகளில் ஈடுபட்டாலும் எந்தவொரு சம்பவமும் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு முன்னிலையில் சமர்ப்பிக்கப்படவில்லை. உலகில் ஊழல் மலிந்த நாடுகளில் இலங்கையும் ஒன்றாகக் காணப்படுகின்றது.

தமது அதிகாரத்தைத் தக்கவைப்பதற்கு, தமக்கும் தமது அடிவருடிகளுக்கும் சார்பாகப் பயன்படுத்தும் வகையில் அரச ஊடகங்கள் மாற்றப்பட்டன. தனியார் அல்லது மாற்று ஊடகங்களுக்கும் ஊடாகவியலாளர்களுக்கும் மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமையால் மக்களின் கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரம் குழி தோண்டிப் புதைக்கப்பட்டது.

சந்தேகநபர்கள் சித்திரவதை செய்யப்படல், வழக்குத் தொடராமல் கைதிகளாகச் சிறைவைக்கப்படல், பொய்க் குற்றச்சாட்டுக்களை சுமத்தி வழக்குத் தொடர்தல் என்ற வகையில் சட்டம் துஸ்பிரயோகம் செய்யப்பட்டது.

குற்றங்களைப் புரிவோரைச் சட்டத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதில் உள்ள வழிமுறைகளின் பலவீனங்கள் காரணமாக ''பாதாள உலகத்தவர்கள் கொள்ளைக்காரர்கள்'' என முத்திரை குத்தி சட்ட்திற்கு மாறாக மனிதர்களைப் பகிரங்கமாக கொலை செய்வது தொடர்ச்சியாக இடம் பெற்றது. கிட்டத்தட்ட 50 பேர் இவ்வாறாகப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

18 ஆவது திருத்தத்தின் மூலம் இரண்டு விடயங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. அதில் ஒன்று அரச இயந்திரத்தின் அனைத்து நியமனங்கள், இடமாற்றம், பதவி உயர்வு, ஒழுக்காற்று நடவடிக்கைகள் மற்றும் பதவி நீக்கம் ஆகிய அனைத்து அதிகாரங்களையும் ஜனாதிபதி தன்வசப்படுத்திக் கொண்டுள்ளார். 17 ஆவது திருத்தத்தை நீக்குவதன் மூலம் இது இடம் பெற்றுள்ளது. இரண்டாவது ஊழல் மோசடி என்னும் தீய நடைமுறை. 18 ஆவது திருத்தம் மூலம் இது சட்டமாக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஜனாதிபதியினது பாவிக்காலத்தை நீடிப்பதே இந்தத் திருத்தத்தின் உண்மையான குறிக்கோளாகும்- என்றார்.

(எ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலணை பிரதேச சபை, வேலணை
# 2011ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

வேலணை பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட மீன்சந்தைகள், இறைச்சிக்கடை, சிற்றுண்டிச்சாலை என்பவற்றை 01.01.2011 தொடக்கம் 31.12.2011 வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி

*: 2010.12.02 முதல் 2010.12.08 நண்பகல் 12 மணிவரை*

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி

*: 2010.12.09 நண்பகல் 12.00 மணிவரை*

கேள்வி திறக்கும் திகதி *: 2010.12.09 பிற்பகல் 1.00 மணிவரை*

| இல | குத்தகை விவரம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் (VAT தவிர) | மீளளிக்கப்படும் வைப்புப் பணம் (VAT தவிர) | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT தவிர) |
|---|---|---|---|---|
| | **மண்டைதீவு உப அலுவலகம்** | | | |
| 01 | மண்டைதீவு மீன் சந்தை | 500.00 | 5,000.00 | 11,000.00 |
| | **அல்லைப்பிட்டி உப அலுவலகம்** | | | |
| 01 | அல்லைப்பிட்டி மீன் சந்தை | 500.00 | 5,000.00 | 22,231.00 |
| | **வேலணை உப அலுவலகம்** | | | |
| 01 | செட்டிப்புலம் மீன் சந்தை | 500.00 | 5,000.00 | 33,000.00 |
| 02 | துறையூர் மீன் சந்தை | 1,000.00 | 10,000.00 | 123,200.00 |
| 03 | அம்பிகைநகர் மீன் சந்தை | 500.00 | 5,000.00 | 29,700.00 |
| 04 | சரவணை மீன் சந்தை | 500.00 | 5,000.00 | 10,000.00 |
| 05 | சாட்டி சிற்றுண்டிச்சாலை | 500.00 | 5,000.00 | 36,000.00 |
| | **புங்குடுதீவு உப அலுவலகம்** | | | |
| 01 | மடத்துவெளி மீன் சந்தை | 1,000.00 | 10,000.00 | 121,000.00 |
| 02 | புங்குடுதீவு மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 10,000.00 | 264,110.00 |
| | **நயினாதீவு உப அலுவலகம்** | | | |
| 01 | நயினாதீவு வடக்கு மீன் சந்தை | 500.00 | 5,000.00 | 27,500.00 |
| 02 | நயினாதீவு தெற்கு மீன் சந்தை | 500.00 | 5,000.00 | 27,500.00 |

* கேள்விப்பத்திரங்கள் மூன்று பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதி உட்பட இரு பிரதிகளைச் *செயலாளர், வேலணை பிரதேச சபை, வேலணை* என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டுத் தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டுப் பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது அதற்கென தலை மையலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத் திற்கு முன் இடப்படல் வேண்டும். மூன்றாவது பிரதி *பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம் யாழ்ப்பாணம்* என்னும் முகவரியிட்டுப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.
* கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் விண்ணப்பங்களுடன் தேசிய அடையாள அட்டையையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டுவருவதுடன், தாம் வதியும் இடத்தின் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
* உள்ளூராட்சி மன்றங்களால் தவறுநராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. படிவம் வழங்கப்பட்டபின் கண்டுபிடிக்கப்பட்டால், அவரின் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.
* ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
* இறைச்சிக்கடைகளை எடுப்பவர்கள் தாமே கடைகளை அமைத்துக் கொள்ள வேண்டும்.
* கேள்விப்படிவக்கட்டணம், கேள்வித்தொகை என்பவற்றுக்கு 12% (VAT) பெறுமதிசேர் வரிசெலுத்தப்படல் வேண்டும்.
* கேள்வி நிபந்தனைகள் அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும், எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ சபையின் செயலாளருக்குப் பூரண அதிகாரம் உண்டு.
* தெரிவு செய்யப்படும் இறைச்சிக்கடைக்குரிய கேள்விக்காரர்கள் கேள்வித் தொகையின் 2/3 பகுதியையும், ஏனைய கேள்விக்காரர்கள் கேள்வித் தொகையின் 1/3 பகுதியையும் 2010.12.15ஆம் திகதிக்கு முன்னர் செலுத்திச் சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்துகொள்ள வேண்டும்.
* கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
* வேலணை பிரதேச சபை இடப்பரப்புக்குள் இயங்கும் இறைச்சிக்கடைகள் யாவற்றிக்கும் கொல்களமாக புங்குடுதீவு கொல்களமே இருக்கும்.
* புங்குடுதீவு மடத்துவெளி மீன்சந்தையில் நயினாதீவிலிருந்து கொண்டு வரும் மீன்களுக்குச் சந்தைவரி தவிர்த்தே அறவிடப்பட வேண்டும்.
* கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களைத் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

*வேலணை பிரதேச சபை,*
*வேலணை.*
*2010.12.01*

*கெ. தவராசா*
*செயலாளர்,*
*வேலணை பிரதேச சபை.*

(சி/573305)

## பரீட்சைகள் பிற்போடப்பட்டன

தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தின் ஏற்பாட்டில் இன்று வெள்ளிக்கிழமை நடத்தப்படவிருந்த தரம் 12,13 மாணவர்களுக்கான பரீட்சைகள் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளன.

இப் பரீட்சைகள் எதிர்வரும் 9ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறும் என யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (ற)

## சேதமடைந்த வீதிகள் பயணிப்பதில் சிரமம்

அண்மையில் பெய்த மழையினால் ஏ-9 வீதியில் குழிகள் ஏற்பட்டு வாகனங்கள் செல்ல முடியாத அளவுக்கு சேதமடைந்துள்ளது.

பல இடங்களில் பாரிய சேதங்களால் அவற்றில் வெள்ளம் தேங்கி நின்று வாகனங்களுக்கு சேதத்தை ஏற்படுத்துகிறது என்று பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

(204-207)

# கேள்வி விண்ணப்பம் கோர

யாழ்.பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளரினா விலங்கு விசர்நோயைத் தடுப்பதற்காக பெண் நாய்களை மலடாக்கும் திட்டத்திற்காக 2011ஆம் ஆண்டுக்குக் கேள்வி விண்ணப்பம் கோரல்.

**தகைமைகள்:-**

அரச கால்நடை வைத்தியராகப் பதிவு பெற்றிருத்தல் வேண்டும்.

**நிபந்தனைகள்**

01) பெண் நாய்களின் கருப்பையினை சத்திர சிகிச்சை செய்து வெளியேற்றப்படல் வேண்டும்.
02) யாழ்.மாவட்டத்தில் எப்பகுதியிலும் சென்று கடமையாற்ற வேண்டும்.
03) சத்திரசிகிச்சை செய்யப்பட்ட நாய்களின் வலது காதில் Tatoo இலக்கம் பொறிக்க வேண்டும்.
04) சத்திரசிகிச்சை செய்த பின்னர் உயிருடன் செல்வதை உறுதிப்படுத்தல் வேண்டும்.
05) கட்டாக்காலி நாய்களைப் பிடித்து சத்திரசிகிச்சை செய்வதற்கு உரிய தொழிலாளர், வண்டில் போன்றவற்றை ஒழுங்கு செய்ய வேண்டும்.
06) சத்திரசிகிச்சைக்கு உதவியாளரைக் கொண்டு வருதல் வேண்டும். சத்திரசிகிச்சையின் பின் கழிவுகளைப் பாதுகாப்பான முறையில் புதைக்கப்படல் வேண்டும்.
07) பிரயாண வாகன ஒழுங்கு செய்யப்படல் வேண்டும்.
08) 8மணி முதல் 4.30 மணிவரை கடமையாற்ற வேண்டும்.
09) விழிப்புணர்வினை ஏற்படுத்தவும், நிலையங்களை ஒழுங்கு செய்யவும் பொதுமக்களின் தொடர்பாடலுக்குமான வெளிக்கள உத்தியோகத்தருக்கான செலவுகள்.
10) சத்திர சிகிச்சைக்கான சகல விதமான மருந்துகளுக்குமான செலவுகள்.
11) மிருகத்தின் வலியினைக் குறைப்பதற்கும் இரத்தப் போக்கினைக் குறைப்பதற்குமான நவீன மருந்துகள் தரமானவை பாவிக்கப்படல் வேண்டும். சத்திர சிகிச்சையில் ஏதாவது முறைப்பாடுகள் செயற்பாட்டில் ஏதாவது மாற்றங்கள் ஏற்படின் கேள்விப்பத்திரம் இரத்துச் செய்யப்படலாம்.

மேற்குறிப்பிட்ட சகல செலவுகள் உட்பட ஒரு பெண் நாய்க்கு ஆகக் குறைந்த கேள்வித் தொகை கோரப்படுகின்றது. இதற்கான விண்ணப்பத்தினை 15.12.2010 இற்கிடையில் மேற்படி காரியாலயத்தில் பெற்று 10.01.2011இற்கிடையில் அனுப்பி வைக்கவும். கடித மேலுறையில் பெண் நாய்களிற்கான கருத்தடைக் கேள்வி விபரம் என எழுதப்படல் வேண்டும்.

வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்
*யாழ்.பி.சு.சே.பணிப்பாளர்.*

(சி/573303)

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் கதிரவேலு சிவசுந்தரலிங்கம்



*அன்பிற்கும் பண்பிற்கும் இலக்கணமான*
*எங்கள் அருமை அப்பாவே!*
*பாரினில் ஊரார் போற்ற வாழ்ந்த உத்தமனே!*
*பாசமாய் நேசமுடன் எம்மை வளர்த்த*
*உதயவிளக்கு உதிர்ந்து மூன்றாண்டுகள் நகர்ந்தாலும்*
*எம் உயிரைவிட்டு அணையாது எமது பாசக்*
*கூன்டில் இருப்பீர் அப்பா.*

*அன்பின் மகள்.*

தோற்றம் - 25.06.1952
மறைவு - 06.12.2007
திதி - 03.12.2010

த.முகவரி - கல்வளை வீதி.
சண்டிலிப்பாய்.
நி.முகவரி - அரியாலை. யாழ்ப்பாணம்.

உங்கள் துயரால் வாடும்:
**மனைவி, பிள்ளைகள்.**

# மரண அறிவித்தல்

## செல்வி மகேஸ்வரி பீதாம்பரம் (சாமிஅம்மா)



நல்லூரைச் சேர்ந்த மகேஸ்வரி பீதாம்பரம் நேற்றுமுன்தினம் (01.12.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பீதாம்பரம்-மங்களம்மா தம்பதியரின் அருமை மகளும் கணநாதன், ஜெகநாதன், சிவபாக்கியம் (கனடா), காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம், மாணிக்கவாசகர் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான ஸ்ரீகாந்தி, கணநாதன், யோகேஸ்வரி, ஜெகநாதன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (02.12.2010) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் செம்மணி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தொடர்புகளுக்கு:-*
*தொலைபேசி இலக்கங்கள்:*
*0778123196*
*0214903590*

*தகவல்:*
பீ.கணநாதன் (சகோதரன்)
*249, நாயன்மார் வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் வலையமைப்பு மாநாடு டிசெம்பர் 29 இல் மட்டக்களப்பில்

மட்டக்களப்பு, டிசெ.3

மட்டக்களப்பில் பெண்கள் வலையமைப்பு மாநாடு எதிர் வரும் 29ஆம் திகதி புதன் கிழமை நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக சீடோ ஸ்ரீலங்கா அமைப்பின் நிகழ்ச் சித் திட்டக் குழுத்தலைவர் விம லாதித்தன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் புதன் கிழமை மட்டக்களப்பு களு வாஞ்சிக்குடி இராசமாணிக்கம் மண்டபத்தில் நடைபெற்ற ''அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பது'' தொடர்பான செயலமர்வில் கலந்து கொண்டு விளக்கமளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப் பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்று கையில்-

தற்போதைய காலகட்டத்தில் அரசியலில் அதிகளவானோர் ஆண்கள் தான் உள்ளனர். ஆகவே பெண்களின் பிரதி நிதித்துவத்தினை எதிர்வரும் காலத்தில் உள்ளூராட்சி மன் றங்களில் அதிகரிக்கச் செய்வ தற்காவே நாம் பெண்களை ஊக்கப்படுத்தும் செயற்பாடு களில் ஈடுபட்டு வருகின்றோம் - என்றார்.

# திருக்கோயில் கடலில் காணமாற்போன இருவரின் சடலங்களும் மீட்பு

திருக்கோவில், டிசெ.3

திருக்கோவில் கடலில் செவ்வாய்க் கிழமை காணாமற் போன இரு இளைஞர்களின் சடலங்கள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. பதுளையைச் சேர்ந்த விஜய குமார் செல்வக்குமார் (வயது - 20) என்ற இளைஞரின் சடலம் நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் திருக்கோவில் பொலிஸாரால் மீட் கப்பட்டுள்ளது.

குளிக்கச்சென்ற இடத்திலிருந்து ஒரு மைலுக்கு அப்பால் இவ் விளைஞரின் சடலம் மீட்கப்பட்டது என பொலிஸார் தெரிவித்த னர். சடலம் திருக்கோவில் பொது வைத்தியசாலைக்கு பிரேதபரி சோதனைக்காக எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. மற்றைய இளைஞரின் சடலம் நேற்று மாலை 4 மணியளவில் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. திருக்கோவில் கடலுக்கு கடந்த செவ்வாய் கிழமை குளிக்கச் சென்ற ஏழு இளைஞர்களில் காணாமற்போன இரு இளைஞர்களின் சடலங்களே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

# திருமலை மாவட்ட மாணவர்களுக்கு விவசாயம் சம்பந்தமாகக் கருத்தரங்கு

திருகோணமலை, டிசெ.3

கிழக்கு மாகாணத்தில் விவசாயத்தை வளர்ப் பதற்கான ஆரம்ப அடித்தளங்கள் மாணவர்கள் மத்தியில் உருவாக்கப்படல் வேண்டும் என கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் பிரத்தி யேக செயலாளர் என்.செந்தீபன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மட்டக் களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் விவசாயத்துறை இன்று வளர்ச்சி கண்டுள்ளது. எனினும், இன்னும் அதை சிறந்த முறை யில் வளர்த்தெடுப்பதற்குத் திட்டமிட்டுள்ளோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.




விவசாய உற்பத்தி தொழிநுட் பங்கள், விவசாய உபகரண பாவனைகள் ஆகியவை தொடர் பாக மாணவர்களுக்கு சிறந்த பயிற்சிகள் வழங்கி, அவர்கள் மூலம் கிழக்கு மாகாண விவசாயத்துறை யில் மேலும் பாரிய மாற்றங்களைக் கொண்டு வரலாம். இதுவே எமது நோக்கமாகும் என்றும் செந்தீபன் தெரிவித்தார்.

இதன் முதற் கட்டமாக பாடசாலை மட்டத்தில் கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் திருகோணமலை மாவட்டத்தை உள்ளடக்கிய பாடசாலை மாணவர்களுக்கான கல்விக் கருத்தரங் கும் விவசாய உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் திருகோணமலை மாவட்ட விவசாயப் பயிற்சி நிலை யத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வு கிழக்கு மாகாண விவசாயக் கால்நடை, சிறு கைத்தொழில் மீன்பிடித்துறை அமைச்சர் துரையப்பா நவரட்ணராஜா தலை மையில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் கிழக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் எஸ்.எம்.குசைன், மேலதிக மாகா ணக் கல்விப் பணிப்பாளர் எஸ்.கிருஷ்ணராஜா, வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.கே. ஆனந்தராஜா, முறைசார் கல்வி பிரதிப் பணிப்பாளர் எஸ்.நாகராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (வி)

# ஜீவராசிகள் திணைக்களத்தை வெல்லாவெளிக்கு இடம் மாற்றுக

மட்டக்களப்பு, டிசெ.3

மட்டக்களப்பு படுவாங்க ரைப் பிரதேசத்தில் அண்மைக் காலமாகக் காட்டு யானைகளின் தாக்குதல்களுக்கு 10க்கும் மேற் பட்ட பொதுமக்கள் உயிரிழந்துள் ளனர். அவர்களினது உடைமைகள் நாசமாக்கப்பட்டுள்ளன. எனவே, காட்டு யானைகளின் நடமாட் டம் மிகுந்த வெல்லாவெளி பிர தேசத்துக்கு கள்ளியங்காட்டில் இயங்கிவரும் வனவிலங்கு ஜீவ ராசிகள் திணைக்களம் உடனடி யாக இடமாற்றம் செய்யப்பட வேண்டும் என பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

போரதீவுப்பற்று பிரதேச சபைக்கு உட்பட்ட பலகிராமங் கள் காட்டு யானைகளின் தாக்கு தலுக்கு உள்ளாகி வருகின்றன. இப்பிரதேசத்தில் அதிகளவானோர் விவசாயத்தையே ஜீவனோ பாயத் தொழிலாக மேற்கொண் டுள்ளனர் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

இவர்களது விவசாயப் பயிர் நிலங்களையும், வீடுகளையும் யானைகளிடமிருந்து பாதுகாப் பதற்கு எந்தவிதமான ஆக்க பூர்வமான நடவடிக்கைகளும் இதுவரையிலும் எடுக்கப்பட வில்லை என்றும் அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவேதான் மட்டக்களப்பு கள்ளியங்காட்டில் இயங்கி வரும் வனவிலங்கு ஜீவராசிகள் திணைக்களத்தை வெல்லா வெளிப்பிரதேசத்துக்கு மாற்று வது குறித்து உயரதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அப்பிரதேச மக்கள் வலியுறுத்துகிறார்கள்.

# தொழிலாளருக்குப் பட்ஜெட்டில் பாரபட்சம்; மௌனமாக இருக்கும் மலையக எம்.பிக்கள்

## குற்றஞ்சாட்டுகிறார் தேசிய ஊழியர் சங்கத் தலைவர்

கண்டி, டிசெ.3

அரசினால் இம்முறை சமர்ப் பிக்கப்பட்ட 2011 ஆண்டுக் கான வரவு - செலவுத் திட்டத் தில் தோட்டத் தொழிலாளர் களுக்கு பயனளிக்கும் விட யங்கள் உள்ளடக்கப்படாமை தொடர்பாக மலையக நாடாளு மன்ற உறுப்பினர்கள் மௌனம் சாதிக்கின்றனர்.

இவ்வாறு தேசிய ஊழியர் சங்கத்தலைவர் கே. வேலாயு தம் கடந்த செவ்வாய்க்கிழமை குற்றஞ்சாட்டினார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இந்தக் குற்றச் சாட்டை முன் வைத்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித் தவை வருமாறு:-

இலங்கைக்கு பெரும் அந்நி யச் செலாவணியைப் பெற்றுத் தரும் தோட்டத் தொழிலாளர் களுக்கும், புலம்பெயர்ந்து வெளி நாடுகளில் வேலைசெய்யும் இலங்கையர்களுக்கும் 2011 ஆம் ஆண்டுக்குரிய வரவு- செல வுத் திட்டத்தில் எவ்வித பயன் தரும் விடயங்களும் சேர்க்கப் படவில்லை.

தோட்டப்புறங்களில் வாழும் தொழிலாளர்கள் அன்றிலிருந்து இன்றுவரை பிரதானமாக மாவி னால் தயாரிக்கப்பட்ட உணவு களையே சாப்பிடுகின்றனர். இந் நிலையில் மாவின் விலை அதி கரித்தபடியால் அவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி யுள்ளனர்.

இதேவேளை, தோட்டப்புறங் களில் விவசாயம் மேற்கொள் ளப்படாத காணிகளை தனியா ருக்கு விற்பனை செய்யும் தீர் மானத்தை நாம் எதிர்க்கிறோம். இது தோட்டத் தொழிலாளர்க ளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும்.

சம்பள உயர்வு, வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு உள்ளிட் பல விடயங்களை தோட்டத் தொழிலாளர்கள் இந்த வரவு செல வுத் திட்டத்தில் எதிர்பார்த்திருந் தனர். ஆனால், அந்த எதிர்பார்ப்பு ஏமாற்றத்தில் முடிந்துள்ளது.

அது அவ்வாறிருக்க தோட் தொழிலாளர்களின் ஊழியர் சேமலாப நிதியில் இருந்து ஒரு தொகுதியைக் கழித்து அவற்றை ஓய்வூதியத்தில் சேர்ப்பதற்கு அரசு தீர்மானித்து வருகிறது. இதனை அனைத்து தொழிற் சங்கங்களும் எதிர்க்கும். இது தொடர்பில் கொழும்பில் அனைத்து பிரதான தொழிற்சங்கங்களும் கூடி ஆராயவிருக்கின்றன. -இப் படி அவர் தெரிவித்தார். (வி)

# நுவரெலிய பூங்காவில் கலகம்; பதின்மூன்று மாணவர்கள் கைது

நுவரெலியா, டிசெ.3

நுவரெலியா விக்டோரியா பூங்காவைப் பார்வையிட வந்திருந்த எம்பிலிப்பிட்டிய பிரதேச மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தினர் என்ற குற்றச்சாட்டில் நுவரெலியாப் பாடசாலை ஒன்றின் மாணவர்கள் 13 பேர் கைது செய்யப்பட்டு கடும் எச்சரிக்கையின் பின்னர் விடு விக்கப்பட்டனர் என நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் ஆசிரியை ஒருவர் பொலிஸாருக்குத் தெரிவித்த அவசர முறைப்பாட்டையடுத்தே மாணவர்கள் கைது செய்யப்பட் டுள்ளனர்.


கைது செய்யப்பட்டவர்களில் 6 மாணவிகளும் அடங்குகின்றனர் என்றும், இவர்கள் அனைவரும் இம்முறை ஜீ.சி.ஈ.சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவிருப்பவர்கள் என்றும் பொலிஸார் குறிப்பிட் டனர்.

கைது செய்யப்பட்ட போது மாணவர்கள் சீருடையில் இருந்த துடன், போதையில் காணப்பட்டனர் என்றும் பொலிஸார் கூறினர்.

# மாத்தளையில் சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கு விரைவில் நஷ்டஈடு வழங்குமாறு கோரிக்கை

மாத்தளை, டிசெ.3

மாத்தளை பிரதான வீதி மற் றும் மாத்தளை - இறத்தோட்டை வீதி ஆகியவற்றில் வீதி விஸ் தரிப்புக்காக சுவீகரிக்கப்பட்ட நிலங்களுக்கான நஷ்டஈட்டை




காணி உரிமையாளர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கு மாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த அலுவிகார வலியுறுத்தி யுள்ளார்.

மத்திய மாகாண வீதி அபி விருத்தி அமைச்சர் பந்துல எஸ்.பி. யாலேகமவுக்கு பிரதி செய் யப்பட்டு, அரசுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே வசந்த அலுவிகார இவ்விட யத்தை வலியுறுத்தியுள்ளார்.

வீதிகள் விஸ்தரிக்கப்படும் போது தனியார் காணிகள் சுவீ கரிக்கப்படுகின்றன. அத்தகைய காணிகளின் உரிமையாளர்க ளுக்கு உரிய நஷ்ட ஈட்டை வழங்காமல் இழுத்தடிப்பது நியாயமற்றது.

குறிப்பிட்ட பாதைகளின் இரு மருங்கிலும் 50-60 வரு டங்களாக வசித்து வந்த மக் களது வீடுகளும், காணிகளும் சுவீகரிக்கப்படுகின்றன.

எனவே அவர்களுக்கு விரை வில் நியாயமான நஷ்ட ஈட்டை வழங்க வேண்டியது அரசின் பொறுப்பாகும் என அவர் தனது கடிதத்தில் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார். (வி)

# நம்பொடை மண்சரிவில் பாதிப்பு; மாற்றிடத்தில் வீடமைக்க நிதியுதவி

நுவரெலிய, டிசெ.02

கொத்மலை நம்பொடை வெளன்டன் தோட்டத்தில் மண்சரிவு அபாயத்துக்கு உட்பட்ட 30 குடும்பங்களுக்கு மாற்றிடமொன்றில் வீடுகளை அமைப்பதற்காக அனர்த்த முகா மைத்துவ அமைச்சின் மூலம் நிதியுதவி வழங்கப் பட்டுள்ளது.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் முதற்கட்டமாக 50,000 ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான நிகழ்வு கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்றது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உதவிச்செயலாளரும் மத்திய மாகாணசபை உறுப்பினருமான ரமேஷ், நுவரெலியா மாவட்டச் செயலாளர் டி.பி.ஜி குமாரசிறி, கொத் மலைப் பிரதேச செயலாளர் மேனக ஹேரத் உட் பட பலர் கலந்துகொண்டனர். (வி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச்சுடர்
## O/L மாவட்ட வலம்
கல்வி உலகின் ஊடக முன்னோடி உதயன்

நன்றிக்குரிய ஆசிரியர்
இரா.செல்வவடிவேல்,
யாழ்ப்பாணம்.
021-2228165


விஞ்ஞானம் 34-T

முற்றுமுழுதான எதிர்பார்ப்பு வினாக்களுடன் யாழ் பிரபல ஆசிரியர்களின்
**முன்னோடி வெளியீடு - 01**

**விஞ்ஞானம் I** **1 மணித்தியாலம்**

01. புறச் சூழலில் நிகழும் மாற்றங்களை மனிதனுக்கு அறிவிப்பது எது?
1) சமிபாட்டுத் தொகுதி 2) நரம்புத் தொகுதி
3) அகச்சுரக்கும் தொகுதி 4) குருதிச்சுற்றோட்டத் தொகுதி

02. எளிய பாரமானியொன்றின் படம் கீழே தரப்பட்டுள்ளது. இங்கு வளிமண்டல அமுக்கத்தை அளக்க உதவும் உயரம் எது?
1) PQ 2) QR
3) PR 4) QS




03. புரதச்சமிபாட்டின் ஒரு விளைவு பின்வருவனவற்றுள் எது?
1) குளுக்கோசு 2) கனியுப்புக்கள்
3) அமினோ அமிலங்கள் 4) கொழுப்பமிலங்கள்

04. மூன்று இரசாயனத் தாக்கங்களுக்குரிய சமன்பாடுகள் கீழே (a), (b), (c) மூலம் காட்டப்பட்டுள்ளன.
a) $2KMnO_4 \rightarrow K_2MnO_4 + MnO_2 + O_2\uparrow$
b) $Mg + 2H_2O \rightarrow Mg(OH)_2 + H_2\uparrow$
c) $BaCl_2 + Na_2SO_4 \rightarrow BaSO_4\downarrow + 2NaCl$
இவற்றுள் திணிவுக் காப்பு விதிக்கு அமைவானது,
1) b மாத்திரம் ஆகும். 2) c மாத்திரம் ஆகும்.
3) a உம் c உம் மாத்திரம் ஆகும். 4) a, b, c ஆகிய அனைத்தும் ஆகும்.

05. இனிமையான மாம்பழமொன்றின் வித்திலிருந்து தோன்றிய ஒரு மாமரத்தின் பழங்கள் மேற்படி இனிமையான மாம்பழத்தை விட இனிமை குறைந்தனவாகக் காணப்படலாம். இதற்கான பிரதான காரணமாக அமையக்கூடியது.
1) பதியமுறை இனப்பெருக்கம் நடைபெறாமையாகும்.
2) மகரந்தச் சேர்க்கையின்போது இயல்புகள் கலக்கக்கூடிய வாய்ப்பு காணப்படலாகும்.
3) முளைக்கும்போது இயல்புகள் வேறுபடுகின்றமையாகும்.
4) மண்ணானது தாவரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியமையாகும்.

06. ''விசை'' என்பது எவ்வாறு வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது?
1) அதிகளவில் பயன்படுத்தும்போது விரைவாக விரயமாகும் பொருள்.
2) ஒரு பொருளில் நிகழும் திறப்பு திறன் மாற்ற வீதம்.
3) ஒரு கிலோகிராம் நிறையுடைய பொருளின் மீது தாக்கம் புரிந்து அதில்,ஒவ்வொரு செக்கனுக்கு ஒரு மீற்றர் ஆர்முடுகளைப் பெற்றுக்கொடுக்கும் ஒரு பொருள்.
4) ஓய்வில் இருக்கும் ஒரு பொருளின் ஓய்வு நிலையை அல்லது சீரான வேகத்துடன் இயங்கும் ஒரு பொருளின் இயக்க நிலையை மாற்றுகின்ற ஒரு புறக்காரணி.

07. பின்வரும் மூன்று செயற்பாடுகளையும் நடத்தும் மூன்று ஓமோன்களையும் ஒழுங்கு முறையாக காட்டும் கூட்டம் எது?
(a) உடலின் அனுசேபத் தொழிற்பாடுகளின் வீதத்தை ஆளல்.
(b) பயப்பட்ட சந்தர்ப்பங்களில் அதற்கேற்றவாறு உடலை ஒழுங்குபடுத்துதல்.
(c) துணைப்பால் இயல்புகளின் வளர்ச்சியை ஆளல்.
1) அதிரினலின், தைரொட்சின், ஈஸ்ரஜன். 2) தைரொட்சின், ஈஸ்ரஜன், இன்சுலின்.
3) இன்சுலின், அதிரினலின், ஈஸ்ரஜன். 4) தைரொட்சின், அதிரினலின், ஈஸ்ரஜன்.


08. பல சமதானிகளைக் கொண்ட யாதேனும் மூலகத்தின் அனைத்து அணுக்களதும் பொது இயல்பானது அவற்றின் கருக்களின்,
1) சம எண்ணிக்கை நியூத்திரோன்கள் காணப்படலாகும்.
2) சம எண்ணிக்கைப் புரோத்தன்கள் காணப்படலாகும்.
3) சம எண்ணிக்கை இலத்திரன்கள் காணப்படலாகும்.
4) சம எண்ணிக்கைத் துணிக்கைகள் காணப்படலாகும்.

09. ''கழித்தல்'' என்பதன் வரைவிலக்கணம்,
1) அனுசேபத் தொழிற்படுகளின் மூலம் தோன்றும் கழிவுப் பொருள்களை வெளியேற்றுவதாகும்.
2) சமிபாடடையாத உணவை வெளியேற்றுவதாகும்.
3) நீரையும் உப்புக்களையும் வெளியேற்றுவதாகும்.
4) நீராவியையும் காபனீரொட்சைட்டையும் வெளியேற்றுவதாகும்.

10. 25 சதம மீற்றர் நீளம், 10 சதம மீற்றர் அகலம், 5 சதம மீற்றர் உயரமான சீரான செங்கலொன்று, அதன் பாரிய முகப்புக்களுள் ஒன்று மேசையுடன் தொடுகையுற்றவாறு மேசையின் மீது சமநிலையில் இருக்கும் இச்சந்தர்ப்பத்தில் அதன் நிறையினுள் மேசையின் மீது பிரயோகிக்கப்படும் அமுக்கம் $0.1 Ncm^{-3}$ ஆகும். அதன் மிகச் சிறிய முகப்புக்களுள் ஒன்று மேசையின் மீது தொடுகையுறும் வண்ணம் வைக்கப்படின், அதன் நிறையினால் மேசையின் மீது பிரயோகிக்கப்படும் அமுக்கம் யாது?
1) $0.02 Ncm^{-2}$ 2) $0.2 Ncm^{-2}$ 3) $0.5 Ncm^{-2}$ 4) $25 Ncm^{-3}$

11. சூல்வித்தகத்தினால் ஆற்றப்படும் மிக முக்கியமான தொழில்,
1) முளையத்துக்கு பாதுகாப்பு வழங்குதலாகும்.
2) முளையத்தைச் சூழ்ந்து காணப்படலாகும்.
3) முளையத்துக்கும் தாய்க்கும் இடையே பதார்த்த பரிமாற்றத்தை நடாத்துதலாகும்.
4) முளையத்தினதும் தாயினதும் குருதியை கலத்தல் ஆகும்.

12. கீழே தரப்பட்டுள்ள படத்திற் காட்டப்பட்டுள்ளவாறு,
A) பரிசோதனைக்குழாயினுள் சிறிதளவு அசெற்றிக் அமிலமும் சுத்தமான இரும்பு ஆணியொன்றும்.
B) பரிசோதனைக்குழாயினுள் சிறிதளவு சோடியமைதரொட்சைட்டும் சுத்தமான இரும்பு ஆணியொன்றும்.
C) பரிசோதனைக்குழாயினுள் சிறிதளவு நீரும் சுத்தமான இரும்பு ஆணியொன்றும்.
D) பரிசோதனைக்குழாயினுள் சிறிதளவு சோடியம் காபனேற்றும் சுத்தமான இரும்பு ஆணி ஒன்றும்.




ஒரே வேளையில் இடப்பட்டு அடைப்பானால் மூடப்பட்டுக் காற்றிறுக்கமாக அமைக்கப்பட்டது. ஏறத்தாழ ஒரு வாரகாலத்தின் பின் அவதானிக்கையில், எதில் அதிகளவில் துருப்பிடித்திருக்கக் காணப்படும்?
1) A இல் உள்ள இரும்பு ஆணியில். 2) B இல் உள்ள இரும்பு ஆணியில்.
3) C இல் உள்ள இரும்பு ஆணியில். 4) D இல் உள்ள இரும்பு ஆணியில்.

13. தூண்டல் கிடைக்கப்பெறும் திசையை நோக்கி ஏதேனும் தாவரப்பகுதி வளைகின்றதெனின் அவ்வசைவு,
1) முன்னிலை அசைவு என அழைக்கப்படுகின்றது.
2) இரசனை அசைவு என அழைக்கப்படுகின்றது.
3) திருப்ப அசைவு என அழைக்கப்படுகின்றது.
4) உறக்க அசைவு என அழைக்கப்படுகின்றது.


14. பொருளின் பருமனை ஒத்த, உண்மையான ஆனால், தலைகீழான விம்பமொன்றினை, பொருள் அமைந்துள்ள இடத்திலேயே பெற்றுக்கொள்வதற்காக, குழிவு ஆடியொன்றின் முன்னே சிறிய பொருளொன்றினை எவ்விடத்தில் வைத்தல் வேண்டும்?
1) குழிவு ஆடியின் குவியத்தில்.
2) குழிவு ஆடியின் வளைவு மையத்தில்.
3) குழிவு ஆடியின் குவியத்துக்கும் வளைவினாரைக்கும் இடையே சரி மத்தியில் உள்ள புள்ளியில்.
4) குழிவு ஆடியின் குவியத்துக்கும், குழிவு ஆடிக்கும் இடையே சரி மத்தியில் உள்ள புள்ளியில்.


15. நுளம்புகள் பெருகுவதைத் தடுப்பதற்காகப் பிரயோகிக்கப்படும் ஓர் உயிரியல் கட்டுப்பாட்டு முறை,
1) நுளம்புகள் பெருகக்கூடிய நீர்க்குட்டைகள் போன்றவற்றை மூடி நிரப்பிவிடுதல் ஆகும்.
2) நீர்நிலைகளில் நுளம்புக் குடம்பிகள் தங்கி வாழும் மீன்களை வளர்த்தல்.
3) கதிர் தொழிற்பாட்டு முறைகள் மூலம் ஆண் நுளம்புகளை மலடாக்கி விடுவித்தல் ஆகும்.
4) நுளம்புகள் பெருகக்கூடிய இடங்களில் நீர் மேற்பரப்பில் பூச்சி நாசினிகளைச் விசிறுதல் ஆகும்.

16. ஒரு குறிப்பிட்ட சேர்வை, நீராவியையும், மற்றுமொறு வாயுவையும் தோற்றுவித்தபடி வளியில் எரிகின்றது. இதற்கு ஏற்ப மேற்கொள்ளக்கூடிய மிகச் சிறந்த முடிவு யாது?
1) அச்சேர்வையில் காபனும் ஐதரசனும் அடங்கியுள்ளன என்பதாகும்.
2) அச்சேர்வையில் ஐதரசனும் ஒட்சிசனும் அடங்கியுள்ளன என்பதாகும்.
3) அச்சேர்வை ஓர் எரிபொருள் என்பதாகும்.
4) அச்சேர்வையில் ஐதரசன் அடங்கியுள்ளது என்பதாகும்.

17. P, Q எனும் இரு பாத்திரங்களுள் ஈரலிப்பான பஞ்சின் மீது முளைக்கும் வித்துக்கள் இடப்பட்டு P வளியிறுக்கமாக அடைக்கப்பட்டது. பரிசோதனை நடத்தப்பட்ட காலத்துள் பஞ்சின் ஈரலிப்பு பேணப்பட்டது. ஏறத்தாழ ஒரு வாரத்தின் பின்னர் அவதானிக்கக்கூடியது யாது?
1) P, Q ஆகிய இரண்டிலும் வித்துக்கள் நன்கு வளர்ச்சியடைந்திருக்கும்.
2) P, Q ஆகிய இரண்டிலும் வித்துக்கள் இறந்திருக்கும்.
3) P இல் வித்துக்கள் இறந்திருப்பதோடு Q இல் வித்துக்கள் நன்கு வளர்ச்சியடைந்திருக்கும்.
4) P இல் வித்துக்கள் நன்கு வளர்ச்சியடைந்திருப்பதோடு Q இல் வித்துக்கள் இறந்திருக்கும்.

18. அதிரும் வாள் அலகொன்றின் இடப்பெயர்ச்சியானது, நேரத்துக்கேற்ப வேறுபடும் வீதம் வரைபில் தரப்பட்டுள்ளது. அதன் வீச்சம், மீடிறன் ஆகிய இரண்டையும் அதிகரிப்பின், கிடைக்கப்பெறும் வரைபு எவ்வாறு அமையும்? (ஐந்து வரைபுகளதும் அச்சுக்கள் ஒரே அளவுத்திட்டப்படி வரையப்பட்டுள்ளதாக க் கொள்க. இடப்பெயர்ச்சி y அச்சிலும் நேரம் x அச்சிலும் தரப்பட்டுள்ளன)






19. நுரையீரற் சிற்றறையொன்றினுள் காணப்படும் வளிமண்டல ஒட்சிசன் எவ்வாறாக மயிர்த்துளைக் குழாய்களுள் காணப்படும் குருதிக்கு அனுப்பப்படுகின்றது?
1) உயிர்ப்பான கொண்டு செல்லல் மூலம். 2) பரவல் மூலம்
3) குருதி அமுக்கம் மூலம் 4) கனவளவு வேறுபாடு மூலம்.


20. சோடியம் காபனேற்றின் ($Na_2CO_3$) சார் மூலக்கூற்றுத் திணிவு 106 ஆகும். 0.5M சோடியம் காபனேற்றுக் கரைசலொன்றினைத் தயாரிக்கக்கூடிய திருத்தமான முறை, 53 கிராம் சோடியம் காபனேற்றை,
1) 500 மில்லி லீற்றர் நீரில் கரைத்தலாகும்.
2) கரைசலின் க்னவளவு 500 மில்லி லீற்றர் ஆகும் வண்ணம் நீரில் கரைத்தலாகும்.
3) 1000 மில்லி லீற்றர் நீரில் கரைத்தலாகும்.
4) கரைசலின் கனவளவு 1000 மில்லி லீற்றர் ஆகும் வண்ணம் நீரில் கரைத்தலாகும்.

21. சாதாரணமான ஓர் ஆணின் உடட்கலமொன்றின் கருவினுள் 22 நிறமூர்த்ச் சோடிகளுக்கு மேலதிகமாகப் பின்வருவனவற்றுள் யாது அடங்கியிருக்கும்?
1) x அல்லது y நிறமூர்த்தமொன்று. 2) x நிறமூர்த்தச் சோடியொன்று.
3) y நிறமூர்த்தச் சோடியொன்று. 4) ஒரு x நிறமூர்த்தமும் ஒரு y நிறமூர்த்தமும்

22. நீரினுள் அலையொன்று செல்லுகையில்,
1) நீர்த்துணிக்கைகளில் எவ்வித இயக்கமும் நிகழ்வதில்லை.
2) நீரும் அலையுடன் செல்லும்.
3) அலையானது சக்தியைக் கொண்டு செல்லுகின்றது.
4) நீர்த்துணிக்கைகள் செல்லுவதோ சக்தி கொண்டு செல்லப்படுவதோ நடைபெறுவதில்லை.


23. அங்கிகள் ஒரே இனத்தைச் சேர்கின்றமைக்கான காரணம், அவை,
1) ஒரே பிரதேசத்தில் ஒரே சூழலில் வாழ்கின்றமையால்.
2) ஒத்த போசணைத் தேவைகளைக் கொண்டிருத்தல்.
3) உயிர்த் தொழிற்பாடுகளுக்காக இடைத்தொடர்புகளைக் கொண்டிருத்தல்.
4) இடைப் பிறப்பாக்கம் மூலம் வளமான எச்சங்களைத் தோற்றுவிக்கக்கூடிய தன்மையைக் கொண்டிருத்தலாகும்.

24. ஒரு குறிப்பிட்ட வாயுவைச் சுண்ணாம்பு நீருக்கூடாகச் செலுத்த வேண்டியுள்ளது. அதற்கு மிகப் பொருத்தமான அமைப்பு யாது?
வாயு உட்புகும் திசையும் வெளியேறும் திசையும் அம்புக்குறிகளால் காட்டப்பட்டுள்ளன. கொதிகுழாயினுள் சுண்ணாம்பு நீர் இடப்பட்டுள்ளது.




25. கொதிநீர்க் கேத்தல் ஒன்றுடன் தொடுகையுற்ற கை அப்பால் இழுக்கப்படுவதானது தெறிவினைக்கான ஓர் உதாரணமாகும். அவ்வாறானதொரு தெறிவினைக்குரிய சரியான செயற்பாட்டுத் தொகுதியை ஒழுங்கு முறையாக கொண்டுள்ள விடை எது?
1) வாங்கி→ இடைநரம்புக் கலம்→ இயக்கு நரம்பு→ உணர்ச்சி நரம்பு→ விளைவு காட்டி.
2) வாங்கி→ உணர்ச்சி நரம்பு→ இடைநரம்புக் கலம்→ இயக்கு நரம்பு→ விளைவு காட்டி.
3) வாங்கி→ இயக்கு நரம்பு→ இடைநரம்புக் கலம்→ உணர்ச்சி நரம்பு→ விளைவு காட்டி.
4) வாங்கி→ உணர்ச்சி நரம்பு→ இயக்கு நரம்பு→ இடைநரம்புக் கலம்→ விளைவு காட்டி.

26. பின்வரும் சுற்றில் கலத்துக்கூடாக பாயும் ஓட்டம் யாது?
1) 2/3 A
2) 3/4 A
3) 3/2 A
4) 9/4 A




27. சுவாசம், தகனம், துருப்பிடித்தல் என்பன பின்வருவனவற்றுள் எவ்விதத்தில் ஒன்றையொன்று ஒத்துக் காணப்படுகின்றன?
1) இம்மூன்று தொழிற்பாடுகளுக்காகவும் ஒட்சிசன் விரயமாகின்றது.
2) இம்மூன்று தொழிற்பாடுகளுக்காகவும் நீர் தேவைப்படுகின்றது.
3) இம்மூன்று தொழிற்பாடுகளதும் விளைவுகள் ஒன்றையொன்று ஒத்தவை.
4) இம்மூன்று தொழிற்பாடுகளின் போதும் விளைவுகளுளொன்றாகக் காபனீரொட்சைட்டு வெளியேறுகின்றது.

28. ஐதரசன் குளோரைட்டினது பிணைப்புச்சக்தியானது, பின்வரும் எத்தாக்கத்தின் போது விடுவிக்கப்படும் சக்திக்குச் சமனானது?
1) $H_2$ (வாயு) + $Cl_2$ (வாயு)→ 2 HCl (வாயு)
2) $H_2$ (வாயு) + $Cl_2$ (வாயு)→ 2 HCl (திரவம்)
3) 1/2 $H_2$ (வாயு) + 1/2 $Cl_2$ (வாயு)→ HCl (வாயு)
4) 1/2 $H_2$ (வாயு) + 1/2 $Cl_2$ (வாயு)→ HCl (திரவம்)

29. ''உச்சி ஆட்சி'' எனும் தோற்றப்பாட்டைத் துணையாகக்கொண்டு,
1) சிறந்த புதர் வேலியொன்றினை ஆக்கிக்கொள்ளலாம்.
2) மிக உயரமான தாவரமொன்றினை ஆக்கிக்கொள்ளலாம்.
3) காய்த்தலை விரைவுபடுத்திக்கொள்ளலாம்.
4) பெருமளவுக்குத் தாய்த்தாவரத்தை ஒத்த சில தாவரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

30. மரக்குற்றியொன்று கிடைதளமொன்றில் ஓய்வில் வைக்கப்பட்டுள்ளது. இக்குற்றியின் மீது பூச்சியத்திலிருந்து படிப்படியாக அதிகரிக்கும் கிடைவிசை P ஆனது தொழிற்படுகின்றது. அப்போது, தளத்தின் மூலம் குற்றியின் மீது பிரயோகிக்கப்படும் உராய்வு விசையானது,
1) விசையின் திசையிலே தொழிற்படுவதோடு விசை அதிகரிக்கும் வரைக்கும் பருமனானது மாறாப் பெறுமானத்தைக் கொண்டிருக்கும்.
2) விசையின் திசையிலே தொழிற்படுவதோடு குற்றி வழுக்க ஆரம்பிக்கும் வரை பருமன் பூச்சியத்தில் இருந்து ஒரு குறிப்பிட்ட பெறுமானம் வரை படிப்படியாக வளர்ச்சியடையும்.
3) விசையின் திசைக்கு எதிர்திசையில் அமைவதோடு, விசை அதிகரிக்கும் வரை பருமன் மாறாப் பெறுமானத்தில் நிலவும்.
4) விசையின் திசைக்கு எதிர்திசையில் அமைவதோடு குற்றி வழுக்க ஆரம்பிக்கும் வரை பருமனானது பூச்சியத்தில் இருந்து ஒரு குறிப்பிட்ட பெறுமானம் வரை படிப்படியாக வளர்ச்சியடையும்.

31. முதலுற்பத்தியாக்கி எனக் கருதக்கூடியது எது?
1) உக்கிய மரக்குற்றியொன்றில் உள்ள காளான்கள்.
2) பூப்பாத்தியொன்றில் காணப்படும் பூச்சிகள்.
3) குளம் ஒன்றில் உள்ள தாமரை நாற்றுக்கள்.
4) காயம் ஒன்றிலுள்ள பக்றீரியாக்கள்.


32. முறையே மூலத்திறன் 1ஐயும், 2ஐயும் கொண்ட சோடியமைத்ரொட்சைட்டுக் கரைசல்கள் இரண்டின் 500 மில்லி லீற்றர் வீதம் ஒரு பாத்திரத்துள் இட்டுக் கலந்து பெற்ற கரைசலின் மூலத்திறன் எவ்வளவாக இருக்கும்?
1) 0.75 2) 1 3) 1.5 4) 3

(19 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

(18 ஆம் பக்கத் தொடர்ச்சி)

33. A, B எனும் இரு விலங்குகளின் உடல் வெப்பநிலை சூழல் வெப்ப நிலையுடன் மாறும் விதம் வரைபில் காட்டப்பட்டுள்ளது. இதற்கேற்ப,




1) A, B ஆகிய இரு விலங்குகளும் ஒரு சீர் வெப்பத்துக்குரியவை.
2) A, B ஆகிய இரு விலங்குகளும் மாறு வெப்ப நிலையுள்ளவை.
3) A ஒரு சீர் வெப்பத்துக்குரியது, B மாறு வெப்ப நிலையுள்ளது.
4) B ஒரு சீர் வெப்பத்துக்குரியது, A மாறு வெப்ப நிலையுள்ளது.

34. 1 தொடக்கம் 12 வரை இலக்கமிடப்பட்டுள்ள முகப்பைக் கொண்ட கடிகாரமொன்றின் நிமிட முள் 30cm நீளமுடையது. அந்நிமிட முள்ளின் கூர்முனை ஒரு நிமிடநேரத்துள் பயணஞ் செய்யும் தூரம் யாது? (ஆரை r ஐக் கொண்ட வட்டத்தின் சுற்றளவு $2\pi r$ ஆகும்.)
1) $\pi/60$ cm 2) $\pi$ cm 3) $15\pi$ cm 4) $60\pi$ cm

35. சிலந்தியின் வாழ்க்கை கோலம் பற்றிய விளக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்கு மிக ஏற்ற வழி வகை எது?
1) சிலந்தியொன்றினைச் செயலிழக்கச் செய்து வழுக்கியொன்றின் மீது ஏற்றி அவதானிக்கலாம்.
2) சிலந்தியொன்றினை ஆய்வுகூடத்தில் வைத்து அதன் நடத்தையை அவதானித்தல்.
3) சிலந்தி உள்ளடங்கும் கூட்டத்தைச் சேர்ந்த பல்வேறு விலங்குகளை அவதானித்தல்.
4) சிலந்தியை அதன் சூழலில் இருக்கையிலேயே அவதானித்தல்.

36. A எனும் மூலகத்தினது ஒட்சைட்டு சூத்திரம் $A_2O_3$ ஆயின், A இனது சல்பேற்றின் சூத்திரமாக அமைவதற்கான வாய்ப்பைப் பெருமளவுக்குக் கொண்டுள்ள சூத்திரம் பின்வருவனவற்றுள் எது?
1) $A_2SO_4$ 2) $ASO_4$ 3) $A_2(SO_4)_3$ 4) $A_3SO_4$

37. அங்கிகளிடையே காணப்படும் சில இயல்புகள் கீழே தரப்பட்டுள்ளன.
a) தோலில் மயிர்கள் காணப்படும்.
b) இதயம் நான்கு அறைகளைக் கொண்டிருக்கும்.
c) எச்சங்களைத் தோற்றுவித்தல்.
d) நுரையீரல்களால் சுவாசித்தல்.
மேற்படி இயல்புகளுள் முலையூட்டிகளுக்கு மாத்திரம் பொதுவான இயல்புகள் எவை?
1) a உம் b உம் மாத்திரம். 2) b உம் d உம் மாத்திரம்.
3) a உம் c உம் மாத்திரம். 4) c உம் d உம் மாத்திரம்.

38. ஒரு பூச்சி A எனும் புள்ளியிலிருந்து தனது பயணத்தை ஆரம்பித்து, 7cm ஆரையைக் கொண்ட வட்டவடிவப்பாதையின் வழியே மீண்டும் புள்ளி A ஐ அடைகின்றது. மேற்படி இயக்கத்தின் போது பூச்சி பயணம்செய்த தூரம், அதன் இடப்பெயர்ச்சியின் பருமன் என்பன தசம மீற்றர்களில் முறையே,
1) $2 \times 22/7 \times 7$ உம் 0 உம் ஆகும். 2) $2 \times 7$ உம் 0 உம் ஆகும்.
3) $2 \times 22/7 \times 7$ உம் $2 \times 7$ உம் ஆகும். 4) 0 உம் $2 \times 7$ உம் ஆகும்.

39. ஆய்வுகூடத்தில் 1g - 100g வரையிலான நிறைகளைக் கிட்டிய கிராம் வரை திருத்தமாக நிறுக்கவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அதற்காக பயன்படுத்தக்கூடிய நிறைப்பெட்டியொன்றில் உள்ளடக்குவதற்கு மிகவும் ஏற்ற நிறை தொகுதி பின்வருவனவற்றுள் எது?
1) 1g, 3g, 9g, 27g, 81g.
2) 1g, 2g, 5g, 10g, 20g, 50g, 100g.
3) 1g, 2g, 2g, 5g, 10g, 20g, 20g, 50g, 100g.
4) 1g, 2g, 2g, 5g, 10g, 20g, 20g, 50g, 100g, 200g, 200g, 500g, 1000g.

40. ''மிதிபலகையில் செல்வது தடை'' எனும் ஓர் அறிவித்தல் பஸ் வண்டியொன்றில் ஒட்டப்பட்டிருந்தது. அறிவிப்பாளர் அவ்வறிவித்தல் மூலம் பயணிகளுக்கு எதனை அறிவிக்க முயற்சி செய்துள்ளார்?
1) பஸ் வண்டி நிறுத்தப்பட்டிருக்கையில், அதில் ஏறுவோரும் இறங்குவோரும் மிதிபலகையில் செல்வது தடை என்பதாகும்.
2) பஸ் வண்டி பயணத்தில் ஈடுபட்டிருக்கையில், மிதிபலகையில் அங்குமிங்கும் செல்வது தடை என்பதாகும்.
3) பஸ் வண்டி பயணத்தில் ஈடுபட்டிருக்கையில், மிதிபலகையின் மீது அங்குமிங்கும் செல்லாது அதில் நின்றிருத்தலில் தடையேது மில்லை என்பதாகும்.
4) பஸ் வண்டி பயணத்தில் ஈடுபட்டிருக்கையில், மிதிபலகையில் நின்றிருப்போரும், அதில் பயணஞ் செய்கின்றவர்களாதலால், அவ்வாறு நின்றிருத்தல் தடை என்பதாகும்.

## விஞ்ஞானம் II — 3 மணித்தியாலங்கள்

### பகுதி A


01. உணவில் இருக்கும் முக்கிய போசணைப் பொருள்கள் A,B,C,D என்னும் உணவுப் பதார்த்தங்களின் 100 கிராமில் உள்ள அளவு கீழே தரப்படுகிறது.

| உணவுப்பதார்த்தம் | காபோவைதரேற்று | புரதம் | இலிப்பிட்டு |
|---|---|---|---|
| A | 7.0 | 4.0 | 40.0 |
| B | - | 19.0 | 7.0 |
| C | 78.0 | 7.0 | 1.0 |
| D | 53.0 | 22.0 | 1.0 |

1) இவ்வுணவுப் பதார்த்தங்களிடையே உயர் அளவில் காபோவைதரேற்று, புரதம், இலிப்பிட்டு கொண்ட உணவைத் தெரிக.
2) அட்டவணையில் உள்ள உணவு அரிசி, தேங்காய், பயறு, இறைச்சி ஆகும். A, B, C, D மூலம் குறிக்கப்பட்டுள்ள உணவைத் தெரிவுசெய்க.
3) ஒருவேளை உணவில் பழங்கள் இருத்தல் முக்கியம் என்பது போசணை விஞ்ஞானிகளின் கருத்தாகும். இதற்கு இரு காரணங்களை எழுதுக.
4) காபோவைதரேற்று உணவில் ஐதரசனும் ஒட்சிசனும் எவ்விகிதத்தில் அமைந்துள்ளன எனக் கூறுக.
5) மனித உடல் கலத்தில் குளுக்கோசு ஒட்சியேற்றப்படுகிறது.
அ. குளுக்கோசு ஒட்சியேற்றத்திற்கான இரசாயனச் சமன்பாட்டைத் தருக.
ஆ. 18g குளுக்கோசு ஒட்சியேற்றப்பட்டு பெறக்கூடிய காபனீரொட்சைட்டு வாயுவின் திணிவைக் காண்க. (H=1, C=12, O=16)
இ. குளுக்கோசு எத்தகைய இரசாயனப் பிணைப்பு?
ஈ. நீர் குறிப்பிடும் பிணைப்பின் சிறப்பியல்புகள் மூன்று தருக.
6) ஒருவர் உட்கொள்ளும் இலிப்பிட்டு உணவு உடலின் எப்பகுதியில் சமிபாடடைகிறது?
7) இச்சமிபாட்டின் தாக்கத்தை எழுதுக.

02. நேர்கோட்டில் இயங்கும் துணிக்கை ஒன்று t செக்கன் ஆர்முடுகலுடன் (a) இயங்குவதன் மூலம் u மீற்/செ வேகத்தில் இருந்து v மீற்/செ வேகத்தை அடைகிறது.
1) மேற்குறிப்பிட்ட இயக்கத்தில் துணிக்கையின் ஆர்முடுகலுக்கான கோவையைப் பெறுக.
2) மேற்குறிப்பிட்ட இயக்கத்திற்கான வேக-நேரத் தொடர்பை வரைபில் காட்டுக.
3) மேற்படி வரைபைப் பயன்படுத்தி துணிக்கை குறித்த நேரத்தில் இயங்கிய தூரத்தைக் (s) காண்பதற்கான கோவையைப் பெறுக.
4) மேற்படி இயக்கத்தில் u,v,a,s ஆகிய பெறுமானங்கள் மட்டும் கொண்ட கோவையைப் பெறுக.
5) மேற்படி துணிக்கையின் இயக்கத்தில் இடப்பெயர்ச்சி நேரத்திற்கான தொடர்பை பருமட்டான வரைபில் காட்டுக.
6) மலையுச்சியை நோக்கி வாகனம் ஒன்று பயணித்தபோது அதன் வேகம் $5ms^{-1}$ ஆகும். அது பள்ளத்தை நோக்கி $3ms^{-2}$ எனும் ஆர்முடுகலில் 5 செக்கன்கள் பயணம் செய்தது.
அ. அதன் இறுதி வேகம் எவ்வளவு?
ஆ. அது பயணம் செய்த தூரத்தைக் காண்க.

03. தீ உருவாவதற்குத் தேவையான காரணிகளைக் காட்டும் உரு அருகில் தரப்பட்டுள்ளது.




1) அருகில் உள்ள உருவைப் பெயரிடுக.
2) இதில் X, Y, Z என்பன எவற்றைக் குறிக்கும்?
3) தீயை அணைப்பதற்கான அடிப்படை வழிகள் இரண்டையும் தருக.
4) விறகு அடுப்புச் சுவாலை, திரவ எரிவாயு அடுப்புச் சுவாலை ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாடுகள் யாவை? அதற்கான காரணங்கள் யாவை?
5) சோடா அமிலத் தீயணைப்பானில் இரசாயனப் பொருட்களுக்கிடையேயான தாக்கத்தைத் தருக.
6) ''ஹலோன்'' என்னும் சேர்வையில் காணப்படுபவை யாவை?
7) ஆய்வுகூடத்தில் சோடியத்துண்டு ஒன்று தீப்பற்றத்தொடங்கினால் அதனை எவ்வாறு கட்டுப்படுத்துவீர்?

04. தாவரங்களில் இருந்து மருந்துகள், இரசாயனங்களைத் தயாரித்தல் போன்ற செயற்பாடுகளின் பொருட்டு வரலாற்றுக் காலங்களில் இருந்தே மனிதன் உயிரியல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி வந்துள்ளான்.
1) உயிர்த் தொழில்நுட்பம் என்பதனை விளக்குக.
2) கற்றலை இலகுவாக்கும் பொருட்டு உயிரியல் தொழில்நுட்பம் பிரிக்கப்பட்டுள்ள இரண்டு துறைகளைப் பெயரிடுக.
3) அ. மதுவத்தின் தொழிற்பாட்டின் மூலம் உற்பத்தியாகும் இரு பொருட்களைப் பெயரிடுக.
ஆ. மதுவத்தின் தொழிற்பாடு எவ்வாறு அழைக்கப்படுகிறது?
இ. இச்செயற்பாட்டிற்கான இரசாயனத் தாக்கத்தை எழுதுக.
4) அ. சணல் தாவரத்தின் வேர்சிறுகணுக்களில் உள்ள நுண்ணங்கிகளைப் பெயரிடுக.
ஆ. நீர் குறிப்பிடும் நுண்ணங்கியின் பயன்பாட்டைத் தருக.
5) அண்மைக் காலங்களில் நிலத்திற்கு இரசாயனப் பசளை இடுவது குறைக்கப்பட்டுவருகிறது. இதற்கான மூன்று காரணங்கள் தருக.
6) தாவரங்களுக்கின்றி கைத்தொழில் ரீதியில் நுண்ணங்கிகளின் பயன்பாடு இரண்டு தருக.
7) நீரிழிவு நோயாளர்களுக்கு வழங்கப்படும் இன்சுலின் தற்போது எவ்வாறு உற்பத்தி செய்யப்படுகிறது என விளக்குக.

### பகுதி B

(இப்பகுதியில் உயிரியல், இரசாயனவியல், பௌதிகவியல் பகுதிகளில் இருந்து ஒவ்வொரு வினாக்களுக்கு விடை தருக.)

#### உயிரியல

05. தாவரம் ஒன்றின் முக்கிய பகுதிகளைப் படம் காட்டுகிறது.




1) தாவரம் வேரின் மூலம் பெற்றுக்கொள்ளும் பதார்த்தங்கள் எவை? இவற்றை எம்முறையில் பெற்றுக்கொள்கின்றது என விளக்குக.
2) வெட்டுத்தண்டு மூலம் நவீன முறையில் தாவரம் உருவாக்கப்படுவதன் முக்கிய படிகளை விளக்குக.
3) அ. இலையில் தொகுக்கப்படும் பிரதான உணவுவகை எது? இவ்வுணவு எவ்வடிவில் இலையில் சேமிக்கப்பட்டிருக்கும்?
ஆ. நீர் குறிப்பிட்ட சேமிப்பு இலையில் இருப்பதை எவ்வாறு காட்டுவீர்?
4) தாவரங்கள் பூக்கள் மூலம் நிகழ்த்தும் இனப்பெருக்கத்தைப் பெயரிடுக. இம்முறை தண்டின் மூலம் நிகழும் இனப்பெருக்கத்தில் இருந்து எவ்வாறு வேறுபடுகிறது?
5) பூ ஒன்றில் இருந்து வித்துக்கள் தோன்றும்போது நிகழ்பவற்றை ஒழுங்காகத் தருக.
6) வித்து ஒன்று முளைத்தலில் நிகழ்பவற்றை ஒழுங்காகத் தருக.
7) தாவர இனப்பெருக்கத்தில் செயற்கை ஒட்சின்கள் மூலம் பெறப்படும் மூன்று பயன்களைத் தருக.

06. மனித உடற்றொகுதிகளைக் காட்டும் விளக்கப்படம் தரப்பட்டுள்ளது.



1) அ. A, B, C, D பகுதிகளைப் பெயரிடுக.
ஆ. A, B, C பகுதிகளின் ஒவ்வொரு தொழில் தருக.
இ. பகுதி D இன் குறுக்குவெட்டுத் தோற்றத்தை வரைந்து பெயரிடுக.
2) அ. P, Q, R பகுதிகளைப் பெயரிடுக.
ஆ. P, Q ஆகிய பகுதிகள் கொண்டுள்ள வேறுபாடுகளைத் தருக.
இ. பகுதி R இன் தொழிற்பாட்டை விளக்குக.
3) அ. பகுதி V தொழிற்பாட்டிற்குக் கொண்டுள்ள சிறப்புகள் எவை? இங்கு நிகழும் சமிபாட்டுத் தாக்கத்தைத் தருக.
ஆ. பகுதி W இல் காணப்படும் நொதியங்களைப் பெயரிடுக.
இ. பகுதி X இல் காணப்படும் அகஞ்சுரக்கும் பகுதி எது? இதன் மூலம் சுரக்கப்படும் சுரப்புக்களைப் பெயரிட்டு அவற்றின் தொழிற்பாட்டை விளக்குக.

#### இரசாயனவியல்

07. மூலகங்கள் தொடர்பான ஆவர்த்தனப் பாகுபாட்டின் ஒரு பகுதி தரப்பட்டுள்ளது.


| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| P | | | | | | | |
| | | W | S | | | Q | Y |
| X | | | | | | R | |

1) ஆவர்த்தனப் பாகுபாட்டின் தேவை என்ன? இதன் மூலம் அறியக்கூடிய ஏதாவது மூன்று விடயங்களைத் தருக.
2) மூலகம் X இன் இலத்திரன் அமைப்பை வரைக. இவ்வமைப்பு ஆவர்த்தனப் பாகுபாட்டுடன் தொடர்புகொண்டுள்ள முறையை விளக்குக.
3) மூலகங்கள் W, S, X என்பவற்றை அவற்றின் அணு ஆரைக்கு அமைய இறங்குவரிசைப்படுத்தி எழுதுக.
4) மூலகம் R உம், X உம் ஆக்கும் சேர்வையின் சூத்திரத்தை அயன் சமன்பாடு எழுதுவதன் மூலம் அறிக.
5) மூலகம் Q, R இல் தாக்குதிறன் கூடியது எது? உமது விடைக்குக் காரணம் தருக.
6) தரப்பட்டவற்றுள் விழுமிய வாயு எது? இத்தன்மைக்கான காரணத்தை விளக்குக.
7) மூலகம் S ஐ இனங்கண்டு பெயரிடுக. இதன் சிறப்பான பயன்கள் மூன்று தருக.

08. 1) பின்வரும் தாக்கங்களுக்கான பூர்த்திசெய்யப்பட்ட இரசாயனச் சமன்பாட்டை எழுதுக.
அ. கொண்டிஸை வெப்பமேற்றல்.
ஆ. ஈயநைத்திரேற்றின் பிரிகைத் தாக்கம்.
இ. சோடியம் இருகாபனேற்றின் பிரிகைத் தாக்கம்.
2) அ. வோல்ற்றா மின்கலம் ஒன்றில் அனோட்டு, கதோட்டு முனைகளைப் பெயரிடுக.
ஆ. இதில் அனோட்டு, கதோட்டில் நிகழும் இரசாயனத் தாக்கத்தை எழுதுக.
3) அ. உலர் மின்கலம் ஒன்றின் அமைப்பை வரைந்து பெயரிடுக.
ஆ. முனைவாக்கம் என்பதனை விளக்கி, உலர்மின் கலத்தில் எவ்வாறு தடுக்கப்படுகிறது எனக் கூறுக.
4) அ. நைப் மின்கலம் யாரால் கண்டுபிடிக்கப்பட்டது?
ஆ. நைப் மின்கலப் பாவனை அதிகரிப்பதற்கான காரணம் யாது?
5) ஐதான சல்பூரிக் அமிலத்தை காபன் மின்வாய் கொண்டு மின்பகுப்புச் செய்வதில் சம்பந்தப்பட்ட இரசாயனத் தாக்கங்களை எழுதுக.


#### பௌதிகவியல்

09. மாணவர் குழு ஒன்றினால் அமைக்கப்பட்ட மின்சுற்றின் வரிப்படம் இங்கு தரப்பட்டுள்ளது.




1) அ. இங்கு பயன்படுத்தப்படும் மின்னோட்ட வகை யாது?
ஆ. மின்குமிழ்கள் A, C, D சுற்றில் எவ்வாறு இணைக்கப்பட்டுள்ளன?
2) அ. மின்குமிழ்களில் எது பழுதடைந்தால் அனைத்து மின்குமிழ்களும் ஒளிராது?
ஆ. மின்குமிழ் B ஒளிர்வதைக் கட்டுப்படுத்த ஆளி எவ்வாறு பொருத்துவீர் எனக் காட்டுக.
இ. சுற்றின் மொத்தத் தடையைக் காண்க.
3) அம்பியர்மானி காட்டும் வாசிப்பு யாது?
4) மின்குமிழ் B இனூடாகச் செல்லும் மின்னோட்டத்தை அளவிடுவதற்கு அம்பியர்மானியையும், மின்னழுத்த வேறுபாட்டை அளவிடுவதற்கு வோல்ற்றுமானியையும் எவ்வாறு இணைப்பீர் எனக் காட்டுக. (நேர், மறை குறி விடயங்கள் குறிக்கப்படல்வேண்டும்)
5) மின்குமிழ் A யின் மின்னழுத்த வேறுபாட்டைக் காண்க.
6) இங்கு நீர் பயன்படுத்தும் விதியைக் குறிப்பிட்டு விளக்குக.

10. பேருந்து ஒன்றின் இயக்கத்திற்கான வேக-நேர வரைபு தரப்பட்டுள்ளது.




1) முதல் இரண்டு செக்கனிலும் பேருந்தின் இயக்கத்தை விவரிக்குக.
2) தடுப்பு பிரயோகிக்க முன் பேருந்தின் வேகம் எவ்வளவு?
3) தடுப்பு பிரயோகத்தினால் அப்பேருந்து ஓய்வுநிலையை அடைந்ததா?
4) தடுப்பு பிரயோகத்தினால் ஏற்பட்ட அமர்முடுகலைக் கணிக்குக.
5) ஆர்முடுகலுடன் இயங்கிய நேரப்பகுதியில் அப்பேருந்து எவ்வளவு தூரம் சென்றது?
6) பேருந்தின் உச்சவேகம் யாது?
7) இயக்கத்தின்போது ஆர்முடுகலுடன் இயங்கிய நேர ஆயிடையைத் தருக. ஆர்முடுகலின் பருமனைக் காண்க.
8) பேருந்தின் திணிவு 1,000 kg எனின், ஆர்முடுகலின்போது பேருந்தில் செயற்பட்ட விசையைக் கணிக்குக.
9) தடுப்பை பிரயோகித்தபோது தடுப்பு மிதியில் இருந்து தடுப்பு வரை எவ்வூடகத்தின் மூலமாக விசை கடத்தப்பட்டது?

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான புறோயிலர் குஞ்சுகள் 04.12.2010 விநியோகிக்கப்படும். விலை 90/= மட்டுமே. இறைச்சிக் கோழிகள் கொள்வனவு செய்யப்படும்.

ராஜீவ், நாவலி வீதி, ஆனைக்கோட்டை.

T.P-0776090926

## கோழிக் குஞ்சு விநியோகம்

தரமான புறோயிலர் No-1 கோழிக்குஞ்சுகள் யாழ்ப்பாணத்தில் விநியோகிக்க இருக்கின்றன. (Nelna Farm) மிகக் குறைந்த விலையில் நம்பிக்கையாகப் பெற்றிட நாம் வேண்டிய இடம் இலங்கையின் தலைசிறந்த விநியோகஸ்தர்கள்

**(Mafa Farm House)**

தொடர்புகளுக்கு

0773657008, 0773760445.

மொத்த வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவு உண்டு. ஆகக் கூடிய சில்லறை விலை 110/ உடன் தொடர்புகொள்ளவும்.

(106512)


## ජාතික සම්පත

ஜாதிக சம்பத Jathika Sampatha

சீட்டிழுப்பு இலக்கம் - 78
திகதி - 01.12.2010

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து: **E** அதிர்ஷ்ட இலக்கம்: **01** வெற்றி இலக்கம்: **1 5 3 2 1**

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | எழுத்து | அதிர்ஷ்ட இலக்கம் | | | | | | தொகை | பரிசு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | E | 01 | 1 | 5 | 3 | 2 | 1 | ரூ. 23,635,108.00 | - |
| 1 பரிசு | | 01 | 1 | 5 | 3 | 2 | 1 | ரூ. 2,000,000.00 | 01 |
| 2 பரிசு | | | 1 | 5 | 3 | 2 | 1 | ரூ. 100,000.00 | 02 |
| 3 பரிசு | | | | 5 | 3 | 2 | 1 | ரூ. 10,000.00 | 27 |
| 4 பரிசு | | | | | 3 | 2 | 1 | ரூ. 1,000.00 | 272 |
| 5 பரிசு | | | | | | 2 | 1 | ரூ. 50.00 | 2633 |
| 6 பரிசு | | | | | | | 1 | ரூ. 20.00 | 25522 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | எழுத்து | அதிர்ஷ்ட இலக்கம் | | | | | | தொகை | பரிசு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசு | | | 1 | 5 | 3 | 2 | | ரூ. 1,000.00 | 26 |
| 8 பரிசு | | | 1 | 5 | 3 | | | ரூ. 100.00 | 261 |
| 9 பரிசு | | | 1 | 5 | | | | ரூ. 50.00 | 2675 |
| 10 பரிசு | E | | | | | | | ரூ. 20.00 | 10355 |
| 11 பரிசு | E | 01 | | | | | | ரூ. 100.00 | 1189 |

**இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,895,940.00**

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ.5 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு
ரூ. 23,635,108.00

# சிறுகதைப் போட்டியில் தேசிய மட்டத்தில் முதலிடம்



யாழ்ப்பாணம், டிசெ.3

தேசிய மட்ட தமிழ்த்தினப் போட்டிகளில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலை மாணவி இரத்தினேஸ்வரன் பிரியங்கா பிரிவு 5 இற்கான சிறுகதைப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இவ்வருடம் நடத்தப்பட்ட தமிழ்த் தினப் போட்டியில் சிறுகதை ஆக்கப் போட்டியில் இவர் கோட்ட மட்டம், வலய மட்டம், மாவட்ட மட்டம், மாகாண மட்டம் ஆகியவற்றிலும் முதலிடத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ற)

# சைக்கிள் திருடியவர் நையப்புடைப்பு

யாழ்ப்பாணம், டிசெ.3

மானிப்பாய் சங்குவேலி பிரதேசத்தில் ஆசிரியர் ஒருவரின் வீட்டில் கடந்த செவ்வாய்க்கிழமை துவிச்சக்கர வண்டியைத் திருடிச் சென்ற இளைஞர் ஒருவரை அப்பிரதேச மக்கள் கையும் களவுமாகப் பிடித்து நையப்புடைத்துள்ளனர்.

வீட்டு வளவிற்குள் நின்ற துவிச்சக்கர வண்டியைச் சம்பந்தப்பட்ட இளைஞன் வெளியில் எடுத்துவரும்போது இதனை அவதானித்த ஒருசிலர் சந்தேகத்துடன் யாருடைய சைக்கிள் என விசாரித்தபோது இளைஞன்தான் திருடியதை ஒப்புக் கொண்டுள்ளார்.

இவ்வாறான திருட்டுச் சம்பவங்கள் பகலில் சங்குவேலி பிரதேசத்தில் அதிகரித்து வருகின்றன என தெரிவிக்கப்படுகின்றது. இரவு நேரங்களிலும் பயத்துடனே தூங்க வேண்டியுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (204 - 313)

## அனுமதி அட்டை வழங்கல்

கொக்குவில் இந்துக் கல்லூரியின் ஜி.சீ.ஈ. சாதாரணதர மாணவர்கள் அனைவருக்கும் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

பரீட்சைக்குத் தோற்றவுள்ள அனைத்து மாணவர்களும் தமது தேசிய அடையாள அட்டை அல்லது தபால் அடையாள அட்டையுடன் பாடசாலைக்குச் சமுகமளிக்குமாறு பாடசாலை அதிபர் ஏ.அகிலதாஸ் அறிவித்துள்ளார். (ற)

# சந்நிதியான் ஆச்சிரமத்தில் கலை நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ.3

தொண்டைமானாறு செல்வச் சந்நிதியான் ஆச்சிரமத்தில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கலை நிகழ்வு நடைபெறும். இக்கலை நிகழ்வு காரைநகர் கிழவன் காடு கலாமன்ற மாணவர்களால் நடத்தப்படவுள்ளது. (ற)

## ජයවිරු

ஜயவிரு JAYAVIRU

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 539
சீட்டிழுப்பு திகதி: 01.12.2010

வெற்றி எழுத்து: **W** வெற்றி இலக்கங்கள்: **10 36 46 67**

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றி பெற்ற தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்துடன் 4 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 13,115,551.20 | - |
| 1 பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 1,000,000/- | - |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 50,000/- | 12 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 2,000/- | 229 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் பொருந்தினால் | ரூ. 1,000/- | 442 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 100/- | 11010 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் பொருந்தினால் | ரூ. 40/- | 6354 |
| 7 பரிசு | 1 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20/- | 159106 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20/- | 25481 |

**இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்த தொகை ரூ. 6,546,900.00**

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி அவசர: 2470662, 2470663
தேவைக்கு: 4607000, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 13,649,024.80

## வரவு செலவுத்திட்டம்-2011

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையினால் 2011 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. 01.12.2010 முதல் 08.12.2010 வரை எமது பிரதேச சபை தலைமைக் காரியாலயத்தில் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

இந்த வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டினைப் பார்வையிட்டுத் தங்களது கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

செயலாளர்,
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி.

(சி/573323)



# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில்: 13.08.1932
விண்ணில்: 03.11.2010

## திருமதி பேரம்பலம் அன்னலட்சுமி

(ஓய்வுபெற்ற ஆசிரியை)

நாள்கள் முப்பத்தொன்று ஆனதுவோ
உங்கள் முகம் கண்டு
ஆறவில்லை நம் இதயம்
அன்பும் பாசமும் நிறைந்த
பொக்கிஷமாய் திகழ்ந்தீர்கள் நீங்கள்
நித்தம் புலம்புகின்றோம் நாமிங்கு
பாரினிலே பண்புயர் தெய்வமாகத் திகழ்ந்தீரே
பல்லாண்டு சென்றிடினும் மறவோமே தாயே!

மகன்:
கேதீஸ்வரன் (பிரான்ஸ்)

மகள்மார்:
ஜெகதீஸ்வரி (பிரான்ஸ்)
ஜோதீஸ்வரி (சங்கானை)
நிகிலாதீஸ்வரி (லண்டன்)

பேரப்பிள்ளைகள்:
துஸ்யன், இந்துஜன், சஞ்ஜித், சங்கவி } பிரான்ஸ்
சௌமினி, டஸ்மினி } சங்கானை
கீர்த்தினி - லண்டன்

மருமக்கள்:
சற்குணதேவி (பிரான்ஸ்),
சிவகுமாரன் (பிரான்ஸ்),
பாலபாஸ்கரன் (ஓமான்),
யோகநாதன் (லண்டன்).

பிளாக் வீதி, சங்கானை.

(சி-572700)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜயலத், கருணாரத்தின தேசத்துரோகிகள்; சட்டநடவடிக்கை எடுக்க கோருகிறார் அஸ்வர்

தோட்டத் தொழிலாளர்கள் தொடர்ந்தும் மண்வெட்டி, கூடைகளுடனும் கவ்வாத்துக் கத்தியுடனும் அடிமைகளாக வாழ விரும்பவில்லை. காணி உரிமையாளர்களாக, தோட்டச் சொந்தக்காரர்களாக மாறும் உரிமை எங்களுக்கு உண்டு எனப் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் முத்துசிவலிங்கம் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் மிகவும் ஆக்ரோஷமான முறையில் சூளுரைத்தார்.

பிரதி அமைச்சரின் ஆவேசம் உச்சக் கட்டத்தை அடைந்த போது எதிரணி உறுப்பினரின் மனைவிமாரைப் பற்றியும் சுட்டிக் காட்டிவிட்டார். இதனால் பிரதி அமைச்சருக்கு குறுக்கீடு செய்து கொண்டிருந்த எதிர்க்கட்சி உறுப்பினர் வாயடைத்துப்போனார்.

நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் பொருளாதார அபிவிருத்தி, வீடமைப்புப் பொது வசதிகள் நிர்மாணத்துறை, கைத்தொழில் தொழில் முயற்சிகள் ஆகிய அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக் கீடுகள் தொடர்பான குழுநிலை விவாதம் இடம்பெற்றது.

அமைச்சர்களான பஸில் ராஜபக்ஷ, விமல் வீரவன்ஸ, பிரதி அமைச்சர்களான முத்துசிவலிங்கம், லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன ஆகியோர் சபையில் இருந்து எதிரணியினரின் குற்றச்சாட்டுகளுக்கு உடனுக்குடன் பதில் அளித்துக் கொண்டே இருந்தனர்.

இந்த விவாதத்தில் பிரதி அமைச்சர் முத்துசிவலிங்கம் உரையாற்றிக் கொண்டிருந்த போது எதிரணி உறுப்பினர் ரங்கே பண்டார தலைமையிலான குழுவினரும் கூட்டணி உறுப்பினர்களும் அடிக்கடி இடைக்கேள்விகளை எழுப்பிக் கொண்டே இருந்தனர்.

கடந்த காலங்களில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் இருந்த காலத்தில் மலையக மக்களுக்கும், வடக்கு கிழக்கு மாகாண மக்களுக்கும் எதையுமே செய்யவில்லை. எங்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியிலேயே நாடு பாரிய அபிவிருத்தி அடைந்துள்ளது என்று குறிப்பிட்டார் முத்து சிவலிங்கம்.

அப்போது எதிரணி உறுப்பினரான ரங்கே பண்டார பிரதி அமைச்சர் சொல்வது எல்லாம் பொய், பொய் என்று கூறினார்.

ஐயா, நீங்கள் என்ன பேசுகின்றீர்கள் நீங்கள் பேசுவது தான் பொய். இங்கே ஒன்று பேசுகின்றீர்கள் வெளியே போய் வேறு எதையோ பேசுகின்றீர்கள். இன்றைக்கு இந்தப் பெண்டாட்டியிடமும் நாளை இன்னு மொரு பெண்டாட்டியிடமும் இருக்கின்றீர்கள். எந்தப் பெண்டாட்டியுடன் எப்போது எங்கே இருக்கின்றீர்கள் என்பது உங்களுக்கே தெரியாது. அரை குறையாக இரண்டொரு தமிழ் வார்த்தைகளை வைத்துக்கொண்டு ஏமாற்ற வேண்டாம் என்று போடு போட்டார் முத்துசிவலிங்கம்.

இதோடு நின்று விடவில்லை ஜனாதிபதி ஆட்சியில் தான், வடக்கு, கிழக்கு மாகாணத்தில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள்மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று கூறினார் முத்துசிவ லிங்கம்.

அப்போது சபையில் இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினரான சுமந்திரன் இது தவறு. அப்படி ஒன்றும் நடைபெறவில்லை என்றார்.

கௌரவ உறுப்பினர் அவர்களே, நீங்கள் இங்கே வந்து குந்திக்கொண்டு இல்லை, இல்லை என்று சொல்கின்றீர் கள். நான் நேரடியாகச் சென்று பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்தேன். நீங்கள் எப்போதும்

## சபையில் கேட்டவை

இல்லை, இல்லை என்று கூறித்தான் எல்லாவற்றையும் இல்லாமல் ஆக்கிவிட்டீர்கள். இனி மேல் இல்லாமல் போவதற்கு எதுவும் இல்லை.

இப்போதாவது உங்கள் போக்கை மாற்றிக் கொள்ளுங்கள். இப்பொழுது உங்கள் பேச்சில் சிறிது மாற்றம் காணப்பட்டுள்ளது. உங்களை நம்பிய மக்களின் வாழ்வாதாரத்தை மீண் டும் கட்டியெழுப்புவதற்காக வாவது அரசுடன் இணைந்து ஒத்துழைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. உங்களை மாற்றிக் கொள்ளுங்கள் என்று கூட்டணியினருக்கும் அழைப்பு விடுத்தார் முத்து.

**பொறுப்பை மறந்த எதிர்க்கட்சிகள்**

நேற்றைய விவாதத்தின் போது பேசுவதற்கும் பெயர் கொடுத்துவிட்டு பேச அழைத்த போது எதிர்க்கட்சி உறுப்பினர் கள் சபையில் இருக்கவில்லை. இதனால் எதிர்க்கட்சியினருக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தில் ஆளும் கட்சி உறுப்பினர்கள் பேச வேண்டியதாகி விட்டது.

**தவறைச் சுட்டிக்காட்டிய விஜயகலா**

யாழ். மாவட்ட ஐ.தே.கவின் எம்.பியான திருமதி விஜய கலா மகேஸ்வரன் பேசுவதற்கு அழைக்கப்பட்டார். அப்போது சபைக்குத் தலைமை தாங்கிய பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி 'விஜயலக்மி' என்று குறிப்பிட்டார்.

ஐயா, என்னுடைய பெயரை மாற்றவேண்டாம். என்னுடைய சரியான பெயர் 'விஜயகலா' இதனைத் திருத்திக் கொள்ள வேண்டும் எனச் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை சபையில் பேசுவதற்கு எனது பெயர் அழைக்கப்பட்டபோது சபையில் இல்லாமைக்கு வருத்தம் தெரிவித்துக் கொண்டார்.

**சபாநாயகரின் சாமர்த்தியம்**

நேற்று முன்தினம் விவாதத்தின் போது ஆளும் கட்சி உறுப்பினர்கள், எதிரணி உறுப்பினர்கள் பேசும் போதெல்லாம் அடிக்கடி இடையூறு செய்து கொண்டே இருந்தனர். எதிரணி உறுப்பினர்களும்தமும்கனைத்தவர்கள் அல்லர் என்று பதிலடி கொடுக்கத் தவறவில்லை.

ஐ.தே.கவின் எம்.பியான தயாசிறி விஜயசேகர உரையாற்றும்போது ஆளும் தரப்பினரின் கூச்சல் உச்சக் கட்டத்துக்கே போய்விட்டது.

ஜனாதிபதியின் நிவாரணங்கள், மானியங்கள் எல்லாம் தேர்தல் காலங்களில் மட்டும் தான். தேர்தலின்பின் எதுவும் கிடையாது. உங்களுடைய மஹிந்த சிந்தனையில் கூறியவற்றில் எத்தனை வாக்குறுதிகளை நிறைவேற்றி உள்ளீர்கள் என்றும் கேள்வி எழுப்பி னார் தயாசிறி.

**லப்டொப்பும் செல்போனும்**

அன்று நான் சபையில் செல்போன் உபயோகித்ததைப் பெரிய சர்ச்சையாக்கிவிட்டனர். இன்று அமைச்சரும் மற்றும் பலரும்வெப்சைட்டைப் பார்த்தபடி, லப்டொப்பை உபயோகித்துக் கொண்டு இருக்கின்றனர். ஆளுக்கு ஒரு நீதியா?. இவர் கள் மீது நடவடிக்கை எடுக்க முடியாதா என்றார் தயாசிறி ஜயசேகர.

**அஸ்வரின் ஒழுங்குப் பிரச்சினை**

வழமைபோல் ஏ.எச்.எம். அஸ்வர் எம்.பி. ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பினார். ஆனால் வழமையைவிட சற்று மாறுப்பட்டதாக இருந்தது. அதாவது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்ட ஒரு இயக்கம். இந்த இயக்கத்திற்கு ஆதரவாகவோ, நாட்டுப் பிரிவினைக்காகவோ குரல் கொடுப்பதும் பேசுவதும் தேசத்துரோகம்.

நமது ஜனாதிபதி லண்டன் ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில் உரையாற்றும்போது புலிகள் ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினரான டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனவும், மக்களால் நிராகரிக்கப்பட்ட விக்கிரமபாகு கருணாரட்ணவும் புலிகளுக்கு ஆதரவாகக் கலந்து கொண்டுள்ளனர்.

இலங்கையின் அரசமைப்பை ஏற்று சத்தியப்பிரமாணம் செய்துள்ள டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தன பிரிவினை வாதிகளுக்கு ஆதரவாகப் பேசிய தேசத் துரோகி. இவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என அஸ்வர் எம்.பி. கோரிக்கை ஒன்றை முன்வைத்தார்.

**ஜோசப் மைக்கலின் ஆட்சேபனை**

அப்போது எதிர்க்கட்சி உறுப்பினரான ஜோசப் மைக்கல் பெரேரா கடுமையான ஆட்சேபனையைக் கிளப்பினார். அதாவது அஸ்வர் எம்.பி. கூறிய விடயங்கள் அரச பத்திரிகை ஒன்றில் வந்த செய்தி. இதில் எவ்வளவு தூரம் உண்மை, பொய் என்று தீர்மானிக்க முடியாது.

என்றாலும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனவை அஸ்வர் எம்.பி. துரோகி என்று குறிப்பிட்டார். இதனை சபை பதிவேட்டில் இருந்து நீக்கவேண்டும் என தனது ஆட்சேபனையை முன்வைத்தார் ஜோசப் மைக்கல் பெரேரா.

இவ்விடயங்கள் தொடர்பாக சபாநாயகரின் கவனத்திற்கு சமர்ப்பிக்கப்படும் என சபைக்குத் தலைமை தாங்கிய பிரதி சபாநாயகர் அறிவித்தார்.

**அரியநேந்திரன் அபாய எச்சரிக்கை**

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்களான சுமந்திரன், அரியநேந்திரன் ஆகியோர் உரையாற்றினர்.

சுமந்திரன் எம்.பி. தமிழ்ப் பிரதேசங்களில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள், மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பாகவும் தெளிவாகச் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை அரியநேந்திரன் எம்.பி. சுட்டிக்காட்டிய விடயம் சபையில் அனைவரது கவனத்தையும் ஈர்த்தது.

முன்பு ஒருமுறை மட்டக்களப்பு கல்லடிப் பாலத்தின்கீழ் பெருந்தொகையான பாம்புகள் காணப்பட்டன.அப்போது வேடிக்கை பார்த்தோம். பெரிதாக கவனத்தில் எடுக்கவில்லை. ஆனால் இந்தச் சம்பவம் இடம்பெற்று மூன்று மாதங்களின் பின் ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்பட்டு பேரழிவு ஏற்பட்டது.

இதேபோன்று தற்போதும் கல்லடிப் பாலத்தின்கீழ் பெருந்தொகையான பாம்புகள் காணப்பட்டுள்ளன. இதனால் மீண்டும் ஒரு இயற்கை அனர்த்தம் ஏற்படுமோ என்ற அச்சமும் பீதியும் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது என அபாய எச்சரிக்கை ஒன்றை விடுத்தார். இவ்விடயம் தொடர்பாக கவனத்தில் கொள்ளப்படும் என அமைச்சர் பஸில் ராஜபக்ஷ உறுதியளித்தார்.

**ஹந்துன்நெத்தியின் பஸில் சிந்தனை**

இன்று மஹிந்த சிந்தனையை விட பஸில் சிந்தனைதான் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. நிதி அமைச்சை விட கூடுதலான நிதி, அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கே வழங்கப்பட்டுள்ளது. மலையக அபிவிருத்தி, வடக்கின் வசந்தம், கிழக்கின் உதயம், கிராம அபிவிருத்தி என நாட்டில் மேற் கொள்ளப்படும் சகல அபிவிருத்தித் திட்டங்களும் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவிடமே ஒப் படைக்கப்பட்டுள்ளன. எனவே 'பஸில் சிந்தனை' என்று கூறுவதே சிறப்பானது என்று ஜே.வி.பி. உறுப்பினரான சுனில் ஹந்துன் நெத்தி குறிப்பிட்டார்.

இதனால் அமைச்சர் மேர்வின் சில்வா பதற்றம் அடைந்து சத்தம்போட ஆரம்பித்துவிட்டார்.

அப்போது, அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு மக்கள் சேவைக்காக அமைச்சு வழங்கப்பட்டுள்ளது பொருத்தமானது. அதாவது ரூபவாஹினிக்குப் போய் அடி வாங்கினார். சமுர்த்தி அதிகாரியை மரத்தில் கட்டி வைக்கிறார். ஊடகவியலாளர்களின் கமராக்களைப் பறித்து உடைக்கின்றார். இது மேர்வின் சில்வாவின் மக்கள் சேவைகளில் சில என்று வாயடைக்கச் செய்தார் சுனில் ஹந்துன் நெத்தி.

**அமைச்சர் பஸிலின் பதில்**

எல்லோரும் என்னுடைய அமைச்சுக்கு கூடுதலான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது எனக் கூறுகின்றனர். இது தவறு, நாட்டின் அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட் டது. வடக்கு, கிழக்கு, மலையகம் உட்பட நாட்டின் அனைத்துப் பிரதேசங்களுக்கும் ஒதுக்கப்பட்டது.

இந்த நிதியானது அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், மாகாணசபைகள், பிரதேச சபைகள், கிராம சபைகள் மற்றும் மக்கள் சபைகள் ஊடாகவே செயற்படுத்தப்படும். நாட்டின் அனைத்துப் பிரதேசங்களும் பாரபட்சமன்றி அபிவிருத்தி செய்யப்படும் என அமைச்சர் பஸில் ராஜபக்ஷ அறிவித்தார். ✱

உதயன் சபைச் செய்தியாளர்
இரா.புத்திரசிகாமணி

# சிரேஷ்ட அமைச்சர்கள் பத்துப் பேருக்கும் அலுவலகமும் இல்லை; செயலாளரும் இல்லை

## திரிசங்கு நிலையில் அவர்கள்

லண்டன், டிசெ.03

சிரேஷ்ட அமைச்சர்களாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட பத்து அமைச்சர்களும் அலுவலகங்களோ அல்லது செயலாளர் மற்றும் உதவியாளர்களோ இல்லாதநிலையில்திரிசங்குசொர்க்கத்துக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

வரவு - செலவுத் திட்டத்தில் ஜனாதிபதியின் செயலகத்தின் கீழ் இந்தப் பத்து சிரேஷ்ட அமைச்சர்களையும் ஒரே அமைச்சாகக் கருதி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன் பத்து அமைச்சுக்களுக்கும் ஒரு செயலாளரே நியமிக்கப்பட்டுள்ளார். இதுவும் இந்த அமைச்சர்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சர்கள் நியமனத்தின் போது ஜனாதிபதி மூன்று பிரிவுகளாக அமைச்சர்களை நியமித்துள்ளார். சிரேஷ்ட அமைச்சர்கள், அமைச்சரவை அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் என்று மூன்று பிரிவுகளில் நிய மனம் வழங்கப்பட்டுள்ளதால் சிரேஷ்ட அமைச்சர்கள் அமைச்சரவையில் அங்கம் வகிக்கின்றார்களா? என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

அமைச்சரவைக் கூட்டத்துக்கு சிரேஷ்ட அமைச்சர்களில் யாருக்காவது அழைப் புக் கிடைத்தால் மட்டுமே அவர்கள் கலந்துகொள்ளலாம் என ஒரு அமைச்சர் தெரிவித்தாலும் இதுகுறித்து தெளிவற்ற நிலையே காணப்படுகிறது என சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

சிரேஷ்ட அமைச்சர்கள் தாம் சார்ந்த அமைச்சரவை அமைச்சருக்கு ஆலோசனை வழங்குவார். ஜனாதிபதி தமக்கு கீழுள்ள சில பொறுப்புகளை வழங்குவார் எனப் பிரதமர் டி.எம். ஜயரட்ன சமீபத்தில் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (சி)

# சபரீச ஐயப்பன் ஆலயத்தின் உற்சவம்

யாழ்ப்பாணம்.டிசெ 3

யாழ்.கோண்டாவில் சபரீச ஐயப்பன் ஆலயத்தில் நாகராஜ உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் பாற்குட பவனி நிகழ்வும் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(204-496)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திலகநாயகம் போலின் முதலாம் ஆண்டு நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ. 3

சங்கீத வித்துவான் திலகநாயகம் போலின் முதலாம் ஆண்டு நினைவு நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நல்லை ஆதீனத்தில் முன்னாள் பேராசிரியர் கலாநிதி ஜெபநேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் திருமதி குமுதா உமாகாந்தன், குணராசா நக்கீரன், திருமதி சுகன்யா அரவிந்தன், திருமதி வாசஸ்பதி ரஜிந்திரன் ஆகியோர் அணிசெய் கலைஞர்களுடன் வழங்கும் இசையாராதனை இடம்பெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து 'இசைத்தமிழின் தொன்மையும் திண்மையும்' எனும் நூல் வெளியீடு இடம்பெறும்.

கலாநிதி க.குணராசா நூலை வெளியிட்டு வைக்க முதற்பிரதியை முன்னாள் நீதிபதி மு.திருநாவுக்கரசு பெற்றுக்கொள்வார்.

வெளியீட்டுரையை முன்னாள் பேராயர் கலாநிதி ஜெபநேசனும் மதிப்புரையை த.றொபேட்டும் வழங்குவர்.

தொடர்ந்து திலகநாயகம் போல் பாடிய 'செந்தமிழ் செவ்விசை' இறுவட்டை யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் வெளியிட்டுவைக்க முதற்பிரதியை சோ.பத்மநாதன் பெற்றுக்கொள்வார். வெளியீட்டுரையை யாழ்.பல்கலை துணைவேந்தர் நிகழ்த்துவார். (ம-201)


கொக்குவில் தாவடி
வேம்படி முருகமூர்த்தி கோவில்

## குருக்கள் தேவை

மேற்படி ஆலயத்துக்கு குருக்கள் தேவை. கடிதம் மூலம் தொடர்பு கொள்ளவும். தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம் சு.மகேந்திரராசா, செயலாளர், கொக்குவில் - தாவடி வேம்படி முருகமூர்த்தி ஆலயம், பொன்னையா லேன், கொக்குவில் மேற்கு, கொக்குவில். வேதனம் நேரில் பேசிக்கொள்ளலாம். நிர்வாகம்



கோழி வளர்ப்பவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

நியாயமான விலையில் தரமான No. 01 Prima Broiler கோழிக் குஞ்சுகள் வழங்கப்பட்டு நியாயமான உத்தரவாதம் அளிக்கப்பட்ட விலையில் 100% சந்தைப்படுத்துவதற்கும் உத்தரவாதம் அளிக்கிறோம்.

தொடர்பு: நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்.
TP.NO - 021 222 6944


## துயர் பகிர்வு



புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்த


**அமரர் சிறிதரன் தணிஸ்வரன்**

அவர்களின் திடீர்மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா ஆயக்கடவை சித்திவிநாயகரின் திருவடிகளை சென்றடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆருயிர் நண்பர்கள்,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு.

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 03.08.1936
மறைவு: 22.11.2003

அமரர் **சின்னத்தம்பி தம்பிப்பிள்ளை**

திதி: 03.12.2010

ஆண்டுகள் ஏழு ஓடி
மறைந்திட்டாலும்
உங்கள் நினைவுகள்
எம் மனங்களை விட்டு
அகலவில்லை
உங்கள் ஆத்மா சாந்தியடைய
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தற்காலிக முகவரி:
சிவன்வீதி, உரும்பிராய் கிழக்கு.
நிரந்தர முகவரி:அச்செழு, நீர்வேலி. (106739)

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## ஐந்தாண்டு நினைவுப் பூக்கள்



மண்ணில்: 1941.04.02
விண்ணில்: 2005.11.29

அமரர்
**வினாசித்தம்பி உதயச்சந்திரன்**

திதி: திரயோதசி

குலவிளக்காய் மிளிர்ந்து ஏற்றம் பல ஈர்ந்து பொங்கும் அன்பால்
எமை வளர்த்த எமது அருமை உத்தம அப்பாவே
அவனியில் அவதரித்து நேசமுடன் வாழ்ந்து
பாசத்துடன் இன்சொல் பேசி
எமை அகம் மகிழ வைத்த குடும்ப தீபம்
அணைந்து ஐந்தாண்டுகள் சென்றாலும்
எம் மனதில் அன்பாக இருப்பீர் அப்பா
ஓம் சாந்தி!

74, பத்திரகாளி கோயிலடி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## திருநெல்வேலி பரவைக்குள வீதி சேதம்

யாழ்ப்பாணம் டிசெ. 3

திருநெல்வேலி பரவைக்குளம் வீதி மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. தற்போது பெய்துவரும் மழை காரணமாக வீதியில் வெள்ளம் தேங்கி நிற்பதுடன் சேறும் சகதியுமாகக் காணப்படுகின்றது.

இதனால் பாதசாரிகள் உட்பட துவிச்சக்கர வண்டியில் பயணிக்கும் மக்களும் வீதியில் விழுந்தெழும்பிச் செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது.

மேற்படி வீதியைப் புனரமைப்பதற்கான வேலைகள் இன்னமும் ஆரம்பிக்கப்படாதுள்ளது.

இனி வரும் காலப்பகுதி மழைக்காலம் என்பதால் புனரமைப்புப்பணிகள் உடன் சாத்தியப்படமாட்டாது எனவும் தொடர்ந்தும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியது தவிர வேறு மார்க்கம்இல்லை எனவும் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

(201 - 7)

### கமநல சேவை நிலையங்களுக்கு உத்தியோகத்தர்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 3

புலோலி கமநல சேவை நிலையத்திற்கும் கரவெட்டி கமநலச் சேவை நிலையத்திற்கும் பெரும்பாக பதில் உத்தியோகத்தர்களை கமநல சேவைத் திணைக்களம் நியமித்துள்ளது.

புலோலி கமநல சேவைநிலையத்திற்கு திருமதி. சிவகௌரி திருப்பதியும் கரவெட்டி கமநல சேவை நிலையத்திற்கு திருமதி விசாலாட்சி தனபாலசிங்கமும் பெரும்பாக பதில் உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். (201)

## துயர் பகிர்வு

எமது பாடசாலை ஆசிரியர் ஐ.ரமேஷ் அவர்களின்
அன்புத் தாய்

**திருமதி ஐயாத்துரை யோகராணி**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல பரம்பொருளை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

புத்தூர்

பாடசாலை நலன்புரிக் கழகம்
புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி.

## மரண அறிவித்தல்

**திருமதி சந்திரசேகரம் இராஜேஸ்வரி**



கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், உடையார் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரசேகரம் இராஜேஸ்வரி 01.12.2010 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முருகேசு முத்தம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், சந்திரசேகரம் அவர்களின் அன்பு மனைவியும், கேதீஸ்வரன் (ரவி), குணேஸ்வரன் (வவி),மங்களேஸ்வரன் (சூட்டி), விக்கினேஸ்வரன் (காஞ்சி), கணேஸ்வரன் (பாபுஜி), சசிகலா, விஜயகலா ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஆனந்தராசா (பிரதி அதிபர்,யாழ்.பெரியபுலம் ம.வி) தவராசா,வினோதினி, மஞ்சுளா, தர்ஸாயினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் கவின், சிவின், யஸ்மினிறோசி,தமி, மண்பிறோசி, கீர்த்தன், கீர்த்திகா, கீர்த்தனா, ஹரிசங்கர், சிவசங்கர், ஆருஜா, தருஜா, கிரிசன், அனுஷா, அபிஷா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.12.2010) வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் .

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உடையார் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (106795)

தகவல்:
குடும்பத்தினர்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**சஜீகரன் சியாமளா**



தாயின் மடியில் 08.10.1979
ஆண்டவன் அடியில் 14.12.2009

இன்ப வாழ்வில் இதயம் மகிழ
துன்பச் சுவடே தெரியாமல்
தூய உள்ளத்துடன் வாழ்ந்தாயே
உனது உடல்தான் மறைந்தது
உருவம் மறைய வில்லையே
- அம்மா!
நெஞ்சைவிட்டு நீங்காமல் என்றும்
உள்ளத்தில் நிறைந்துள்ளாய் சியா!

இந்த நாளில்
நினைவு கூர்ந்து உங்களது
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

தம்பியோடை,
வதிரி, கரவெட்டி.

தந்தையும்
குடும்பத்தினரும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாக். ஜனாதிபதியைக் கொல்ல இராணுவத் தளபதி சதித் திட்டம்

## விக்கிலீக்ஸ் தகவல்



இஸ்லாமாபாத், டிசெ.3

அமெரிக்க இணையத்தளமான விக்கிலீக்ஸ் அமெரிக்க தூதரகங்கள் தொடர்பான இரண்டரை இலட்சம் இரகசியங்களை வெளியிட்டுள்ளது.

ஒவ்வொரு நாட்டிலுள்ள அமெரிக்கத் தூதரகங்களும் அமெரிக்காவுக்கு அனுப்பும் இரகசியங்களை இந்த நிறுவனம் சேகரித்து வெளியிட்டுள்ளது. அதில் பாகிஸ்தான் தொடர்பான ஏராளமான இரகசியங்களும் உள்ளன.

பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரியை இராணுவ புரட்சி மூலம் கொன்று விட்டு வேறு ஒருவரை ஜனாதிபதியாக்க இராணுவத் தளபதி கியானி சதித் திட்டம் தீட்டியிருக்கிறார் என ஒரு தகவல் தெரிவிக்கிறது.

கியானி தன்னை கொல்ல வாய்ப்பு இருக்கிறது என சர்தாரியும் கருதியிருக்கிறார். எனவே தான் கொல்லப்பட்டால் அதற்குப் பதிலாக தனது சகோதரி பர்யால் தல்புர் ஜனாதிபதியாகவேண்டும் என்று கருதியிருக்கிறார்.

இதுபற்றி சர்தாரி தனது புதல்வர் பில்வாலிடம் விவாதித்துள்ளார். பர்யால் தல்புரை ஜனாதிபதியாக்கும்படி பில்வாலிடம் அவர் கூறியுள்ளார்.

இராணுவத் தளபதி கியானி, சர்தாரி ஜனாதிபதியாக இருப்பது பிடிக்கவில்லை என்று அமெரிக்கத் தூதர் அன்னி பீட்டர்சனிடம் கூறியிருக்கிறார்.

சர்தாரியோ அல்லது நவாஸ் ஷெரீப்போ ஜனாதிபதியாகவிருப்பதில் எனக்கு விருப்பம் இல்லை. அவாமி லீக் கட்சித் தலைவர் வாலிகான் ஜனாதிபதியாவதையே விரும்புகிறேன் என்றும் கூறியிருக்கிறார்.

## ஈரான் கால்பந்து வீரர் மனைவிக்கு தூக்கு

தெஹ்ரான் டிசெ.3

ஈரான் தேசிய கால்பந்து வீரர் நசீர் முகமது. இவருடைய மூத்த மனைவி ஷாகர் கைசன். 2ஆவது மனைவி ஷகாலா. 2002ஆம் ஆண்டு நசீர் முகமது கால்பந்து விளையாட ஜேர்மனி சென்றிருந்தார். அப்போது இரு மனைவிகளுக்குமிடையே தகராறு ஏற்பட்டது.

இதில் ஆத்திரமடைந்த ஷகாலா, ஷாகர்கைசனை கத்தியால் குத்திக் கொன்றார். இந்த வழக்கில் ஷகாலாவுக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. அவரை தூக்கில் போடக்கூடாது என சர்வதேச மனித உரிமை அமைப்புகள் குரல் கொடுத்தன. இதனால் 7 ஆண்டுகளாக தண்டனை நிறைவேற்றப்படாமல் இருந்தது. ஆனால் புதன்கிழமை அவருக்கு தூக்குத்தண்டனை நிறைவேற்றப்பட்டது. நசீர் முகமது முன்னிலையில் அவர் தூக்கில் போடப்பட்டார்.

தூக்குக் கயிறை கழுத்தில் மாட்டி ஷகாலா நாற்காலியில் நின்றிருந்தார். கொலையுண்ட ஷாகர் கைசனின் சகோதரர் அந்த நாற்காலியை தள்ளிவிட்டு தண்டனையை நிறைவேற்றினார்.

# தென்கொரியாவை மீண்டும் தாக்க வடகொரியா திட்டம்

சியோல், டிசெ.3

தென்கொரியாவிலுள்ள யான்பியாங் தீவு மீது வடகொரியா கடந்த 23ஆம் திகதி பீரங்கித் தாக்குதல் நடத்தியது. இதில் 4 பேர் கொல்லப்பட்டனர்.

இதையடுத்து 2 நாடுகளுக்குமிடையே போர் ஏற்படும் சூழ்நிலை ஏற்பட்டது. இதனால் பதற்றம் உருவானது. தென்கொரியாவுக்கு உதவும் வகையில் அமெரிக்கா ஜோர்ஜ் வாஷிங்டன் விமானம் தாங்கி போர்க் கப்பலை அனுப்பி வைத்தது.

இதைத் தொடர்ந்து வடகொரியாவை மிரட்டும் வகையில் தென்கொரியாவும் அமெரிக்காவும் 4 நாட்கள் கூட்டுப் போர் பயிற்சியில் ஈடுபட்டன. வடகொரியா எதிர்ப்பையும் மீறி இந்தப் போர்ப் பயிற்சி நடந்தது.

இந்த நிலையில் தென்கொரியா மீது வடகொரியா மீண்டும் தாக்குதல் நடத்தத் தயாராகி வருகிறது என தென்கொரிய உளவு நிறுவனத் தலைவர் வோன்சிகூம் தெரிவித்துள்ளார்.

தென்கொரிய இராணுவ அமைச்சர் கிம் தேயும் இதே கருத்தைக் கூறியிருக்கிறார்.

வட கொரியா ஜனாதிபதியாக கிம் ஜாங் இருந்து வருகிறார். இவருக்கு அதிக வயதாகிவிட்டது. எனவே தனது புதல்வரை ஜனாதிபதியாக்க முயற்சித்து வருகிறார். இதற்கு மக்கள் ஆதரவைத் திரட்ட திட்டமிட்டுள்ளார்.

தென்கொரியா மீது தாக்குதல் நடத்தி பதற்றத்தை ஏற்படுத்தினால் மக்கள் தங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள் என்று கிம்ஜாங் கருதுகிறார். இதைப் பயன்படுத்தி புதல்வரை ஜனாதிபதியாக்கி விடலாம் என்று அவர் கருதுகிறார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அப்படி ஏதேனும் தாக்குதல் நடத்தினால் அதற்குப் பதிலடி கொடுக்க தென்கொரியா முழு அளவில் தயாராகவுள்ளது. அதே நேரத்தில் வடகொரியாவை அமைதிபடுத்தும் முயற்சியில் நட்பு நாடானசீனா தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது.

# தென்கொரிய–அமெரிக்க இராணுவ ஒத்திகை முடிவு

சியோல், டிசெ. 3

வடகொரியாவின் அத்துமீறிய தாக்குதலுக்குப் பின்னர் மிகுந்த பதற்றத்துக்கிடையே நடந்த தென்கொரியா -அமெரிக்க கூட்டு இராணுவ ஒத்திகை முடிவுக்கு வந்தது.

வடகொரியாவில் கம்யூனிஸ ஆட்சி நடக்கிறது. அந்த நாடு சீனாவுக்கு மிகவும் நட்பு நாடாகும்.

சீன நாட்டின் தென் பகுதியிலுள்ள மஞ்சள் கடலில் தென்கொரியாவுக்குச் சொந்தமான தீவின் மீது வடகொரியா கடந்த வாரம் திடீரென ஏவுகணைத் தாக்குதல் நடத்தி 2 இராணுவச் சிப்பாய்களையும் 2 பொதுமக்களையும் கொன்றுவிட்டது.

தென்கொரிய இராணுவத் தலைமையும் வடகொரியாவுக்குப் பதிலடி கொடுக்கத் தயாரானது. ஏற்கனவே வடகொரியாவின் தாக்குதலை சமாளிக்க தென்கொரியா, ஜப்பான், அமெரிக்கா ஆகிய மூன்றும் வலுவான பதில் நடவடிக்கைக்குத் தயாராயின.

ஆனால் ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளில் இடம் பெற்றுள்ள ராஜீயத் தூதர்கள் தக்க நேரத்தில் தலையிட்டு தென்கொரியாவின் கோபத்தைத் தணித்துள்ளனர். இதனால் தென்கொரிய - அமெரிக்க 'போர்' ஒத்திகை முடிவுக்கு வந்தது.

உலக அரங்கில்



கொலம்பியா பகோடாவில் ஜனாதிபதி ஜுவான் மானுவல் சான்டோஸ் (இடமிருந்து இரண்டாவது), அதலெட்ஸ் ஒவ் த இயர்ஸ் நிகழ்ச்சியில் சான்பிரான்ஸிஸ்கோ பேஸ்பால் வீரர் எட்கர் ரென்டரியாவுடன் (வலமிருந்து இரண்டாவது), சேர்ந்து போஸ் கொடுத்த காட்சி.

# பாகிஸ்தான் பிரதமரின் பேரணியில் வெடிகுண்டு தாக்குதல் நடத்த சதி

## பொலிஸார் முறியடிப்பு; 2 பேர் கைது

இஸ்லாமாபாத், டிசெ. 3

பாகிஸ்தானின் ஆளும் கட்சியான பாகிஸ்தான் மக்கள் கட்சி ஆரம்பிக்கப்பட்ட 44ஆவது ஆண்டு விழா, சிந்து மாநிலத்தில் சுக்கூர் மாவட்டத்தில் நடந்தது.

இந்த விழாவையொட்டி பேரணி நடத்தப்பட்டது. இதில் பிரதமர் கிலானி கலந்துகொண்டு பேசினார். இந்த விழாவின்போது வெடிகுண்டு தாக்குதல் நடத்த சதித் திட்டம் தீட்டப்பட்டிருந்தது.

இதுபற்றிய தகவல் பாகிஸ்தான் பொலிஸாருக்குக் கிடைத்தது. அவர்கள் இந்த சதியை முறியடித்தனர். பெஷாவர் நகரிலிருந்து வரும் அனைத்து வாகனங்களையும் மறித்து சோதனை நடத்தினார்கள்.

இந்தச் சோதனையின்போது ஒரு லொறியில் 12 எந்திரத் துப்பாக்கிகள் உள்ளிட்ட பெரும் ஆயுதங்கள் இருந்தன. 3 ஆயிரத்துக்கு மேற்பட்ட துப்பாக்கிக்குண்டுகளும் இருந்தன. அவற்றை எல்லாம் பொலிஸார் கைப்பற்றினர்.

இந்த லொறியில் பயணம் செய்த 2 தீவிரவாதிகளும் கைதானார்கள். அவர்களிடம் நடத்திய விசாரணையில் பிரதமர் கலந்துகொள்ளும் பேரணியில் வெடிகுண்டு தாக்குதல் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தமையைத் தெரிவித்தனர்.

அவர்களை கைது செய்ததன் மூலமும், வெடிபொருள்களை கைப்பற்றியதன் மூலமும் இந்த சதித் திட்டம் முறியடிக்கப்பட்டது.

# முஷாரப்பை அனுமதிக்கும்படி பாகிஸ்தானுக்கு ஐக்கிய அரபு எமிரேட் கடுமையான நெருக்குதல்

இஸ்லாமாபாத், டிசெ.3

பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி பர்வீஸ் முஷாரப் நாடு திரும்ப அனுமதிக்கும்படி பாகிஸ்தான் அரசுக்கு ஐக்கிய அரபு எமிரேட் எப்போதும் இல்லாத அளவுக்கு இப்போது நெருக்குதல் கொடுத்துவருகிறது.

இது தொடர்பான செய்தியை 'தி எக்ஸ்பிரஸ் டிரிபியூன்' என்னும் பத்திரிகை வெளியிட்டுள்ளது.பத்திரமாகவும், பாதுகாப்பாகவும் அதேநேரத்தில் எவ்வித மரியாதை குறைவுக்கும் உள்ளாகாமல் முஷாரப் சொந்த நாடு திரும்ப பாகிஸ்தான் அரசு வழி செய்யவேண்டும் என பாகிஸ்தானுக்கு ஐக்கிய அரபு எமிரேட் ஆட்சியாளர்கள் நெருக்குதல் கொடுத்து வருகின்றனர் என அந்தச் செய்தி தெரிவிக்கிறது.

பாகிஸ்தானிலுள்ள எல்லா கட்சிகளுடனும் எமிரேட் ஆட்சியாளர்கள் அதிக நெருக்கம் வைத்துள்ளனர் . முஷாரப் நாடு திரும்பினால் அவர் மீது வழக்குத் தொடர்ந்து பிரச்சினை தருவது, பொலிஸார் மூலமாக தொந்தரவு செய்வது ஆகியவை இருக்கக்கூடாது என இஸ்லாமாபாத்திடம் கேட்டுக்கொண்டுள்ள எமிரேட் ஆட்சியாளர்கள், முஷாரப் நாடு திரும்ப தேவையான அரசியல் சுமுக நிலையை ஏற்படுத்தும்படி கேட்டுக் கொண்டுள்ளனர் என அந்த செய்தி மேலும் தெரிவிக்கிறது.

2 ஆண்டு காலம் முஷாரப் தீவிர அரசியலில் ஈடுபடக்கூடாது என்னும் தடை முடிவுக்கு வந்ததும் முஷாரப் நாடு திரும்ப வழிசெய்யவேண்டும் என ஏற்கனவே ஐக்கிய அரபு எமிரேட்டுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே உடன்பாடு ஏற்பட்டுள்ளது என முக்கிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கப்பூரில் வலைப்பந்தாட்ட பயிற்சி முகாம்; யாழ்ப்பாணத்திலிருந்து இருவர் பங்கேற்பு

வலி.வடக்கு,டிசெ.3

யாழ். மாவட்ட விளையாட்டு அலுவலர், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டுத் துறை விரிவுரையாளர் ஆகியோர் எதிர்வரும் 6 ஆம் திகதி முதல் சிங்கப்பூரில் நடைபெறவுள்ள வலைப்பந்தாட்ட பயிற்சி முகாமில் கலந்து கொள்வதற்காக நாளை சிங்கப்பூர் பயணமாகவுள்ளார்கள்.

இலங்கை விளையாட்டுத் திணைக்களமும் இலங்கை வலைப்பந்தாட்டச் சங்கமும் இணைந்து இவர்களை இப் பயிற்சி முகாமில் கலந்து கொள்வதற்காக அனுப்பி வைக்கின்றன.

இலங்கையில் இருந்து 38 பேர் இந்தப் பயிற்சி முகாமில் கலந்து கொள்வதற்காகச் செல்கின்றனர்.

யாழ். மாவட்ட விளையாட்டு அலுவலர் திருமதி ஜே.எப்.எ. ரூபசிங்கம், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டுத் துறை விரிவுரையாளர் செல்வி ராதை அருளம்பலம் ஆகிய இருவரும் அந்தக் குழுவில் செல்கின்றனர்.

வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் 'எ' தரத்தில் இருக்கும் இவர்கள் யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் தலைவராகவும் பொருளாளராகவும் கடமையாற்றி வருகின்றார்கள்.

கடந்த முப்பது வருடங்களுக்கும் மேற்பட்ட கால இடைவெளியின் பின்னர் ஆசியா வலைப்பந்தாட்டச் சங்கத்தினால் நடத்தப்படும் பயிற்சி முகாமில் கலந்து கொள்ள தமிழர்களுக்கும் இடமளிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இருவரும் வலைப்பந்தாட்ட வீராங்கனைகள் என்பதுடன் திருமதி ரூபசிங்கம் தேசிய மட்ட அணியில் இடம்பெற்றதுடன் தேசிய மட்டத்தில் பதக்கம் வென்றவர்.

இதேபோன்று ராதை அருளம்பலமும் மாகாண, தேசிய மட்டத்திலான போட்டிகளில் கலந்து கொண்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (ஐ-86)



உற்சாகம்.....

துடிப்பு:-வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையே இடம்பெற்ற 13 வயதின் கீழ்ப் பிரிவினருக்கான உதைபந்தாட்ட முதலாவது போட்டியில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணியும் கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாலய அணியும் போட்டியில் ஈடுபடுகின்றனர். (ஐ-55)

# ஹர்பஜனைப் பிடிக்க ஐ.பி.எல். அணிகள் முண்டியடிப்பு!

ஐ.பி.எல். ஏலத்தில் பங்குபற்றும் வீரர்களுள் மும்பை இந்தியன்ஸ் அணி வீரரான ஹர்பஜன்சிங்குக்கு, கிராக்கி ஏற்பட்டுள்ளது.

சமீபத்தில் நடந்துமுடிந்த நியூஸிலாந்துக்கு எதிரான டெஸ்டில், 8ஆவது வீரராகக் களமிறங்கி அடுத்தடுத்து 2 சதங்களை அடித்து தன்னை ஒரு சகலதுறை வீரராகக் காண்பித்தமையால், அவரை வாங்க மும்பை இந்தியன்ஸ், புனே வாரியர்ஸ், டில்லி டேர்டெவில்ஸ் அணிகள் போட்டி போடுகின்றன.

கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி இந்த முறை இல்லாதமையால் அந்த அணியில் இடம்பெற்றிருந்த யுவராஜ்சிங்கைப் பிடிக்க புனே, பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணிகள் முயற்சிக்கின்றன.

# கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் விளையாட்டுப் பயிற்சி முகாம்

வலி.வடக்கு,டிசெ.3

வடமாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் முதல் தடவையாக நடத்தப்படவுள்ள விளையாட்டுப் பயிற்சி முகாமில் ஆசிரியர்கள், விளையாட்டு அலுவலர்கள், பாடசாலைகளின் வீர, வீராங்கனைகள் என ஐம்பது பேர் கலந்துகொள்ளவுள்ளனர்.

பாடசாலைகளின் வீர, வீராங்கனைகள் 35 பேருடன், ஆசிரியர்கள் 10 பேர், விளையாட்டு அலுவலர்கள் 05 பேர் என ஐம்பது பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அகில இலங்கைப் பாடசாலை மட்டத்தில் நடைபெற்ற போட்டிகளில் சிறந்த பெறுபேறுகளை பெற்ற வீர, வீராங்கனைகளுடன் கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் முன்னிலையில் காணப்படும் வீர, வீராங்கனைகளும் கலந்துகொள்ளவுள்ளார்கள்.

கொழும்பில் இருந்து வருகைதரவுள்ள பயிற்சியாளர்களுடன் மாகாண மட்டப் பயிற்சியாளர்களும் இணைந்து இப் பயிற்சி முகாமை நடத்தவுள்ளார்கள்.

குறிப்பாக இப்பயிற்சி முகாம் இதுவரை காலமும் இடம்பெற்ற பயிற்சி முகாம்களில் இருந்தும் முழுமையாக மாறுபட்ட வகையில் பல்வேறு விதமான பயிற்சிகளையும் உள்ளடக்கிய ஒரு பயிற்சி முகாமாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ஐ-86)




## வடக்கு மாகாணத்தில்

# விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களாக 13 பேருக்கு புதனன்று நியமனம்

வலி.வடக்கு,டிசெ.3

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் 13 விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களுக்கு நேற்று முன்தினம் நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

வவுனியாவில் அமைந்துள்ள கல்வி பண்பாட்டு அலுவல்கள் மற்றும் விளையாட்டுத் திணைக்களத்தின் தற்காலிக அலுவலகத்தில் வைத்து இந்த நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த இருபத்தைந்து வருடங்களுக்குப் பின்னர் ஒரே தடவையில் வடமாகாணத்தில் அதிக எண்ணிக்கையான பயிற்றுவிப்பாளர்களின் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நியமனங்கள் சேவைமூப்பு அடிப்படையில் இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம், தெல்லிப்பழை பிரதேச செயலக விளையாட்டு அலுவலர் கே.முகுந்தன் யாழ்.மாவட்ட கபடி பயிற்றுனராக நியமனம் பெற்றுள்ளார்.

யாழ்.,சாவகச்சேரிப் பிரதேச செயலக விளையாட்டு அலுவலர் கே.முகுந்தன் மன்னார் மாவட்ட மெய்வன்மைப் பயிற்றுவிப்பாளராக நியமனம் பெற்றுள்ளார்.

யாழ்.,கரவெட்டிப் பிரதேச செயலக விளையாட்டு அலுவலர் வி.முகுந்தன் யாழ்.மாவட்ட உதைபந்தாட்டப் பயிற்றுவிப்பாளராக நியமனம் பெற்றுள்ளார்.

யாழ்., நல்லூர்ப் பிரதேச செயலக விளையாட்டு அலுவலர் கேசுதாகரன் யாழ்.மாவட்ட கிரிக்கெட் பயிற்றுவிப்பாளராக நியமனம் பெற்றுள்ளார்.

யாழ்ப்பாணம் பிரதேச செயலக விளையாட்டு அலுவலர் கே.மோகனதாஸ் யாழ்.மாவட்ட மெய்வன்மைப் பயிற்றுவிப்பாளராக நியமனம் பெற்றுள்ளார்.

யாழ்,. மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த என்.முகுந்தன் கிளிநொச்சி மாவட்ட மெய்வன்மைப் பயிற்றுவிப்பாளராக நியமனம் பெற்றுள்ளார்.

யாழ்.,சண்டிலிப்பாய் பிரதேச செயலக விளையாட்டு அலுவலர் எஸ்.சதீஸ்குமார் கிளிநொச்சி மாவட்ட கரப்பந்தாட்ட பயிற்றுவிப்பாளராக நியமனம் பெற்றுள்ளார். (ஐ-85)

# அமெரிக்கப் பெண்ணுடன் கள்ளத் தொடர்பு



பிரபல உதைபந்தாட்ட வீரரான டேவிட் பெக்காமுக்கு உள்ளாடைகளை விற்பனை செய்யும் அமெரிக்கப் பெண் ஒருவருடன் கள்ளத் தொடர்பு (செக்ஸ் உறவு) இருக்கிறது என அமெரிக்க பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இங்கிலாந்து உதைபந்தாட்ட அணியின் முன்னாள் அணித்தலைவரான டேவிட் பெக்காம், திருமணமாகி 3 குழந்தைகளுக்குத் தந்தையாக உள்ளார்.

பெக்காமும், இர்மா நிசி என்ற விபசார அழகியும் ஒரே படுக்கையில் இருந்தனர் என 2 மாதங்களுக்கு முன்னர், அமெரிக்கப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது.

இந்த நிலையில் அவருக்கு உள்ளாடை விற்பனை செய்யும் அமெரிக்கப் பெண்ணுடனும் செக்ஸ் உறவு இருக்கிறது என அதே பத்திரிகை மீண்டும் செய்தி வெளியிட்டுள்ளது.

இது முற்றிலும் தவறான தகவல் என்று மறுத்துள்ள பெக்காம், இது தொடர்பாக வழக்கு ஒன்றையும் தொடுத்துள்ளார்.

# நியூஸிலாந்துடனான கிரிக்கெட் தொடரில் அக்மல், மாலிக், யூசுப்புக்கு இடம் இல்லை

நியூஸிலாந்து அணிக்கு எதிராக நியூஸிலாந்தில் நடைபெறவுள்ள டெஸ்ட், 'இருபது-20' கிரிக்கெட் தொடர்களுக்கான பாகிஸ்தான் அணியில் கம்ரன் அக்மல், ஷொயிப் மாலிக், முகமது யூசுப் ஆகியோர் இடம்பெறவில்லை.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் நேர்மைக் குழுவினர், கம்ரன், மாலிக் ஆகியோரைத் தெரிவு செய்வதற்கான அனுமதியை வழங்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

முகமது யூசுப்பின் பெயர் உலகக் கிண்ணத் தொடருக்கான பரிசீலனையில் இடம்பெறவில்லை. இந்நிலையில், டெஸ்ட் தொடரிலும் அவரைச் சேர்க்காமையால், அவரது கிரிக்கெட் வாழ்வு ஏறக்குறைய முடிவுக்கு வந்துவிட்டதாகவே பாகிஸ்தான் கிரிக்கெட் வட்டாரங்கள் கருதுகின்றன.

நியூஸிலாந்தில், 3 'இருபது - 20', 2 டெஸ்ட்கள், 6 ஒருநாள் போட்டிகள் கொண்ட கிரிக்கெட் தொடரில் பாகிஸ்தான் விளையாட வுள்ளது

பாகிஸ்தான் டெஸ்ட் அணி விவரம் வருமாறு:-

மிஸ்பா உல் ஹக் (அணித்தலைவர்), முகமது ஹபீஸ், டாபிக் உமர், யூனிஸ்கான், அஷார் அலி, அஸாத் ஷபீக், உமர் அக்மல், அத்னான் அக்மல், சயீத் அஜ்மல், அப்துர் ரஹ்மான், உமர் குல், தன்வீர் அகமட், சொகைல் தன்வீர், ரியாஸ்.

'இருபது - 20' அணி விவரம் வருமாறு:-

அப்ரிடி (அணித்தலைவர்), ஹபீஸ், அஹமட் சஜாத், யூனிஸ்கான், உமர் அக்மல், பவாத் ஆலம், அத்னன் அக்மல், சயீத் அஜ்மல், அப்துர் ரெஹ்மான், அப்துல் ரஸாக், உமர் குல், ஷொயிப் அக்தர், தன்வீர் அகமட், சொகைல் தன்வீர், வஹாப் ரியாஸ்.

# சூதாட்டத் தரகர் மஜீத் மீது வழக்குத் தொடர பர்கத் முடிவு

இஸ்லாமாபாத், டிச. 03

சூதாட்ட வீரர்கள் பட்டியலில் தமது பெயரையும் சேர்த்து வெளியிட்டமைக்காக, மசார் மஜீத் மீது, பாகிஸ்தான் அணியின் ஆரம்ப வீரரான இம்ரான் பர்கத் வழக்குத் தொடரவுள்ளார்.

சூதாட்டத் தரகரான மசார் மஜீத், அண்மையில் வெளியிட்ட புதிய வீடியோவில், இம்ரான் பர்கத், வகாப் ரியாஸ், உமர் அக்மல் மற்றும் கம்ரான் அக்மல் ஆகியோருக்கும் சூதாட்டத்துடன் தொடர்பு இருக்கிறது எனவும், இதற்காக, இவர்கள் மசார் மஜீத்திடமிருந்து அதிகளவான பணத்தைப் பெற்றுக்கொண்டனர் எனவும் தெரிவித்திருந்தார்.

இதுகுறித்து இம்ரான் பர்கத் கூறியவை வருமாறு:-


எப்போதும் எந்தச் சர்ச்சைகளிலும் சிக்காமல் நான் போட்டிகளில் பங்கேற்று வருகிறேன். மசார் மஜீத் எனது முகவராகத்தான் இருந்தார். அவர் சொல்வது போன்ற எந்தச் செயலிலும் நான் ஈடுபட்டதில்லை.

தற்போது அவரது சூதாட்டக் குற்றச்சாட்டு என்னை நிலைகுலையச் செய்துள்ளது. இதனால், என் நன்மதிப்புக்குக் களங்கம் ஏற்பட்டுள்ளது.

எனக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. ஆனால், மற்றவர்களுக்கு உள்ள தொடர்பு குறித்து எனக்கு எதுவுமே தெரியாது. இதற்கு மஜீத் மன்னிப்புக் கேட்கவில்லை என்றால், வழக்குத் தொடர முடிவு செய்துள்ளேன். இதுகுறித்து எனது சட்டத்தரணிகளுடன் ஆலோசித்து வருகிறேன்.

- இவ்வாறு இம்ரான் பர்கத் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அசத்தல்: இலங்கை-மே.இந்தியத் தீவுகள் இடையிலான நேற்றைய ஆட்டம் மழையால் தடைப்பட்ட போதும், அசத்தலாக ஆடிய நாஸ், 62 ஓட்டங்கள் குவித்தார்.

# இரு நாள்களில் 244 ஓட்டங்கள் மட்டுமே பள்ளேகலவில் விளையாடுகிறது மழை

இலங்கை - மேற்கிந்தியத் தீவுகள் மோதும் மூன்றாவது டெஸ்ட் போட்டியில் அடிக்கடி மழை குறுக்கிடுவதால், முதல் இன்னிங்ஸிற்காக ஆடி வரும் மேற்கிந்தியத் தீவுகள் அணியால், இரண்டாம் நாளான நேற்று ஆட்ட நேரம் முடியும்போது 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 244 ஓட்டங்களைப் பெற முடிந்தது.

மேற்கிந்தியத்தீவுகள் - இலங்கை அணிகளுக்கிடையிலான 3ஆவது டெஸ்ட் போட்டி பள்ளேகல மைதானத்தில் நடைபெற்றுவருகிறது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி, நேற்றுமுன்தினம் ஆட்ட நேரம் முடியும்போது அணி, 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 134 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

விளையாட்டு அரங்குகளில்

மீண்டும் நேற்றுத் தனது இன்னிங்ஸைத் தொடர்ந்த மேற்கிந்தியத் தீவுகள் அணி, 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 244 ஓட்டங்களைப் பெற்றவேளை, மழை தனது விளையாட்டைக் காட்டத் தொடங்கியது. இதனால், ஆட்டம் கைவிடப்பட்டது. நாஸ் (62), பௌக் (0) ஆகியோர் களத்தில் உள்ளனர். இலங்கை அணி சார்பாக பந்துவீச்சில் மெண்டிஸ் 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். இன்று ஆட்டத்தின் மூன்றாம் நாள் ஆகும்.

# 2018 உலகக் கிண்ண உதைபந்தாட்ட போட்டிகள் ரஷ்யாவில்!

2018ஆம் ஆண்டு உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் ரஷ்யாவில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

உலக அளவில் உதைபந்து விளையாட்டை நெறிப்படுத்தி நடத்திவரும் சர்வதேச கால்பந்து சம்மேளனமான பீஃபா, 2018 மற்றும் 2022 ஆம் ஆண்டு உதைபந்தாட்டப் போட்டிகளை நடத்தும் நாடுகளை அறிவித்துள்ளது.

2018 ஆம் ஆண்டு போட்டிகளை ரஷ்யாவும், 2022 ஆம் ஆண்டுப் போட்டிகளை மத்திய கிழக்கு நாடான கட்டாரும் நடத்தும் என்று பீஃபாவின் தலைவர் செப் பிளாட்டர் நேற்று ஜூரிக்கில் அறிவித்தார்.

அடுத்த போட்டிகளை நடத்தத் தெரிவாகி உளள் இரண்டு நாடுகளுமே உலகக் கோப்பை உதைபந்தாட்டப் போட்டிகளை முதல் முறையாக நடத்தவுள்ளன. ரஷ்யா நடத்தவுள்ள 2018 ஆம் போட்டிகள் முதல் முறையாக கிழக்கு ஐரோப்பாவில் இடம்பெறும். அதே போல் கட்டாார் நடத்தவுள்ள 2022 ஆம் போட்டிகள் அரபு உலகத்தில் முதல் முறையாக இடம் பெற உள்ளன.

இந்தப் போட்டிகளுக்காக 22 புதிய விளையாட்டு அரங்கங்களை கட்டார் அமைக்கும். இவை அனைத்தும் 60 கிலோ மீட்டர் பரப்பளவுக்குள் கட்டப்படும். அதன்பறகு அவை பிரித்தெடுக்கப்பட்டு மற்ற வளரும் நாடுகளில் மீண்டும் பயன்படுத்தப்படும்.

ரஷ்யாவுக்கு 2018 ஆம் ஆண்டு உலகக் கோப்பை போட்டிகளை நடத்தும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது குறித்து பீஃபா வருத்தப்படவேண்டி வராது என அதன் முதல் துணைப் பிரதமர் இகோர் ஷுவலோவ் உறுதியளித்துள்ளார்.

அனைவரும் ஒருங்கிணைந்து ஒரு சரித்தரம் படைக்க ரஷ்யாவுக்கு உதவுமாறும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

2018 ஆம் ஆண்டுப் போட்டிகளை நடத்த ரஷ்யாவுடன் இங்கிலாந்தும், ஸ்பெயின் மற்றும் போர்ச்சுகல் ஆகிய நாடுகள் கூட்டாகவும் விண்ணப்பிதிருந்தன. அதே போல பெல்ஜியம் மற்றும் நெதர்லாந்தும் கூட்டாக விண்ணப்பித்தன.

கட்டார் வென்றுள்ள 2022 ஆம் போட்டிகளை நடத்த அமெரிக்கா, ஜப்பான், தென்கொரியா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளும் விண்ணப்பித்திருந்தன. (உ)

# ஐ.பி.எல். போட்டியில் கண் வைக்கிறார் லாரா

டிசெம்பர், டிசெ. 3

இந்தியன் பிரீமியர் லீக் (ஐ.பி.எல்) கிரிக்கெட் போட்டியில் விளையாடுவதற்குக் கண் வைத்துள்ளார் பிரையன் லாரா.

இந்தியாவில் பிரிமியர் லீக் போட்டி மிக வெற்றிகரமாக மாறியதை அடுத்து முன்னாள் வீரர்கள் பலரும் அதில் தங்கள் திறமையை நிரூபித்து விளையாடி வருகிறார்கள். ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் பிரபல துடுப்பாட்டக்காரரான மத்தியூ ஹைடன், ஷேன் வோர்ன் உள்ளிட்ட பல பிரபல வீரர்கள் கடந்த ஐ.பி.எல். போட்டிகளில் தமது திறமையை நிரூபித்துள்ளனர்.

எனினும், மேற்கிந்தியத் தீவுகள் அணியின் முன்னாள் தலைவரும் துடுப்பாட்ட மன்னனுமான பிரையன் லாரா இதுவரை ஐ.பி.எல். போட்டியில் விளையாடியதில்லை. ஆனால், அடுத்த ஆண்டு நடக்க இருக்கும் போட்டியில் விளையாடுவதற்கு அவர் தன்னைத் தயார்ப்படுத்தி வருகிறார்.

சர்வதேசப் போட்டிகளில் இருந்து மூன்றாண்டுகளுக்கு முன்னர் லாரா ஓய்வு பெற்றிருந்தார். அந்த இடைவெளியை இரண்டு மாதங்களுக்கு முன்னர் அவர் முடிவுக்குக் கொண்டு வந்திருந்தார். கடந்த ஒக்டோபர் மாதம் சிம்பாப்வேக்கு எதிராக நடந்த 20/20 போட்டியில் பங்கேற்றார்.



ஐ.பி.எல். போட்டியில் விளையாடுவதற்கான உடல் தகுதியைப் பெறுவதற்காகவே தான் சிம்பாப்வே அணியுடனான போட்டியில் பங்கேற்றார் என்று லாரா தெரிவித்திருக்கிறார். ''ஐ.பி.எல். போட்டியில் நான் விளையாட வேண்டுமாக இருந்தால், இப்போதிருந்தே அதற்காக என்னைத் தயார்ப்படுத்தியாக வேண்டும். ஐ.பி.எல். போட்டியில் விளையாட நான் தயாராகி விட்டேன் என்று கூறமாட்டேன். ஆனால் அதற்கான முயற்சிகளில் இறங்கி இருக்கின்றேன்'' என்றார் லாரா. (உ)

# அடிலெயிட்டில் இன்று இரண்டாவது ஆட்டம்



ஆஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகள் மோதும் ஆஷஸ் தொடரின் இரண்டாவது போட்டி அடிலெட்டில் இன்று ஆரம்பமாகிறது.

ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி, 5 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடிவருகிறது.

முன்னர் நடந்து முடிந்த முதலாவது போட்டி சமனிலையில் முடிவுற்றது.

இந்நிலையில், இரண்டாவது போட்டி இன்று ஆரம்பமாகிறது.

கடந்த போட்டியை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில், இரு அணிகளும் பலமான நிலையிலேயே காணப்படுகின்றன.

எந்தவேளையிலும் அணிக்குக் கை கொடுக்க இரு அணி வீரர்களும் தயாராகவே உள்ளனர் என்பதை முன்னைய போட்டியில் காண முடிந்தது.

இந்நிலையில், இன்று ஆரம்பமாகும் இந்தப் போட்டிக்காக இரு அணிகளும் கடும் பயிற்சிகளை மேற்கொண்டுள்ளதுடன். எதிரணிக்குச் சவால் கொடுத்து வெற்றியைப் பறிக்கவும் முனைப்புக் கொண்டுள்ளன. எனவே, இரு அணிகளுக்கும் இடையிலான இந்தப் போட்டியில் பரபரப்புக்குப் பஞ்சமிருக்காது.

# ஜோன்சனுக்கு இடம் இல்லை

இன்று நடைபெறவுள்ள இங்கிலாந்துக்கு எதிரான ஆஷஸ் தொடரின் இரண்டாவது டெஸ்ட் போட்டியின் ஆஸ்திரேலிய அணியிலிருந்து இடது கை வேகப்பந்து வீச்சாளரான மிட்செல் ஜோன்சன் நீக்கப்பட்டுள்ளார்.

2009ஆம் ஆண்டு ஐ.சி.சியின் சிறந்த கிரிக்கெட் வீரர் விருது பெற்ற மிட்செல் ஜோன்சன், சமீப காலமாக ஆட்டத்திறனின்றித் தவித்துவருகிறார்.

முன்னர் நடந்த பிரிஸ்பேன் டெஸ்ட் போட்டியில் அவர், 170 ஓட்டங்களைக் கொடுத்த அதேவேளை, விக்கெட் எதனையும் கைப்பற்றவில்லை. இதனால் அவரை அணியிலிருந்து நீக்க ஆஸ்திரேலியா முடிவு செய்துள்ளது.

ரியான் ஹரிஸ் அல்லது போலிஞ்சர் அணியில் இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் இராமசாமி

உருத்திரா B.Sc.
(சிரேஷ்ட சட்டத்தரணி- Advocate)

மலர்வு
23.09.1925

உதிர்வு
01.10.2005

அணையா விளக்காக வீற்றிருக்கும்
ஏனையோர் உயர்விற்கும், உய்விற்கும் ஏணியாகவும்
மெழுகு வர்த்தியாகவும் திகழ்ந்து நீதியை நாடி நின்று
நலிவுற்றோருக்கு வழி காட்டியான அரசியல் ஆன்றோன்,
சமூகத் தொண்டன் சட்டமாமேதை, அனைவர்
உள்ளத்திலும் நீங்காது நின்று ஒளி வீசும்
அமரர் இராமசாமி உருத்திரா B.Sc சிரேஷ்ட சட்டத்தரணி-
Advocate இறைபதம் எய்திய 5ஆம் ஆண்டு நிறைவில்
புலோலி பசுபதீஸ்வர பர்ப்தபத்தினியைப் பணிந்து ஆத்ம
சாந்திக்காய் பிரார்த்திக்கிறோம்.

திருமதி விஜியராணி உருத்திரேஸ்வரன் J.P.U.M சட்டத்தரணி,
திருமதி கௌரி சிவகுமார் B.Sc (கனடா),
செல்வி தர்சினி கனகசபாபதி J.P.U.M சட்டத்தரணி,
மனைவி, பெறாமக்கள், மருமகன்மார்,
பேரப்பிள்ளைகள், பூட்டன்.

அரசடி ஒழுங்கை,
புலோலி கிழக்கு.

# மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை சந்திரகுமார் (சந்திரன்)



புலோப்பளை மேற்கு, பளையைப் பிறப்பிடமாகவும், இல.24, 6ஆம் குறுக்குத் தெரு, குருநகர், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சந்திரகுமார் நேற்று (02.12.2010) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும், மேரி மஞ்சுளாதேவியின் பாசமிகு கணவரும், நிர்மல் ராஜ் (எக்கின்ஸ் பென்ஸ் கம்பனி ஊழியர் (TNT)) தர்சா (சிகரம் ஊடகவியலாளர்), அருள்ராஜ், திவ்வியராஜ் (புனித பத்திரிசியார் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பரமேஸ்வரி, தெய்வேந்திரம், தவபூமணி, உதயகுமாரன் (அதிபர், யா/குடமியன் அ.த.க. பாடசாலை), விஜயறட்ணம், றூப சுகந்தினி (ஆசிரியை, பளை மத்திய கல்லூரி), பவானி ஆகியோரின் உடன்பிறப்பும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (04.12.2010) சனிக்கிழமை மு.ப. 11 மணி அளவில் அவரின் இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லபட்டு ஆத்ம சாந்திக்காக யாழ். புதுமை மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்ட பின்னர் நல்லடக்கத்துக்காக யாழ். புனித கொஞ் சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.24, 6ஆம் குறுக்குத் தெரு,
குருநகர், யாழ்ப்பாணம்.

(சி.573332)

தகவல்:
குடும்பத்தினர்.

# வலி. கிழக்கு பிரதேச சபை வரவு, செலவு விபரம் மக்கள் பார்வைக்கு

கோப்பாய், டிசெ. 3

வலி. கிழக்கு பிரதேச சபைக் கட்டளைச் சட்டத்துக்கு அமைவாக 2011 ஆம் ஆண்டுக்கான சபையின் வரவு செலவு விவரம் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளதாகத் பிரதேச சபைச் செயலாளர் அறிவித்துள்ளார்.

இந்த வரவு - செலவு விவரம் புத்தூரில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்திலும் -

ஏனைய உப அலுவலகங்களிலும் இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 14ஆம் திகதி வரை பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்படவுள்ளதாக மேற்படி பிரதேச சபைச் செயலாளர் அறிவித்துள்ளார்.

(201 -72)

# வடமராட்சி வலயத்தில் எட்டு பாடசாலைகள் அபிவிருத்திப் பணி

பருத்தித்துறை, டிசெ. 3

மகிந்த சிந்தனையின் கீழ் நாடளாவிய ரீதியில் ஆயிரம் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ், வடமராட்சியில் எட்டுப் பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

பருத்தித்துறை கோட்டத்தில் ஹாட்லி கல்லூரி, பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி, பருத்தித் துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை ஆகிய மூன்று பாடசாலைகளும் - கரவெட்டி கோட்டத்தில் கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன்கல்லூரி ஆகிய நான்கு பாடசாலைகளும் மருதங்கேணிக் கோட்டத்தில் உடுத்துறை மகா வித்தியாலயமும் தெரிவு செய்யப் பட்டுள்ளன.

(ம-190)

**Auto விற்பனைக்கு**

HE-XXXX நல்ல நிலையிலுள்ள
2 ஸ்ரோக் முச்சக்கர வண்டி
விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0776004454

**Grade Way & Achievement**

இளைஞர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் சாவகச்சேரியில் அமைந்துள்ள Innovage (Multinational) கம்பனிக்கும் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள அதன் கிளைகளுக்கும் முகாமைத்துவத்துக்கான ஆள்சேர்ப்புகள் இடம்பெறுகின்றன. தாங்களும் O/L, A/L சித்தி பெற்றவர்களாயின் தேசிய சர்வதேச ரீதியான பயிற்சியுடன் அதி உயர் சம்பளமும் வழங்கப்படும்.

Mr.Udaya
தொடர்புக்கு: 0717494755.

**வீட்டுக்காணிகள், தோட்டக்காணிகள் விற்பனைக்கு**

ஏழாலை தெற்கில் 6பரப்பு வீட்டுக்காணி கிணற்றுப்பங்குடன் (வீதிக்கருகில்), 7பரப்பு வீட்டுக்காணி (வீதிக்கருகில்), 6பரப்பு தோட்டக்காணி மற்றும் வட்டுக் கோட்டையில் 10பரப்பு வயற்காணி என்பன விற்பனைக்குண்டு.

T.P: 0774051120 ஏழாலை தெற்கு, சுன்னாகம்.

# இதய அஞ்சலி



சிவநெறித் தொண்டர்,
பரோபகாரமணி காரைநகர்

அமரர்

K.K. சுப்பிரமணியம்

(இளைப்பாறிய உ[illegible] அதிகாரி, சுங்கத் திணைக்களம் - கொழும்பு)

எங்கள் தேவஸ்தானத்தின் வளர்ச்சியில் பங்கு கொண்டு உழைத்தவரும் எங்கள் அன்னை சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் சேவைகளை மதித்துக் கௌரவப்படுத்திய பெருந்தகையுமாகிய, பண்பாளரின் பிரிவு குறித்து மிகுந்த வேதனையடைகிறோம். அன்னாரது ஆத்மா சாந்திபெறத் துர்க்கா தேவியைப் பிரார்த்தித்து, எமது இதய அஞ்சலியைச் சமர்ப்பிக்கிறோம்.

நிர்வாக சபை,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.

(சி/573338)

# ஆத்ம சாந்திப் பிரார்த்தனை



எமது பாடசாலையின் பகுதித் தலைவரும் சிரேஷ்ட உயிரியல் ஆசிரியையுமான திருமதி மனோகரி நற்குணலிங்கம் அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி செல்லம்மா செல்லத்துரை

அவர்கள் 01.11.2010 திங்கட்கிழமை அமரத்துவமடைந்தமையையிட்டு அன்னாரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப் பதோடு அன்னாரது பிரிவுத்துயரில் நாமும் பங்குகொள்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/நெல்லியடி மகாவித்தியாலயம்.

(சி/573330)

# மரண அறிவித்தல்கள்

## கணபதிப்பிள்ளை பொன்னுத்துரை



நல்லூர், மூத்தவிநாயகர் வீதி, 2ஆம் வீதியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை பொன்னுத்துரை நேற்று (02.12.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பராசக்தியின் அன்புக் கணவரும் கிருஷ்ணகுமாரி, காந்திமதி (பிரான்ஸ்), செல்வராணி, கேதீஸ்வரன், கௌரிதேவி (சுவிஸ்), விக்னேஸ்வரி (ஜேர்மனி), ரோகினி ஆகியோரின் அன்புத் தந்தையும் தனபாலசிங்கம், விஜயரா ணம், நீதிராஜா, செல்வகுமாரி, பாலசுப்பிரமணியம், சௌந்திரநாதன், சிறீதரன் ஆகியோரின் அன்பு மாமனும் வசந்தரூபன், சிவரஜனி, சிவரூபி, ஜனனி, சிறிகாந்தன், சிறிபதி, ஐங்கரன், குகன், ஹரி கரன், டிசாந்தினி, லிந்ரன், சாளினி, கவிந்தன், ஜதீசன், வர்ஜினி, வைஷ்னவி, நிரோஜன், ரவீனா, சபீனா, தாரங்கா, தனுசாஜினி, தர்மிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஹரிஸ்ராம், பாருஜா, வினோத், விருசிகன், வினித், கனிகா, நதீபன் ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.12.2010) வெள்ளிக் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 2 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

30/27, மூத்த விநாயகர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(106803)

தகவல்:
பொ. கேதீஸ்வரன் (மகன்)

## இராசு வரதராஜன்



(முன்னாள் ஆஸ்தான வித்துவான்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்)

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், மலேசியாவை வதிவிடமாகவும் கொண்ட நாதஸ்வர வித்துவான், இராசு வரதராஜன் (முன்னாள் ஆஸ்தான வித்துவான் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்) நேற்று முன்தினம் (01.12.2010) புதன்கிழமை மலேசியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாதஸ்வர வித்துவான் இராசு- பருவதம்மா தம்பதியரின் மூத்த மகனும், ஊர்காவற்றுறையைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் இரத்தினம் தம்பதியரின் மருமகனும், சாரதாம்பாளின் அன்புக் கணவரும், நாரா ஜனி, புஸ்கரணி ஆகியோரின் தந்தையும், பாலசுப்பிரமணியம் (தவில்), கேமாவதி, இந்திரகுமார் (நாதஸ்வர வித்துவான், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்) ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற நாதஸ்வர வித்துவான் நம்புராசா மற்றும் பாம சோதி, தியாகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மலேசியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கே.கே.எஸ் வீதி,
மல்லாகம். 021 300 7165

தகவல்:
இ.இந்திரகுமார்
(சகோதரன்)

# இதய அஞ்சலி



நாதஸ்வர வித்துவான்

அமரர்

## இராசு வரதராஜன்

எங்கள் தேவஸ்தானத்தின் முன்னாள் நாதஸ்வரக் கலைஞரும் மலேசியாத் திருநாட்டில் மிகவும் பிரபலயம் பெற்று விளங்கியவரும் எங்கள் தேவஸ்தான வித்துவான் திரு. இ. இந்திரகுமார் அவர்களின் சகோதரருமாகிய அமரர் இராசு வரதராஜன் அவர்கள் மலேசியாவில் காலமான செய்தியறிந்து மிகுந்த வேதனையடைகிறோம்.

அன்னாரின் ஆத்மா சாந்திபெற துர்க்காதேவியைப் பிரார்த்தித்து எமது இதய அஞ்சலிகளைச் சமர்ப்பிக்கின்றோம்.

நிர்வாக சபை,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.

(சி/573339)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநோயாளர் பிரிவில் தொலைக்காட்சி

தென்மராட்சி, டிசெ. 3

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலை வெளி நோயாளர் பிரிவில் நோயாளர்களின் நலன்கருதி தொலைக்காட்சிப் பெட்டி பொருத்தப்பட்டுள்ளது.

வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களின் நலனுக்காக நலன் விரும்பியொருவரால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட தொலைக்காட்சிப் பெட்டி இதுவரை காலமும் விடுதியொன்றில் வைக்கப்பட்டிருந்தது.

தற்போது வெளிநோயாளர் பிரிவுக்கு வரும் நோயாளர்களுக்காக இடமாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

(204-207)


ஆசியாவிலேயே முதன்மை நிலை வகிக்கும்

புதிய பிரிவுகள் ஆரம்பம்

DIPLOMA IN MICROSOFT OFFICE
DIPLOMA IN PC APPLICATION
ADV. DIP. IN HARDWARE NETWORKING
DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING
DIP. IN VIDEO PRODUCTION MULTIMEDIA
DIP. IN WEB DESIGNING DEVELOPMENT
DIP. IN PRE-PRESS DESKTOP PUBLISHING
TALLY AUTOCAD C++

Spoken English
veta Experts in English Training An ISO 9001:2000 Company

புதிய பிரிவுகள் ஆரம்பம்.
04/12/2010 8.30 A.M. & 3.30 A.M.
06/12/2010 7.30 A.M. & 10.30 A.M.

சிறார்களுக்கான கணனி கற்கை நெறிகள் ஆரம்பம்

அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட கணனி நிறுவனம்

DMI COMPUTER EDUCATION
No.113, கன்னாதிட்டி வீதி, யாழ்பாணம். Tel.: 021-222 4403
M.M.V. வீதி, (மந்திகை மகாலிங்கேஸ்வரம் முன்பாக) நெல்லியடி. Tel. : 021-226 2470

ஆசியாவிலேயே முதன்மை நிலை வகிக்கும்



!!யாழ் மண்ணில் முதன் முறையாக!!

CERTIFICATE IN ETHICAL HACKING AND IT SECURITY

எந்தக் கணனிகளையும் உங்கள் கட்டுப்பாட்டின் கீழ்கொண்டுவரலாம்...

- Introduction to Cyber crimes
- Introduction to Ethical Hacking
- Introduction to Internet and e mail
- Windows Management and Configurations.
- Windows Hacking and Cracking
  - Hacking Windows XP Administrator passwords
  - Hacking Windows XP System password
  - Recover Forgot E mail login id & passwords
  - Remote spy Hacking & Key logs capturing.
  - Unlocking & Cracking the Application sofwares
  - Google Hack, Proxy servers & Resource hacker
  - 25 Important Secrets & Tricks About Windows XP
  - Hack Zip, RAR, pdf, doc ... Files' Passwords
  - Portable operating system & softwares & More...
- Safety Moves Against Hackers
  - How to safe your pc from hackers
  - How to safe System Administrator Acc
  - How to safe E mail Acc from spy and hackers
  - How to safe USB Flash drive from Virus
  - Antivirus Guard and spy remover
  - How to identify anonymous websites & More...

Duration One Month

..அதிகரித்து வரும் சைபர் குற்றங்களுக்கு எதிரான செயற்திட்டம்..
இணைய திருட்டுக்களிடமிருந்து உங்களை பாதுகாத்து கொள்ளுங்கள்

Online classes

Free
Hand out Materials & Tools CDs

மறந்த விண்டோஸ் Administrator பாஸ்வேட்கள்&ஈமெயில் Login Id மற்றும் பாஸ்வேட்களை கண்டுபிடித்தல். உங்கள் கணனியை பயன்படுத்துபவர்களை இணையமூடாக முகாமை செய்தல்(Spy), மென்பொருட்களை Unlock செய்தல், மென்பொருள் கோப்புக்களை Unlock செய்தல், Proxy, Google hacks, USB மென்பொருட்கள், 25 விண்டோஸ் XP தந்திரோபாயங்கள் மற்றும் வைரஸ், Spy போன்ற இணைய திருட்டுகளுக்கு எதிரான பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் பல விடயங்களை உள்ளடக்கிய பாடத்திட்டம் உங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்......

விபரங்களுக்கு!!!
UNI - ICT CAMPUS (PVT) LTD
No - 83, Palaly Road, Kantharmadam
T.P No: 021 321 6433/ 0777-110862


## பொது மக்களுக்கோர் அறிவித்தல்

இதனால் சகலருமறிய வேண்டியது இதன் பின் விவரிக்கப்பட்டிருக்கும் வீட்டுடன் கூடிய ஆதனமும் அதைச் சேர்ந்தவைகளும் காலஞ்சென்ற சிவகுரு சுரேந்திரனுக்கும் அவரின் மனைவி சிவரூபவதி சுரேந்திரனுக்கும் 18.01.2004 இல் பிரசித்த நொத்தாரிஸ் எஸ். கந்தசாமி முகதாவில் 24513 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதியுறுதியினால் சொந்தமும் உரிமையுமாகவிருந்தது என்பதையும் குறித்த ஆதனம் தொடர்பாகச் சிலர் சட்டவிரோதமான முறையில் மோசடி செய்து தயாரித்த பொய்யான ஆவணங்களின் மூலம் அவ்வாதனத்தை அல்லது அதன் பாகங்களைத் தங்கள் சொந்தமென்று பொய்கூறி அறுதிவிற்பதற்கு முயற்சிகள் மேற்கொண்டு வருவதால் அவ்வாதனத்தை அல்லது அதன் எப்பாகத்தையும் எவரும் அறுதி கொள்ளவோ குத்தகையாகக் கொள்ளவோ ஈடு அல்லது பிணையாகக் கொள்ளவோ அல்லது வேறு எந்த முறையிலும் கையாளவோ கையாடல் செய்யவோ பாரம் பராதீனம் செய்யவோ பெறவோ அல்லது அவ்வாறன அவ்வாதனம் சம்பந்தமான எந்தவொரு சட்டவிரோதமான செயல்களுக்கும் உடன்பட்டுக் கொள்ளவோ வேண்டாமென்று இத்தால் எச்சரிக்கை செய்யப்படுகிறார்கள்.

### மேற்சொல்லப்பட்ட ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தென்மராட்சிப் பகுதி சாவகச்சேரிக் கோவிற்பற்று, சாவகச்சேரி இறை 'கோயிற் தெண்டல் வளவு' நிலப்பரப்பு இலாச்சம் இரண்டு குளி பன்னிரண்டு (நி.பர.2 குளி 12). இது 23.04.1983இல் உத்தரவு பெற்ற உலாந்தா வி.சிவராசா 296ஆம் இலக்கத்தில் தயாரித்த அளவு படத்தில் 1ஆம் துண்டாகக் காட்டப்பட்டுள்ளது. இதுவும் இதற்குள்ளடங்கிய கல்வீடும் கட்டடங்களும் மற்றும் அதைச் சேர்ந்தவைகளும் எல்லை கிழக்கு கணபதிப்பிள்ளை இராசம்மாவின் ஆதனம் வடக்கு றோட்டு மேற்கு ஆறுமுகம் சிவகுரு பெண் பாக்கியரத்தினத்துக்குரிய வாதனம் தெற்கு ஜோர்ஜ் செல்லையா செல்லத்துரையின் உரிமைக்காரருக்குரிய வாதனம் இதடங்கலும். இவ்வாதனம் யாழ்ப்பாணம் காணிப்பதிவகத்தில் F 738/120 இல் பதியப்பட்டுள்ளது.

சாவகச்சேரி, 2010ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முதலாம் திகதி.

(சி/573328) சிவரூபவதி சுரேந்திரன்.


வெளிவருகிறது விசேட கையேடு-06.12.2010 முதல்



புலமைச் சுடர் 2011-2012

விலை ரூபா 10

முயற்சியும் பயிற்சியும் உயர்ச்சி தரும்

2011, 2012 ஆம் ஆண்டுகளில் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்கள் கட்டுரை எழுதும்போது கவனிக்க வேண்டிய விடயங்கள், விதிமுறைகள் புள்ளித்திட்டம் போன்ற விளக்கங்கள் கட்டுரை எழுதும் திறனை விருத்திசெய்யும் நோக்கோடு கட்டுரைக்களப்பகுதி கையேட்டில் வெளிவரவுள்ளன.

உங்கள் பிரதியை உறுதிப்படுத்த அருகிலுள்ள உதயன் முகவரிடம் உடன் பதிவு செய்யுங்கள்
தொடர்புகளுக்கு: யாழ் விநியோகப்பிரிவு இலக்கம்: 021 5677222
ஆசிரிய பீடம்: 011 576 8855, 071 427 3035.


J/NELLIADY M.M.T.M.SCHOOL KARAVEDDY

# யா/நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை, கரவெட்டி.

## பரிசில் தின விழா- 2010.12.03

### பாடசாலைக்கு பெருமை தேடித்தந்த ஆசிரியர்களையும், மாணவர்களையும் பாராட்டுகின்றோம்.



அதிபர், பிரதி அதிபர், தரம்5 மாணவர்களுக்கு போதித்த ஆசிரியர்களுடன் சாதனை வீரர்கள்.



பாடசாலைக்கு பெருமை சேர்ப்பதில் உழைக்கும் அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர் குழாத்தினர்.





சி.மதுர்சன் (172) | பி.கேதாரணி (170) | ர.ஆர்த்திகா (169) | யோ.சாம்பவி (165) | கு.கஜீவன் (154) | கி.ஆதனா (152) | ஜெ.சிந்துஜா (147) | த.ஷோனுஜா (147)



தி.துஷாலி (146) | ப. வைஷ்ணவி (145)

இவர்களோடு 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களையும் வாழ்த்துகின்றோம்.



தரம் : 5
ம.அபிநயா
மாகாண மட்ட சாதனையாளர்,
திருக்குறள்மனனம்- 3ஆம் இடம்
Recitation - 2ஆம் இடம்

அதிபர், ஆசிரியர்,
மாணவர், பெற்றோர்,
பாடசாலை அபிவிருத்திச்
சங்கத்தினர், பழைய மாணவர்கள்.

(சி/573331)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலிகளுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்களாக இருந்தால்கூட அவர்களின் செயற்பாடுகள் குறித்து விசாரணைகள் நடத்தப்படும் என்றும் அவர் அறிவித்திருக்கிறார்.

"இலங்கை அரசமைப்பின் அடிப்படையில், எமது நாட்டின் குடிமக்கள் யாரும் விடுதலைப்புலிகள் அல்லது அவர்களுடன் தொடர்புடையவர்களுக்கு ஆதரவாக நடந்து கொள்ள முடியாது. இதில் விடுதலைப் புலிகள் அமைப்புக்கு ஆதரவு வழங்கும் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களும் அடங்குவர்" - என்று அவர் தெரிவித்தார்.

லண்டனிலோ அல்லது வேறு இடங்களிலோ நடைபெற்ற நிகழ்ச்சிகளில் இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டு ஒரு நிலைப்பாட்டை எடுத்திருந்தால், அதை தாங்கள் கவனத்தில் எடுக்க வேண்டும் என்றும், அத்தகைய சூழலில் நாட்டின் மற்றைய குடிமக்கள் மீது எப்படியான நடவடிக்கை எடுக்கப்படுமோ அதே போன்று இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

எதிர்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் இலங்கைக்கு அவப்பெயர் ஏற்படுத்த வேண்டும் என்கிற வகையில் செயற்படுவதாகவும், அவர்கள் இலங்கைக்கு முதலீடுகள் வருவதை விரும்புவதில்லை என்றும் இலங்கையின் பெயரை கெடுக்க அவர்கள் முனைவதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

அத்தகைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீதும் அவர்களின் இலங்கை எதிர்ப்பு நடவடிக்கைகள் மீதும் தாம் இப்போது கவனம் செலுத்த வேண்டிய தேவை இருப்பதாகவும் தற்போது நாடாளுமன்றத்தில் இருக்கும் உறுப்பினர்கள் அப்படியான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார்கள் என்று தெரியவந்தால் நடவடிக்கை எடுத்துத்தான் ஆக வேண்டும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

(உ)

## ஜயலத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துகொண்டார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, லண்டனில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் தாம் கலந்துகொள்ளவில்லை என்று ஜயலத் ஜயவர்த்தன மறுப்புத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கு எதிராக லண்டனில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்ட தினத்தன்று தாம் இத்தாலியில் இருந்தார் என்று ஜயலத் ஜயவர்த்தன நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக லண்டனில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன தலைமை தாங்கினார் என்று அரசதரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் குற்றம் சுமத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(இ- 01- 05)

**இணையத்தள வடிவமைப்பு**

உங்கள் நிறுவனங்களின் அதிகார பூர்வ இணையத்தளங்கள் மற்றும் தனிப்பட்ட தளங்களை சர்வதேச தரம் மற்றும் விதிமுறைகளுக்கு அமைவாக எம்மிடம் வடிவமைத்துக் கொள்ள முடியும்.

.com வருடத்திற்கு ரூ.1000 மட்டுமே!

021 222 0261 0779 471 771

இல 214, யாழ்-மானிப்பாய் வீதி [வைத்தீஸ்வரா கல்லூரி அருகில்]

webster networks

**வெளிவந்து விற்பனையாகிறது**

1) பொதுநிதி நடைமுறைகள்- 400/=
2) பொதுநிதி நடைமுறைகள்- 300/=
பாகம் - 2

(கச்சேரிக் கணக்குகள், பொதுவைப்புக் கணக்குகள், திறைசேரிக் கணக்குகள் விரிவாக உள்ளடக்கப்பட்டுள்ளது)

ஆக்கம் : செ.நாகராஜா,
(ஓய்வுபெற்ற கணக்காளர், கச்சேரி, யாழ்ப்பாணம்)

ஏகவிநியோகஸ்தர்

பூபாலசிங்கம் புத்தகசாலை

பஸ்நிலையம்,யாழ்ப்பாணம். T.P:0212226693
வேம்படிச்சந்தி,யாழ்ப்பாணம். 0212221637

## துரோகி என ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆட்சி உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், ஜனாதிபதியினால் சுதந்திரமாக நிகழ்த்தப்படவிருந்த உரை ரத்துச் செய்யப்பட்டுள்ளது. இது சர்வதேச மட்டத்தில் ஊடகங்களின் மூலம் ஒலி, ஒளிபரப்பப்பட்டுள்ளது. இது எமது ஜனா திபதிக்கும், நாட்டுக்கும் அபகீர்த்தி ஏற்படுத் தும் வகையில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட சதியும், துரோகமும் ஆகும்.

தடைசெய்யப்பட்ட பிரிவினைவாத இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகளும், நேரடியாகவும் மறைமுகமாகவும் அதற்கு ஆதரவு வழங்கும் தீய தேசத்துரோக சக்திகளும் லண்டன் விமான நிலையத்தில் ஜனாதிபதிக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்துள்ளன.

இந்த ஆர்ப்பாட்டத்தைக் காரணம் காட்டி, பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் ஜனாதிபதியினால் நிகழ்த்தப்படவிருந்த உரை ரத்துச் செய்யப்பட்டது.

இக்கேவலமான நிகழ்ச்சியில், இந்த நாடாளுமன்றத்தில் அரசமைப்பை முற்றாக ஏற்றுக்கொண்டு சத்தியம் செய்த ஓர் உறுப்பினரும் கலந்துகொண்டுள்ளார். அவர்தான் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரான டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன" - என்று கூறினார்.

அப்போது ஆளும் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் ஆளும் தரப்பின் முன்வரிசையில் வந்து கூட்டமாக நின்றுகொண்டு "துரோகி, துரோகி, துரோகி. துரோகியை சபையில் இருந்து வெளியேற்றவேண்டும்" என்று கோஷம் இட்டனர்.

"இக்கோஷங்களுக்கு மத்தியில் அமைச்சர் தனது உரையை ஆக்ரோஷத்துடன் தொடர்ந்தார். நாட்டின் கௌரவத்துக்கும், அரசமைப்புக்கும் விரோதமான முறையில் பிரிவினைவாதப் புலிகளுடன் இணைந்து ஜனாதிபதிக்குத் தலைகுனிவை ஏற்படுத்திய இந்தத் துரோகியை இந்தச் சபையில் இருந்து வெளியேற்றவேண்டும். இந்தத் துரோகிக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவேண்டும். பணத்துக்காக நாட்டைக் காட்டிக் கொடுக்கும் துரோகி" - என்றும் அமைச்சர் ஆத்திரத்துடன் கூறினார்.

இப்படிக் கூறி முடிந்ததும் ஆவேசம் வந்தவரைப் போல் தினேஷ் குணவர்த்தன சபையைக் கடந்து டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனவை நோக்கிப் பாய்ந்து சென்றார். அவருடன் சேர்ந்து ஆளும் தரப்பினரும் ஜயலத்தைச் சுற்றிவளைத்துத் தாக்க முயன்றனர்.

படைக்கல சேவிதரும், எதிர்க்கட்சி உறுப்பினர்களும் பெரிதும் சிரமப்பட்டு அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவை இழுத்துவிட்டனர். இந்த இடைப்பட்ட சிறிது நேரத்தில் அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா ஜயலத் ஜயவர்த்தன மீது பாய்ந்தார். இதனால் சபையில் அமளிதுமளி ஏற்பட்டது.

பிரதமர் டி.எம்.ஜயரட்ணவும், சிரேஷ்ட அமைச்சரான கெஹலிய ரம்புக்வெலவும் தமது சகாக்களை அமைதிப்படுத்துவதற்குப் பெரிதும் சிரமப்பட்டனர்.

சபையில் அமைதியை ஏற்படுத்த முடியவில்லை. ஆளும் கட்சி உறுப்பினர்கள் எதிர்க்கட்சியின் ஆசனங்களுக்கிடையில் சென்று ஜயலத் ஜயவர்த்தனவை சுற்றிவளைத்துக் கொண்டு துரோகியை வெளியேற்றவேண்டும் என்று கோஷம் இட்டுக்கொண்டே இருந்தனர்.

சபாநாயகர் சபையில் அமைதி, அமைதி என்று பல தடவைகள் கூறியும், எவரும் அதனைச் செவிமடுக்கவில்லை.

இந்த இடைவெளியில் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன அமைச்சர் தினேஷ் குறிப்பிட்ட சம்பவம் இடம்பெற்ற வேளையில் தான் அங்கு இல்லை என்றும், குறிப்பிட்ட தினத்தில் இத்தாலியில் மிலானோ நகரில் இருந்தார் எனவும் குறிப்பிட்டார்.

அவரது பேச்சை எவரும் சட்டை செய்யாமல் கூச்சல் எழுப்பிக் கொண்டே இருந்தனர். "ஆளும் கட்சி உறுப்பினர்களே இவ்வாறு நடந்துகொண்டால் எப்படிச் சபையை கொண்டு நடத்துவது. விவாதம் நடத்தவிடமாட்டீர்களா?" என்று கடுமையாகக் கூறிய சபாநாயகர், மு.ப. 10.15 மணிக்கு சபை அமர்வை பத்து நிமிடங்களுக்கு ஒத்திவைப்பதாக அறிவித்தார்.

சபை ஒத்திவைக்கப்பட்ட நிலையிலும் ஆளும் கட்சி உறுப்பினர்கள் சவால் விட்டவண்ணம் சபையில் கூடி நின்றனர். இதன் பின்னர் எதிர்க்கட்சி கொரடா ஜோன் அமரதுங்க மற்றும் உறுப்பினர்கள் சகிதம் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன சபையை விட்டு தாமாகவே வெளியேறினார்.

சபை அமர்வுகள் பத்து நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டபோதும் நாற்பது நிமிடங்களின் பின் மு.ப.10.55 மணிக்கே சபை மீண்டும் கூடியது. (உ-சி)

## எம்முடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் நிர்வாக செயற்பாடுகளில் பங்குகொள்ள சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

வடக்கு மாகாண அபிவிருத்திக்கும், அதேபோல் ஏனைய நடவடிக்கைகளுக்கும் பிரிட்டிஷ் அரசு வழங்கிவரும் உதவிகள் குறித்து லியாம் பொக்ஸ் விளக்கினார். (இ-01)

**துயர் பகிர்கின்றோம்**



யாழ். பிரதேச செயலகத்தில் பிரதேச செயலராகக் கடமையாற்றும் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் அவர்களின் அன்பு மாமியார்

*கந்தையா மங்கையர்க்கரசி*

அவர்களின் பிரிவுத் துயரில் ஆழ்ந்திருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். பிரதேச செயலக உத்தியோகத்தர்கள்.

(106805)

# மஹிந்தவின் உரை ரத்தானதில் தொடர்பில்லை என்கிறது பிரிட்டன்

லண்டன்,டிசெ.3

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஒக்ஸ்போர்ட் யூனியன் உரை ரத்துச் செய்யப்பட்டதில் தனக்குத் தொடர்பு எதுவும் இல்லை என பிரிட்டன் அரசு தெரிவித்துள்ளது.

இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டதிலோ அல்லது ரத்துச் செய்யப்பட்டதிலோ பிரிட்டன் அரசு சம்பந்தப்படவில்லை. இந்தக் கூட்டம் ஒக்ஸ்போர்ட் யூனியனாலும் இலங்கைத் தூதரகத்தினாலும் ஏற்பாடு செய்யப்பட்ட பிரத்தியேக நிகழ்வாகும் எனக் கொழும்பில் உள்ள பிரிட்டன் தூதரகம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் ஒழுங்கும் பாதுகாப்பு ஏற்பாடுகளும் ஒக்ஸ்போர்ட் யூனியன் மற்றும் பிரிட்டன் பொலிஸார் தொடர்பானவை. பிரிட்டன் அரசுக்கு இதில் எந்தவித தொடர்பும் இல்லை என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(த)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நடராசா கைலாம்பிகை



ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராசா கைலாம்பிகை நேற்று (02.12.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா - மீனாட்சி தம்பதியரின் அருமை மகளும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - பாக்கியம் தம்பதியரின் மருமகளும் கணபதிப்பிள்ளை நடராசாவின் (சிங்கம் பீடா ஸ்ரோர்ஸ், காங்கேசன்துறை) அன்பு மனைவியும் கவிதா (ஆசிரியை, யா/ஏழாலை மேற்கு, சைவ சன்மார்க்க வித்தியாசாலை), விஜிதா, சிவரூபன் (விற்பனைப் பிரதிநிதி, சென்.அன்ரனீஸ் இன்டர்ஸ்ரீட் குறூப்ஸ்), ஜெயரூபன் (ரூபன் ஸ்ரோர்ஸ், ஏழாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜெகதாம்பிகை (கனடா), சச்சிதானந்தம் (கனடா), யோகாம்பிகை (கொழும்பு), காலஞ்சென்ற தசாவதாரன் மற்றும் அருட்செல்வம் (வவுனியா), ரஞ்சிதமலர் (வவுனியா), ஜெகதீஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (02.12.2010) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஏழாலை உசத்தியோடை இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனஞ் செய்யப்பட்டது.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஏழலை மேற்கு,*
*சுன்னாகம்.*

(106794)

*தகவல் :*
**குடும்பத்தினர்.**

### K.K. சுப்பிரமணியம் J.P.



காரைநகர், தங்கோடை, சின்னாலடியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, தெஹிவளை, இல.28, இறட்ணகராப் பிளேசை வசிப்பிடமாகவும் கொண்டவரும் இளைப்பாறிய சுங்கத்திணைக்கள உதவி அத்தியட்சகருமான K.K.சுப்பிரமணியம் நேற்றுமுன்தினம் 01.12.2010 புதன்கிழமை கொழும்பில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தப்பு - வள்ளியம்மை தம்பதியரின் அருமைப் புதல்வனும் சரஸ்வதியின் (புவனம்) அன்புக் கணவரும் காலஞ்சென்ற ஓவசியர் அம்பலவாணர் - விசாலாட்சிப்பிள்ளை தம்பதியரின் அருமை மருமகனும் வாசுகி, சுரேசன், குருபரன், குகசுதன், ஞானவேல் (குமார்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இரத்தினகுமாரன் (ரகு), சாந்திதேவி, சசிகலா, புவனேஸ்வரி, சானுகா ஆகியோரின் பாசமிகு மாமனும் காலஞ்சென்றவர்களான மீனாட்சி, சீதேவிப்பிள்ளை, அம்பலவாணர், இராஜநாயகம், சரஸ்வதி, செல்லம்மா, யோகம்மா (Colombo), காலஞ்சென்ற மாரிமுத்து, மற்றும் மாணிக்கம், அம்பலவாணர் (Canada), பரமேஸ்வரி (Canada), புலவர் பூரணம் (Colombo) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான முருகேசு, நடராஜா, வள்ளியம்மை, சதாசிவம், கணபதிப்பிள்ளை, வைத்திலிங்கம், குமாரசாமி, தியாகராஜா (Colombo), தாட்சாயினி (Canada), காலஞ்சென்ற பரமசிவம், ஏனாதிநாதன் (Colombo), காலஞ்சென்ற திருமங்களம், மற்றும் இராசரத்தினம் (ஓவசியர்), கோபாலபிள்ளை (Colombo), காலஞ்சென்ற இராசையா (திருநாவுக்கரசு), மற்றும் சௌபாக்கியம் (காரைநகர்) ஆகியோரின் அருமை மைத்துநரும் ரகுபிரகாஸ், ரகுவர்மன், சாந்தீபன், மிதுஷன், கிஷன், அபிராமி, கைலாஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.12.2010) வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 3.30 மணியளவில் தகனக் கிரியைக்காக பொறளை கனத்தை இந்து பொது மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல் :*
**மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள்.**
T.P : 0112714757

(வி/573333)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெற் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.12.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழா உலா



# ...ஞ்சங்கள் பேசுகின்றன

## இணையத்திலும் புகுந்து விட்டவன் உதயன்



இடர்மிகு காலத்தில் வெளிவர ஆரம்பித்த உதயன் பத்திரிகை தனது வெள்ளிவிழாவைக் கொண்டாடுவதையிட்டு நான் மட்டுமல்ல உதயனைப்படித்துச் சுவைத்து பயன்பெறுபவர் யாவருமே பெருமகிழ்வடைவார்கள். நீண்டகாலம் இலங்கையின் தென்பகுதிப் பத்திரிகைகள் யாழ்ப்பாண மண்ணில் வரையறுக்கப்பட்ட அளவில் வாரத்திற்கு ஒருமுறை கிடைத்தபோதும், காகிதாதிகள் தட்டுப்பாட்டின் போதும் கூட தனது காத்திரமான பணியினை உதயன் நிறைவேற்றியது யாவரும் அறிந்ததே. அது மட்டுமல்ல அச்சமின்றி, துணிவுடன் அனைத்துச் செய்திகளையும் தமது வாசகர்களுக்கு வழங்குவதில் உதயன் என்றும் பின்னின்றது கிடையாது.

பலதரப்பட்ட செய்திகளோடு மக்களின் கைகளில் தவழுகின்றது. இன்று நாளாந்த செய்திகளை உதயன் இணையத் தளத்திலும் பார்க்கக்கூடிய அளவுக்கு நவீன தொழில் நுட்பங்களிலும் உதயன் புகுந்து விட்டான். ஊரடங்கு உத்தரவு காலத்திலும், இன்னும் மேலாக குண்டு மழை பொழியும் வேளையிலும் உதயன் தடைப்படாமல் வெளி வருவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய உதயன் பணி மனையை சேர்ந்த சகல தரப்பு உத்தியோகத்தர்களையும் இந்த வெள்ளிவிழா தினத்தில் மனமுவந்து பாராட்டு கின்றேன். காலத்தின் கட்டாய தேவையை அறிந்து செயற் பட்ட, செயற்படும் உதயனுக்கு இவ்வெள்ளிவிழா தினத்தில் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**ஜே.கில்பேட் குணம்,**
*கணக்காளர், பிரதேச செயலகம், தென்மராட்சி.*

## செய்திச்சேவையை உடன் வழங்கும் உதயன்



உதயன் பத்திரிகை நிறுவனம் தனது வெள்ளி விழாவைக் கொண்டாடுவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்ற அதேவேளை அதற்கான வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

பல்வேறு இன்னல்களுக்கு மத்தியிலும் யாழ்.குடாநாட்டு மக்களுக்குச் செய்திச்சேவை வழங்கி எமது மக்களின் பலதரப்பட்ட பிரச்சினைகளை உலகுக்கு உடனுக்குடன் எடுத்துக் காட்டி தனது சேவையை வழங்கிவரும் உதயன் பத்திரிகை நிறுவனம் மேலும் தனது சேவையை தொடர வாழ்த்துகின்றேன்.

**எஸ்.செல்வதாஸன்,** இயக்குநர்,
UNI-ICT Campus (PVT) Ltd,
(Jaffna & Manipay)

## தமிழ் மக்களின் இதய நாயகன் உதயன்



25 வருடங்களை பூர்த்தி செய்யும்
உதயனே - நீ
25 வருடங்கள் மக்களுக்கு
ஆற்றிய சேவைகளும்
அதனால் சந்தித்த
துன்பங்களும் பற்பலவன்றோ
கண்ட இடர் யாவும் களைந்து
செய்திகள் யாவையும் தெளிவாக வழங்கி
மிடுக்குடன் நடை போடும் உன்னைக் காண
உதயவேளையிலே தேடியே ஓடுகின்றோமே நாம்
எம் இதய நாயகனே உதயனே!
பல்லாண்டுகள் உன் பணி தொடர என்றென்றும்
வாழ்த்துகின்றோம் நாம் மனமார.

**சு.வரதபாஸ்கரன்,**
*சமூக சேவை உத்தியோகத்தர், பிரதேச செயலகம், தென்மராட்சி.*

## எம் கரங்களில் தவழ்கின்ற உதயனே!

உதய சூரியன் மலரமுன் எம் கரங்களிலே தவழ்கின்ற உதயனே!

எம் இதயமெல்லாம் குளிர்ந்திட பற்பல செய்தி தாங்கி வரும் உதயனே! நீ



நீதி நெறி தவறாது நடுநிலையுடனே நின்று நேர்மையுடன் வரும் உதயனே! எமக்கு அத்தனை புதினங்களையும் சுடச்சுட காலம் தாழ்த்தாமல் அள்ளித் தரும் இனிய உதயனே! நீ இன்று

பெருவாழ்வு பெற்று வாழ்ந்து பொன்விழா, வைரவிழாக்களும் காண வாழ்த்துகின்றோம்.

**ந.சிவசுப்பிரமணியம்,** *தலைவர், ஸ்ரீ முருகன் அறநெறிப் பாடசாலை, நீர்வேலி.*

## உள்ளதை உள்ளபடி உரைப்பவன் உதயன்

தமிழ் மக்களின் நெஞ்சங்களில் நிறைந்த உதயன் தனது 25 வருட சேவையை நிறைவு செய்யும் இவ்வேளையில் அவனது சேவைகளை எண்ணிப்பார்ப்பதில் மகிழ்வடைகிறோம். சளைக்காமல் நிமிர்ந்து நின்று உள்ளதை உள்ளபடி துணிவுடன்



கூறி செய்திகளையும் பல்வேறுபட்ட பயனுறுதியையும் மட்டுமல்லாமல் ஆக்கத்திறனை வளர்த்தெடுக்கும் முகமாக சிறுவர் பகுதி, இளவல்கள் வட்டம் என்பவற்றையும் மருத்துவம், அரசியல் போன்ற சமூதாயத்திற்கு தேவையான விடயங்களையும் தருவதன் மூலம் நிறைவான பரந்து பட்ட சமூதாய சேவையைச் செய்துவருகின்றது.

தனிநபர் சேவைகளையும் வியக்கத்தக்க முறையில் செய்து வருவது பாராட்டத்தக்கது. முக்கியமாக மரணம் சம்பந்தமான செய்தியை உதயன் நாளிதழில் வெளியிடுவதை மக்கள் விரும்புகின்றனர் என்பது யதார்த்தமான உண்மை. இதற்கான காரணம் மக்கள் உதயன் நாளிதழையே விரும்பி வாங்குவதேயாகும். இதன் மூலம் உதயனின் விசாலமான வளர்ச்சியைக் காணக்கூடியதாயுள்ளது. உதயன் தன் கடந்த காலங்களில் பல்வேறுபட்ட இடர்பாடுகளுக்கும் பாதிப்புக்களுக்கும் முகம்கொடுத்தும் சோர்ந்து விடாமல் சோதனைகளையும் வேதனைகளையும் சகித்துக்கொண்டு அவற்றினையே வென்று வியத்தகு சாதனை படைத்து வளர்ந்து நிற்கும் இந்நாளில் மேலும் மேலும் வளம் பெற்று செழிப்புடன் வாழவேண்டும் எனப் பாராட்டி வாழ்த்துவதில் மட்டில்லா மகிழ்ச்சியடைகின்றேன்.

**பொ.குமாரசாமி,**
*கிராம சேவை உத்தியோகத்தர் [ நிர்வாகம் ], பிரதேச செயலகம், சாவகச்சேரி.*

## உயிரோட்டமான செய்திகளைத் தருபவன் உதயன்

மக்களுக்கு பொதுசன அபிப்பிராயங்களையும் பல்வேறு செய்திகளையும் வழங்குவது ஊடகங்களே. இதில் பத்திரிகை சகல தரத்திலும் உள்ள மக்களால் பயன்படுத்தப்படும் சிறந்த



ஊடகமாக காணப்படுகிறது. நவீன தொழில் நுட்பத்துடன் உதயன் பத்திரிகை இலங்கைத்தமிழ் வாழ் மக்களின் இதயங்களில் உலாவரும் அதே வேளை புலம்பெயர் தமிழ் மக்களின் நெஞ்சங்களிலும் இணையத் தளத்தினூடாக வலம் வருகிறது. பல இடர்களுக்கு மத்தியிலும் செய்திகளைப் பிரசுரித்த ஒரு தமிழ் நாளிதழ் உதயன் என்றால் அது மிகையாகாது.

மொழி, பண்பாடு, கலாசாரம் என்பவற்றை உயிரோட்ட உணர்வுடன் செய்திகளை வெளிப்படுத்துவதிலும் பாதிக்கப்படும் மக்களுக்குக் குரல் கொடுப்பதிலும் தற்துணிவுள்ள பத்திரிகையாக உதயன் மிளிர்கிறது.

உதயன் எவ்வாறு கடந்த காலங்களில் இடைவிடாத சேவையையும் பயனுள்ள தகவல்களையும் மற்றும் செய்திகளையும் அச்சமின்றி பிரசுரித்ததோ அதோ போன்று மென்மேலும் புதிய பல விடயங்களைத் தாங்கிய வண்ணம் மக்களுக்குச் சிறப்பான சேவையைப் பல்லாண்டு காலம் வாழங்க எனது நல்லாசிகள்.

**எஸ்.பி.பாலகரன்,**
*தலைமையக சமுர்த்தி முகாமையாளர், பிரதேச செயலகம், தென்மராட்சி.*

## மக்கள் கனவை நிறைவு செய்பவன் உதயன்

வெள்ளிவிழாவைக் கொண்டாடும் உதயன் நாளிதழானது உலகம் முழுவதும் பரந்து வாழும் தமிழ் மக்களின் கனவை நிறைவு செய்வான். கடந்த 25 வருட கால இன்னல்களிலும் தனது சேவையினை மக்களுக்கு ஆற்றியது மட்டுமல்லாது தனது நற்பணிகள் மூலம் செய்திகளை வெளியிட்டு எத்தனையோ குழந்தைகளின் எதிர்காலத்தை வளம் பெருகச் செய்துள்ளான்.



உதயன் பத்திரிகையில் வெளியாகும் எந்தச் செய்தி ஆயினும் மக்களுக்கு பயன்படும் செய்திகளாகவே உள்ளன. செய்தி ஆசிரியரினால் ஒழுங்குபடுத்தப்படுகின்ற கதைகள், கட்டுரைகள், மாணவர்களுக்கான கற்றல் பகுதிகள், தலைப்புச் செய்திகள், விசேட செய்திகள், வெளிநாட்டுச் செய்திகள், விளையாட்டுச் செய்திகள், பிரத்தியேக செய்திகள், விளம்பர செய்திகளுடன் கவர்ச்சிகரமான வர்ணப்படங்களும் மக்களின் மனம் நிறைவான தரமான செய்திகளையும் இதுவரை காலமும் வழங்கியதை போல் இனிவருங் காலங்களிலும் வழங்க வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனின் பாதங்கள் பணிந்து வாழ்த்துகின்றேன்.

**சி.சிறீகாந்தன்,**
*முகாமையாளர், இலங்கை வங்கி, வல்வெட்டித்துறை.*

## காலமெல்லாம் வாழும் உதயன்

தமிழ் மக்களின் உதயசூரியனாம் உதயன் கடந்த இருபத்தைந்து வருடங்களாக குடாநாட்டு மக்களாகிய எம் கைகளில் தவழாத நாளே கிடையாது. தமிழ் மக்களின்



குரலாக எந்நேரமும் ஒலித்துக்கொண்டிருக்கும் உதயனின் அர்ப்பணிப்பு நாம் அனைவரும் அறிந்ததே. உண்மை, துணிவு, தெளிவு இவற்றைத் தாரக மந்திரமாகக் கொண்டு சேவைபுரியும் உதயன் மக்களின் மனம் நிறைந்த நாளிதழாக 25 வருடங்களைப் பூர்த்தி செய்வதையிட்டு நாம் அனைவருமே பெருமகிழ்வடைகின்றோம். கடந்து வந்த பாதையில் பல்வேறு இடர்களுகளையும், சவால்களையும் எதிர்கொண்டு துணிவுடன் சேவையாற்றும் உதயன் வரும் காலமெல்லாம் மேன்மேலும் சிறப்புற அமைய எமது வாழ்த்துக்கள்

**கா.குணசிங்கம்,** *அதிபர், யா/ மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம், சாவகச்சேரி.*

## சேவையின் மகத்தானவன்

இருபத்தைந்து அகவைதனைப் பூர்த்தியாக்கி வெள்ளிவிழாக்காணும் தமிழ் பத்திரிகையாம் உதயனே! எத்தனையோ ஊடகங்கள் போட்டி போட்டாலும், அத்



தனையுடனும் போட்டியிட்டு ஆல் போல தளைத்து எட்டி நடைபோட்டு மணம் வீசும் உன்பணி மகத்தானதே.

செய்தியும் விளம்பரமும் என்று நின்றுவிடாது கல்வி, கலாசார அரசியல் பணியென அனைத்தையும் கோர்வையாக்கி சுடர் ஒளியாய் தவழவிடும் உன்பணி பெருவிருட்சம் இத்தரணி உள்ளவும் உன் தரம் உயர்ந்த பணிகள் இனிதே தொடர எனது உள்ளம் நிறைந்த வாழ்த்துக்களை கூறுவதில் பெருமகிழ்வடை கின்றேன்.

**வி.விநாயகமூர்த்தி,**
*அதிபர், யா/ மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்.*

## மக்கள் சேவையில் இளைஞன் உதயன்

உதயன் பத்திரிகையானது கடந்த இருபத்தைந்து வருடங்களில் பல சிக்கல்கள், இடையூறுகள் குறுக்கிட்ட பொழுதும் அவற்றை எல்லாம் தாங்கி உன்னத நிலையை



அடைய அதன் தளராத துணிவும் தன்னலம் அற்ற சேவையுமே காரணம் என்றால் மிகையாகாது. பல சேவைகளையும் ஆற்றிவரும் உதயன் மேலும் அதன் சேவைகளை விரிவுபடுத்தி மக்கள் சேவை செய்யவேண்டும் என்பதே எமது விருப்பம் ஆகும். இதற்காக எல்லாம் வல்ல புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை ஐங்கரனை அருள்புரிய வேண்டிநிற்கின்றோம்.

26 ஆம் ஆண்டில் கலடி எடுத்துவைக்கும் உதயன் மேலும் சிறப்பாக இயங்கி மக்களுக்கு மகத்தான சேவையை ஆற்றி பல நூற்றாண்டுகளுக்குச் சிறப்பாக வாழ்க வளர்க என்று வாழ்த்துகிறேன்.

**சி.கஜமுகன்,** *தலைவர், இந்து இளைஞர் சங்கம், புன்னாலைக்கட்டுவன் தெற்கு, சுன்னாகம்.*

## ஊடகப்பணியில் வெற்றி நடை போடட்டும்

உதயன் தனது 25 ஆவது அகவையில் காலடி எடுத்து வைக்கும் இந்நாளில் தமிழ் பேசும் மக்களின் உளம் மகிழ்ந்திருக்கும் இவ்வேளையில் நாமும் மனமார வாழ்த்துகின்றோம்.



உனது 25 ஆவது வருட சேவையினை இனிதே நிறைவேற்றிய பெருமிதத்துடன் நிமிர்ந்து நிற்கும் உதயன் தமிழ் பேசும் மக்களின் அரசியல் பிரச்சினையாயினும் சரி, சமூகப் பிரச்சினை யாயினும் சரி துணிந்து நிமிர்ந்து பேனாவால் எழுதிக் கொண்டிருப்பவன்.

ஊடகப் பணியில் வரலாற்றுப் பாதையில் நடைபோடும் உதயன் தனக்குண்டான சவால்களை, இடர்களை, இழப்புக்களை எல்லாவற்றையும் தாங்கி அஞ்சாது துணிந்து கருத்துச் சொன்னவன். உதயனின் பணி இன்னும் எமக்குத் தேவை. உதயன் தொடர்ந்தும் ஊடகப் பணியில் வெற்றி நடைபோட வாழ்த்துகின்றோம்.

**V.N.மதிநாதன் (கணித ஆசிரியர்),**
*இயக்குநர், ஐடியல் அக்கடமி, [யாழ், மானிப்பாய், காரைநகர், சண்டிலிப்பாய்]*

...ன், உங்களுக்காகவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் வெள்ளி...

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வாசகர் நெஞ்...

### சாதனை படைப்பவன் உதயன்

உதயனின் தோற்றமும், வளர்ச்சியும் மிக விரைவாக உயர்ந்துள்ளது. இவ் வளர்ச்சிக்கு தம்மை அர்ப்பணித்த அனை வரையும் இவ்வேளை நினைவு கூருகிறேன்.



இன்றைய சமகாலத்தில் சமுதாயத்தில் நல வாழ்வுக்கான வளர்ச்சியையும், அபிவிருத்தியையும் மேம்படுத்துவதற்குப் பக்கப் பலமாக இருப்பவை பத்திரிகைகளே. நாட்டில் நிகழும் சம்பவங்கள் அனைத்தினையும் உடனுக்குடன் அறிந்து கொள்வதற்கு பத்திரிகையின் பங்கு அளவிடற்கரியது. அந்த வகையில் இப்பத்திரிகை 25 ஆண்டு வரை பல சவால்களையும் எதிர்கொண்டு வளர்ச்சியடைந்துள்ளது. சிறப்பான சமுதாயத்தைக் கட்டி யெழுப்புவதிலும் அரும்பணியாற்றியுள்ளது.

பத்திரிகை ஆரம்பித்த காலத்திலிருந்து இன்றைய வளர்ச்சி வரை தம்மையே அர்ப்பணித்த அனைவரையும் பாராட்டுகிறேன். இப்பத்திரிகை மேலும் பல வளர்ச்சிகளையும், சாதனைகளையும், புகழையும் பெற இறைவனை வேண்டுகிறேன்.

**வைத்திய கலாநிதி B. சசீந்திரன்,**
Human Restorative & Reserch Center,
*தொண்டமானாறு.*

### பல்வடிவம் தாங்கி வருபவன் உதயன்

தகவல் தொடர்பு சாதனங்களில் பத்திரிகை பிரதான இடத்தை வகிக்கின்றது. மொழியையும், சமூகத்தையும் பாதுகாத்தல் பத்திரிகையின் பிரதான கடமையாகும். அத்துடன் காலத்தின் தேவையறிந்து செயலாற்றுவதும் பத்திரிகையின் கடமைகளில் முக்கிய கூறாகும். அவ்வகையில் எமது உதயனும் கட்டுரை,கவிதை, சிறுகதை,விமர்சனம், சிறுவர்பகுதி, விவாதம் என பல்வேறு வடிவந்தாங்கி தமிழையும், சமூகத்தையும் கால்நூற்றாண்டுகளாகப் பாதுகாத்து வருவதும் பாராட்டுக்குரிய விடயமாகும். தனது 25 ஆவது அகவையைப் பூர்த்தி செய்து வெள்ளிவிழா நாயகனாக வெற்றிக்களிப்பில் மூழ்கியிருக்கும் உதயனை சன்மார்க்க மகாவித்தியாலய சமூகத்தினராகிய நாமும் பாராட்டுவதில் பெருமை கொள்ளுகின்றோம்.

''எண்ணிய வெண்ணியாங்கு எய்துப வெண்ணியார்
திண்ணியராகப் பெறின்'' என்னும் வள்ளுவப் பெருந்தகையின் வாக்கினை ஏற்று, எண்ணிய கருமங்களை வினைத்திறத்துடன் ஆற்றிக்கொண்டிருக்கும் உதயனே நீ பல் லாண்டு வாழ உவகையுடன் வாழ்த்துகின்றோம்.

**திருமதி எம். விமலநாதன்,**
*அதிபர்,*
*யா/ சன்மார்க்க மகா வித்தியாலயம்,*
*யாழ்ப்பாணம்.*

### தமிழினத்தின் விடிவுக்காக உயிரையும் துச்சமென மதித்துழைத்த உதயன்

இலங்கையின் தமிழ் ஊடகத்துறையில் முத்திரை பதித்து தனது 25ஆவது அகவையைப் பூர்த்தி செய்து வெள்ளிவிழாக் கொண்டாடும் உதயன் பல்வேறு இன்னல்களையும், காழ்ப்புணர்ச்சி கொண்டவர்களின் அடாவடித்தனங்களையும் அட்டகாசங்களையும் எதிர்கொண்ட போதிலும் தமிழினத்துக்காக உதயனின் சேவைமுடக்கப்படவோ, மடக்கப்படவோ முடியாதவாறு துணிச்சலுடன் செயற்பட்ட வரலாற்றை சமூகம் என்றும் நினைவுகூறும்.

சுதந்திரத்திற்குப்பின்னர் தமது உரிமைக்காகப் போராடிவரும் தமிழினத்திற்கு உதயன் கடந்த 25 வருட காலமாகக் காத்திரமான பங்களிப்பை நல்கி வருகின்றது. மூன்று தசாப்தகால யுத்த நெருக்கடிகளில் தமிழினம் சிக் கித்தவித்த போதெல்லாம் உயிரைக்கூட துச்சமாக மதித்து உதயன் ஆசிரிய பீடம் இம்மக்களுக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டமையைத் தமிழினம் என்றும் மறந்துவிட முடியாது.

வடக்கு கிழக்கில் உழைக்கும் தொழிலாளர் வர்க்கத்திற்காகக் கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாகக் குரல்கொடுத்து வரும் எமது சங்கம் சார்பில் உதயனின் சேவை மேலும் பல்லாண்டுகள் சிறக்க கோணேசபெருமானின் நல்லாசிகளை வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

**எஸ்.லோகநாதன்,**
*தலைவர்,*
*அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம்,*
*கல்முனை.*

### தமிழ் மக்களின் நல்ல நண்பன் உதயன்

மக்கள் மனம் நிறைந்த உலகம் அறிந்த உரிமைத் தமிழ் நாளிதழ் உதயன் பத்திரிகை தனது 25 வது



வயதினைப் பூர்த்தி செய்து 26ஆவது வயதினில் ஊன்றிக் காலடி எடுத்து வைக்கும் வெள்ளிவிழா வேளை தனில் ஆசியுரை கூறும் பாக்கியம் கிடைத்ததனையிட்டு மகிழ்வடைகிறேன்.

1980களில் குடாநாட்டுத் தமிழ் மக்கள் உள்நாட்டுப் பிறநாட்டுச்செய்திகளை அறிவதற்குப்படாத பாடுபட்டனர். உண்மை. இதனை ஈடுசெய்ய உதயமாகினான் உதயன் எனும் நாமம் கொண்ட பத்திரிகை.

இன்றும் தனது உரிமைக் குரல்தனை நாடளாவிய ரீதியிலும் உலகளாவிய ரீதியிலும் பரந்த நோக்குடன் சீரும் சிறப்புடனும் தனக்கென உரிய பாரம்பரிய பல்வேறு துறைகளிலும் பரந்து விரிந்து ஒலிக்கிறான் என்றால் அது மிகையாகாது. தமிழுலகில் தனக்கென ஒப்பாரும் மிக்காருமில்லாது சுடச்சுடச் செய்திதனைப் பரப்பி நிற்கும் பத்திரிகை உதயனே ஆகும். ஈடிணையில்லாச் சேவைதனை உதயன் தமிழுலகிற்கு அர்ப்பணிப்புடன் வழங்கித் தேசமிகுசேவையின் புகழினை மென்மேலும் மெருகேற்றி வெளிவர வேண்டுமென்பது எமது ஆவல்.

உலகெல்லாம் செறிந்து சிதறிவாழும் தமிழ் மக்களின் உள்ளம் தழுவும் செய்திகளை மூலை முடுக்கெல்லாம் பரவச்செய்யும் உதயனின் வெள்ளிவிழா வேளை தனில் அனைத்துத் தமிழுள்ளங்களும் மனமகிழ்ச்சியுடன் உதயனின் சேவைதனைச் சிறப்புடன் நீடுகாலம் ஆற்றும் வண்ணம் செய்வோமாக.

**சிவஸ்ரீ தர்மையா துரை சுவாமி ஜெகநாதன் ஐயர்,**
*ஓய்வு பெற்ற பிரதி முகாமையாளர்,*
*மக்கள் வங்கி.*

### வரலாற்றை உணர்த்துபவன் உதயன்

ஈழத் தமிழ் மக்களின் உதிரத்தில் உறைந்து உணர்ச்



சிப் பிளம்பாய் உருவெடுத்த உதயன் தனது வெள்ளிவிழாவை தலை நிமிர்ந்து தன்மானத்துடன் கொண்டாடுவதையிட்டுப் பெருமையடைகிறேன்.

ஈழத்தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி உலகத்தமிழ் மக்கள் மத்தியிலும் ஓங்கி ஒலிக்கும் உதயன் கடந்த காலத்தில் நசியுண்டு. இடர்பட்டு அல்லல்பட்ட மக்களின் அவலக் குரலாய் ஒலித்தவன் இன்று 25 ஆவது ஆண்டை பல்வேறு சவால்களுக்கு மத்தியில் முகம் கொடுத்து தமிழ் மக்களின் உணர்வாய் உருவெடுத்து அன்றைய வரலாற்றிலும் இன்றைய வரலாற்றிலும் சுமந்து வந்ததை விட இனிவரும் வரலாற்றில் ஈழமக்களுக்காய் திறமை யான இளைய தலைமுறையை உருவாக்க நீடுழி காலம் வாழ எனது மனம் திறந்த வாழ்த்துக்கள்.

**ப.தர்மகுமாரன்,**
**[illegible] செயலாளர்,**
*[யாழ்.மாவட்டப் பாடசாலைகள்.]*

### வீறுநடை போடும் வீரன் உதயன்

யாழ். மக்களின் மனதில் மட்டுமன்றி வெளிமாவட்டங்கள், மேலைத்தேய நாட்டு தமிழ் மக்களின் மனங்களிலும் எம் மக்கள் பட்ட சொல்லொணாத் துன்பங்களை உண்மையோடும், நேர்மையோடும் துணிவோடும் உலகிற்கு எடுத்துச் சொன்ன உன்னத பேராளன். தமிழ் மக்களின் உரிமைக்குரலாகவும் கல்வி, சமய, சமூக கலாசாரங்களை தன்னகத்தே தாங்கிய பல்துறை சார் பண்பாளனாய் தன்னை இனங்காட்டியவன். பல இன்னல்களின் மத்தியிலும் ஊடகத்துறையின் குரல்வளை நெரிக்கப்பட்ட வேளையிலும் நலிந்து விடாமல் நெஞ் சுரத்துடன் வீறுநடை போட்ட மாவீரன். தனது 25ஆவது அகவைவையைப் பூர்த்தி செய்து வெள்ளி விழாக் காணும் இந்நாளில் உதயனின் பணிகளைச் சொல்லில் வர்ணிக்க முடியாது. உதயனின் புகழ் பட்டொளி வீசி உலகெல்லாம் பிரகாசிக்க வாழ்த்துகின்றேன்.

**எஸ். அன்ரன் செல்வராசா**
**உதயன் முகவர்,**
*மொடேர்ன் ஸ்ரோர்ஸ்,*
*பஸ் நிலையம், நெல்லியடி.*

### மனங்களை வென்றவன் உதயன்



யாழ்ப்பாண மாநகரிலிருந்து வெளி வரும் தமிழ் பத்திரிகைகளில் தனக்கென ஓர் இடம் பதித்து ஈழத்துத் தமிழ் பேசும் மக்களுக்குத் தனித்துவமான சேவையினை ஆற்றி 25ஆவது அகவையைப் பூர்த்தி செய்து வெள்ளி விழா கொண்டாடும் உதயன் நிறுவனத்தினருக்கு என் நல்வாழ்த்துக்களைக் கூறுவதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

பத்திரிகைத் தர்மம், நேர்மை, துணிச்சல், உறுதி என்பவற்றின் மறுபொருள் உதயன் நாளிதழ் என்றால் அது மிகையல்ல. கடந்த 25 ஆண்டுகளாக ஈழத்துத் தமிழ் பேசும் மக்களின் உரிமைக்குரலாக தன்னுடைய சேவையை மிகச் சிறப்புடன் உதயன் நாளிதழ் ஆற்றி வருகின்றது.

தமிழ் மக்களின் மனங்களை வென்ற உதயன் நாளிதழின் முகாமைத்துவம், பணிப்பாளர், பிரதம ஆசிரியர், செய்தி ஆசிரியர்கள், நிறுவன ஊழியர்கள், செய்தியாளர்கள் அனைவரையும் இவ்வேளை பாராட்டுவதுடன் உதயன் எம்மக்களுடன் இணைந்து உன்னதமாக சேவையாற்றி மேலும் பல விழாக்களைக் காண வேண்டுமென மனமார வாழ்த்துகின்றேன்.

**ஆர். வரதீஸ்வரன்,** *பிரதேச செயலர்,*
*வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை.*

### நீதியின் கண்ணாடி போல் விளங்குபவன்

தமிழ் மக்கள் எங்கு வாழ்கிறார்களோ அவர்களுக்கு நீதிக்குரல் கொடுத்து பணியாற்றி வெள்ளிவிழாக்காணும்



உதயன் நாளிதழ் கால் நூற்றாண்டைக் கடந்து வீர நடை போட்டு கால் எடுத்து வைக்கும் இவ்வேளையில் தொடர்ந்தும் இன,மொழி,சமய பாகுபாடின்றி வளமுடன் செழித்தோங்க நீதியின் கதிரவனாகத் தோன்றி வாசகர் மனங்களைக் குளிர்விக்க எனது நல்வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்து நிற்கின்றேன்.

**அருளப்பு கொர்னேலியஸ்,**
*யாழ்.மாநகரசபை உறுப்பினர்.*

### சமூகப் பிரச்சினைகளை வெளிப்படுத்துபவன் உதயன்



தமிழ் மக்களின் உள்ளம் கவர்ந்த உதயன் வெள்ளிவிழா காண்பதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். மிக இக்கட்டான காலங்களிலும் பல இன்னல்களுக்கு மத்தியிலும் எதிர் நீச்சல் போட்டு எழுச்சியுடன் எழுந்து நின்று உள்நாட்டு வெளிநாட்டுச் செய்திகளை அடக்கமாகவும், ஒடுக்கமாகவும் அழகாகவும் ஏந்தி வருவதுடன் மக்களுக்குத் தேவையான ஏனைய சகல விடயங்களையும் வெளிப்படுத்தும் நாளேடு உதயனாகும். சமூகத்தில் ஏற்படும் பிரச்சினைகளைத் துல்லியமாக வெளிப்படுத்தி அவற்றுக்குத் தீர்வையும் பெற்றுக் கொடுக்கும் நல்நோக்குடன் சேவையாற்றி வரும் உதயன், மேல் மேலும் நீண்டகாலம் ஒளிவிட்டுப் பிரகாசிக்க மனமார வாழ்த்துகின்றேன்.

**மு.செல்லையா,** *ஓய்வுபெற்ற அதிபர்*
*முன்னாள் வடமாகாண அதிபர் சங்கச் செயலாளர்.*

### ஊடக ஆயுதம் உதயன்

உதயன் நாளிதழ் ஈழத்தமிழர்களுக்கு இன்னல் வந்துற்ற போதெல்லாம் எழுதது சமர்புரிந்த எமது பண்



பாட்டு ஆயுதம். மக்களின் எதிர்ப்புக் குரலையும், ஆறாத அவலத்தையும், ஆற்ற முடியாத சோகத்தையும் அடக்குமுறைக்காலத்து மௌனங்களையும் எம்மோடும் வெளியுலகோடும் பகிரும் பணியில் உதயனுக்கு 25 அகவை பூர்த்தியாவதையிட்டு மகிழ்ச்சியும், பெருமிதமும் அடைகின்றோம். உதயனின் வெள்ளிவிழா சிறப்புற எமது இதயம் கனிந்த வாழ்த்துக்களுடன் இன்னும் பல்லாண்டுகள் தமிழர்கள் முற்போக்குச் சிந்தனையுடன் வாழப் பணியாற்ற வேண்டும் என்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**வி.சுந்தரலிங்கம் உதயன் முகவர்,**
*ரஜினி பீடா ஸ்ரோர்ஸ்,*
*இமையாணன், உடுப்பிட்டி.*





என்றும் உங்களுடன், உ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழா உலா




## ஞ்சங்கள் பேசுகின்றன

### பாரதி கண்ட கனவு உதயன்



வெள்ளிவிழாக் காணும் உதயன் நெஞ்சில் உரமும், நேர்மைத்திறனும் இருந்த காரணத்தால் எந்த ஊடகமும் சந்திக்காத பல இடர்களைச் சந்தித்தும் உயிர்த்தியாகம், பொருள் இழப்பு என்பவற்றைச் சந்தித்தும் வாசகர்களின் மன உளைவுக்கு மத்தியில் வீறுநடை போடுகின்றது.

கடந்த 25 வருட காலமாக இப்பிரதேச மக்களது கல்வி, கலாசாரம், சமூக பொருளாதார முன்னேற்றத்துக்காக உயர்ந்த இலட்சியத்துடன் வீறுநடைபோட்டு வருவதையிட்டு நாம் பெருமைப் படவேண்டியுள்ளது.

நான் பத்திரிகை விநியோகஸ்தராக கடந்த காலங்களில் உதயன் பத்திரிகையினை விற்பனை செய்தமையால் பல அச்சுறுத்தல்களை எதிர்கொண்டேன். இதுவும் அப்பத்திரிகையின் நேர்மைக்கு சவாலாக அமைந்த செயலாகும்.

மக்களின் மனம் நிறைந்த உதயன் எதிர்காலத்தில் பல வர்ணங்களில் கொழும்பு பத்திரிகைகளிலும் மேலான வடிவமும் வனப்பும் தாங்கி வெளிவந்து வாசகர்களது விருப்பங்களை நிறைவேற்ற வாழ்த்துகின்றேன்.

**சி.பத்மநாதன், தலைவர்,**
*பருத்தித்துறை வர்த்தகர் சங்கம்*
*உதயன் பத்திரிகை முகவர்.*

### உதயனின் மதிப்பு அளப்பரியது



காலை ஐந்தரை மணிக்கெல்லாம் உதயன் பத்திரிகைக்காக மக்கள் கூடிவிடுவார்கள். பத்திரிகை வரத் தாமதமானால் அவர்கள் என்ன நடந்ததோ தெரியவில்லை. எப்பொழுது உதயன் வரும், என எதிர்பார்த்துக் காத்து நிற்பார்கள்.

அந்தக் காட்சி, மக்கள் உதயன் பத்திரிகை மீது வைத்துள்ள நம்பிக்கையைப் பிரதிபலிப்பதாகவே இருக்கிறது. நாட்டில், உலகத்தில் நடைபெறும் செய்திகளை மட்டுமல்லாது மாணவர்களின் கல்வித்தேவைக்கான பாடங்களை, பல்சுவை நிகழ்வுகளை மரண அறிவித்தல்களை, வாழ்த்து நிகழ்வுகளை, மிக அழகான முறையில் வெளிவிடும் ஒரே பத்திரிகை உதயன் என்ற காரணத்தினால் அதன் மதிப்பை நேரடியாகக் கண்டு களிப்பவர்கள் முகவர்களாகிய நாமே. அந்த வகையில் தமிழ் பேசும் மக்களுக்கு இருபத்தைந்து வருடங்களாக நற்சேவை புரிந்து வரும் பத்திரிகையான உதயனதும் அதன் சகோதர வெளியீடான சுடர்ஒளியினதும் வளர்ச்சி கண்டு என் இனிய வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

**கி.கந்தசாமி, உதயன் முகவர்,**
*மனோ களஞ்சியம்,*
*கனகரத்தினம் வீதி, அரியாலை.*

### செந்தமிழ் மணம் பரப்பும் உதயன்

தேனிலும் இனிய செந்தமிழ் மணம் பரப்பும் உதயன் நாளிதழ் குடும்பத்திற்கு அகில உலகெங்கும் வாழும் செங்குந்தர் சமுதாயத்தின் வெள்ளிவிழா நல்வாழ்ந்துக்களை, செங்குந்தர் சங்கத்தின் பொதுக்குழு மற்றும் நிர்வாக சபை உத்தியோகத்தினரும் இவ்வமைப் பின் தலைவரும் இணைந்து தெரிவித்துக் கொள்ளு கின்றோம்.

**எஸ்.கே.கிருபாகரன்,**
*தலைவர்,*
*செங்குந்தர் அபிவிருத்திச் சங்கம், யாழ்ப்பாணம்.*

### உண்மைக்கு உந்துசக்தி உதயன்

கடந்த இருபத்தைந்து ஆண்டுகாலமாக தமிழ் மக்களின் அபிமானம் பெற்ற நாளிதழாக மிளிரும் உதயன் பத்திரிகை செய்திகளை மட்டும் என்றல்லாது மக்களுக்குப் பயன்பெறும் ஊடகத்துறையில் பல சேவைகளை வழங்கிவருவது பாராட்டுதற்குரியதாகும். ஆனால் இந்த இருபத்தைந்து ஆண்டுகளில் பல இன்னல்களுடன் காரியாலயம் எரியூட்டப்பட்டும், சில ஊழியர்கள் கொலை செய்யப்பட்டும் உதயனின் ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டும் நேர்மையாகவும், உண்மையாகவும் அயராது செய்திகளை உடனுக்குடன் மக்களுக்கு அளித்துவருவது பெரும் பாராட்டுதற்குரியதாகும். உதயனின் சேவை தொடர எல்லாம் எல்ல இறைவனை இறைஞ்சி எனது பாராட்டையும், வாழ்த்துக்களையும் அக மகிழ்ந்து தெரிவிக்கின்றேன்.

**மு.பரமேஸ்வரன்,**
*ஓய்வுபெற்ற நூலகர்,*
*பொருளாளர், தான்தோன்றி சிவன் கோயில், சாவகச்சேரி.*

### தமிழ் மக்களின் நல்ல நண்பன் உதயன்



வெள்ளிவிழாக் கொண்டாடும் உதயன் பத்திரிகைக்கு எனது மனமார்ந்த வாழ்த் துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின் றேன். உதயன் பத்திரிகை என்றென்றும் அழியா சொத்தாக இருந்து யாழ். மக்கள் மிக விரும்பும் பத்திரிகையாக தோன்றியது. மூன்று இடங்கள் மாறியும் அஞ்சாத நெஞ்சுரத்துடன் மக்களுக்குச் செய் தியை மட்டுமல்லாமல் மாணவர்களுக் கான கற்றல் செயற்பாடுகளுக்கும் உதவுகின்றது. இப்பத் திரிகை நீண்டு நிலைபெற்று பல்லாண்டுகாலம் எங்கள் சந்ததிக்கு செய்தியை அள்ளித்தர முருகக் கடவுளைப் பிரார்த்திக்கின்றேன்.

**ச.சண்முகரத்தினம், உதயன் முகவர்,**
*அச்சுவேலி.*

### ஓங்கி ஒலிக்கட்டும் உதயனின் குரல்



தமிழ் மக்களின் இதயம் கவர்ந்த அபிமான நாளிதழான உதயன் பத்திரிகை தனது வெள்ளி விழாவைக் கொண்டாடுவதையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்த இருபத்தைந்து வருடங்களிலும் இப்பத்திரிகை நிறுவனம் பல துன்ப, துயரங்களுக்கும் முகம் கொடுத்து எதிர் நீச்சல் போட்டுள்ளது என்றால் அது மிகப் பெரும் சரித்திரம் என்று தான் சொல்ல முடியும்.

இனிவரும் காலங்களிலும் தமிழ் மக்களது உணர்வுகளை வெளி உலகிற்குத் தெரியப்படுத்தி தமிழ் மக்களின் உரிமைக்குரலாக ஓங்கிஒலிக்க எமது நல்வாழ்த்துக்கள்.

**ச.வன்னியசிங்கம்**
**உதயன் முகவர்,**
*குணம் ஸ்ரோர்ஸ், 517, நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

### உதய சூரியன் எம் உதயன்



இருள் சூழந்து, இந்த நாடு, இன்னல்கள் மத்தியில் தவித்தபோது உதய சூரியன் போல் தினமும் அதிகாலையில் உதித்து, எமது மன இருளை அகற்றி ஒளியைத் தந்த உதயன் பத்திரிகையின் முகவர் என்ற வகையில் உதயனின் வெள்ளிவிழாவுக்கு வாழ்த்துத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கால் நூற்றாண்டு கழிந்து விட்ட இவ் வேளையில் இன்னமும் தமிழ் மக்களது துன்பதுயரங்கள் முற்றாக நீங்கவில்லை. ஆதலால் உதயனின் பணி இன்னும் பல்லாண்டு எமக்கு அவசியமாகிறது.

உதய சூரியன் உதிக்குமட்டும் உதயனே! நீயும் உதிக்க வேண்டும் என்று எல்லாம் வல்ல நல்லைக் கந்தனைப் பணிந்து வேண்டுகின்றேன்.

**கி.பாக்கியநாதன், உதயன் முகவர்,**
*இராசாவின் தோட்டம்,*
*யாழ்ப்பாணம்.*

### உதயனின் பயணம் தொடரட்டும்

நேற்றுப் போலுள்ளது உதயன் உதித்து. எம் வாழ்வோடும் வளத்தோடும் இணைந்து பணி தொடரும் உதயனின் பயணம் இளைஞர்களுக்கு உரிய உத்வேகத்துடன் 25 வயதிலிருந்து மேலும் மக்களுக்காய் சேவையாற்ற உதயனுக்கு இதயங் கனிந்த நல்வாழ்த்துக்கள்.

உதயனின் உடன்பிறப்புக்களான 'சஞ்சீவி' 'அருச்சுனா' என்பவையும் சீரஞ்சியியாக வெளிவரவேண்டும். இளைஞர்களையும், சிறார்களையும் உலகத்தோடு ஒட்டி உறவாடி வாழவைக்கும். தகவல் தொழில்நுட்ப வழி காட்டியாகவும், புதிய கல்விச் செல்நெறி ஆசானாகவும் அவை திகழ வேண்டும்.

எந்தவிதச் செய்தியையும் பத்திரிகை ஊடகங்களால் அறியும்போது, வாசகனின் படைப்பாற்றல் வளர் கிறது என்பதைக் கருத்திற்கொண்டு மேலும் வாழ வளர இறையாசியை வேண்டிக் கொள்கின்றோம்.

**செல்லக்கண்டு செல்வராஜா,**
*உதவிக் கல்விப் பணிப்பாளர்,*
*கிளிநொச்சி கல்வி வலயம்.*

### உலகெங்கும் தமிழர்களின் புகழ் பரவச் செய்யும் உதயனே!



இருள் சூழ்ந்த காலத்தில் இன்னல்கள் பல அனுபவித்த எம் மக்களுக்கு, அஞ்சா நெஞ்சத்துடன், அர்ப்பணிப்புக்களுடன் அளப்பரிய சேவையாற்றி உரிமைக்குரல் கொடுத்து வரும் உதயனின் 25 வருடகால வளர்ச்சி கண்டு உவகை கொள்ளும் உலகத் தமிழர்களில் நாமும் சேர்த்து வாழ்த்துகின்றோம்.

நீதி நேர்மைக்காகப் போராடி, எத்தனை சோதனைகள் வந்தாலும் தினந்தோறும் மக்களின் கைகளில் தவழ்ந்து வந்து மனஉறுதி தந்தாய் உதயனே! இன்றும் பல்லாண்டு காலம் தொடரட்டும் உன் புனிதமான சேவை.

**T.தனுஷன்,** *இயக்குநர்,*
STR Computer System,
384,Navalar Road, Jaffna.

### எட்டுத்திக்கும் மணம் பரப்பட்டும்



உதயன் பத்திரிகை தனது இருபத்தைந்தாவது வயதைப் பூர்த்தி செய்வதையிட்டு அதன் விற்பனை முகவர் என்ற வகையில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். வாசகர் மனங்களில் தனக்கென ஓர் இடத்தைப் பிடித்துக் கொண்டிருக்கும் உதயனின் புகழ் உலகெங்கும் பரவி எட்டுத் திக்கும் மணம் பரப்பி மேன்மேலும் வளர வேண்டும் என்று எல்லாம் வல்ல சந்நிதி முருகனை வேண்டி நிற்கிறேன்.

**த.குகனேந்திர ஐயர்,**
*உதயன் பத்திரிகை முகவர்,*
*தொண்டைமானாறு.*

### உதயனின் இமாலய சாதனை



வானில் ஒரு சூரியன். மண்ணில் ஒரு உதயன். இரண்டும் இருள் அகற்றும் பேரொளிகள். இருபத்தைந்து வருட கால இமாலய சாதனை. தமிழ் மக்களுக்கான உன் சேவை சொற்களுக்கு அடங்காதவை. வானும், மண்ணும் உள்ள வரை இன்று போல் என்றும் ஓங்கி ஒலிக் கட்டும் உன் குரல்.

வெள்ளிவிழா நாயகனே ஒன்றல்ல, நூறல்ல, வாழ்த்துக்கள் பல கோடி.

**க.குணசிங்கம், உதயன் முகவர்,**
*தபால்கட்டைச் சந்தி,*
*அரியாலை.*

### பணி தொடரட்டும்



இருபத்து ஐந்தாவது வயதைப் பூர்த்தி செய்யும் உதயன் நாளிதழ் எமக்குப் பயன்மிக்க செய்திகளையும், தகவல்களையும் தந்து தனக்கெனத் தனி முத்திரையை மக்கள் மனதில் பதித்த நாளிதழ். என் மனம் கவர்ந்த நாளிதழின் சேவை மேன்மேலும் வளர்ச்சி பெற்று வீறு நடைபோட எனது வாழ்த்துக்கள்.

**இ.விஜயநாயகம்,**
*உதயன் முகவர், இருபாலை.*

### இடர்களை அகற்றுபவன் உதயன்

உதய சூரியனின் வருகையுடன்
இதயம் தேடும் நாளிதழே
அகவை இருபத்தைந்தும் ஆனதுவோ
உவகை கொள்ளும் எம் மனமே
வெள்ளிவிழாவின் நாயகனே
துள்ளி நடைபோடு நீ நிதமே
என்றும் இளமையுடன் நீ வாழி
குன்றில் ஒளியாய் நீ வாழி
தமிழர் மனதில் எதிரொலியாய்
தரணி எங்கும் நீ முழங்கு
தடைகள் வரினும் தளராது
இடையறாது தொடர்க பணி

**சிற்பி.ஜீவராஜன் ஜெயப்பிரகாஸ் ஆசாரி,**
*ஆறுமுகம் சிற்பாலயம், திருநெல்வேலி.*

ன், உங்களுக்காகவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் வெள்ளி...

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வாசகர் நெஞ்ச...

### உதயன் பணி காத்திரமானது

எங்கள் மண்ணில் இருப்பை வெளிக்கொணரும் எங்கள் உதயன் நாளிதழ் வெள்ளிவிழாக் காண்பதையிட்டு



மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். 25 வயது இளைஞனாகக் காண்பதில் சந்தோஷமடைகிறேன். வாலிபத்துக்குரிய மிடுக்கோடு உதயனின் போக்கு அமைந்திருக்கிறது.

எங்கள் மாணவச் செல்வங்களின் கல்விக்காக பத்திரிகை என்ற நிலையில் உதயன் வழங்கும் பணி காத்திரமானது. இதைவிட எமது தகவல்கள் இலகுவில் வேண்டியவர்களைச் சென்றடைய நாம் உதயனையே நாடுகிறோம். இந்த வகையில் ஒரு முன்னணிக் கல்வி நிலையம் என்ற வகையில் மீசாலை எக்சலன்ற் கல்வி நிலையமும், இணை நிறுவனமான Kids English College உம் எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**நா.கேதீஸ்வரன்,** *நிர்வாகி,*
*எக்சலன்ற் கல்வி நிலையம்,*
*மீசாலை.*

### உலகுக்கு உணர்த்தி வைத்த செயல்வீரன்

தமிழ் பேசும் மக்களின் உதயமாக இருபத்தைந்து ஆண்டுகள் யாழ். மண்ணில் எவ்வளவோ இன்னல்கள்,



இடர்கள், இக்கட்டான சூழ்நிலைகள் இருந்த போதும் நடுவுநிலைமை தவறாமல் எம்போன்ற மக்களைக் கவர்ந்திட்ட ஒரே பத்திரிகை என்றால் அது உதயன் என்பதுதான் உண்மை.

தனது பணியில் வெள்ளிவிழாக் கொண்டாடும் இச்சந்தர்ப்பத்தில் வாழ்த்துரை வழங்குவதில் பெருமிதமும் பேருவகையும் அடைகின்றேன். தூர நோக்கு, துணிவு, உண்மை என்ற அரிய பண்புகளைத் தன்னகத்தே கொண்டு அஞ்சா நெஞ்சினனாய் அடிமைப்பட்ட மக்களின் அவலங்களை உலகுக்கு உணர்த்திட்ட செயல்வீரன்.

எங்கள் இதயம் கவர்ந்த இனிய பத்திரிகையே உன் வருகைக்காக உயிர் கொடுத்த பணியாளர்கள் நன்றிக்குரியவர்கள். தமிழ் மக்களுக்காக, குறிப்பாக கல்விச் சமூகத்துக்காக உதயன் ஆற்றிய, ஆற்றி வரும் பணிகள் நினைந்து நினைந்து இன்புறத்தக்கவை. நன்றியோடு வாழ்த்துகின்றோம்.

வெள்ளிவிழாக் காணும் உதயன் நீண்ட ஆயுளோடு நிலைத்துச் சேவைபுரிய முன்பள்ளிப்பாலர் கல்விச் சமூகத்தின் சார்பில் எமது இனிய வாழ்த்துக்களைச் சமர்ப்பித்து உன் பணி சிறக்க வாழ்த்துகின்றேன்.

**எஸ்.ரி.காசிநாதன்,**
*தலைவர்,*
*ஞானக்குழந்தைகள் இல்லம்,*
*பாலர் கல்விக் கழகம்,*
*யாழ்ப்பாணம்.*

### காலைக்கதிரவன் முன்னே உதயமான உதயனே வாழி வாழி!



உவகை கொள்ளும்
ஈழமணித் திருநாட்டில்
இருபத்தைந்து வயதான
உதயன் இளைஞனே
பார்போர்க்கு எழிலாய்
கற்போர்க்கு உணர்வாய்,
கடமை கண்ணியம்
உதய வீரனாய் கலங்காத சரவணப்
பொய்கைப் பாலகனாய்
உதித்திட்ட உதயன் நாளிதழே வாழி! வாழி!
ஊடகத்தில் உன்னத நடைபயின்ற உதயனே
ஊற்றெடுத்த நாள்முதலாய் சூரியப் பிரகாச உதயனே
உண்மையின் சிகரமாய் உள்ளத்தின் உதயனே
உலகத்தோர் உவப்போடு ஏற்றிடும் உதயனே
உறவுகள் குருதியில் கலந்தாலும் உதயமானாய்
உணர்வுகளின் உதிரத்தில் செய்தியாய் உதயமானாய்
ஊருணியாய் ஊரவர் வரவேற்றிட உதயமானாய்
உலக அதிசயத்தோடு கலை கலாசார பண்பாட்டோடு
உதயமான உதயனே வாழி! உதய சஞ்சீவியே வாழி!
ஈழத்தில் பல்கோடி காலம் உண்மையின் வடிவாய்
விளங்கிட வெள்ளிவிழாவில் வாழ்த்துகிறேன்.
உதயனே வாழி
வளம் பெருக்கிட வாழி!

**எம்.பத்மநாதன்,** இயக்குநர்,
*பொருளியற் கல்லூரி, யாழ்ப்பாணம்.*

### உதயன் அவனி எங்கும் இதழ் பரப்பி ஒளிரட்டும்



நூல்கள் பத்திரிகைகள் என்பவை நல்ல நண்பர்கள் என்பார்கள். அதே போல் உதயனும் யாழ்.மக்களுக்கு ஒரு நல்ல நண்பனே. எம்மக்களின் பண்பாடு கலாசாரம் என்பவற்றுடன் பின்னிப் பிணைந்த மக்கள் பத்திரிகையான உதயன் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக நடுநிலையில் நின்று குரல் கொடுக்கும் அதன் சேவை மகத்தானது.

உதயனின் உன்னத வளர்ச்சிக்கும், உயர்தரத்திற்கும் அதன் மனிதவளமே பெரும் காரணி. காலத்திற்கு காலம் நல்ல பத்திராதிபர்களையும், மாவட்டத்தில் உள்ள மூதறிஞர்களையும், நல்ல நிர்வாகிகளையும் துடுப்பான இளைஞர், யுவதிகளையும் கூட்டாக இணைந்துச் செயலாற்றும் பெருமை கொண்ட நிறுவனம்.

இதன் இருபத்தைந்தாண்டுப் பாதையிலே துயரச் செய்திகளைத் தாங்கி நொந்து துன்பியலையும் பெற்று விருதுச் செய்திகளைத் தாங்கி மகிழ்ந்த இன்பியலையும் கண்டிருக்கின்றது. நடுநிலைமை தவறாது உழைத்தமையால் உதயன் இன்று உலகம் போற்றும் உயர் நிலை பெற்றிருக்கின்றது.

உதயனில் அதிக விளம்பரம் என்பார் சிலர். உண்மையில் விளம்பரமான பத்திரிகையில் தான் விளம்பரம் அதிகம் வரும் என்பதுதான் வெளிப்படை. உதயனின் சேவை எம்போன்ற யாழ். வாசகர்களுக்கு மட்டுமன்றி உலகம் எங்கும் உள்ள தமிழ் வாசகர்கள் அனைவருக்கும் பரந்து கிடைக்கட்டும். உதயன் தொடர்ந்து உதிக்கட்டும் பல்லாண்டு.

**எஸ்.கே.கிருபாகரன்,**
*நிர்வாக இயக்குநர்,*
*மதுரம் இன்ஸ்ரிரியூட், கோப்பாய்.*

### உதயன் பணி காத்திரமானது

உதயன் நாளிதழ் தனது வெள்ளிவிழாவைக் கொண்டாடுவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.



தான் வரித்துக் கொண்ட இலட்சியப் பாதையில் இருபத்தைந்து வருடங்களாக பல்வேறுபட்ட சாதனைகளையும் சோதனைகளையும் தாண்டி சமூகப் பணியைத் தொடர்ந்து வருகிறது. உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்களுடைய அரசியல், கல்வி, சமூக, பொருளாதார வளர்ச்சியில் அரும்பணியினை அர்ப்பணிப்புடன் ஆற்றி வருவதுடன் தன்னைச் சார்ந்து வாழும் மக்களுக்குத் தான் என்ன செய்ய வேண்டுமோ அதைச் துணிச்சலுடனும், நடு நிலையுடனும் முன்னின்று ஆற்றிவரும் ஒரு தனித்துவ நாளிதழ் ஆகும். இது பல நூற்றாண்டு காலம் மக்களின் அபிமானி யாய் வீறுநடையுடன் மிளிர இறையருள் கிடைக்க இறைஞ்சுகின்றேன்.

25 ஆவது வெள்ளிவிழாவை முன்னிட்டு வெளிவரும் சிறப்பு மலரை பாராட்டுவதுடன் இதன் வெற்றிக்குப் பின்னின்று உழைக்கும் அனைத்து உள்ளங்களுக்கும் எனது உளம் கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

**க.சிவரத்தினராசா,**
*நிர்வாகி, ஊற்று கல்வி நிலையம், கைதடி.*

### உன்னத பயணம் தொடரட்டும்

உதயன் நாளிதழ் தனது 26 ஆவது அகவையைப் பூர்த்தி செய்வதையிட்டு மனம் மகிழ்கிறேன். துன்பங்கள் தடைகள், இடர்கள் அச்சுறுத்தல்களைத்



தாண்டி உதயன் தனது 25 வருட காலப் பணியை அர்ப்பணிப்புடன் செய்து வந்துள்ளது. தமிழ் மக்களின் வரலாற்றுச் சிறப்புக்களையும் பாரம்பரியத்தினையும் நாளாந்த உண்மை நிலைமைகளையும் குடாநாட்டு மக்களுக்கு மட்டுமன்றி புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் தங்கியிருப்போரும் அறியக்கூடிய வகையில் உதயன் தனது செய்திப்பரப்பலை அதிகரித்துக் கொண்டுள்ளது.

தனது சொல் வண்மையிலும் கருத்தினை முன்வைக்கும் திறமையாலும் உதயன் பத்திரிகை ஒரு சிறப்பான இடத்தினைப் பெற்றுள்ளது.

உதயன் தனது உன்னத பயணத்தினைத் தொடர்ந்து நடாத்தி என்றென்றும் தமிழ் மக்களின் உதய நாளிதழாக நின்று நிலைக்க வாழ்த்துகின்றேன்.

**திருமதி.அ.அன்ரன் மரியசேவியர்,**
*மேலதிக மாவட்ட பதிவாளர்,*
*பிரதேச செயலகம்,*
*தென்மராட்சி.*

### உலகமெங்கும் தமிழ் மணம் வீசும் உதயன்

கல்வியே கண் என்று வாழும் எமது எழில்மிகு யாழ்ப்பாணத்து மக்களின் மனங்களை வென்று 25 ஆண்டுகளாக



ஊடகத்துறையில் பெரும்பங்காற்றி வருகின்ற காலத்தால் மூத்த பத்திரிகையான உதயன் நாளிதழ் தனது வெள்ளிவிழாவைக் கொண்டாடுவதையிட்டு பெருமையடைகின்றேன். பல்வேறுபட்ட காலப் பகுதிகளில் பல்வேறுபட்ட தடைகளைத் தாண்டி அதிகாலை சூரியன் உதயமாக முன் உதயனாக உதயமாகி மக்களின் கைகளில் தவழ்ந்து செய்தி ஒளிவீசி உலகமெங்கும் தமிழ் மணம் வீசி யாழ்ப்பாணத்துக் கலாசாரங்களை உலகறியச் செய்து வருகிறது என்பதும் மகிழ்ச்சியே.

அதுமட்டுமல்ல எமது பிரதேசத்தின் கல்வித்துறை, விளையாட்டுத்துறை, கலை, கலாசாரத்துறை போன்றவற்றை தேவையானபோது தேவையான தருணங்களில் வளர்க்கின்ற பெருமை உதயன் நாளிதழைச் சாரும் என்பதை யாராலும் மறுத்துவிட முடியாது

அதுமட்டுமல்ல ஏழைகளின் வாழ்வை மேம்படுத்தி நல்ல சிந்தனையாளர்களை சாதனையாளர்களாக மாற்றி, எழுத்தறிவுள்ளவர்களை சிறந்த எழுத்தாளர்களாக்கி, பாமர மக்களையும் படித்தவர்களாக மாற்றிய பெருமையும் உதயன் நாளிதழையே சாரும்.

இவ்வாறான பத்திரிகை 25 ஆண்டை நிறைவுசெய்து வெற்றி நடைபோடுவது எமது பிரதேசத்திற்குப் பெருமையாகும். எனவே சாதனை பல நிகழ்த்தி என்றுமே எமது மக்களின் மனங்களை வெல்கின்ற பத்திரிகையாக மேலும் மேலும் பல புதிய பாதையில் வளர எனது சார்பானதும் எனது நிறுவனம் சார்பான வாழ்த்துக்களும் என்றும் உரித்தாகட்டும்.

**ம.நடனதேவன்,** இயக்குநர்,
SCOT *கணினி நிறுவனம்,*
*கண்டி வீதி,*
*சாவகச்சேரி.*

### பத்திரிகா தர்மத்தின் நாயகன்

உதயன் தேசிய நாளிதழ் தமிழினத்திற்குக் கிடைத்த ஒரு பெரிய வரப்பிரசாதமாகும். அவன் மக்களிடையே தன்னு



டைய சேவைக்காகப் பெரும் செல்வாக்கைப் பெற்று 25 ஆண்டுகால சேவையைப் பூர்த்தி செய்து இன்று வெள்ளி விழாக் காண்பது பாராட்டுக்குரியது. தன்னலம் கருதாது பொது நலத்துடனும், துணிச்சலுடனும், பத்திரிகா தர்மத்துடனும் செய்திகளை வெளியிடுவதில் ஊடகத்துறையில் உதயன் தனியிடத்தைப் பெற்றிருக்கின்றான். இக்கட்டான காலப் பகுதியிலும் சற்றும் தயங்காது செய்திகளை வெளியிட்டது யாவரும் அறிந்ததே. செய்திகளை மட்டுமல்ல வேறுபல விடயங்களையும் தன்னகத்தே அடக்கி பாமர மக்களின் செல்வாக்கினைப் பெற்ற உதயன் தொடர்ந்தும் தளராத துணிவோடு களத்தில் சேவையாற்ற எல்லாம் வல்ல இறைவனின் ஆசியை வேண்டி நிற்கின்றோம்.

**மு.ஜெயந்திக்குமார், நிர்வாகி,**
*விக்னா கல்வி நிறுவனம்,*
*52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.*

### அளப்பரிய சேவையாளன் உதயன்

ஊடகத்துறையில் தனக்கென ஒரு தனியான இடத்தினைக் கொண்டுள்ள உதயன் நாளிதழ் இருபத்தைந்து



ஆண்டுகளைப்பூர்த்தி செய்து வெள்ளி விழாக் கொண்டாடுவதையிட்டு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக பல்வேறு துன்ப துயர சோதனைகளுக்கு மத்தியிலும் தலைநிமிர்ந்து நின்று உதயன் தமிழுக்காக பல்வேறு சாதனைகளைப் படைத்திருப்பதை ஒவ்வொரு தமிழ் நெஞ்சமும் ஊடகத்துறை சார்ந்த அனைவரும் நன்கறிவர்.

தொடர்ந்தும் பல வருடங்களாக தமது அளப்பரிய சேவையைச் சிறப்பாக ஆற்றித் தொடர்ந்தும் வெளிவர ஆண்டவன் அருள் பாலித்திட வேண்டும். துன்பப்பட்ட, துயரப்பட்ட ஏழைமக்களுக்கு அவர்களது வாழ்க்கையிலும் நம்பிக்கை ஒளியேற்றக் கூடிய வகையில் செயற்படுவதுடன் நவீன அறிவியல் சார்ந்த விடயங்கள், அபிவிருத்தி சார்ந்த ஆய்வுகள் போன்ற பல்வேறு சிறப்பம்சங்களுடன் தொடர்ந்தும் மனம் கமழ்ந்து வெளிவர வாழ்த்துகின்றேன்.

**ச.ரவிகரன்,**
*கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம்,*
*தென்மராட்சி.*

என்றும் உங்களுடன், உ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org